R.C. 7651

3rd Part

R.R.No. 280/4

LB
No 7
3485

286/1907

கடவுள் துணை.

# அநுபோக வைத்திய நவநீதம்

## மூன்றாம் பாகம்

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
25 NOV 1907
MADRAS

இஃது,

பூகாரி வைத்திய

தாருட்யவிர்த்திபோதினி முதலிய

பல வைத்திய சாஸ்திர கிரந்தகர்த்தாவாகிய

ஹாக்கீம்

பா - முஹம்மது அப்துல்லா சாஹிபு

அவர்களால்

சென்னை

முஸ்லிம் அபிமானி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

FIRST EDITION.

1907௵

Rigistered Copyright.

கைவிலை ரூ 1-0-0. வி-பி ரூ 1-2-0.

118485

# விளம்பரம்.

இதனால் சகலமானவர்களுக்குந்தெரியப்படுத்து
வதுயாதெனில்:—'அநுபோக வைத்திய நவநீதம் மூன்
றும்பாகம்" கஅகூஎ ஹூ (உரு - வது) ஆக்டின் (உ0-
வது) பிரிவில் (கூ-வது) விதியின்பிரகாரம் இங்கிலீஷ்
இலாகாவாகிய மத்ராஸிலும்,

இன்னும் பிரான்சு இலாகாவாகிய புதுச்சேரியி
ம், காரைக்காலிலும் காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்ய
ட்டிருக்கின்றது.

ஆகையால், இக்கிரந்தத்தையாவது, அல்லது,
தவேறு பாஷையில் மொழிபெயர்த்தாவது, அல்
, இதில் ஏதேனும் பாகத்தையாவது, என் உத்த
ன்றி ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்
டால், மேற்கண்ட ஆக்ட்டில் சொல்லியிருக்கிறப
கோர்ட்டின் மூலமாய் அதனாலுண்டாகும் நஷ்ட
ாத்தும் வசூல் செய்யப்படும்.

☞ ஹக்கீம். பா. முகம்மது அப்துல்லா.

| | |
|---|---|
| * தன்வந்திரி சூட்சும வைத்தியம்-௨௦௦ | 0 5 0—0 7 0 |
| போகரேழாயிரம் சூஸ்திரம்-எா. | 0 12 0—0 14 0 |
| * ஞான அஷ்டாங்க தீபம் | 0 4 0—0 6 0 |
| யூகாதிவைத்திய தாருட்யவிருத்திபோதினி முதற்பாகம் | 1 5 0—1 8 0 |
| ஷை 2-ம் பாகம்-கீ-க்கு | 2 0 0—2 4 0 |
| ஷை திறவுகோல்-கு-க்கு | 0 10 0—0 12 0 |
| சிராவக நிவாரண போதினி | 0 13 0—0 15 0 |
| ஆயுள்வேத சிரோமணியென்னும் வைத்தியசிந்தாமணி முதற்பாகம் | 0 14 0—1 0 0 |
| சரபேந்திர மேக நிவாரண போதினி | 1 0 0—1 3 0 |
| பிளேக் சிகிச்சா போதினி | 0 8 0—0 11 0 |
| அகத்திய முனிவர் மஹாதிராவகம் எண்ணூறு | 1 0 0—1 2 0 |
| தேரையர் எதுகை யமகவெண்பா, அல்லது, இராஜவைத்தியமகுடம் மூலம் | 0 6 0—0 8 0 |
| ஷை முதற்பாகம் மூலமும் உரையும் | 1 5 0—1 8 0 |
| ஷை 2-ம் பாகம் | 1 5 0—1 8 0 |
| பிரமேக நிவாரண போதினி | 0 12 0—0 14 0 |
| யூகாதி சிரோரோக நிவாரண போதினி | 1 5 0—1 8 0 |

* இக்கிரந்தங்களும் நூதனமாக அச்சிடப்பட்டவைகள்.



| | |
|---|---|
| யூகாதி நயனரோக நிவாரண போதினி | 1 5 0—1 8 0 |
| இரசவாத சிந்தாமணி முதற்பாகம் | 1 5 0—1 8 0 |
| ஷை 2-ம் பாகம் | 1 5 0—1 8 0 |
| கொங்கணர் வாதகாவியம் மூவாயிரம் | 1 8 0—1 12 0 |
| அகத்திய மஹாமுனி வைத்தியப் பிள்ளைத் தமிழ் | 1 4 0—1 7 0 |
| அகத்தியர் மெய்ஞ்ஞானம் | 1 4 0—1 7 0 |
| தேரையர் வைத்திய மஹாகரிசல் | 0 10 0—0 12 0 |
| சர்பேந்திர கபமருத்திமஞ்சரி | 0 8 0—0 10 0 |
| யூகிமுனிச் சுருக்கம் | 0 2 0—0 4 0 |
| அசன்பே சரித்திரம் | 0 8 0—0 10 0 |

## பிழைதிருத்தம்.

இந்தப் பாகத்தின் முதல் முறையாகிய 3-ம் பக்கத்திலுள்ள கல்நார்பற்பத்தில் நெம்பர் 245 போடவேண்டியதற்கு தவறாக 145 போட்டு, 132-ம் பக்கத்திலுள்ள தாருசுச்சுண்ணம் வரையில் தொடர்ந்து 274 ஆகியிருக்கிறது. 133-ம் பக்கத்திலுள்ள தாருசுச்சுண்ணமுதல் சரியான நெம்பராகிய 375 கொடுக்கப்பட்டிருப்பதால் - 3-ம் பக்கத்திலுள்ள 145-ந்தை - 245 - ஆகக்கொண்டு மேற்கண்ட - 375 - வரை எண்ணிச் சரிப்படுத்திக்கொள்ள வேண்டியது.



கடவுள் துணை.

# அநுபோக வைத்திய நவநீதம் மூன்றும் பாகம்

## அட்டவணை.


| அ. | பக்கம். |
|---|---|
| அஷ்டகுன்மத் திராவகம் ... ... | 113 |
| அண்டச்சுண்ணம் ... ... | 146 |
| அண்டச் சுத்தி ... ... ... | 145 |
| அண்டப் பற்பம் ... ... | 147 |
| ஷை (வேறு) ... ... | 148 |
| ஷை (வேறு) ... ... | 149 |
| ஷை (வேறு) ... ... | 149 |
| ஷை (வேறு) ... ... | 149 |
| ஷை (வேறு) ... ... ... | 150 |
| ஷை (வேறு) ... ... | 152 |
| ஷை (வேறு) ... ... | 152 |
| அண்ட மெழுக்கு ... ... | 153 |
| ஷை (வேறு) ... | 155 |
| அமுரியுப்பு ... ... ... | 60 |
| அன்னபவள செந்தூரம் ... ... | 144 |
| அன்னபேதிச் செந்தூரம் ... | 141 |
| ஷை (வேறு) ... ... | 142 |
| ஷை (வேறு) ... ... | 143 |
| ஆ. | |
| ஆக்கிரோண திராவகம் ... ... ... | 97 |
| ஆடாதோடைப் பாணிதம் ... ... | 23 |

| | பக்கம். |
|---|---|
| ஆமையோட்டுச் சுத்தி ... ... | 161 |
| ஷை (வேறு) ... ... | 161 |
| ஆமையோட்டுப் பற்பம் ... ... | 161 |
| ஷை (வேறு) ... ... | 162 |
| ஆறுப்பு ஜெயநீரால் எல்லாச் சரக்குகளையும் பற்பமாகச் செய்துகொள்ளலா மென்பதற் குதாரணமாக எழுதப்பட்ட வீரபற்ப முறை ... ... | 61 |
| ஆறுப்பு ஜெயநீர் ... ... | 60 |
| **இ.** | |
| இந்திரகோப ஹல்வா ... ... | 176 |
| இந்திரகோபப் பூரகப் பற்பம் ... ... | 175 |
| இலவணக் குழம்பு ... ... ... | 66 |
| இலவணத் திராவகம் ... ... ... | 64 |
| இலவணவீரச் செந்தூரம் ... ... | 53 |
| இலவணுதிக் குழம்பு ... ... ... | 68 |
| இலிங்கக்கட்டுப் பற்பம் ... ... | 154 |
| **உ.** | |
| உதரரோக நிவாரண திராவகம் ... | 64 |
| **க.** | |
| கல்நார் சுத்தி ... ... ... | 3 |
| கல்நார் பற்பம் ... ... | 3 |
| ஷை (வேறு) ... ... | 4 |
| ஷை (வேறு) ... ... | 5 |
| கல்மத சுத்தி ... ... ... | 5 |
| ஷை (வேறு) ... ... ... | 6 |



| | பக்கம். |
|---|---|
| கல்மத பற்பம் ... ... | 6 |
| ஷை (வேறு) ... ... | 7 |
| ஷை (வேறு) ... ... | 8 |
| கறியுப்புக் கட்டி ... ... | 57 |
| ஷை (வேறு) ... ... | 58 |
| கறியுப்புச் சுண்ணம் ... | 43 |
| கறியுப்புச் செந்தூரம் ... | 45 |
| ஷை (வேறு) ... ... | 46 |
| ஷை (வேறு) ... | 47 |
| ஷை (வேறு) ... | 49 |
| ஷை (வேறு) ... | 50 |
| ஷை (வேறு) ... | 51 |
| ஷை (வேறு) ... | 54 |
| ஷை (வேறு) ... | 55 |
| ஷை (வேறு) ... | 55 |
| ஷை (வேறு) ... | 56 |
| ஷை (வேறு) ... | 56 |
| ஷை (வேறு) ... ... | 56 |
| கறியுப்புப் பற்பம் ... ... ... | 41 |
| ஷை (வேறு) ... ... | 69 |
| கறியுப்பு மெழுகு ... ... ... | 68 |
| **கி.** | |
| கிளிஞ்சிற் சுண்ணம் ... ... | 120 |
| **கோ.** | |
| கோடிப்பவளச் சுண்ணம் ... ... | 197 |

| கோ. | பக்கம். |
|---|---|
| கோமேதக சுத்தி ... ... | 241 |
| கோமேதக பற்பம் ... ... ... | 241 |
| **ச.** | |
| சங்குச்சுத்தி ... ... ... | 14 |
| சங்குப் பற்பம் ... ... ... | 14 |
| ஷை (வேறு) ... ... | 16 |
| ஷை (வேறு) ... | 16 |
| சந்திரோதய மாத்திரை ... ... | 1[illegible] |
| சவுக்காரச் சுண்ணம் ... ... | |
| **சா.** | |
| சாரஜெயநீரால் இரசகர்ப்பூரத்தைக் கட்டும்விதம் | [illegible]5 |
| சாரஜெயநீர் ... ... | [illegible]6 |
| **சி.** | |
| சிங்கிசுத்தி ... ... | [illegible] |
| ஷை (வேறு) ... ... | [illegible]8 |
| சிங்கிப் பற்பம் ... ... ... | [illegible]4 |
| ஷை (வேறு) ... ... | |
| ஷை (வேறு) ... ... | |
| ஷை (வேறு) ... ... | |
| சிங்கி வெண்ணெய் ... ... | |
| **சீ.** | |
| சீனக்காரத் தைலம் ... ... | |
| சீனரச செந்தூரம் ... | |
| சீன விஷாமிர்தம் ... | |
| **சு.** | |
| சுராங்குச பற்பம் ... ... | 12[illegible] |





| செ. | பக்கம். |
|---|---|
| செந்தூரத் திராவகம் ... | 113 |
| **த.** | |
| தம்பலப்பூச்சிச் சுத்தி ... | 174 |
| தம்பலப்பூச்சிப் பற்பம் ... ... | 174 |
| **து.** | |
| [illegible]ருசுக்கட்டு ... ... | 127 |
| [illegible]ருசுச்சுண்ணம் ... ... | 132 |
| ,, (வேறு) ... | 133 |
| [illegible]சுச் சுத்தி ... ... | 126 |
| ,, (வேறு) ... ... | 126 |
| [illegible]சுச் செந்தூரம் ... ... | 134 |
| ,, (வேறு) ... ... | 135 |
| ,, (வேறு) ... | 136 |
| ,, (வேறு) ... ... | 137 |
| ,, (வேறு) ... | 138 |
| [illegible]ருசுப் பற்பம் ... ... | 127 |
| ,, (வேறு) ... ... | 129 |
| ,, (வேறு) ... ... | 129 |
| ,, (வேறு) ... ... | 130 |
| ,, (வேறு) ... ... | 131 |
| [illegible]ருசு மாத்திரை ... ... | 140 |
| [illegible]ருசு மெழுக்கு ... | 139 |
| ,, (வேறு) — | 140 |
| **ந.** | |
| [illegible]வச்சாரக் கட்டு ... ... | 79 |
| ,, (வேறு) ... ... | 80 |

| | பக்கம். |
|---|---|
| ,, (வேறு) ... | 81 |
| ,, (வேறு) ... ... | 83 |
| ,, (வேறு) ... ... | 84 |
| ,, (வேறு) ... ... | 85 |
| ,, (வேறு) ... ... | 86 |
| ,, (வேறு) ... ... | 88 |
| ,, (வேறு) ... | 89 |
| நவச்சாரக்கட்டுக்குச் சேர்க்கவேண்டிய ஓர்வகை ஜெயநீர் ... ... | 88 |
| நவச்சாரக்கட்டுக்குச் சேர்க்கவேண்டிய சிங்கிகாரம், வெண்காரம், கம்பி வெடியுப்பு இவைகளின் சுண்ணங்கள் ... | 86 |
| நவச்சாரக்கட்டுக்குச் சேர்க்கவேண்டிய இருகச் சுண்ணம் ... ... | 89 |
| நவச்சாரக்கட்டுச் சுண்ணம் — ... | 85 |
| நவச்சாரச் சுண்ணம் ... | 92 |
| ,, (வேறு) — ... | 93 |
| ,, (வேறு) ... ... | 94 |
| நவச்சாரச் செந்தூரம் ... | 96 |
| நவச்சாரப் பற்பம் — ... | 90 |
| ,, (வேறு) ... ... | 91 |
| நவச்சாரதிக் குழம்பு ... | 98 |
| நவநீதபற்பம் ... ... | 243 |
| நவரத்தின பற்பப் பொதுமுறை ... | 243 |
| நவலோகச் செந்தூர ஜெயநீர் ... | 114 |
| நற்பவள வைப்பு ... ... | 201 |





| நீ. | பக்கம். |
|---|---|
| நீலச்சுத்தி ... ... ... | 235 |
| நீலப்பற்பம் ... ... | 235 |
| ,, (வேறு) ... ... | 237 |
| **ப.** | |
| பஞ்சலவணக் கட்டு ... | 59 |
| பஞ்சலவண பற்பம் ... ... | 42 |
| ,, (வேறு) ... ... | 42 |
| படிக்காரச் சுண்ணம் ... ... | 27 |
| ,, (வேறு) ... ... | 28 |
| படிக்காரச் சுத்தி ... ... | 20 |
| ,, (வேறு) ... ... | 20 |
| படிக்காரப் பற்பம் ... ... | 21 |
| ,, (வேறு) ... ... | 22 |
| ,, (வேறு) ... | 24 |
| ,, (வேறு) ... ... | 25 |
| ,, (வேறு) ... ... | 25 |
| ,, (வேறு) ... ... | 26 |
| பருத்திச்சாம்பல் தெளிநீர் ... | 34 |
| பலகறைச் சுத்தி ... ... | 18 |
| பலகறைப் பற்பம் ... ... | 18 |
| ,, (வேறு) ... ... | 19 |
| ,, (வேறு) ... ... | 20 |
| பவளக்கொடிப் பற்பம் ... ... | 198 |
| ,, (வேறு) ... ... | 199 |
| ,, (வேறு) ... ... | 200 |
| ,, (வேறு) ... ... | 200 |
| ,, (வேறு) ... | 201 |

பக்கம்.


பவளச்சுத்தி ... ... 177
பவளபற்பம் ... 178
,, (வேறு) ... ... 185
,, (வேறு) ... ... 187
,, (வேறு) ... ... 188
,, (வேறு) ... ... ... 190
,, (வேறு) ... ... 191
,, (வேறு) ... 191
,, (வேறு) ... ... 192
,, (வேறு) ... ... 193
,, (வேறு) ... ... 194
,, (வேறு) ... ... 194
,, (வேறு) ... 195
,, வேறு) ... ... 195
,, (வேறு) — — 196
பவளப்புற்று, பவளக்கொடி ... ... 197
,, சுத்தி ... ... 197
பவளப்புற்றுப் பற்பம் ... ... 198

பு.

புஷ்பராகச் சுத்தி ... ... 238
,, (வேறு) ... ... 238
புஷ்பராகப் பற்பம் ... 238
,, (வேறு) ... 240

பூ.

பூநாக ஹல்வா ... ... 172
பூநாகசுத்தி ... ... 163
பூநாகத்திலா ... ... 168
,, (வேறு) ... 169
,, (வேறு) ... 169
,, (வேறு) — 170




பக்கம்.


பூநாகத் தைலம் ... 157
பூநாக பற்பம் ... ... 164
பூநாகப் பிரயோகம் ... ... 165
பூநாக மகாவீரியதிலா ... 171
பூநாக மேற்பூச்சுத் தைலம் ... 166
பூநீறு ... ... 73
பூநீற்றுச்சுண்ணத்தினல்லாச் சரக்குகளையும் கட்டலாமென்பதற் குதாரணமாக வெழுதிய முறை — 74
பூநீற்றுச் சுண்ணம் ... 73
,, (வேறு) ... 75
பூநீற்றுச் செயநீர் ... ... 77
,, (வேறு) ... 77
பூநீற்று செயநீர் முறைக்குச் சேர்க்கவேண்டிய அண்டச்சுண்ணம் ... 78

பே.

பேதிசத்துச் செந்தூரம் ... 143
பேதிவீர செந்தூரம் ... 144

போ.

போஜன சஞ்சீவி ... ... 40

ம.

மகா திராவகம் ... ... 62
மரகதப் பர்பம் ... ... 232
,, (வேறு) ... ... 234
மனோசிலைச் சுத்தி ... 119
மனோசிலைச் செந்தூரம் ... 119
மனோசிலைப் புகை ... ... 120

| | |
|---|---|
| **மா.** | பக்கம். |
| மாணிக்கச்சுத்தி ... | 228 |
| மாணிக்கப் பற்பம் ... ... | 228 |
| ,, (வேறு) ... | 229 |
| ,, (வேறு) ... | 230 |
| ,, (வேறு) ... ... | 231 |
| ,, (வேறு) ... | 232 |
| **மி.** | |
| மிருதார்சிங்கிச் சுத்தி ... ... | 121 |
| ,, (வேறு) ... | 122 |
| மிருதார்சிங்கிப் பற்பம் ... | 122 |
| ,, (வேறு) ... ... | 122 |
| ,, (வேறு) ... | 123 |
| **மு.** | |
| முத்துச்சிப்பிச் சுண்ணம் — ... | 160 |
| முத்துச்சிப்பிச் சுத்தி ... | 156 |
| முத்துச்சிப்பிப் பற்பம் ... ... | 157 |
| ,, (வேறு) ... | 158 |
| முத்துச்சுண்ணம் ... ... | 21[illegible] |
| முத்துச்சுத்தி ... ... | 202 |
| ,, (வேறு) ... ... | 202 |
| ,, (வேறு) ... | 203 |
| முத்துப்பற்பம் ... ... | 203 |
| ,, (வேறு) ... | 211 |
| ,, (வேறு) ... ... | 213 |
| ,, (வேறு) ... — | 213 |
| ,, (வேறு) ... ... | 214 |
| ,, (வேறு) ... | 215 |



| | |
|---|---|
| | பக்கம். |
| ,, (வேறு) ... | 216 |
| ,, (வேறு) ... ... | 216 |
| ,, (வேறு) ... | 217 |
| முள்ளியுப்பு ... ... | 60 |
| **யூ.** | |
| யூநாநிமுறைச் செந்தூரம் ... | 29 |
| **வ.** | |
| வயிரச்சுத்தி ... ... | 218 |
| வயிரப்பற்பம் ... ... | 219 |
| ,, (வேறு) ... ... | 220 |
| ,, (வேறு) ... | 221 |
| ,, (வேறு) — ... | 222 |
| ,, (வேறு) ... | 223 |
| ,, (வேறு) ... ... | 224 |
| ,, (வேறு) ... | 226 |
| **வி.** | |
| விஷபேதித் திராவகம் ... ... | 65 |
| வில்லையுப்பு ... ... | 107 |
| **வே.** | |
| வெடியுப்பாதிக் கிருதம் ... | 112 |
| வெடியுப்பாதிச் சுண்ணம் ... | 105 |
| வெடியுப்பாதிச் செந்தூரம் ... | 106 |
| வெடியுப்பு ... ... | 99 |
| வெடியுப்புக்கட்டு ... ... | 99 |
| ,, (வேறு) ... | 100 |
| ,, (வேறு) ... | 100 |
| ,, (வேறு) ... — | 116 |
| ,, (வேறு) — | 116 |
| ,, (வேறு) — — | 117 |

| | பக்கம். |
|---|---|
| ,, (வேறு) | 118 |
| வெடியுப்புச் சுண்ணம் | 101 |
| ,, (வேறு) | 102 |
| ,, (வேறு) | 102 |
| ,, (வேறு) | 103 |
| ,, (வேறு) | 103 |
| ,, (வேறு) | 104 |
| வெடியுப்புச் சத்தி | 115 |
| ,, (வேறு) | 115 |
| வெடியுப்புச் செந்தூரம் | 105 |
| வெடியுப்புச் செயநீர் | 108 |
| ,, (வேறு) | 109 |
| வெடியுப்புத் திராவகம் | 230 |
| வெண்காரச் சுண்ணம் | 25 |
| ,, (வேறு) | [illegible] |
| வெண்காரச் செந்தூரம் | 31 |
| ,, (வேறு) | 38 |
| வெண்காரப் பற்பம் | 32 |
| ,, (வேறு) | 33 |
| ,, (வேறு) | 37 |
| வெண்கார மெழுகு. | 38 |
| ,, (வேறு) | 39 |
| **வை.** | |
| வைடூரிய சத்தி | 242 |
| வைடூரிய பற்பம் | 242 |
| **ஜ.** | |
| ஜங்கால்பச்சை | 127 |


அநுபோக வைத்திய நவநீதம் மூன்றும் பாகம்
அட்டவணை முற்றிற்று.

---

அநுபோக வைத்திய நவநீதம்

மூன்றும் பாகம்.

# முகவுரை.

நண்பர்களே!

இந்த நூலினது பெருமையும், இதை வெளிப்படுத்த முன்வந்ததற்கேற்பட்ட காரணமுதலியவைகளும் இதன் முந்தின இரண்டுபாகங்களின் முகவுரைகளினால் நன்கு விளங்கும். ஆதலின் அவ்விஷயங்களைப்பற்றி யிங்கெழுதுவது அனாவசியமாம்.

இந்த மூன்றும்பாகமானது முன் இரண்டாம்பாகம் வெளியான சொற்ப தினங்களுக்குள்ளேயே வெளிப்படவேண்டியதாயிருந்தும் சில அசந்தர்ப்பங்களை முன்னிட்டுச் சற்றுதாமதித்திருந்தது. ஆயினும் முன் இரண்டு காண்டங்களையும் தருவித்துப்பார்த்தநுபவித்த ஒவ்வொரு அறிவாளிகளும் மற்றும் பல நண்பர்களும் அடுத்த பாகங்களையும் கூடிய சீக்கிரம் வெளிப்படுத்த வேண்டுமெனக் கடிதமுகத்தாலும், நேரிலும் வற்புறுத்தி வந்தபடியால் அத்தகையினர் விருப்பத்தை மறுக்க வசமற்றவனாய் எவ்வித அசந்தர்ப்பங்களையும் எதிர்பாராது இவ்விஷயத்திற் சில தினங்களுக்கு முன் பிரவேசித்து இடைவிடாமுயற்சியுடன் இந்த மூன்றும்பாகத்தை வெகு சீக்கிரமாகவே முடித்து வெளியிட்டேன். இனிமற்ற காண்டங்களும் இவ்வாறே கிரமமாய் வெளிப்படும்.

இந்த மூன்றாம் பாகத்தில் முந்தின பாகங்களைக் காட்டிலும் சற்று அதிகமாகவே சுமார் 227. முறைகள்வரை அடங்கியிருக்கின்றன. அவைகளில் ஒவ்வொன்றும் மிகப் பெருமையுற்றதும், சுலபமாக முடியத்தக்கதும், சிறந்த குணமுடையதும், பரம்பரையாக அநுபவத்தோடு கையாடிவந்ததும், இரகசியத்தில் வைத்துவந்ததுமாகும். அம்முறைகளாவன:—

அமுரியுப்பு, அஷ்டகுன்மத் திராவகம், அன்னபேதிச் செந்தூரவகைகள், அன்னபவள செந்தூரம், அண்டச்சுத்தி, அண்டச் சுண்ணம், அண்டப்பற்பவகைகள், அண்டமெழுக்குகள், ஆறுப்புஜெயநீர், ஆக்கிராணதிராவகம், ஆமையோட்டுச் சுத்திகள், ஆமையோட்டுப் பற்பங்கள், இலவணத்திராவகம், இலவணவீரச்செந்தூரம், இலவணக் குழம்புகள், இலிங்கக்கட்டுப்பற்பம், இந்திரகோபப் பூநாகப்பற்பம், இந்திரகோபஹல்வா, உதரரோக நிவாரண திராவகம், கல்நார்சுத்தி, கல்நார் பற்பங்கள், கல்மதச்சுத்திகள், கல்மதப்பற்பங்கள், கறியுப்புப் பற்பங்கள், கறியுப்புச் சுண்ணம், கறியுப்புச் செந்தூரங்கள், கறியுப்புக்கட்டுகள், கறியுப்புமெழுகு, கிளிஞ்சிற்சுண்ணம், கொடிப்பவளச்சுண்ணம், சங்குசுத்தி, சங்குபற்பங்கள், சங்கிரோதயமாத்திரை, சவுக்காரச்சுண்ணம், சாரஜெயநீர், சாரங்குசபற்பம், சிங்கிசுத்தி, சிங்கிப்பற்பங்கள், சிங்கிவெண்ணெய், சீனச்செந்தூரம், சீனவிஷாமிர்தம், சீனக்காரத்தைலம், செந்தூரத்திராவகம், தம்பலப்பூச்சிச்சுத்தி, தம்பலப்பூச்சிப்பற்பம், துருச்சுத்திகள், துருசுக்கட்டு, துருசுப்பற்பங்கள், துருசுச் சுண்ணங்கள், துருசுச்செந்தூரங்கள், துருசுமெழுகுகள், துருசுமாத்திரை, நவச்சாரக்கட்டுகள், நவச்சாரச்சுண்ணங்கள், நவச்சாரப்பற்பங்கள், நவச்சாரசெந்தூரம், நவச்சாராதிக்குழம்பு, நவலோகசெந்தூர ஜெயநீர், நற்பவளவைப்பு, நீலச்சுத்தி, நீலப்பற்பங்கள், படிக்காரச்சுத்திகள், படிக்காரப்பற்பங்கள், பலகறைச்சுத்தி, பலகறைப்பற்பங்கள், படிக்காரச் சுண்ணங்கள், பஞ்சலவணக்கட்டுகள், பஞ்சலவணபற்பங்கள், போஜனசஞ்சீவி, பூநீற்றுஜெயநீர், பூநீற்றுச்சுண்ணங்கள், பேதிச்சத்துச்செந்தூரம், பேதிவீரசெந்தூரம், பூநாகச்சுத்தி, பூநாகபற்பம், பூநாகத்தைலங்கள், பூநாகத்திலாக்கள், பூநாகஹல்வா, பவளசுத்தி, பவளபற்பங்கள், பவளப்புற்று, பவளக்கொடிப் பற்பங்கள், புஷ்பராகச்சுத்திகள், புஷ்பராகப்பற்பங்கள், மரகதபற்பங்கள், மகாதிராவகம், மனோசிலைச்சுத்தி, மனோசிலைச்செந்தூரம், மனோசிலைப்பூனை, மிருதார்சிங்கிச் சுத்திகள், மிருதார்சிங்கிப் பற்பங்கள், முத்துச்சிப்பிச்சுத்தி, முத்துச்சிப்பிப்பற்பங்கள், முத்துச்சிப்பிச் சுண்ணம், முத்துச்சுத்திகள், முத்துப் பற்பங்கள், முத்துச் சுண்ணம், மாணிக்கச்சுத்தி, மாணிக்கப்பற்பங்கள், யூகாதி முறைச்செந்தூரம், வயிரசுத்தி, வயிரபற்பங்கள், விஷபேதித்திராவகம், வெண்காரச்சுண்ணங்கள், வெண்காரச்செந்தூரங்கள், வெண்காரபற்பங்கள், வெண்காரமெழுக்குகள், வெடியுப்புக் கட்டுகள், வெடியுப்புச் சுண்ணங்கள், வெடியுப்புச்சுத்திகள், வெடியுப்புச் செந்தூரங்கள், வெடியுப்பாதிக்கிருதம், வெடியுப்பு ஜெயநீர்கள், வெடியுப்புத்திராவகம், வைடூரியசுத்தி, வைடூரியபற்பம், ஜங்காலபச்சை முதலியவைகளும் இன்னும் பலவுமாம்.

மேற்கண்ட முறைகளெல்லாம் இரகசியத்தில் வைக்கத்தக்க அருமைவாய்ந்த தாயினும் உலகநலத்தைக் கருதியே இவைகளை இக்கிரந்தத்தின் மூலமாக வெளியிட்டேன்.

இவ்வளவு அருமைவாய்ந்த முறைகளடங்கியுள்ள இந்த மூன்றாம் பாகமானது முன் பாகங்களைக் காட்டிலும் மிகச்சிரேஷ்டத் தன்மைவாய்ந்ததென்பதை இங்கெடுத்துச் சொல்லாமலே எவரும் எளிதிலுணர்ந்துகொள்ளக்கூடும். இது உயர்ந்தகடிதத்தில் சுமார் 246 - பக்கங்களுள்ள புத்தகமாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இக்கிரந்தத்திற்காக எடுத்துக் கொண்ட அரும்பிரயாசை, பொருட்செலவு, தேகசிரமம் முதலியவைகளை எதிர்பாராமலேலோகபகாரமாக இதற்கு மிகவுங் குறைந்தவிலையே ஏற்படுத்தியிருக்கின்றேன். ஆதலின் ஒவ்வொரு நேயர்களும் முந்தினபாகங்களைப்போல் இதனையுந் தருவித்துப்பார்த்து என்னைக் களிப்படுத்துமாறு வேண்டுகின்றேன். இனி மற்றபாகங்களும் வெளிவருமாறு எல்லாம் வல்லகடவுள் கிருபை புரிவாராக. சுபம்.

அச்கீம் - பா - மு - அ.

بسم الله الرحمن الرحيم

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா நிர்றஹீம்.

# அநுபோக வைத்திய நவநீதம்.

## மூன்றாம் பாகம்.

### கடவுள் வணக்கம்.

அறபு வாக்கியம்.

الحمد لله رب العالمين والصلوة والسلام على سيد المرسلين وآله واصحابه اجمعين

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்
அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ஸய்யிதில்
முர்ஸலீன்; வ ஆலிஹி, வ அஸ்ஹாபிஹி
அஜ்மாஈன்.

### நூல்.

கடவுளின் கிருபையாலும், பெரியோர்களின் ஆசிர்வாதத்தினாலும், பற்பல பண்டித சிரோமணிகளின் அனுக்கிரகத்தாலும் இதன் இரண்டாம் பாகத்தில் குருமுறைகள், குடோரமுறைகள் முதலிய அற்புதமுறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிலுள்ள முறைகளெல்லாம் பல்தலை முறைகளாகப் பல தட்டைகளிலும் அனுபவ சித்திபெற்றவைகள். பா

வரும் இலகுவாகத் தெரிந்துகொள்ளும் விதமாகத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் வகைவிபரமாகவும் எழுதப்பெற்றுள்ளன. அதனைப் பார்த்து அதிலுள்ள முறைகளைச் செய்து அநுபவித்த ஒவ்வொரு அநுபவ சாலிகளும் அதிலடங்கிய அவுடதங்களின் விசேஷ குணங்களைப்பற்றி வெகுவாய்ப் புகழ்ந்து நன்கு மதித்து வருகின்றார்கள். ஆகையால் முன்னிலும் அதிக உற்சாக முண்டாகி இம்மூன்றும் பாகத்தில் நமது முன்னோர்களுக்கும் நமக்கும் அநேகந் தலைமுறைகளாகவும் பரம்பரையாகவும் அநுபவத்தால் நிச்சயிக்கப்பட்ட அநேக இந்து, யூநாநி வைத்திய இரகசிய முறைகள் முதலிய பற்பல அற்புத முறைகள் ஜீவ காருண்ணியத்துடனும் பரோபகாரச் சிந்தையுடனும் வெளிப்படுத்தப்பட் டிருக்கின்றன. அதிலடங்கிய முறைகளெல்லாம் இதுவரையில் அச்சில் வெளிப்படுத்தப்படாத நூதன முறைகள்; முற்குறித்த இரண்டாம் பாகத்தில் அடங்கியுள்ள முறைகளின் சுருக்கமாவது:—அப்பிரேகம், அவற்றின் வகைகள், அதன் சத்து, பலவகைப் பற்பங்கள், பலவகை செந்தூரங்கள், நவலோக செந்தூர ஜெயநீர், நவரத்தின செந்தூர ஜெயநீர், வெள்ளீயம், கருவங்கம், நாகம், வெள்ளி, தங்கம், பொன்னிமிளை, வெள்ளிமிளை, சிலாசத்து, யூதக்கல் முதலியவைகளின் சுத்திக் கிரமங்கள், அவற்றின் பற்பங்கள், அவற்றின் செந்தூரங்கள், அவற்றின் அநுபானவிதிகள், முதலியவைகள் வெகு தெளிவாகச் சொல்லப்பட் டிருக்கின்றன. அதில் சுமார் நூற்றைம்பது பாகங்களடங்கி யிருக்கின்றன. அவை சம்பந்தமான காலோசித உபயோகங்கள் முதலி



ய ஒவ்வொன்றும் வகை விபரமாக எழுதப்பட் டிருக்கின்றது. அவைகளின் அருமையையும் பெருமையையும், அவற்றைப் பார்த்து அங்கு சொல்லி யிருக்கிறபடி செய்து அநுபவிப்பவர்களுக்குக் கரதலாமலகம் போல அவற்றின் சிரேஷ்ட குணம் தெரியவரும். இம்மூன்றும் பாகத்தில் நாட்பட்ட வியாதி, கடினவியாதி, கஷ்ட சாத்திய வியாதி முதலிய மகா ரோகங்களை அறத்தீர்க்கும் பற்பல முறைகளை இங்கு முறையே சொல்வோம்.

### கல்நார் சுத்தி.

கல்நாரை எலுமிச்சம்பழச் சாற்றிற் போட்டு ௨௪ - மணி நேரம் ஊறவைத்துக் கழுவி யெடுக்கச் சுத்தியாம். அரைக்கவேண்டியதா யிருந்தால் சிறு துண்டுகளாகச் செய்து ஊறவைக்க வேண்டும். கட்டியாகவே வேண்டுமானால், கட்டியாகவே ஊறவைத்துக் கொள்ளவேண்டும்.

### 145. கல்நார் பற்பம்.

கல்நார் தேவையான அளவு, துத்திவேர்ப் பட்டைக் கஷாயம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—கல்நாரைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி துத்திவேர்க் கஷாயத்தைச் சிறுகச்சிறுக விட்டு நான்கு சாமமரைத்து வில்லைசெய்து வெயிலில் வைத்துலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி மூன்று சீலைமண்செய்து உலர்த்திக் கவசத்தின் இருபது பங்கெடை விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கப் பற்பமா யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-௧௦. ௨௦.

அநுபானம்:——பசுவின் வெண்ணெய், நெய், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:—அஸ்திச்சூடு, அஸ்திவெட்டை, மேகச்சூடு முதலிய உஷ்ணங்கள் தீரும். இதனைப்பல்லிற்றேய்த்துப் பல்லைத் துலக்கிவரப் பல்லிறுகிக் கெட்டிப்படும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 146. கல்நார் பற்பம் (வேறு)

கல்நார் பலம்-அ, இது ஒரே கட்டியாக இருக்க வேண்டும். எள்ளுச்செடி சமூலத்தை யிடித்துப் பிழிந்தசாறு செல்லத்தக்க அளவு, மேற்படி யெள்ளிலை செல்லத்தக்க அளவு.

செய்முறை:—எள்ளுச்செடிச் சமூலச்சாற்றை ஒரு பாத்திரத்தில் விட்டுக் கல்நாரை அதிற்போட வேண்டும். இந்தச் சாறானது சரக்கின்மீது ஒன்று அல்லது ஒன்றரை அங்குலம் அதிகமாக இருக்கவேண்டியது. ஏழுநாள் ஊறவிட்டு எட்டாம் நாள் எடுத்து மேற்படி எள்ளிலையை யரைத்து ஒரு அங்குலக்கனம் கவசித்து வெயிலில் வைத்து வந்தால் ஏழு அல்லது, எட்டு நாளைக்குள் கட்டியானது தானாகப் பொருமிக் கவசம்வெடிக்கும். அதை யெடுத்தால் உள்ளே பற்பமாக இருக்கும். அவசரமாக வேண்டியதானால், மேற்படி இலையைக் கவசித்து இரண்டொரு நாள் வெயிலில்வைத்துக் கவசத்திற்கு - ௫ - அல்லது, ௬ - பங்கெடை விராட்டியிற் புடமிடப் பற்பமாகும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-அ-கை.



உபயோகம்:—வெண்ணெயி லநுபானித் துண்ண, பிரமேகம், பிரமியம், மேகம் முதலியனவைகளும், தேகச்சூடு, அஸ்திச்சூடு முதலிய உஷ்ணங்களும் தீரும். பல் விளக்கப் பல்லிறுகும்.

பத்தியம்:—உஷ்ணமான வஸ்துக்களை நீக்கவேண்டியது.

## 147, கல்நார் பற்பம். (வேறு,)

கல்நார் பலம்-அ, இது ஒரே கட்டியா யிருக்க வேண்டும். கஞ்சாங்கோரை யிலைச்சாறு செல்லத்தக்க அளவு. கஞ்சாங்கோரை யிலையையரைத்த விழுது செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி யிலைச்சாற்றை ஒருபாத்திரத்தில்விட்டு அதில் மேற்படி கல்நார்க்கட்டியைப் போடவேண்டும். சாறானது கட்டியின்மீது ஒன்று ஒன்றரை அங்குலம் மேலேநிற்க வேண்டியது. இவ்விதம் நான்கு, அல்லது, ஐந்துநாள் ஊறவிட்டு மறுநாள் கட்டியின்மீது மேற்படி யிலையையரைத்து அரையங்குலக்கனம் கவசித்து அதன்மீது மூன்று சீலைமண்செய்து கவசத்தினெடைக்கு இருபது பங்கெடை விராட்டியிற் புடமிட்டாறினபின் எடுக்கத் திவ்யமான பற்பமாயிருக்கும்.

பிரமாண முதலியனவைகளெல்லாம் மேற்கண்டவைகளே.

### கல்மத சுத்தி.

கல்மதம் தேவையான அளவு. இதனைச் சிறுதுண்டுகளாகச்செய்து ஒரு மண்பாத்திரத்திற் போட்டு அதில் பசுவின்பாலைவிட்டு இருபத்து நான்கு மணி

நேரம், ஊறவைக்கவேண்டும். பிறகு அதிலுள்ள பாலை யிறுத்துவிட்டு வேறு புதிய பாலையிட்டு முன்போல் ஊறவைக்கவேண்டும். இவ்விதம் இருபத்துநான்குமணிக் கொருதடவை மாற்றிமாற்றிப் புதியபாலைவிட்டு வரவேண்டும். இவ்விதம் எட்டுத்தடவைசெய்து பிறகு ஜலத்தைவிட்டு நன்றாயலம்பிக் கழுவி வெயிலில்வைத்து உலர்த்தியெடுத்துக்கொள்ளச் சுத்தியாம்.

### கல்மதசுத்தி (வேறு)

கல்மதத்தைச் சிறுதுண்டுகளாகச்செய்து ஒரு மண்பாத்திரத்திற் போட்டு அதில் கல்லெண்ணெயை விட்டு ஊறவைக்கவேண்டும். ஒருவாரஞ் சென்றபின் எண்ணெயை யிறுத்துவிட்டு வெந்நீரை விட்டுவிட்டு எண்ணெய்ப்பசை போம்படியாக அலசிக்கழுவி வெயிலில்வைத்துலர்த்தி யெடுத்துக்கொள்ளவும். இப்படிச் செய்வதாற் கல்மதமானது சுத்தியாகிவிடும்.

### 148. கல்மதபற்பம்.

சுத்திசெய்த கல்மதம் பலம்-க, சோற்றுக்கற்றாழை ரசம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—கல்மதத்தைக் கல்வத்தி லிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாமமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடுமூடி மூன்று சீலைமண்செய்துலர்த்திக் கவசத்தின் இருபதுபதுக்கெட்டை விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க-முதல்-அ.

அநுபானமும், உபயோகமும்.—அறுகங்கிழங்குச்சாறு விராகனெடை-க, மிளகுச் சூரணம் குன்



றிமணியெடை-க. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யநுபானித்துண்ண, இரத்தங்கக்கல், இரத்தவாந்தி ஆகியவைகள் தீரும்.

சோம்புச் சூரணம் குன்றிமணியெடை-ச, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யநுபானித்துண்ண, அதிக வேகமான சுரம், உஷ்ணசம்பந்தமான இருமல் ஆகியவைகள் தீரும். இதனை யுட்கொண்டபின், அரைப்பலம் சோம்பில் காற்படி ஜலத்தைவிட்டு நான்கிலொரு பாகமாகக் காய்ச்சின் கஷாயத்தைச் சிறுகச் சிறுக நான்கு அல்லது ஐந்து தடவைகள் பானஞ்செய்து வருவதால் அதிக குணமுண்டாகும்.

சீரகச் சூரணம் குன்றிமணியெடை-ச, காசினிவிதைச் சூரணம் குன்றிமணியெடை-அ, வெண்ணெய், அல்லது, நெய் விராகனெடை-க. இவற்றை மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யநுபானித்துண்ண, பிரமேகரோகம் தீரும்.

பத்தியம்:—வியாதி பலத்திற்கும் தேக சுபாவத்திற்கும் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது.

### 149. கல்மத பற்பம் (வேறு).

சுத்திசெய்த கல்மதம் பலம்-ச, ஆற்றுத்தும்மட்டிக்கா யிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி கல்மதத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறு

கவிட்டு இரண்டு சாமமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டில்வைத்து மேலோடுமூடிச் சீலைமண்செய்து கவசத்திலிருபதுபங்கெடை விராட்டியிற் புடமிட்டாறினபின்னெடுக்கப் பற்பமாயிருக்கும். இந்தப்பற்பத்தின் சமனெடை கருவேலம்பிசின் சூரணத்தை மிஸ்ரமித்து உபயோகிக்க வேண்டியது. இதனைத் தனியாக உபயோகிக்கலாகாது.

பிரமாணம்:—மேற்படி கலவை குன்றிமணியெடை-௨-௩.

உபயோகம்:—பருப்புக்கீரை விதைச் சூரணம் விராகனெடை-௧, இதில் மேற்படி கலவையை மிஸ்ரமித்து உட்கொண்டுவர, இரத்தவாந்தி, இரத்தங்கக்கல் ஆகியவைகள் தீரும்.

## 150. கல்மத பற்பம்.

சுத்தித்த கல்மதம் பலம்-௧, சுத்திசெய்தகர்ப்பூர சிலாசத்து பலம்-௧. எருக்கம் பழுப்புச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி சரக்கு இரண்டையுங் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச்சிறுகச்சிறுகவிட்டு நான்கு சாமமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் இருபத்தைந்து பங்கெடை விராட்டியிற் புடமிட்டாறினபின்னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௫-௧௦.



உபயோகம்:—பசுவின் வெண்ணெயி லனுபானித்துண்ண, வெட்டைரோகங்கள், பிரமியரோகங்கள் பித்தச்சூடு, அஸ்திச்சூடு, கண்ச்சூடு ஆகியவைகள் தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

### சிங்கி சுத்தி.

கலைமான் கொம்பைப் பெரிய துண்டுகளாகச் செய்து ஒருமண் பாத்திரத்திற் போட்டு அது ஆழ்ந்து இருக்கும்படியாக பசுவின் மூத்திரத்தை விட்டுப் பாத்திரத்தின் வாயை மண்தாலத்தால்மூடி இரண்டொரு சீலைமண் செய்து விட்டிருக்கிற நீரானது சுண்டும்படியாகப் புடமிட்டு எடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் மட்கி மட்கி இரண்டு அல்லது மூன்றுபுடமிட் டெடுத்தாற் சிங்கியானது சுத்தியாகிப்போம்.

### மேற்படி சுத்தி (வேறு)

கலைமான் கொம்பைச் சிறு துண்டுகளாகச் செய்து ஒரு பாத்திரத்திற் போட்டு ஒரு பலத்திற்கு ஒரு ஆழாக்கு விதமாகப் பசுவின் பாலைவிட்டு, விட்ட பால் சுண்டும்படியாக எரித்து எடுத்துக் கொள்ளவேண்டும். பிறகு மேற்கண்டவாறே இளநீரை விட்டு வேகவைத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் செய்தெடுத்தாற் சிங்கியானது சுத்தமாகி விடும். இவ்விதம் சுத்தி செய்யப்பட்டதைப் பற்பமாகச்செய்து உபயோகித்தால்மிகவுஞ் சிறந்த குணத்தைத் தருமென்பது நாமிக்குஎடுத்துச் சொல்லவேண்டியது அனாவசியகம். அநுபவசாலிகள் தம்தம் அநுபவத்தில் தாங்களே தெரிந்து கொள்வார்கள்.

## 151. சிங்கி பற்பம்.

கலைமான் கொம்பு பலம்-௩௰, வெள்ளைப் பாஷாணம், பலம்-௫, தாளகம் பலம்-௧, நெய் பலம்-௫, அகத்திக் கீரையை யரைத்த விழுது பலம்-௨௰.

செய்முறை:— சிங்கியைச் சிறு துண்டுகளாகத் துண்டித்து மேற்படி நெய்யிற்போட்டு ஓரிராப்பகல் ஊறவிட வேண்டும். பிறகு மேற்படி அகத்திக்கீரை விழுதை யிரண்டு பாகமாக்கி ஒவ்வொரு பாகத்தை ஒவ்வொரு அடையாகத் தட்டிக் கொள்ளவேண்டும். ஒரு உரத்த துணித்துண்டை கீழே விரித்து அதன் மேல் முன் சித்தப்படுத்தின ஒரு அடையை வைத்து அதன்மேல் முன் சித்தப்படுத்தின கொம்புத் துண்டுகளைப் பரப்பி அதன் மத்தியில் பாஷாணத்தையுந் தாளகத்தையும் வைத்து அதன்மீது மிகுதியா யிருக்கிற நெய்யையும் விட்டு அதன்மீது மற்றொரு அடையையும் வைத்து இரண்டையும் பொருந்தும்படியாகச் செய்து அதன்மேல் துணியை நன்றாய்ச் சுற்றிக் கொஞ்சம் மண்ணைக் குழைத்துத் தடவிக் கவசத்தின் பதினாறு பங்கெடை விராட்டியிற் புடமிட்டாறின பின்னெடுக்கக் கொம்பானது பற்பமாகி யிருக்கும். பாஷாணந் தாளக முதலியவைக ளெல்லாம் ஓடி விடும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-௩, ௮.

அநுபானம்:— நெய், தேன், பசுவெண்ணெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—குன்மரோகங்கள், வயிற்றுநோய், சுவாசகாசம், உஷ்ண சம்பந்த சுரம், இருமல், கபரோகம் ஆகியவைகள் தீரும்.



பத்தியம்:—வியாதிக்குத் தகுந்தபடியும் தேகத்திற்குத் தகுந்தபடியும் வைத்துக்கொள்ள வேண்டியது.

## 152 சிங்கி பற்பம் (வேறு)

கலைமான்கொம்பு தேவையான அளவு, சோற்றுக் கற்றாழைச்சாறு, எருக்கம்பால், எருக்கம் பழுப்புச்சாறு, ஆகியவை வகை-க-க்குச்செல்லத்தக்க அளவு.

செய்முறை:—கலைமான் கொம்பைச் சிறு துண்டுகளாகச் செய்து குமரிச்சாற்றில் மூன்றுநாள் ஊற வைத்து நாலாநாள் ஒரு விராட்டியின்மீது பரப்பி அதன்மீது ஒரு விராட்டியை மூடிச் சுமார் சாக்கிற்கு இருபது பங்கெடை விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து எருக்கம் பாலைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் இருபது பங்கெடை விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுத்துக் கல்வத்திற் பொடித்து எருக்கம்பழுப்புச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி மூன்று சீலைமண்செய்துலர்த்திக் கவசத்தின் இருபது பங்கெடை விராட்டியில் புடமிட்டாறினபின் னெடுக்கத் திவ்யமான பற்பமா யிருக்கும்.

பிரமாணம், அநுபான முதலிய வைகளெல்லா மேற்கண்டவைகளேயாம்.

## 153, சிங்கிபற்பம் (வேறு,)

கலைமான் கொம்பு தேவையான அளவு, பசுவின்பால், உதியம்பட்டை, சிறுகீரைச்சாறு, நெல்லிக்

காய்ச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, கீழ்காய் நெல்லிச்சாறு, சோற்றுக் கற்றாழைச்சாறு, ஆவாரைச்சாறு இவை வகை-க-க்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி கொம்பைச் சிறுதுண்டுகளாகத் துண்டித்துப் பசுவின்பாலில் மூன்றுநாளூறவைக்க வேண்டும். நாலாம் நாளெடுத்து ஒதிபம்பட்டையைப் பஞ்சுபோல் நறுக்கி அதற்குக் கீழுமேலும் இட்டு ஒரு சீலைமண் செய்து கவசத்தின் இருபது பவ்வெடை விராட்டியிற் புடமிடவேண்டும். ஆறினபின்னெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சிறுக்கீரைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி அகலிலிட்டு மேலகல் மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் இருபது பவ்வெடை விராட்டியில் புடமிட வேண்டும். ஆறினபின்னெடுத்து மேற்கண்டவாறே நெல்லிக்காய்ச் சாற்றில் ஒருபுடமும், பொன்னாங்காணிச் சாற்றில் ஒருபுடமும், கீழ்காய் நெல்லிச்சாற்றில் ஒருபுடமும், சோற்றுக் கற்றாழைச் சாற்றில் ஒருபுடமும், ஆவாரைச் சாற்றில் ஒருபுடமும், பசுவின்பாலில் ஒரு புடமுமிட்டெடுக்கவேண்டும். ஆகக்கூடிய எட்டுப் புடமும் தீர்ந்தால் கடவுளினது கிருபையால் திவ்யமான பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-ங. சு.

அனுபானம்:—நெய், தேன், வெண்ணெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—அஸ்திசுரம், மேகச்சூடு, பிரமியம், எலும்புருக்கி, இரத்தக்ஷயம், இருமல், மூலம், ஆகியவை தீரும்.



பத்தியம்:—வியாதிகளுக்கும் தேக சுபாவத்திற்கும் தகுந்தபடி ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது.

### 154 சிங்கிபற்பம் (வேறு)

கலைமான் கொம்பு பலம்-உ, கீழ்காய் நெல்லிச் சமூலத்தை நைய இடித்த விழுது பலம்-க௰.

செய்முறை:—கலைமான் கொம்பைச் சிறு துண்டுகளாகத் துண்டித்து வைத்துக்கொள்ள வேண்டும். பின் கீழ்காய்நெல்லிச் சமூலத்தை இடித்தவிழுதிற் பாதியை ஒரு விராட்டியிற் பரப்பி அதன்மேல் முன் கொம்புத் துண்டுகளை வைத்து மேலே முன்னரைப்பாகு விழுதைவைத்துச் சந்தில்லாமல் நன்றாக அழுத்தி விட்டு பத்துப்பலமுள்ள பதினைந்து விராட்டிகளையடுக்கி அதன்மேல் முன் சித்தப்படுத்தினதை வைத்து அதன்மேலும் முன்மாதிரியான பதினைந்து விராட்டிகளையடுக்கிப் புடமிட்டு நன்றாயாறினபின்னெடுக்கச் சுத்தமாக வெளுத்துப்போம். ஒருசமயம் தீயின் விகற்பத்தால் கறுத்திருந்தால் முன்மாதிரியே இன்னொருதடவையும் புடம்போட்டெடுக்க வெளுத்துப்போம். பிறகு அதையெடுத்து முன் மூலிகைச்சாற்றையே சிறுகச் சிறுகவிட்டு, உ-சாமமரைத்துப் பில்லைதட்டிக் காயவைத்து, க௦ பலமுள்ள பத்து விராட்டியிற் புடமிடப்பற்பமாம்.

பிரமாணம்:—விராகனெடை-ஞு-ழ-வ-வரை.

அனுபானம்:—வெண்ணெய், நெய், தகுந்தலேகியம் ஆகியவைகளிற் காலை மாலை யிரண்டுவேளையுஞ் சாப்பிடலாம்.

உபயோகம்:—அரிதஸ்கலிதம், அஸ்திச்சூடு, எலும்புருக்கி, மேகம், மேகவெட்டை, நீர்க்கருக்கு முதலிய உஷ்ணசம்பந்த ரோகங்களெல்லாந் தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

சங்கு சுத்தி.

முட்சங்கைப் பருமனை அளவுகளாகச்செய்து ஜலத்தில், அல்லது, இளநீரில்-ங-மணி நேரம் ஊறவைத்துச் செம்மையாக அலசி அதிலுள்ள மண்முதலியவைகளை நீக்கிவிடுவதே அதன்சுத்தியாம்.

## 155. சங்குப் பற்பம்.

முட்சங்கு பலம்-க, பாக்குப்பூச்சாறு, குருக்கத்திச்சாறு, மாவிலைச்சாறு, நாவலிலைச்சாறு, அத்தியிலைச்சாறு, புன்னையிலைச்சாறு. இவை வகை-க-க்குச் செலுத்தக்க அளவு.

செய்முறை:—சங்கைக் கல்வத்திலிட்டுப் பாக்குப்பூச்சாற்றைச் சிறுகச்சிறுகவிட்டு இரண்டுசாமமரைத்துப் பில்லைசெய்து வெயிலிலுலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி மூன்று சீலைமண் செய்து கவசத்தின் பத்துப்பங்கெடை விராட்டியிற் புடமிடவேண்டும். இதனையெடுத்துக் குருக்கத்திச்சாற்றில் முன்போல் ஒருபுடமும், மாவிலைச்சாற்றில் ஒருபுடமும், நாவலிலைச்சாற்றில் ஒருபுடமும், அத்தியிலைச்சாற்றில் ஒருபுடமும், புன்னையிலைச்சாற்றில் ஒருபுடமும் இடவேண்டும். ஆகக்கூடிய ஆறுபுடமும் தீர்ந்தால் திவ்யமான பற்பமாகும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-ங.



அநுபானமும், உபயோகமும்:—பசுவின் வெண்ணெய் விராகனெடை-க, இதில் மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி யநுபானித் துண்ண, வாதசுரந் தீரும்.

நீராகாரம் பலம்-க, தேன் விராகனெடை-உ, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யநுபானித்துண்ணப் பித்தசுரந் தீரும்.

கடப்பஞ்சாறு விராகனெடை-ங, தேன் விராகனெடை-ங. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யநுபானித்துண்ண, சேத்துமசுரந் தீரும்.

பசுவின் தயிர் விராகனெடை-ங, தேன் விராகனெடை-ங. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யநுபானித்துண்ண விக்கல் ரோகந் தீரும்.

கையாந்தகரையிலை விராகனெடை-க, மிளகு குன்றிமணி யெடை-ச, இவ்விரண்டையுஞ் சேர்த்தரைத்து அதில் மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி யநுபானித்துண்ண, பாண்டுரோகம், நீரடைப்பு, காமாலை ஆகியவைகள் தீரும்.

வாத ரோகங்களுக்குத் தேனிலும் பித்த ரோகங்களுக்குக் குளிர்ந்தநீரிலும், சிலேஷ்ம ரோகங்களுக்கு ஆளிவிதையை யரைத்துப் பிழிந்த ரசத்திலும் மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யநுபானித்துக் கொடுக்க அவை நீங்கும்.

பத்தியம்:—வியாதி பலத்திற்குந் தேக பலத்திற்குந் தகுந்ததுபோல் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது.

### 156. சங்குப்பற்பம் (வேறு)

சுத்திசெய்த சங்கு பலம்-க, கஞ்சா இலை பலம்-ஏ, இந்த இலையை யரைத்து மேற்படி சங்கிற்குக் கவசஞ்செய்து அதன்மேல் மூன்று சீலைமண்செய்து ஒரு கெஜபுடமிட்டு ஆறினபின் னெடுக்கத் திறமான பற்பமாகும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-௩, ௨.

அநுபானம்:—தேன், நெய், வெண்ணெய், தகுந்த கஷாயங்கள் முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகை சுரங்களும் தீரும்; பிரதானமாய் உஷ்ண சம்பந்தமான ரோகங்கள், பித்தசுரம், நாட்பட்ட சுரம், அஸ்திசுரம், க்ஷயசுரம், எலும்புருக்கி ரோகம், முதலியவைகள் தீரும்.

### 157 சங்குப் பற்பம் (வேறு.)

சுத்திசெய்த சங்கு பலம்-க, சோற்றுக் கற்றாழைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி சங்கைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து உ-சாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி அகலிலிட்டு மேலகல்மூடி மூன்று சீலைமண் செய்து உலர்த்தி நூறுபலம் விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுத்துச் சீசாவில் பத்திரப்படுத்தவும்.



உபயோக முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

### 158 சந்திரோதய மாத்திரை.

சுத்திசெய்த சங்கு பலம்-௨௰, இதனை ஒரு விராட்டியின்மீது பரப்பிவைத்து அதன்மீது ஒரு விராட்டியை வைத்து நூறுபலம் விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுத்துக் கொள்ளவும். இப்படிச் செய்வதால் சங்கு அரை வேக்காடாகி யிருக்கும். முழு வேக்காடாக வேண்டுமென்பது அவசியமல்ல. கூடுமானால் வேறு எந்த விதமாகவாகிலும் சங்கை அரை வேக்காடாகச் சுட்டுக்கொள்ள வேண்டியது. இவ்விதம் அரை வேக்காடாகச் சுட்ட சங்கு பங்கு க, சுத்திசெய்த லிங்கம் பங்கு-க, சுத்திசெய்து உலர்த்திப்பொரித்துப் பொடித்த காட்டு வெண்காரத்தூள் பங்கு-ய, முலைப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—முன்கண்ட மூன்று சரக்குகளையுங் கல்வத்திலிட்டு மேற்படி முலைப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமமரைத்து ஒரு குன்றிமணி யெடைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—மாத்திரை-க. உ.

அநுபானம்:—முலைப்பால், தேன், பன்னீர், கசகசாக் கஷாயம் முதலியவைகளாம்.

உபயோகம்:—சுரம், இருமல், குழந்தைகள் வியாதி, உஷ்ண-சம்பந்தமான வியாதிகள் ஆகியவைகள் தீரும்.

## பலகறைச் சுத்தி.

பலகறையைப் பெருந்துண்டுகளாக நொறுக்கிப் பீங்கான் பாத்திரத்திற் போட்டு அதன்மீது தமரத்தங்காய்ச் சாற்றை, அல்லது; எலுமிச்சம் பழச்சாற்றை அல்லது, புளிப்பு மாதுளம் பழச்சாற்றை விடவேண்டும். இந்தச் சாறானது பலகறைக்குமேல் ஒரு அங்குலமிருந்தாற் போதுமானது அதாவது ஒரு அங்குலம் உள்ளே ஆழ்ந்திருக்க வேண்டியது. வெயிலில் வைத்துச் சாறெல்லாஞ் சுண்டின பின்பு தண்ணீர் விட்டுப் பொடியானது சேதமாகாமல் சுத்தமாகக் கழுவி யெடுத்து வெயிலிலுலர்த்தி வைத்துக் கொள்வதே சுத்தியாம்.

## 159. பலகறைப் பற்பம்.

சுத்திசெய்த பலகறைப்பொடி பலம்-க, புன்னையிலைச்சாறு, சித்திரமூல இலைச்சாறு, கல்லால் இலைச்சாறு, காட்டுமல்லிகை சமூலச்சாறு, நீலோற்பல சமூலச்சாறு, சந்தனக் குழம்புத் தெளிநீர் இவை வகை-க-க்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி பலகறைப் பொடியைக் கல்வத்திலிட்டுப் புன்னை யிலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி அகலிலிட்டு மேலகல்மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி முப்பதுபல விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கவும். பிறகு மேற்கண்டபடியே சித்திரமூல இலைச்சாறு, கல்லால் இலைச்சாறு, காட்டுமல்லிகை சமூலச்சாறு, நீலோற்பல சமூலச்சாறு, சந்தனக் குழம்புத் தெளிநீர் ஆகியவைகளில் முறையே புடமிட்டெடுக்கத் திவ்யமான பற்பமாயிருக்கும்.



பிரமாணம்:—குன்றிமணி யெடை-க, உ;

அநுபானம்:—வெண்ணெய், நெய், சர்க்கரை, முதலியவைகளாம்.

உபயோகம்:—பாண்டு, வாந்தி, மூர்ச்சை, வயிற்றுவலி, மகோதரம், உப்பிசம், இருமல், ஈளை, பெருவயிறு, விக்கல், அஜீரணரோகம் முதலியவைகள் தீரும்.

## 160. பலகறைப் பற்பம் (வேறு)

சுத்திசெய்த பலகறை பலம்-ங, சுத்திசெய்த ரசம்செல்லத்தக்க அளவு, எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு, இலந்தை யிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—பலகறையைக் கல்வத்திலிட்டுப் பொடித்து இலந்தைச் சாற்றைச் சிறுகச் சிறு வார்த்து இரண்டுசாமமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி அகலில் வைத்து மேலகல்மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி நூற்றைம்பதுபலம் விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கப் பற்பமாயிருக்கும். இந்தப் பற்பம்-ங-பங்கு சுத்திசெய்த ரசம்-க-பங்கு இவ்விரண்டையுங் கல்வத்திற் சேர்த்தரைத்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து-க-சாமம் அரைத்துப் பில்லை செய்துலர்த்தி அகலிலிட்டு மேலகல்மூடி-ங-சீலைமண் செய்துலர்த்தி, நூற்றைம்பது பலம் விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்க பற்பமாயிருக்கும். இரசத்தினுடை நிற்காது. ஆனால் அதன் சத்தைக் கொடுத்து விட்டு ஓடிப்போகும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-உ, ச.

அநுபானம்:—தேன், நெய், வெண்ணெய், முதலியவைகளாம்.

உபயோகம்:—சுரம், பிரமேகம், வயிற்றுநோய், விக்கல், இருமல், சீதபேதி, மூலரோகம் முதலிய பல வியாதிகள் தீரும். இதனைத் தகுந்த அநுபானங்களில் உஷ்ண சம்பந்தமான எல்லா வியாதிகளுக்கும் உபயோகிக்கலாம்.

### 161. பலகறைப் பற்பம் (வேறு)

இதன் 156-ம் முறையிற் சொல்லியிருக்கிற சங்குப்பற்பத்தைப்போலவே பலகறையையும் பற்பமாக்கி அங்கு சொல்லியிருக்கிற வியாதிகளுக்கு உபயோகிக்கலாம்.

### படிக்கார சுத்தி.

தேவையான அளவு படிக்காரத்தைப் பொடித்து ஜலம் விட்டரைத்துப் பிறகு ஜலத்தைவிட்டு ஜலம்போல ஆக்கிக்கொள்ள வேண்டும். இந்த ஜலத்தில் துத்தநாகக் கம்பியைப் போட்டு வைக்கவேண்டும். படிக்காரமெல்லாம் துத்தநாகக் கம்பியில் ஒட்டிக்கொண்டு கம்பி கம்பியாகவும் பிரகாசமுள்ளதாகவுமிருக்கும் அதை யெடுத்துப் பத்திரப்படுத்த வேண்டும். இதுவே படிக்காரசுத்தியாம்.

### படிக்காரசுத்தி (வேறு)

கொட்டைப்பாக்கை, அல்லது, வெட்டைப்பாக்கைச் சன்னமாகச் சீவின தூள்பலம்-௨௰, இதில் இருபதுபடி ஜலத்தைவிட்டுப் பத்துப் பலமாகச் சுண்டவைத்து இறக்கி வடிகட்டின கஷாயத்தில் ஒருபலம்



படிக்காரத்தைப் போட்டு முக்கால்பாகம் கஷாயம் சுண்டுகிற வரையில் காய்ச்சிப் பிறகு இறக்கி ஆறினபின் ஜலத்தை விட்டுக் கழுவியெடுத்துக் கொள்ளவும். இவ்விதம் செய்து கொள்வதே படிக்கார சுத்தியாம்.

### 162. படிக்காரப் பற்பம்.

படிக்காரம் பலம் - ௨, சிறு நெருஞ்சிச் சமூலச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—படிக்காரத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி நெருஞ்சிச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி அகலிலிட்டு மேலகல்மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி நூற்றைம்பதுபலம் விராட்டியிற் புடமிட்டாறினபின் வெளுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-௮, ௧௦.

அநுபானமும் உபயோகமும்:—எருமைத் தயிரை மெல்லிய வஸ்திரத்தில் வைத்துப் பிழிந்த தயிர்ச்சத்தை பலம்-௨, இதில் மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி யநுபானித்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் காலைமாலை யிரண்டுவேளையும் ஏழுநாட்கள் உட்கொண்டால், பிரமேகம், பிரமேகவொழுக்கு, இந்திரியக் கசிவு, இந்திரிய சிராவகம் ஆகியவைகள் தீரும்.

நெருஞ்சிச் சமூலம் பலம்-௪, இதில் ஒரு ஆழாக்கு ஜலத்தைவிட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்து வடிகட்டி இறக்கி அதில் மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி அநுபானித்துக் கொண்டுவர, மூத்திரக் கிரிச்சரம், நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு ஆகியவைகள் தீரும்.

இன்னும் தகுந்த அநுபானங்களில் உபயோகிக்க நீர்த்தாரை, நீர்ப்பை ஆகியிவைகளைப் பற்றிய வியாதிகளும் தீரும்.

### 163. படிக்காரப் பற்பம் (வேறு.)

கிழிஞ்சிற் சுண்ணும்பு, வெடியுப்பு, படிக்காரம், நாட்டுநவச்சாரம், கர்ப்பூரம், இவை வகை-க்-க்குச் சமனெடை. இவற்றைப் பொடித்துப் பனியில்வைக்க ஜெயநீராகும். இந்த ஜெயநீரைப் பீங்கான் பாத்திரத்தில் விட்டு வெயிலில்வைக்க உலர்ந்து உப்பாகும். இந்த உப்பைக் கல்வத்திலிட்டுக் கோழிமுட்டை வெள்ளைக்கருவைச் சிறுகச் சிறுகவிட்டு ஒரு சாமமரைத்து வில்லைசெய்து வெயிலில் உலர்த்தவும். பின்பு வில்லைக்குத் தகுந்தவிதமாக ஒரு ஆழாக்கு, அல்லது, காற்படி சுண்ணும்பை ஒரு சட்டியிற் பரப்பி அதன்மேல் மேற்படி வில்லையைவைத்து அதன்மேல் முன்னளவு சுண்ணும்பைக் கொட்டிப் பரப்பிவிட்டு மேற்சட்டிமூடி மூன்று சீலைமண்செய்து அடுப்பேற்றி ஒருசாமம் எரித்து அடுப்புடனே ஆறவிட்டு நன்றாய்க் குளிர ஆறினபின் எடுத்துப் பில்லையின்மீது மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின்-எ-பங்கெடை விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுத்துப் பொடித்துப் பனியில் வைக்க ஜெயநீராகும். இந்த ஜெயநீரை சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

தேவையான படிக்காரத்தை மேற்படி ஜெயநீரிற் றோய்த்துத் தோய்த்து வெயிலில் வைத்துவர அப்படியே மலர்ந்துபோகும். இவ்விதம் மலர்ந்ததைக் கல்வத்திலிட்டு மேற்படி ஜெயநீரைச் சிறுகச் சிறுகவி



ர்த்து ஒரு சாமமரைத்தும் வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி மூன்று சீலைமண்செய்து கவசத்தின் ஏழு பங்கெடை விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுத்துச் சீஷாவிற் பத்திரப்படுத்த வேண்டும்.

குறிப்பு.

ஜெயநீரிற் றோய்த்து மலர்ந்த படிக்காரத்தைஜெயநீர் விட்டரைக்காமலே அகலில் வைத்து மேலகல் மூடிச் சீலைமண்செய்து உலர்த்திப் புடமிட் டெடுத்தும் உபயோகிக்கலாம்.

பிரமாணம்—குன்றிமணி யெடை-உ, ச.

அநுபானம்,—தேன், வெண்ணெய், முதலிய வைகளாம். இது முக்கியமாய் ஆடாதோடைப் பாணிதத்தில் அநுபானித்துக் கொடுக்கப்படுகிறது.

### ஆடாதோடைப் பாணிதம்.

ஆடாதோடை யிலைச்சாறு, முசுமுசுக்கை யிலைச்சாறு, பொற்றலைக் கையாந்தகரை யிலைச்சாறு, இவை வகை க-க்கு ஆழாக்கு-க, பசுவின்னெய், அல்லது, கலப்புநெய் ஆழாக்கு-க, சிறுநாகப்பூ, ஏலரிசி, தாளிசபத்திரி, இவற்றின் சூரணம் வகை-க-க்கு விராகனெடை-க.

செய்முறை:—முன்மூன்று சாறுகளையும் ஒன்றாய்க்கலந்து நெய்யையுங் கூடச்சேர்த்து அடுப்பேற்றிச் சிறுதீயா யெரித்து நீர்சுண்டின பதத்தில் மற்ற சூரணங்களையுஞ் சேர்த்து நன்றாய் மிஸ்ரமித் திறக்கி

ஆறினபின் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம்:—கிராகனெடை-உ. ச.

இந்த ஆடாதோடைப் பாணிதத்தை தனியாகவும் உபயோகிக்கலாம். மேற்கண்ட படிக்காரப்பற்பத்திற்கு அனுபானமாகவும் உபயோகிக்கலாம்.

உபயோகம்,—மேற்கண்ட படிக்காரப் பற்பத்தை மேற்கண்ட அனுபானங்களிற் சமயோசிதம்போல அனுபானித்துக்கொடுக்க, காசரோகம், க்ஷயரோகம், நீரடைப்பு, பாண்டு முதலிய ரோகங்கள் தீரும்.

### குறிப்பு

இது வைத்திய இரகசியமுறைகளிலொன்று. இது இலேசான அவுடதமாயினும் பலமான அவுடதங்கள் இதற்கு முன்னில்லாது. இதனை யனுபவிக்கும் அனுபவசாலிகளுக்குத்தான் இதன் சிறந்த குணம் தெரியவரும். "சோம்பேறிக்கு வாழைப்பழம் தோலோடு" என்பதுபோல சோம்பற்சுபாவமுடையவர்களுக்கு எட்டிச் சுரைக்காய் என்ன பிரயோஜனத்தைத் தரும்.

### 164. படிக்காரபற்பம் (வேறு)

தேவையான அளவு படிக்காரம், இதற்குப் பதினைந்துபங்கு சிறுபூளைச்சாறு, படிக்காரத்தை ஒரு கலயத்திற்போட்டு அந்தக்கலயம் நிறைந்திருக்கும்படியாக மேற்படி சாற்றைவிட்டு வெயிலில் வைக்கவேண்டும். அந்தச் சாறெல்லாஞ் சுண்டினபின்பு மறுபடியும் முன்போல் அந்தச் சாற்றைவிட்டு வெயிலில்வைத்துச் சுவறவைக்கவேண்டும், மூன்றுதடவையும் இங்



ஙனமிட்டுச் சுவறவைத்துக் கொள்ள வேண்டும். பிறகு எல்லாவற்றையும் எடுத்து ஒரு ஓட்டில்வைத்து மேலோடுமூடி மூன்று சீலைமண்செய்து காயவைத்துக் கவசத்தின் பதினைந்து பங்கெடை விராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாகியிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-ச-ரு.

அனுபானம்:—நெய், தேன்.

உபயோகம்:—சொற்பனஸ்கலிதம், இந்திரிய ஸ்ராவகம் ஆகியவைகள் தீரும்.

### 165. படிக்கார பற்பம் (வேறு)

படிக்காரம் பலம்-அ, மூன்றுசேர் பிடிக்கக்கூடிய ஒரு கலயத்தில் இதைப்போட்டுச் சிறுபூளைச்சாற்றை அதில் நிறையவிட்டு அதன் வாய்க்கு ஓடுமூடி-ரு-சீலைமண்செய்து மூன்றுநாள் வைத்திருந்து நாலாம்நாள் இருநூறுபலம் விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-ங-அ.

அனுபானம்:—நெய், தேன், கூழ்ப்பாண்டக் கிருதம், கூழ்ப்பாண்டலேகிய முதலியவைகளாம்.

உபயோகம்:—வெட்டை, பிரமியம், வயிற்றுளைவு, அரிதஸ்கலிதம், இந்திரிய ஸ்ராவகம் ஆகியவைகள் தீரும்.

### 166. படிக்கார பற்பம் (வேறு)

படிக்காரம் கிராகனெடை-கூ, (இது ஒரேகட்டியாக இருக்கவேண்டும்) சுவற்றுமுள்ளங்கியிலைச்சாறு பலம்-உச. படிக்காரத்தை ஒரு ஓட்டில்வைத்து மேற்

படி சாற்றைச் சிறுகச்சிறுகவிட்டுச் சுருக்கிடவேண்டும். அடுப்பை மெதுவாக எரிக்கவேண்டும். சாறெல்லாஞ் சென்றபின்பு ஆறினபின்னெடுத்துக் கல்வத்திற் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து ஒருசாமமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி மூன்று சீலைமண்செய்து கவசத்திற்குப் பத்துபங்கெடை விராட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுத்துப் பொடித்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தவேண்டும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨-௩.

அநுபானம்:—நெய், தேன், வெண்ணெய்.

உபயோகம்—எல்லா வியாதிகளிலும் இது உபயோகப் படுத்தப்படுகிறது. சுரரோகத்திற்கு இது சஞ்சீவியாக வேலைசெய்கிறது. ஆறாத இரணங்களுக்கு இதைத் தேனிற்குழைத்து இரணத்தின்மீது போட்டுவர வெகு சீக்கிரம் ஆறிப்போகும்.

## 167. படிக்கார பற்பம் (வேறு)

படிக்காரம் ஒருபங்கு, நவச்சாரம் ஒருபங்கு இவ்விரண்டையும் பொடித்து ஒரு சிறுசட்டியிற்போட்டு வாய்க்கு ஓடிட்டு மூன்று சீலைமண்செய்து உலர்த்திக் கவசத்தின் எழுபங்கெடை விராட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுத்துப் பொடித்து நிறுத்து முன்வைத்த படிக்கார எடைக்கு எவ்வளவு குறைந்திருக்கிறதோ அவ்வளவு படிக்காரத்தைச் சேர்த்துப் பொடித்து முன்போற் புடமிடவேண்டும். புடமிட்டு ஆறினபின்பு எடுத்து நிறுத்து ஆதியில்வைத்த படிக்கார எடைக்கு எவ்வளவு குறைகிறதோ அவ்வளவு



படிக்காரத்தைச் சேர்த்து முன்போற் புடமிடவேண்டும். இவ்விதம் ஆதியில்வைத்த படிக்கார நிறை நிற்கிறவரையில் அசலெடைக்குக் குறைகிற அளவு படிக்காரத்தைச் சேர்த்துச் சேர்த்துப் புடமிட்டுக்கொண்டேவந்து அசலெடைக்குச் சரியான எடை பற்பமாக மேற்கண்டபடி புடமிட்டு எடுத்துக்கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧-௨.

இது அவரவர்களுக் கனுபவமான அநுபானங்களுடன் எல்லா வியாதிகளிலும் உபயோகிக்கலாம். இது சிறுகுருபற்பமாகையால் லேகியம், தைலமுதலியவைகளிலும் கொஞ்சஞ்சேர்த்து உபயோகிப்பதினால் அதிக விசேஷகுணத்தைக் கொடுக்கும். இதன் மூலமாக நெருப்பிற்கோடுஞ் சரக்குகளை நெருப்பிற் கோடாமல் கட்டலாம். இதன் முறையைத் தெரிந்தவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ளவும்.

## 168. படிக்காரச் சுண்ணம்.

படிக்காரம் பலம்-௧, புங்கம்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—படிக்காரத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி பாலைச் சிறுகச் சிறுகவிட்டு இரண்டுசாமமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி மூன்று சீலைமண்செய்துலர்த்திக் கவசத்தினெடைக்கு-௬-பங்கெடை விராட்டியிற் புடமிட்டெடுக்கச் சுண்ணமாகியிருக்கும். (இந்தச் சுண்ணத்தை அரைத்தமஞ்சளில் மிஸ்ரமித்தால் சிவக்கும் இதுவே சுண்ணத்தின் அடையாளமாம்.)

பிரமாணம்:—குன்றிமணியெடை-௫-டு.

அநுபானம்:—வெள்ளரிக்காய்ச்சாறு, நீராகாரம், தாழை விழுதுச்சாறு, மிளகுக் கஷாயம், ஆகிய இவைகளிலொன்றில் அநுபானித்து உபயோகிக்கவும்.

உபயோகம்:—சதையடைப்பு, கல்லடைப்பு, நீரடைப்பு, நீர்ச்சுருக்கு ஆகியவைகள் தீரும்.

### 169 படிக்காரச்சுண்ணம் (வேறு).

படிக்காரம் பலம்-௧0, தயிர்த் தண்ணீர் படி-௨, எருக்கம்பால் அல்லது, கள்ளிப்பால் செல்லத்தக்க அளவு, வெடியுப்பு செல்லத்தக்க அளவு; முலைப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—படிக்காரத்தைப் பொடித்து ஒரு சட்டியிலிட்டு அடுப்பேற்றிச் சிறுதீயா யெரித்துப் படிக்காரமெல்லாம் உருகினவுடன் மேற்படி தயிர்த்தண்ணீரைக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டுச் சுருக்குக் கொடுக்கவேண்டும். எல்லாத் தயிர்த்தண்ணீரும் சுருக்கிட்டானவுடன் இறக்கி ஆறவிட்டெடுக்க படிக்காரம் கட்டுப்பட்டுப்போம். இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்து எருக்கம்பாலை அல்லது, கொடிக்கள்ளிப்பாலைச் சிறுகவார்த்து ஒரு சாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஐந்து சீலைமண் செய்து கஜபுடத்தின் ஏழுபங்கெடை விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுக்கச் சுண்ணமாகி யிருக்கும். இந்தச் சுண்ணத்திற்குச் சமவெடை வெடியுப்பைச் சேர்த்துப் பொடித்து முலைப்பாலைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டு சாமமரைத்துப் பில்லைசெய்



துலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடுமூடி-௫, சீலைமண் செய்துலர்த்தி நாற்றைம்பது பலம் விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுக்கக் கடுங்காரச் சுண்ணமாகி யிருக்கும். இதனை யெடுத்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-௧, ௨.

உபயோகம்:—வியாதிகளுக்குத் தகுந்த அநுபானங்களுடன் எல்லா வியாதிகளுக்கும் உபயோகிக்கலாம்.

#### குறிப்பு

இது சரக்குகளைக் கட்டவும், வாதமுறைகளுக்குமாகும். தெரிந்தவர்கள் மூலம் கேட்டுக்கொள்ளவும்.

### 170. பூநாகிமுறைச் செந்தூரம்.

படிக்காரத்தைப் பொடித்துப் புதுசட்டியிற் போட்டு அடுப்பேற்றிச் சிறுதீயா யெரித்தால் படிக்காரத்திலுள்ள நீர்சுண்டிப் பொரிந்ததுபோலிருக்கும். இதனை யெடுத்துக் கல்வத்திற் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இவ்விதம் செய்த தூள்பலம்-௧, பூநாகியைக் கல்வத்திற் பொடித்து இளநீர் விட்டரைத்து பத்துப்பங்கு இளநீரிற் கரைத்துக் கீழ்ப்படியாததற்கு முன்பே சீக்கிரமாக வேறு பாத்திரத்தில் வடித்துக் கொள்ளவேண்டும். அடியிற் படிந்திருக்கிற மணல் முதலியவைகளை நீக்கிவிட வேண்டும். வடித்தநீரை வெயிலில் வைத்து வந்தால் நீரெல்லாஞ் சுண்டிக் காவியானது கீழ்ப்படிந்திருக்கும். இதனைப் பொடித்துக் கொள்ளவும். இவ்விதம் சுத்தப்படுத்தி

ன் பூங்காவி பலம்-க, மேற்படி யிரண்டு சரக்கையும் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-ரு. அ.

அனுபானம்;—தேன், நெய் முதலியவைகளாம்.

உபயோகம்.—மேகசுரம், மேகவெட்டை, நீரெரிச்சல், தேகங் காந்துதல், கைகாலெரிச்சல் ஆகியிவைகள் தீரும். சோடாவாட்டரில் அனுபானித்துக் கொடுக்கப் பெரும்பாடு தீரும்.

பத்தியம்:—கடுகு, நல்லெண்ணெய், காரமாகிய வஸ்து ஆகியவைகளைத் தள்ளவும்.

### 171. சீன ரச செந்தூரம்.

படிக்காரம் பலம்-க, நெல்லிக்காய்க் கெந்தகம் பலம்-ங; இரசம் பலம்-உ.

செய்முறை:—படிக்காரத்தையும் கெந்தகத்தையும் அவலைப்போல துண்டித்து இரசத்துடன் கலந்து ஏழுசீலைமண் செய்துலர்த்தின காசிக் குப்பியில் வைத்து வாய்க்கு மாக்கல்லடைத்து வாய்க்கும் ஏழுசீலை செய்துலர்த்தி ஒரு முழச்சதுரக் குழிதோண்டி அதில் அரைவாசி உமியைக்கொட்டி முன் சித்தப்படுத்தின சீஷாவை வைத்து அதின்மேலும்உமியைக்கொட்டி நெருப்பிட்டுப் புடம் குளிர ஆறினபின் னெடுத்துக் குப்பியை உடைக்கச் செந்தூர மிருக்கும். இதனைப் பொடித்துச் சீஷாவிற் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க. உ.



அனுபானம்:—பசுவின் வெண்ணெய், பசுவினெய் முதலியவைகளாம்.

உபயோகம்:——இதனை ஐந்துநா ளுபயோகிக்க மூலரோகம், மூலவாயு, மேகரோகம், காசம், முதலிய அநேக ரோகங்கள் தீரும்.

### 172 சீன விஷாமிர்தம்.

முன் கண்டபடி சுத்திசெய்யப்பட்ட படிக்காரத்தை, அல்லது, சாதாரணமானபடிக்காரத்தைப்பொடித்து ஒரு புது மண்பாண்டத்திற் போட்டு மூடிவைத்திருக்க வேண்டும்.

பிரமாணம்:—மனிதருக்கு விராகனெடை-க, மாட்டிற்கு விராகனெடை-சா, குதிரைக்கு விராகனெடை-கூ.

அனுபானம்:—இதனை வாயிற்போட்டு மேலே ஜலத்தைப் பானஞ் செய்வதேயாம்.

உபயோகம்:—பாம்பு, தேள், எலி, நட்டுவக்காலி, நாய், பெருச்சாளி, நரி முதலிய சகல விஷங்களுக்கு முபயோகமாம். உடனே விஷத்தைக் கேட்கும். விஷத்தினாற் காணும் மாரடைப்பு, மூர்ச்சை முதலியவைகளும் தீரும்.

### குறிப்பு

மேற்கண்டபடி வேண்டிய அளவு படிக்காரத்தைப்பொடித்துப் புதுப்பாண்டத்திற் போட்டு மூடிவைக்க வேண்டும். இது எவ்வளவு நாட்சென்றதாயிருக்குமோ அவ்வளவுக் கவ்வளவு விசேஷ குணத்தைக் கொடுக்கும்.

## 173. சீனக்காரத் தைலம்.

படிக்காரம் பலம்-க0, சிறு கிளாவேர்ப்பட்டை பலம்-க0, படிக்காரத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து மேற்படி வேருடன் கலந்து குழித்தைலமாக இறக்கிக் கொள்ளவும்.

பிரமாணம்:—துளி-ரு. க0.

அநுபானம்:—தேன், நெய், சர்க்கரை முதலிய இஷ்டமானவைகளி லநுபானித்துக் கொடுக்கலாம்.

உபயோகம்:—உஷ்ண சம்பந்தமான எல்லாவகை சுரங்களும் தீரும். எல்லாவகை ரணங்களுக்கும் உபயோகிக்கலாம்.

## 174. வெண்காரப் பற்பம்.

வெண்காரம் பலம்-கஉ, வெள்ளைப் பூப்பூக்கிற காசித்தும்பை யிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—வெண்காரத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஒட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் பத்துப்பங்கெடை விராட்டியிற் புடமிட்டாறின பின்னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—[illegible]ன்றிமணியெடை-ச. எ.

அநுபானம்:—நெய், தேன், வெண்ணெய், முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகை உஷ்ணரோகங்களும் தீரும்.



## 175. வெண்காரப்பற்பம் (வேறு)

வெண்காரம் பலம்-உ௦, சிறு செருப்படிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இதனைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு மூன்று சாமமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஒட்டிலிட்டு மேலோடுமூடி-ரு சீலைமண்செய்து உலர்த்தி இருநூறு பலம் விராட்டியிற் புடமிட்டாறின பின்னெடுக்கக் கறுப்பு வருணமான பற்பமாகி யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ. ௩.

அநுபானம்:—தாழைவிழுதை அரைத்தது பலம்-௮, அல்லது, மேற்றோல்நீக்கின வாதுமைப் பருப்பு சீனாக்கற்கண்டு இவ்விரண்டையுஞ் சமபாகமாகச் சேர்த்து அரைத்த லேகியம் விராகனெடை-க.

உபயோகம்:—மேற்கண்ட வகைகளுள் ஒன்றி லநுபானித்துக் காலைமாலை யிரண்டுவேளையும் ஏழுநாளுபயோகிக்க இருமல், க்ஷயம், காசம், முதலிய கபரோகங்கள் தீரும்.

## 176 வெண்காரப் பற்பம் (வேறு)

(a) வெண்காரம், சிலாசத்து, கலைமான்கொம்பை யராவின தூள், கல்நார்த்தூள் இவை வகை-க-க்குப் பலம்-க.

(b) நவச்சாரம், சூடன், பூநீறு, வீரம், இவை வகை-க-க்கு விராகனெடை-கவ, பருத்திச்சாம்பல் தெளிநீர் செல்லத்தக்க அளவு, கற்சுண்ணாம்புத் தூள் பலம்-ச.

பருத்திச் சாம்பல் தெளிநீர் முறை:—பருத்திச் செடி சமூலத்தை உலர்த்திச் சுட்டசாம்பல் படி-௨, இதனை ஒரு பாத்திரத்திற்போட்டு அதில் -௪- படி ஜலத்தை விட்டு ஒவ்வொரு நாளும் இரண்டுமூன்று தடவை நன்றாகக் கலக்கிவர வேண்டும். இவ்விதம் மூன்று நாட்செய்து நாலாம்நாள் கலக்காமல் விட்டு வைத்து ஐந்தாம்நாள் தெளிவை யிறுத்து சீஷாவிற் பத்திரப்படுத்த வேண்டும். இதுவே பருத்திச்சாம்பல் தெளிநீராம்.

செய்முறை:—(a) யிலுள்ள நான்கு சரக்குகளையும் கல்வத்திலிட்டு மேற்படி தெளிநீரைச் சிறுகச் சிறுக வார்த்துக் கைவிடாமல்நான்கு சாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி-௫-சீலைமண் செய்துலர்த்தி மூந்நூறு பலம் விராட்டியிற் புடமிட்டு எடுத்து அதைக் கல்வத்திலிட்டு (b) யிலுள்ள சரக்குகளைச் சேர்த்து மேற்படி பருத்திச்சாம்பல் தெளிநீரைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாமங் கைவிடாமலரைத்துப் பில்லைதட்டிக் காயவைத்து நன்றாய்க் காய்ந்தபின்பு ஒரு வட்டோட்டில் இரண்டுபலம் கற்சுண்ணாம்பைப் போட்டுப் பரப்பி அதன்மேல் பில்லையை வைத்துப் பில்லையின்மேல் இன்னம் இரண்டு பலம் கற்சுண்ணாம்பைப் போட்டுப் பரப்பி மேலோடு மூடிச் சீலைமண் செய்துலர்த்தி மூந்நூறுபலம் விராட்டியிற் புடமிட்டுஆறினபின் னெடுக்கவும். பற்பமானது வெளுத்திருந்தா லுத்தமம். அப்படி வெளுக்காது கறுத்திருந்தால் முட்டை வெள்ளை யம்புலியைவிட்டு இரண்டுசாம மரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டில் முன்போலவே கீழுமேலும் சுண்ணத்தையிட்டு நடு



வே பில்லையைவைத்து மேலோடுமூடிச் சீலைமண்செய்து இருநூறுபலம் விராட்டியிற் புடமிடவேண்டும். ஆறினபின்னெடுக்க வெண்மையான பற்பமாகியிருக்கும். இந்தப் பற்பம் ஒருபங்கு, லிங்கசெந்தூரம் அரைப்பங்கு. (இதன்முறை பின்னெழுதப்படும்) அவசரமான காலங்களில் முலைப்பாலில் நான்குசாமம் சுருக்கிட்டுப் பொடித்த லிங்கத்தைச் சேர்த்துக்கொள்ளலாம். மேற்கண்ட இரண்டையும் பொடித்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௫-ஏ.

அனுபானம்:—இளநீர், வெள்ளரிக்காய்ச்சாறு, வெள்ளரிக்காய்விதைப் பருப்பையரைத்துப் பிழிந்தபால், நெருஞ்சிநீர்வர்க்கஷாயம் முதலியவைகளாம்.

உபயோகம்:—பெருவயிறு, மகோதரம், நீர்க்கிரிச்சரம், கல்லடைப்பு, நீரடைப்பு, சதையடைப்பு, நீர்சுருப்பு, நீரெரிச்சல், தேகவீக்கம் முதலியவைகள் தீரும்.

## 177. வெண்காரச் சுண்ணம்.

நாட்டு வெண்காரம் தேவையான அளவு, உப்பிலாங்கொடிச் சமூலச்சாறு செல்லத்தக்கஅளவு, முருங்கைப்பட்டை செல்லத்தக்கது.

செய்முறை:—வெண்காரத்தை ஒரு பீங்கான் பாத்திரத்திற்போட்டு அது இரண்டங்குலம் ஆழ்ந்திருக்கும்படியாக மேற்படி சாற்றைவிட்டு மூன்றுநாள் வெயிலில்வைத்து அவ்வது சாறெல்லாஞ் சுண்டுகிறவரையில் வெயிலில்வைத்துச் சாறுசுண்டினபின் முருங்கைப் பட்டையை வெண்ணெய்போ லரைத்து அ

தற்குள் மேற்படி வெண்காரத்தைவைத்துப் பொதிய வேண்டும். கவசமானது வெண்காரத்தின்மீது ஒரு அங்குலமிருக்க வேண்டும். இரவிலுலர்த்தி நன்றாயுலர்ந்தபின்பு அதன்மேல் ஏழுசீலைமண் செய்துலர்த்தி ஐம்பதுபலம் விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கச் சுண்ணமாகி யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-உ-௪.

அனுபானம்:—தேன், நெய், வெண்ணெய், இளநீர்.

உபயோகம்:—நீரடைப்பு, சதையடைப்பு, கல்லடைப்பு ஆகியவைகள் தீரும்.

## 178. வெண்காரச் சுண்ணம் (வேறு)

வெண்காரக் கட்டிக்குப் பிரமதண்டிப்பாலை யடித்து நிழலில்வைக்க வேண்டும். பிறகு அந்தப் பால் உலர்ந்தபின்பு முன்போல் அந்தப்பாலை அதற்கு அடிக்கவேண்டும். இவ்விதம் கட்டியின்மீது சுமார் ஒரு நூற்கனமிருக்கும்படியாக அந்தப்பாலை அடிக்கவேண்டியது. அந்தப்பால் உலர உலர ஒரேதடவையிலும் அவ்வளவு பாலையும் அடித்துக்கொள்ளலாம். இவ்விதம் பாலையடித்துச் சித்தப்படுத்தின கட்டியை நான்கு சாமம் வெயிலில்வைக்கக் கட்டி வெளுத்துச் சுண்ணமாகிவிடும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-௪.

அனுபானம்:—தேன், நெய், வெண்ணெய், இளநீர், முள்ளங்கிச்சாறு, வெள்ளரிக்காய் விதையைய ரைத்துப் பிழிந்த பால் முதலியவைகளாம்.



உபயோகம்:—நீர்க்கட்டு, நீருகல், கபம், பாண்டு, தோஷங்கள் ஆகியவை தீரும்.

## 179. வெண்காரச் செந்தூரம்.

வெண்காரம் தேவையான அளவு, (இவை கட்டிகளா யிருக்கவேண்டும்) வெடியுப்பு தேவையான அளவு, (இது சுமார் வெண்காரத்தினெடைக்கு நாலுபங்கெடையுள்ளதா யிருக்கவேண்டும்) காட்டாமணக்குப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை.—வெடியுப்பைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி காட்டாமணக்குப்பாலைச் சிறுகச்சிறுக வார்த்து ஒருசாமமரைத்து மேற்படி வெண்காரக் கட்டிகளின்மீது சமமாகக் கவசஞ்செய்து உலர்த்தவேண்டும். அந்தக் கவசம் உலர உலர அதன்மீது கவசமேற்றிக்கொண்டே போகவேண்டும். இவ்விதம் அரைத்துவைத்திருக்கிற வெடியுப்புயாவும் செல்கிறவரையில் பூசி உலர்த்திக்கொள்ள வேண்டும். சுமார் நாலைந்துநாள் உலரவைக்க நேரிடும். நன்றாயுலர்ந்து வெளுத்தபின்பு கவசத்துடனே கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி பாலைச் சிறுகச் சிறுகவிட்டு ஒரு சாமமரைத்து ஒரு பீங்கான் தட்டில்வைத்து உலர்த்த வேண்டும். இது ஈரமில்லாமல் நன்றாயுலர்ந்தபின்பு தூள்செய்து ஒரு இரும்புக்கரண்டியிற்போட்டு மேற்படி பாலைவிட்டு விளக்கெண்ணெய் விளக்கிற்பிடித்து இரும்புக்கரண்டியாற்கிளறிக்கொடுக்க வேண்டும். நன்றாய்ச் சிவக்கிறவரையில் மேற்படி பாலையும் விட்டெரவும் வேண்டும். நன்றாய்ச் சிவந்து போனபின்பு

எடுத்தாறவைத்துக் கல்வத்திற்பொடித்துச் சீசாவிற் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨-௫.

அனுபானம்:—தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—தாகம், காவறட்சி, நீர்க்கட்டு முதலியவைகள் தீரும்.

### 180. வெண்காரச் செந்தூரம் (வேறு.)

பொரித்த வெண்காரம் பலம்-௧, கட்டாமணக்குப்பால் பலம்-௩.

செய்முறை:—மேற்படி வெண்காரப் பொரியைப் பொடித்து இருப்புக்கரண்டியிற்போட்டு மேற்படி பாலைச் சிறுகச் சிறுகவார்த்து இருப்புக்கம்பியால் துளாவிவறுக்க செந்தூரமாகும். இந்தச் செந்தூரம் கருஞ் சிவப்பாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧-௨.

அனுபானம்:—இளநீர், முள்ளங்கிக் கிழங்குச் சாறு முதலியவைகளாம்.

உபயோகம்:—நீர்க்கட்டு, நீரடைப்பு, நீருகல் ஆகியவை தீரும்.

### 181. வெண்கார மெழுக்கு.

வெண்காரத்தைச் சுத்திசெய்து பொடித்துக் கரண்டியிற்போட்டு சிறு அம்மான் பச்சரிசிச்சாற்றைச் சிறுகச் சிறுகச் சுருக்குக்கொடுக்கவும். இவ்விதம் சுமார் ஒரு சாமங்கொடுத்தால் மெழுகாகும். இதனைப்



பீங்கான் செமிழில் அல்லது கொம்புச் செமிழிற் பத்திரப்படுத்தவேண்டும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௪-௫.

உபயோகம்:—நீரடைப்பு, நீர்க்கட்டு ஆகியவைகள் தீரும்.

### 182. வெண்காரமெழுக்கு (வேறு.)

கோழிமுட்டை-௰, இவை ஒவ்வொன்றையும் தமிருசியால் துவாரஞ்செய்து கொள்ளவேண்டும். இவையொவ்வொன்றிலும் சுத்திசெய்த வெண்காரத்தைத் தூள்செய்து இரண்டிரண்டு விராகனெடை விதம் அதற்குட்செலுத்தி அதன் வாயின் ஓரத்தில் உளுந்தையரைத்துப் பூசி அதன்மீது வேறு முட்டையோட்டைவைத்து அடைத்துவிட வேண்டும். இவ்விதம் எல்லாமுட்டைகளையுஞ் சித்தப்படுத்தி ஒரு வாயகன்ற சட்டியில் மணலைப்பரப்பி அதில் முட்டைகளை ஒன்றுமீது ஒன்றுபடாமல்வைத்து மேலும் மணலைக்கொட்டி முட்டை மறையும்படியாகச் செய்யவேண்டியது. முட்டையின்மீது மணல் ஒரு அரையங்குலம் அல்லது காலங்குலமிருந்தாற் போதுமானது. இவ்விதம் சித்தப்படுத்தினதை நாள்முழுதும் வெயில்படுகிறவிடத்தில் வைக்கவேண்டும். இவ்விதம் வைத்து இருபத்திரண்டுநாட் சென்றெடுத்து முட்டையை உடைத்தெடுத்தால் அதற்குள் எல்லாம் மெழுகாயிருக்கும். இதனைப் பீங்கான் செமிழில் அல்லது கொம்புச் செமிழிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௪-௫.

உபயோகம்:—நீரடைப்பு, நீர்க்கட்டு, ஆகியவைகள் தீர்ந்து தேகபலம், தேகதிட்டம் முதலியவைகளுண்டாகும்.

## 183. போஜன சஞ்சீவி.

வெண்காரம் பலம்-௫, (இதனைப் பொரித்துக்கொள்ளவேண்டும்.) வெடியுப்பு, கறியுப்பு, இந்துப்பு, படிக்காரம், சத்திக்காரம், சவுட்டுப்பு, இலவங்கம், மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, திப்பிலி, கோஷ்டம், நவச்சாரம், ஓமம், கண்டத்திப்பிலி, யானைத்திப்பிலி, சுத்தித்த கஞ்சா, பெருங்காயம் இவை வகை-க-க்குப் பலம்-க, வெள்ளைப்பூண்டு பலம்-௫, பனைவெல்லம் பலம்-௯.

செய்முறை:—உப்புகளைத் தனியே பொடித்து ஒன்றாகச்சேர்த்துக் கொள்ளவும். பெருங்காயத்தைப் பொரித்துத் தூள்செய்து கொள்ளவும். கஞ்சாவை ஓட்டில் மணம் வரும்படியாக வறுத்துத் தூள்செய்து கொள்ளவும். வெள்ளைப் பூண்டைத் தோலையுரித்து நீக்கி இதழிதழாக எடுத்துக்கொள்ளவும். மற்றசரக்குகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து கொள்ளவும். பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த்துக் கல்லுரலிலிட்டு மரவுலக்கையால் மெழுகுபோலாகிற வரையில் இடிக்கவேண்டும், அரைக்கலாகாது. எத்தனைநாட் சென்றபோதிலும் இடித்தே மெழுகுபதமாக்கிக்கொள்ள வேண்டும். அரைத்து உபயோகித்தால் சிரேஷ்ட குணத்தைக் காணவில்லை. இது ஒருதடவையல்ல பல தடவைகளிலும் பரீக்ஷித்துப் பார்க்கப்பட்டிருக்கிறது.

பிரமாணம்:—விராகனெடை-வ. உ.



உபயோகம்:—சோகைரோகம், எல்லாவகை வயிற்றுவலிகள், எல்லாவகைக் குத்து வாயுகள், அஷ்ட குன்மம், வயிற்றுக் கட்டிகள் முதலிய அநேக உதரரோகங்கள் தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 184. கறியுப்புப்பற்பம்.

பெருங் கட்டிகளாயுள்ள கறியுப்பு பலம்-௫, இதனை ஒரு மண்கலயத்திற்குள் போட்டு உப்பானது நான்கங்குலம் ஆழ்ந்திருக்கும்படியாக வில்வ இலைச்சாறைவிட்டு இரண்டொருநாளூறவைத்து மூன்றாநாள் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு ஏழுசீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஏழுபங்கெடை விராட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௫.

அநுபானம்:—இஞ்சிச்சாறு, தேன், சுக்குக்கஷாயம், எலுமிச்சம்பழச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, எலுமிச்சம்பழ சர்பத்து, நெல்லிக்காய் முறப்பா முதலியவைகளாம்.

உபயோகம்:—குன்மம், அக்கினிமந்தம், சூலைவாயு, உஷ்ணவாயு, வயிற்றிரைச்சல், வயிற்றுப்பொருமல் முதலியவைகள் தீரும்.

பத்தியம்:—இலகுவாய் ஜீரணமாகிற வஸ்துக்கள், இலகுபோஜனம், காலக்கிரம போஜனம், முதலியவைகளை அநுசரித்து வரவேண்டியது. இன்னும் தேகசுபாவம், தேகபலம் முதலியவைகளுக்கேற்றபடி

பத்தியம் ஏற்படுத்த வேண்டியது சிகிச்சகர்களின் கடமையாம்.

### 185. பஞ்ச இலவண பற்பம் (வேறு)

கறியுப்பு, இந்துப்பு, வெடியுப்பு, வெண்காரம், சீனக்காரம், இவை வகை-ச-க்குப் பலம்-ரு, கர்ப்பூர சிலாசத்துக்கல் பலம்-டு, (இவைகளை முறைப்படி சுத்தி செய்து கொள்ளவும்.) குப்பைமேனிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட சரக்குகளைக் கல்வத்திற்போட்டு நன்மையான தூளாகிற வரையில் அரைத்துப் பிறகு மேற்படி 'குப்பைமேனிச்' சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து, நான்கு சாமமரைத்துப் பில்லை தட்டி வெயிலிலுலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடுமூடி ஏழுசீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் எட்டுப் பங்கெடை விராட்டியில் புடமிட்டு ஆறினபின் னெடுக்கப் பற்பமா யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை—அ. கஉ.

அனுபானம்:—தேன், இஞ்சிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, வில்வவேர்க் கஷாயம், சீரகக் கஷாயம், சுக்குக்கஷாயம், இஞ்சிச்சாறு முதலியவைகளாம்.

உபயோகம்:—குன்மம், மந்தாக்கினிரோகம், அஜீரணரோகம், வயிற்றுநோய் ஆகியவைகள் தீரும். பசிதீபனம் அதிகமாயுண்டாகும்.

### 186 பஞ்ச லவணப் பற்பம் (வேறு)

கறியுப்பு, வெண்காரம், படிக்காரம், இந்துப்பு, வெடியுப்பு, வளையலுப்பு இவை வகை-க-க்குப் பலம்-



உ, பிரண்டைச் சாம்பல், அகத்திப் பழுப்புச் சாம்பல், எருக்கம் பழுப்புச் சாம்பல், கள்ளிச்சாம்பல், நாயுருவிச்சாம்பல், இவை வகைக்-க-க்குப் பலம்-ந.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் நன்மையாகப் பொடித்து ஒரு கலயத்திற் போட்டு வாய்க்குச் சில்லிட்டு ஏழுசீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் எழுபங்கெடை விராட்டியில் புடமிட்டுக் குளிர ஆறினபின் னெடுக்கப் பற்பமாகி யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-ச. அ.

அனுபானம்:— இஞ்சிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, இஞ்சிஷர்பத், எலுமிச்சம்பழ ஷர்பத், மாதுளம்பழச்சாறு, புளிப்பு மாதுளம்பழ ஷர்பத், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகைக் குன்மரோகங்களும் தீரும். குன்மக்கட்டி, ஆதகக்கட்டி, வாயுக்கட்டி முதலிய கட்டிரோகங்களும் தீரும்.

பத்தியம்:—ரோக பலத்திற்கும், தேக பலத்திற்கும் தகுந்தபடி யேற்படுத்தவும்.

### 187. கறியுப்புச் சுண்ணம்.

பெருங்கட்டிகளாயுள்ள கறியுப்பு படி-க. சொடிக்கள்ளிச்சாறு செல்லத்தக்க அளவு. முள்ளிக்கீரைச்சாறு செல்லத்தக்க அளவு, சுண்ணாம்புத் தெளிநீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—கறியுப்பை ஒரு கலயத்திற்போட்டு அது நான்கங்குலம் ஆழ்ந்திருக்கும்படியாக சொடிக்கள்ளிச்சாற்றை விட்டு மூன்றுநாள் ஊறவைத்து

அதனைக் குகையிலிட்டு கொல்லுலையில் வைத்துப் பலமாக ஊத உப்பானது உருகி ஆடும், அச்சமயத்தில் அதனை யெடுத்துக் கம்பியாக வார்த்து ஆறினபின் னெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி முள்ளிக்கீரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி அகலிலிட்டு மேலகல்மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஐந்து பங்கெடை விராட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின் னெடுக்கவும். இவ்விதம் மடக்கி மடக்கி முள்ளிக்கீரைச் சாற்றைவிட்டு அரைத்தரைத்து ஐந்துபுடமிடவும். பிறகு சுண்ணாம்புத் தெளிநீரைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமரைத்து பில்லை தட்டி உலர்த்தி அகலில்வைத்து மேலகல்மூடி ஏழுசீலைமண் செய்து உலர்த்தி முன்போற் கவசத்தின் ஐந்துபங்கெடை விராட்டியில் புடமிட்டுக் குளிர ஆறினபின் னெடுக்க வேண்டும். இவ்விதமே மடக்கி மடக்கிச் சுண்ணாம்புத்தெளிநீரில் ஐந்துபுடமிட வேண்டும். ஆகக்கூடிய பத்துப்புடமுந் தீர்ந்தால் கடவுளினது கிருபையால் கடுங்காரச்சுண்ணமாகி யிருக்கும். மஞ்சநீர்க்குச் சிவக்கும்.

குறிப்பு

இது செய்வதற்குச் சற்று கடினமாகத் தோற்றினும் கஷ்டத்திற்குத் தகுந்த பிரயோசனம் இதனாலுண்டாமென்பது சத்தியம். இரசவாதம், வைத்தியமென்னும் இருமுறைகளுக்குமாகும். பாடுபட்டாற் பலன்பெறலாமென்பது சத்தியவாக்காதலால், கஷ்டத்திற் கஞ்சாமல் இஷ்டத்துடன் செய்பவர்களுக்கு எல்லாவித அனுகூலமு முண்டாகும். சோம்பற் சுபாவமு



டையவர்களுக்கு எந்தவித பாகமும் கஷ்டமாகவே முடியும், சோம்பலில்லாமற் சுறுசுறுப்புடன் பாடுபடுபவர்களுக்காக இப்பாகம் எழுதப்பட்டதே தவிர மற்றவர்களுக்காக எழுதப்படவில்லை

பிரமாணம்:—குன்றிமணியெடை-க-உ.

அனுபானம்:—இது எல்லாவகை ரோகங்களுக்கும் கொடுக்கத்தக்க மருந்தாகையால் அந்தந்த ரோகங்களுக்குத் தகுந்தபோல் சமயோசிதமாக ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது.

உபயோகம்:—குன்ம ரோகங்கள், வாயுரோகங்கள், மேகரோகங்கள், வெப்பரோகம், வாந்திரோகம், அஜீரணரோகம் முதலிய எல்லாரோகங்களுந்தீரும்.

### 18௯. கறியுப்புச் செந்தூரம்.

பெருங்கட்டிகளாயுள்ள கறியுப்பு பலம் - உ,௫, நாமக்கோவைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—உப்பை ஒரு கலயத்திற் போட்டு அது இரண்டங்குலம் ஆழ்ந்திருக்கும் படியாக மேற்படி நாமக்கோவை யிலைச்சாற்றைவிட்டுப் பத்து நாளூறவைத்துப் பதினொருநாள் எடுத்துக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமமரைத்துப் பில்லைதட்டி யுலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஏழு சீலைமண்செய்து உலர்த்திக் கவசத்தின் ஐந்துபங்கெடை விராட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின்னெடுக்கச்செந்தூரமாகியிருக்கும். இந்தச் செந்தூரத்திற் கசிவுவராது.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-ச.

அநுபானம்:—தேன், இஞ்சிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, மாதுளம்பழச்சாறு, எலுமிச்சம்பழநீர் பத்து முதலியவைகளாம்.

உபயோகம்:—குன்மரோகங்கள், அஜீரணரோகங்கள், மந்தாக்கினி ரோகங்கள், வயிற்றுப் பொருமல், வயிற்றுப்பிசம் ஆகியவைகள் தீரும்.

பத்தியம்:—வியாதிபலம், தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்த வேண்டியது.

## 189. கறியுப்புச்செந்தூரம் (வேறு).

(a) கறியுப்பு பலம்-உ, மூங்கில் குருத்துச்சாறு படி-வ, முலைப்பால் பலம்-உ.

(b) சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த கெந்தகம், சுத்திசெய்த லிங்கம், சுத்திசெய்த மனோசிலை, சுத்திசெய்த வீரம், சுத்திசெய்த பூரம், இவை வகை-க-க்கு குன்றிமணியெடை-கஉ, எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி கறியுப்பை மேற்படி மூங்கில் குருத்துச்சாற்றிற் கரைத்து அடுப்பேற்றிச் சிறுதீயா லெரித்துக் காய்ச்சி உப்பாக்கி எடுத்துக் கல்வத்திலிட்டு மேற்படி முலைப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி அகலிலிட்டு மேலகல்மூடி ஏழுசீலைமண் செய்துலர்த்திக் கலத்தின் ஏழுபங்கெடை விராட்டியில் புடமிட்டுக் குளிர ஆறினபின் னெடுக்கப் பற்பமாயிருக்கும்.



இந்தப் பற்பம் பலம்-அ, இதனுடன் (b) யிற் சொல்லப்பட்டிருக்கிற சரக்குகளைச் சேர்த்துக் கல்வத்திற்போட்டுப் பொடித்து மேற்படி எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேர மரைத்துப் பில்லை செய்துலர்த்திச் சிறு அகலிலிட்டு மேலகல்மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்திக் கலத்தின் ஏழு பங்கெடை விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கச் செந்தூரமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க. கஉ.

அநுபானம்:—வில்வவேர்க் கஷாயம், ஜீரகக்கஷாயம், சுக்குக் கஷாயம், தேன், நெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—குன்ம ரோகங்கள், உதர ரோகங்கள், வயிற்றுப் பொருமல், வயிற்றுப்பிசம், மந்தாக்கினி ரோகம் ஆகியவைகள் தீரும். இன்னும் சுர ரோகங்கள், சன்னி ரோகங்கள், வாயு ரோகங்கள் முதலிய அநேக ரோகங்களுக்கு முதவும்.

பத்தியம்:—தேகபலம், வியாதிபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்த வேண்டியது. வாயு பதார்த்தங்கள், கடினமாக ஜீரணமாகும் பதார்த்தங்கள் ஆகியவைகளை நீக்க வேண்டியது.

## 190. கறியுப்புச் செந்தூரம் (வேறு)

கறியுப்பு பலம்-க, மஞ்சட் கடுக்காய்த்தோலை யிடித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணம் விராகனெடை-எ. (இதனைத் தனித்தனி ஒவ்வொரு விராகனெ

டையாகக் கட்டிவைத்துக் கொள்ள வேண்டும்) சோற்றுக் கற்றாழம் பால் செல்லத்தக்க அளவு, உலாந்தா லிங்கம் விராகனெடை-௨.

செய்முறை:—மேற்படி யுப்பைக் கல்வத்திற் போட்டு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற ஒரு விராகனெடை கடுக்காய்த் தூளையுஞ் சேர்த்து மேற்படி பாலைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருமணி நேரமரைத்துப் பில்லைசெய்து காயவைத்து அகலில்வைத்து மேலகல்மூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தை நான்கு பங்கெனை விராட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறின பின்பெடுத்து மறுபடியுங் கல்வத்திலிட்டு முன்போல் ஒரு விராகனெடை கடுக்காய்த் தூளையுஞ் சேர்த்து முன்போல் சோற்றுக் கற்றாழம் பாலைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருமணிநேர மரைத்துப் பில்லை செய்துலர்த்தி முன்போல் அகலிலிட்டு முன்போற் புடமிடவும். இவ்விதமே மடக்கி மடக்கி ஏழுபுடமிட்டெடுத்து உலாந்தா லிங்கத்தையும் சேர்த்துப் பொடித்து மேற்படி சோற்றுக் கற்றாழம் பாலையே சிறுகச் சிறுக வார்த்து இரண்டு ஜாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி அகலில்வைத்து மேலகல்மூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் ஐந்து பங்கெனை விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுக்கச் செந்தூரமாகி யிருக்கும்.

பிரமாணம்:—ஒரு அரிசியெடை.

அனுபானமும், உபயோகமும்:—ஒரு விராகனெடை பசுவெண்ணெயில் மேற்படி செந்தூரத்தை மேற்கண்ட பிரமாணப்படி யனுபானித்துண்ண சுவாச



காசம், இருமல் ரோகம், இரைப்பு, பெருமூச்சு, தொண்டை யடைப்பு முதலிய கபசம்பந்தமான ரோகங்கள் தீரும்.

தேன் விராகனெடை-௧, இதில் மேற்கண்ட செந்தூரத்தை மேற்கண்ட பிரமாணப்படி யனுபானித்துண்ண சீதளரோகங்கள், சீதளசன்னி, தோஷங்கள் முதலியவை தீரும்.

### குறிப்பு

இது வாதமுறைகளுக்கும் ஆகுமாகையால் தெரிந்தவர்களிடம் இதனை யுபயோகிக்கும் விதத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவும்.

பத்தியம்:—ரோகத்திற்கும் தேகத்திற்குந் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்த வேண்டியது.

### 191. கறியுப்பு செந்தூரம்.

கறியுப்பு பலம்-௫, மான் செவியிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி யுப்பைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து மூன்று மணிநேர மரைத்துச் சிறுபில்லைகளாகச்செய்து உலர்த்தி சிறு மண்தாலத்தில்வைத்து மேலும் மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஐந்து பங்கெனை விராட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போல் மான் செவியிலைச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து மூன்றுமணிநேரமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி முன்போலவே சீலைமண்செய்து முன்போற்

புடமிடவும். இவ்விதமே மேற்படி சாற்றால் மடக்கி மடக்கிப் பத்துப்புடமிட்டு, ஆடுதின்னாப் பாளைச்சாற்றால் முன்போல் இரண்டு மூன்று புடமிட உப்பானது நன்றாய்ச் சிவந்து செந்தூரமாகிவிடும்.

பிரமாணம்;—குன்றிமணியெடை-க-உ.

அனுபானம்;—தேன், நெய்.

உபயோகம்;—அக்கினி மந்தம், குன்மரோகம், உதரரோகம் முதலியவைகள் தீரும். இதனால் செம்புஞ் சுத்தியாகும்.

## 192. கறியுப்பு செந்தூரம் (வேறு.)

கறியுப்பு பலம்-ச, (இதனை ஒரு சட்டியிற்போட்டு இதில் பத்துப்பலம் காட்டுமுள்ளங்கியிலைச் சாற்றைவிட்டுக் கொல்லுலையில்வைத்து துருத்தியாலூத உப்பானது உருகி ஆடும்—அதனைக் கம்பியாகவார்த்து ஆறினபின்பு கல்வத்திலிட்டுப் பொடித்து எருக்கம்பூப்புச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமம் அரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் எட்டுப்பங்கெடை விராட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுத்துக் கல்வத்திலிட்டு முன்சாற்றையே சிறுகச்சிறுகவார்த்தரைத்து முன்போற் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழுபுடமிட்டால் இவ்வுப்பான செந்தூரமாகும்.

பிரமாணம்—குன்றிமணியெடை-க-உ.

அனுபானம்:—தேன், நெய், இஞ்சிச்சாறு, சுக்குக்கஷாயம், சோம்புக்கஷாயம், ஓமக்கஷாய முதலியவைகளாம்.



உபயோகம்:—வாயுரோகங்கள், சூலைரோகங்கள், குன்மரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

பத்தியம்:—வியாதிபலம், தேகபலம் முதலியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் மேற்படுத்தவும்.

## 193. கறியுப்புச் செந்தூரம் (வேறு.)

கறியுப்பு தேவையான அளவு, (இவை பெருங்கட்டிகளாக இருக்கவேண்டியது.) அதிகாலையில் பசபிசுப்புள்ள எருக்கங்கொழுந்தைக் கொண்டுவந்து அன்னியர்காணாமல் மைபோலரைத்து மெல்லிய வஸ்திரத்தில்வைத்துச் சாறுபிழிந்து முன்னுப்பைக் கல்வத்திலிட்டு இந்தச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமமரைத்துப் பில்லைதட்டிச் சாயவைத்து நன்றாயுலர்ந்தபின்பு ஓட்டில்வைத்து மேலோடுமூடி மூன்று சீலைமண்செய்து உலர்த்திக் கவசத்தின் இருபதுபங்கெடை விராட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுத்துக் கல்வத்திலிட்டு முன்போற் சித்தப்படுத்தின எருக்கங்கொழுந்துச் சாற்றைவிட்டு முன்போலரைத்து முன்போற் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி மொத்தம் ஐந்துபுடம் போடவேண்டும். புடத்திற்குப் புடம் உப்பானது சிவந்துவரும். ஐந்தாவது புடத்தில் பூரணமாகச் சிவந்துபோகும். அப்படி யாதாமொரு குறைவாயிருந்தால் நன்றாய்ச் சிவக்கிறவரையில் இன்னும் இரண்டொருபுடம் போட்டுக்கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-௩.

அனுபானமும், உபயோகமும்,—மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி இம்மூன்றையும் ச

வித்தனியிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வகை-க-க்குச் சமனெடை. இம்மூன்றையும் மிஸ்ரமித்துக் கொள்ளவும். இதற்குத் திரிகடுகுச் சூரண மெனப் பெயர். இந்தச் சூரணம் விராகனெடை-ரு, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்கண்ட சூரணத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண எட்டுவகைக் குன்ம ரோகங்களும் தீரும்.

அரிசித்திப்பிலியை வறுத்திடித்த சூரணம் விராகனெடை-ரு, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட செந்தூரத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண தமரக வாயு முதலியவைகள் குணமாகும்,

மிளகை வறுத்திடித்த சூரணம் விராகனெடை-ரு, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட செந்தூரத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண குண்டலி வாயு வகைகள் தீரும்.

தேன் விராகனெடை-க, இதில் மேற்கண்ட செந்தூரத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண எண்பதுவகை வாதரோகங்களும் தீரும்.

கொடிவேலி வேர்ப்பட்டை விராகனெடை-க, இதனை ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கின கஷாயத்துடன் ஒரு விராகனெடை தேனையுஞ் சேர்த்துக் கலந்து மேற்படி செந்தூரத்தைப் பிரமாணப்படி யனுபானித்துக் கொள்ள, தோஷ வகைகள், சன்னி வகைகள், சுரவகைகள், காட்டபட்ட சுரங்கள் ஆகியவைகள் தீரும்.



ஆற்றுத் தும்மட்டிக்காயைக் கறிநெருப்பில் போட்டு வேகவைத்து இடித்துப் பிழிந்தசாறு விராகனெடை-௩, தேன் விராகனெடை-உ, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்படி செந்தூரத்தைப் பிரமாணப்படியனுபானித்துக் கொள்ளப் பெரு வயிறு வகைகள், மகோதர வகைகள், வல்லிக்கட்டு வகைகள் ஆகியவைகள் தீரும்.

மேற்கண்ட திரிகடுகுச் சூரணம் விராகனெடை-ரு, கையாந்தகரைச்சாறு விராகனெடை-௩, தேன் விராகனெடை-உ, இவையெல்லாவற்றையு மிஸ்ரமித்து மேற்கண்ட செந்தூரத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண பாண்டு ரோக வகைகள், சோகை வகைகள், ஊது காமாலை முதலிய காமாலை வகைகள், மந்தாக்கினி ரோக வகைகள் ஆகியவைகள் தீரும்.

இன்னும் அந்தந்த வியாதிகளுக்குத் தகுந்த அனுபானங்களில் உபயோகிக்க அநேக வியாதிகள் தீரும்.

## 104. லவணவீரச் செந்தூரம்.

மேற்படி லவண செந்தூரம் விராகனெடை-க, கட்டிவீரம் விராகனெடை-க, (வீரக்கட்டு வகைகள் நமது இரசவாத சிந்தாமணியில் பல முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.) இவ்விரண்டையும் கல்வத்திலிட்டுப் பொடித்து முன் சொல்லியிருக்கிறபடி சித்தப்படுத்தின எருக்கம் கொழுந்துச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமமரைத்து வில்லைசெய்துலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடுமூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்திக் கஜபுடத்தின் பத்துப்பங்கெடை

விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கச் செந்தூரமாகி யிருக்கும்.

உபயோகம்:—வெள்ளி விராகனெடை-௭, தங்கம் விராகனெடை-௧, செம்பு விராகனெடை-௩. இம்மூன்றையும் சேர்த்துருக்கிச் செவ்வைப்பாகக் கண்விட்டாடும்போது இரண்டு குன்றிமணி யெடை மேற்படி இவ்வனவீரச் செந்தூரத்தைக் கொடுத்து நன்றாக வுருக்கி உமிப்போட்டு எடுத்து ஆறினபின்பு அதனை நான்கு துண்டுகளாக வெட்டி அதனை மறுபடியும் உருக்க வேண்டியது. இவ்விதம் உருக்கி, உருக்கி இரண்டு மூன்று தடவைகள் உருக்குவதினால் எல்லாம் ஏகமாகி ஊட்டம், வர்ணம் முதலியவை யுண்டாகி விடும். எல்லாவகைச் சோதனைக்கும் நிற்கும்.

### 195. கறியுப்புச் செந்தூரம் (வேறு.)

கறியுப்பு தேவையான அளவு, பேயன் வாழைப் பூச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—உப்பைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமமரைத்துப் பில்லை தட்டி உலர்த்தி ஓட்டில்வைத்து மேலோடுமூடி ஐந்து சீலைமண் செய்து கவசத்தின் பத்துப் பங்கெடை விராட்டியிற் புடமிட்டெடுத்து மறுபடியும் முன்போல் பேயன் வாழைப்பூச் சாற்றை விட்டரைத்து முன்போற் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பத்துப்புடமிட உப்பானது [illegible]ச் சிவந்து செந்தூரமாகும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨.



அநுபானம்:—இஞ்சிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, சுக்குக் கஷாயம், பொதினா இலைச்சாறு, பொதினா தீர்ப்பம் முதலியவைகளாம்.

உபயோகம்:—குன்மம், அக்கினிமந்தம், அஜீர்ணவாயு, உஷ்ணவாயு, வயிற்றிரைச்சல், வயிற்றுப் பொருமல் முதலிய இரைப்பை சம்பந்தமான ரோகங்கள் தீரும்.

### 196. கறியுப்புச் செந்தூரம் (வேறு)

கறியுப்பு தேவையான அளவு. புங்கம்வேரை மெல்லிதாகச் சீவினபுறணியை அரைத்துப் பிழிந்தசாறு செல்லத்தக்க அளவு. (இது புங்கம் பாலெனப்படும்.)

செய்முறை:—மேற்படி உப்பைக் கல்வத்திலிட்டு மேற்சொல்லியிருக்கின்றபடி பிழிந்தெடுத்த புங்கம் பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் எழு பங்கெடை விராட்டியிற் புடமிடவும். ஆறினபின் னெடுத்துக் கல்வத்திலிட்டு மேற் சொன்னபடி சித்தப்படுத்தின புங்கம் வேர்ப்பாலை முன்போல் விட்டரைத்து முன்போற் புடமிட வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி எழு புடமிட உப்பானது கட்டிப்பட்டுச் செந்தூரமாகும்.

பிரமாணம், அநுபானம், உபயோகம் முதலியவைகளெல்லாம் மேற்சொன்னவைகளே யாம்.

### 107. கறியுப்புச் செந்தூரம் (வேறு)

கறியுப்பு தேவையான அளவு, கல்வேளைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி பாகத்திற் சொல்லியிருக்கின்றபடியே மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நன்றாய்ச் சாமமரைத்து மேற்கண்டபடியே எழுபுடமிடச் செந்தூரமாகும்.

பிரமாணம், அநுபானம், உபயோக முதலியவைகளெல்லாம் மேற்சொல்லப்பட்டிருப்பவைகளேயாம்.

## 198. கறியுப்புச் செந்தூரம் (வேறு)

கறியுப்பு தேவையான அளவு, தவசி முருங்கையிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட பாகப்படியே யெழுபுடமிடச் செந்தூரமாகும்.

பிரமாணம், அநுபானம், உபயோக முதலியவைகளெல்லாம் மேற்சொல்லப்பட்டிருப்பவைகளேயாம்.

## 199. கறியுப்புச் செந்தூரம் (வேறு)

கறியுப்பு தேவையான அளவு, ஆகாசத்தாமரையிலைச்சாறு செல்லத்தக்க அளவு. (ஆகாசத் தாமரையின் வேர், அழுகின இலை இவைகளை நீக்கிப் பிட்டவித்துச்சாறு பிழிந்துகொள்ள வேண்டும்.)

செய்முறை:—மேற்கண்ட பாகப்படியே யெழுபுடமிடச் செந்தூரமாகும்.

பிரமாணம், அநுபானம், உபயோக முதலியவைகளெல்லாம் முந்தின கிரமப்படியேயாம்.

## 200. கறியுப்புச் செந்தூரம் (வேறு)

கறியுப்பு தேவையான அளவு, கவற்று முள்ளங்கிச்சாறு தேவையான அளவு.



செய்முறை:—மேற்கண்ட பாகப்படியே செய்துகொள்ளச் செந்தூரமாம்.

பிரமாணம், அநுபானம், உபயோக முதலியவைகளெல்லாம் முன் சொன்னபடியேயாம்.

## 201. கறியுப்புக் கட்டு.

கறியுப்பு பலம்-ச, வெடியுப்பு பலம்-௩, உத்தாமணிச்சாறு, குப்பைமேனிச்சாறு, இவை வகை-க-க்குப் பலம்-க0, முட்டை வெள்ளையம்புலி-௩.

செய்முறை:—மேற்கண்டவைகளெல்லாங் கொள்ளும்படியான ஒரு கலயத்தில் அரைப்பலம் வெடியுப்பைத் தூள்செய்து போட்டுப் பரப்பி அதன்மேல் கறியுப்பைப் போட்டு அதன்மேல் மறு அரைப்பலம் வெடியுப்பைத் தூள்செய்து போட்டு அதன்மேல் மேற்படி இருவகைச் சாறுகளையும் விட்டு அதன்மேல் வெள்ளையம்புலியை விட்டுக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு ஏழு சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஆறுபங்கெடை விராட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின் எடுத்துப் பொடித்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-ச-அ.

அநுபானம்:—சுக்குக்கஷாயம், இஞ்சிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, வில்வாதிலேகியம், வில்வவேர்க்கஷாயம், பஞ்சதீபாக்கினிச் சூரணம், அஷ்டதீபாக்கினிச் சூரணம், தேன், நெய், பழைய வெல்லம் முதலியவைகளாம்.

உபயோகம்:—குன்மரோகங்கள், வயிற்று வலிகள், புளித்த ஏப்பம், சூதகவாயு, உஷ்ணபேதி, வேறு வாயுவகைகள் ஆகியவைகள் தீரும்.

## 202. கறியுப்புக்கட்டு (வேறு)

(a) கடல்நுரை பலம்-௨, சீனக்காரம் பலம்-௩, கறியுப்பு பலம்-க, கொரட்டைப்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

(b) கடல்நுரை, கறியுப்பு இவை வகை-க-க்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—(a) யில் முன்னுள்ள இரண்டு சரக்குகளையுங் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி கொரட்டைப்பழச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுமணிநேரமரைத்து இரண்டு அடையாகச்செய்து ஒரு அடையில் (a) யிலுள்ள கறியுப்பைப் பொதிந்து அதன்மேல் மறு அடையைவைத்து இரண்டு அடைகளின் ஓரங்களும் பொருந்தும்படியாகச்செய்து ஒட்டிலிட்டு மேலோடுமூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்திக் கவசத்தின் எருபக்கெடைவிராட்டியிற்புடமிட்டு ஆறினபின் னெடுத்துக்கொள்ளவும். இதனை முன்போலவே இன்னொருபுடமுமிட் டெடுத்துக்கொள்ள வேண்டும். இந்த இரண்டுபுடம் தீர்ந்த உப்பு ஒருபங்கு, (b) யிலுள்ள கடல்நுரை ஒருபங்கு, கறியுப்பு ஒருபங்கு, ஆகிய இவ்விரண்டையும் முன்போற் கொரட்டைப்பழச் சாற்றைவிட்டு முன்போலரைத்து முன்போல் இரண்டடைசெய்து ஒருஅடையில் முன் புடமிட்டுத் தீர்ந்திருக்கின்ற உப்பைவைத்து மற்றொரு



அடையை மேலேமூடி அடைகளின் இரண்டுவாய்களும் பொருந்தும்படியாகச் செய்து ஒட்டில்வைத்து மேலோடுமூடி ஐந்து சீலைமண்செய்து முன்போற் புடமிடவும். இவ்விதமே மறுபுடமும் போட்டெடுக்க உப்பானது கட்டுப்பட்டிருக்கும். இதனைக் கரியில் வைத்துருக்க உருகிக் கண்விட்டாகும். இது வாதம், வைத்தியம் ஆகிய இரண்டிற்கும் உபயோகமாம்.

பிரமாணம், அநுபானம், உபயோக முதலியவைகளெல்லாம் மூன்றினமுறைகளிற் சொல்லியிருக்கின்றபடியேயாம்.

வாதரப்பந்தயான முறைகளைப் பின்னெழுதப் படும்.

## 203. பஞ்சலவணக்கட்டு

கறியுப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, கறுப்புப்பு, இந்துப்பு இவை வகை-க-க்குப் பலம்-க. குப்பைமேனிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி உப்புகளையுங் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசாமமரைத்துப் பில்லைதட்டியுலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்திக் கவசத்தின் இருபதுபக்கெருவிராட்டியில் புடமிட்டு ஆறினபின்னெடுத்துப் பொடித்து வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-அ-௩௦.

அநுபானமும், உபயோகமும்:—உலர்ந்தின மூருங்கைப்பூச் சூரணம் விராகனெடை-௩, பகலினை விராகனெடை-க. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்

படி கட்டின உப்பைப் பிரமாணப்படி யனுபானித்துட்கொள்ள கால்திமிரு, கைத்திமிரு, தேகத்திமிரு ஆகிய திமிர்ரோகங்கள் தீரும்.

முருங்கைப்பட்டைச் சாறு விராகனெடை-௧௦, தேன் விராகனெடை-௧௦. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்படியுப்பைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண வாயுரோகங்கள் தீரும்

முருங்கைப்பட்டைச் சாறு விராகனெடை-உ, தேங்காயின் கனிப்பால் விராகனெடை-உ. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட உப்பைப் பிரமாணப்படி யனுபானித்துட்கொள்ள மலட்டுவலி, சூதகவலி ஆகியவைகள் தீரும்,

பத்தியம்:—தேகசுபாவம், வியாதி சுபாவம் முதலியவைகளுக்குத் தகுந்தபடி யேற்படுத்திக் கொள்ளவும்.

## 204. ஆறுப்பு ஜெயநீர்.

கறியுப்பு, வெடியுப்பு, நவச்சாரம், பூநீறு, * அமுரியுப்பு, * முள்ளியுப்பு இவை வகை-௧-க்குச் சமனெடை.

இவை யெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துப் பொடித்து ஒரு சாமநேர மரைத்துப் பனியில் வைத்து பாகப்படி ஜெயநீரெடுத்து சீசாவிற் பத்திரப்படுத்

* அமுரியுப்பு:—வெள்ளாட்டு மூத்திரத்தை வெயிலில் வைத்து உலர்த்தி உப்பாக்கிக் கொள்வதே அமுரியுப்பாம்.

* முள்ளிக்கீரையை உலர்த்தி யெரித்துச் சாம்பலாக்கிக் கரைத்துத் தெளியெடுத்துக் காய்ச்சி உப்பாக்கிக்கொள்வதே முள்ளியுப்பாம்.



து வேண்டும். பனியில்லாத காலங்களில் பீங்கான் பாத்திரத்திற் போட்டு பீங்கான் தாலத்தால் மூடி சீலை செய்து சதுப்பான நிலத்தில் சுமார் இருபது நாள் புதைத்துவைக்க ஜெயநீராகி விடும். மேற்கண்ட இருவகைகளுள் ஒரு வகையாக சமயோசிதம்போல சித்தப்படுத்திக் கொள்ளவும்.

பிரமாணம்:—௫, துளிமுதல் ௧௦-துளிவரையில்.

அநுபானம்:—தேன், வெந்நீர், சுக்குக் கஷாயம், சோம்புத் திராவகம், ஓமத் திராவக முதலியவைகளாம்.

உபயோகம்.—அஜீரணரோகம், இரைப்பையிற் கபஞ் சேர்ந்துண்டாகும் வயிற்றுநோவு, அஜீரண வயிற்றுநோவு, வாயுசம்பந்தத்தினா லுண்டாகும் வயிற்றுநோவு முதலிய உதரரோகங்கள் தீரும்.

### குறிப்பு

மேற்படி ஜெயநீர் மூலமாக எல்லாச் சரக்குகளையும் பற்பமாகச் செய்து கொள்ளலாம். அதற்கு தாரணமாக ஒரு முறையை யிங்கெழுதுவாம். அம்முறையிது:—

சுத்திசெய்த வீரம் விராகனெடை-உ௦, இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி ஜெயநீரைச் சிறுகச் சிறுக வார்த்து நன்கு சாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி அகலிலிட்டு மேல்கல் மூடி சீலைமண் செய்து கவசத்தின் மூன்றுபக்கமிட்ட விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கப் பற்பமாகி யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨, ௧.

அநுபானம்:—தேன், இஞ்சிச்சாரம், கண்டங் கத்திரிச் சுரசம் முதலியவைகளாம்.

உபயோகம்:—சன்னிரோகங்கள், [illegible], சைத்தியங்கள், வாத ரோகங்கள், இசிவு, வலிப்பு, குன்மம், சூலை முதலிய அநேக ரோகங்கள் தீரும்.

மேற்கண்ட விதமாகவே இரசகர்ப்பூரம், கெந்தகம், தாளகம் முதலிய நெருப்பிற் கொதிக்கும் சரக்குகளைப் பற்பமாகச் செய்து அந்தந்தச் சரக்குகளுக்குச் சொல்லியிருக்கிறதுபோல் அந்தந்த வியாதிகளுக்கு உபயோகிக்கக் குணமுண்டாகும்.

### 205. மகா திராவகம்.

கறியுப்பு பலம்-௫, வெடியுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, கல்லுப்பு, சத்திச்சாரம், நவச்சாரம், சீனக் காரம் இவை வகை-க-க்குப் பலம்-௨, [illegible] கெந்தகம், சவுக்காரம், எள்ளுத் தட்டைப் பெரித்த சாம்பல், நாயுருவிச் சாம்பல், பால் துத்தம், இவை வகை-க-க்குப் பலம்-௧, ஒருபடி உவர் மண்ணில் நான்குபடி ஜலத்தைவிட்டுக் கரைத்து மூன்றுநாள் வைத்து எடுத்த தெளிநீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட சரக்குகளை வெள்ளைக் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சேர்த்தரைத்து மேற்படி உவர்மண் தெளிநீரைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரம் அரைத்து வெயிலில் வைத்துலர்த்த வேண்டும். ஈரமில்லாமல் நன்று யுலர்ந்தபின்பு மறுபடியுங் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போல் உவர்மண் தெளிநீரைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரம் அரைத்து உலர்த்தவேண்டும். இவ்விதம்



[illegible] அரைத்தரைத்து உலர்த்தி யுலர் [illegible] பொடித்து ஒரு பானையிற் போட்டு வா[illegible] பானையின் விளிம்பக் [illegible] சீலைசெய்து [illegible] இரும்புக் குழாயைச் சொருகிச் சீலை செய்து [illegible] திராவக [illegible] திராவகத்தைக் [illegible] பத்திரப்படுத்தவும்.

அளவு:—[illegible]

அநுபானம்:—[illegible] திராவகம், [illegible] புனித்தநீர [illegible] வேண்டும்.

உபயோகம்:—[illegible] குன்ம ரோகங்கள், [illegible] அஜீரண ரோகம், மந்தா[illegible] பாண்டுரோகம், மகோதர[illegible] முதலிய ரோகங்கள் தீரும். [illegible] குணமுண்டாகும், [illegible] குணமுண்டாகும்.

[illegible]—புளி [illegible] சாப்பிட வேண்டு[illegible] பத்தியமாக [illegible].

## 206. இலவண திராவகம்.

கறியுப்பு பலம்-௧௦, இந்துப்பு, சவுட்டுப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, பால் சாம்பிராணி, செய்யூருப்பு அல்லது கல்லுப்பு இவை வகை-௧-க்குப் பலம்-௧, சீனக்காரம், நெல்லிக்காய்க் கெந்தகம் இவை வகை-௧-க்குப் பலம்-௨.

செய்முறை:—இவை யெல்லாவற்றையுங் கல்வத்திலிட்டுப் பொடித்து ஒரு சாமநேரம் அரைத்து நன்று கலிஸ்ரமான பின்பு வாலையிலிட்டுப் பாகப்படி திராவக மிறக்கிக்கொள்ள வேண்டும். அல்லது, முன் பாகத்திற் சொல்லி யிருக்கிறபடி திராவக மிறக்கிக்கொள்ளவும்.

பிரமாணம்:—பெரியவர்களுக்குத் துளி-ரு. ௪, சிறுவர்களுக்குத் துளி-க. உ.

அநுபானம்:—குளிர்ந்த ஜலம், சோம்புத் திராவகம், ஓமத் திராவகம், சர்க்கரை முதலியவைகளாம்.

உபயோகம்:—வயிற்றுநோய், சூதகவாயு, சூதகக் கட்டு, அக்கிரம சூதகம், நீர்க்கட்டு முதலியவை தீரும்.

பத்தியம்:—வியாதிபலம், தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி யேற்படுத்தவும்.

## 207. உதரரோக நிவாரண திராவகம்.

கறியுப்பு பலம்-௪௦, உவர்மண் பலம்-௪௦, கற்சுண்ணாம் பலம்-௪௦, யானை நெருஞ்சியிலை பலம்-௨௦, சங்கம் வேர்ப்பட்டை பலம்-௨௦, கிணற்று ஜலம் படி-௪.



செய்முறை:—முன்சொன்ன மூன்று சரக்குகளையுஞ் சேர்த்தரைத்து வாலையிற் போட்டு ஜலத்தைவிட்டுக் கலக்கி மற்ற இரண்டு மூலிகைகளையும் அதிற் போட்டு பாகப்படி திராவக மிறக்கிக் கொள்ளவும்.

பிரமாணம்:—விராகனெடை-௨-௪.

அநுபானம்:—வெந்நீர், குளிர்ந்த ஜலம், சோம்புத் திராவகம், சுக்குக் கஷாயம், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:—வயிற்றுவலி, குன்மரோகம், அஜீரண ரோகம், வெட்டை சம்பந்தமான ரோகங்கள், சூதக சம்பந்தமான ரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

## 208. விஷபேதி திராவகம்.

செய்யூருப்பு, அல்லது, கறியுப்பு பங்கு-௧௨, வெடியுப்பு பங்கு-௧௨, படிக்காரம் பங்கு-௧௨, நவச்சாரம் பங்கு-௧௦, வளையலுப்பு பங்கு-௧௦, பிடாலவணம் பங்கு-௩௦, வெண்காரம் பங்கு-ரு, அட்டுப்பு பங்கு-௧.

செய்முறை:—இவை யெல்லாவற்றையுங் கல்வத்திற் பொடித்துச் சேர்த்து ஒருமணி நேரமரைத்துப் பின்பு வாலையிலிட்டுப் பாகப்படி திராவகமிறக்கிக்கொள்ளவும்.

பிரமாணம்:—துளி-௨-௫.

அநுபானம்:—குளிர்ந்த ஜலம், தேன், சர்க்கரை, சுக்குக் கஷாயம், சோம்புத் திராவகம், ஓமத் திராவகம் முதலியவைகளாம்.

உபயோகம்:—விஷபேதியில் எந்த நிலைமையிலும் இதனை உபயோகிக்கலாம். இதனை யிரண்டொரு தடவை யுபயோகித்தவுடனே அந்த வியாதிக்குண்டான துர்க்குணங்களெல்லாநீங்கி வெகு சீக்கிரத்தில் நல்ல குணத்தைக் காண்பிக்கிறது. இந்த வியாதியில நூற்றிற்குத் தொண்ணூற்றைந்து குணங்காண்பது நிச்சயம். வியாதி கண்டவுடனே காலதாமத மின்றி இதனை யாரம்பித்து விட்டால் தப்பாமல் குணத்தைத் தரும்.

இன்னும் அஜீரணபேதி, மந்தாக்கினிபேதி, குன்மம், சூதகவலி, அக்கிரம சூதகம், வாயு ரோகங்கள், கட்டிகள், சுரக்கட்டி முதலியவைகளும் தீரும். இது அடியேனுக்கும் நமது அன்பர்களுட் பலருக்கும் அனேகந் தடவை அநுபவப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வைத்தியரும் இதனைச் சித்தப்படுத்தி வைத்திருந்தால் உற்ற சமயத்தி லுதவியாகும். சிற்றூர் முதலிய கிராமங்களிலுள்ள கனதனவான்கள் இதனைச் சித்தப்படுத்தி வைத்திருந்தால் தம் குடும்பத்தார்களுக்கும் தம்மைச் சார்ந்திருக்கும் குடி ஜனங்களுக்கும் மற்ற ஏழை ஜனங்களுக்கும் பேருதவியா யிருக்கும். ஜீவ காருண்யமுள்ள கனவான்கள் இதனைச் சித்தப்படுத்தி கற்காரக்கிட்டி சிறு சீசாக்களிலடைத்து தருமமாக ஏழை ஜனங்களுக்குக் கொடுப்பதால் அதிக புண்ணியமுங் கீர்த்தியு முண்டாகும். இதற்கேற்படுஞ் செலவோ மிகவுங் குறைவு. இதனாலுண்டாகும் பிரயோசனமோ அநேகம்.

## 209. இலவணக் குழம்பு.

கறியுப்பு பலம்-ரு, அப்ளாக்காரம், சவுக்காரம், வெண்காரம், நவச்சாரம், கர்ப்பூரம், வெடியுப்பு, சடல்நுரை, சீனக்காரம், பெருங்காயம், இந்துப்பு, இவை வகைக்-க-க்குப் பலம்-அ, சிறுபிள்ளைகளின் சிறுநீர் அல்லது பசுவின்நீர்படி-உ, பனைவெல்லம் பலம்-க0.



செய்முறை:—மேற்படி நீரில் வெல்லத்தைக் கரைத்து உப்புகளையும் மற்ற சரக்குகளையும் நன்றாகப் பொடித்து அதிற்போட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்து மெழுகுபதத்தில் பீங்கான்பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—விராகனெடை-க-கஉ. காலை மாலை யிரண்டுவேளையும் உபயோகிக்கலாம். வியாதி பலத்திற்குத் தகுந்தபடி கால், அரை, முக்கால், ஒரு மண்டலம் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—மகோதரம், பெருவயிறு, பாண்டுரோகங்கள், காமாலை ரோகங்கள், கவுசைக் கட்டிகள், பீலிகைக்கட்டிகள், உதரவாயு, கற்பாண்டு முதலிய ரோகங்கள் தீரும்.

பத்தியம்:—வியாதி பலத்திற்குத் தகுந்தபடி புளி, புகை முதலியவைகளை நீக்கிவைக்கவும்.

### குறிப்பு.

சிறுநீரைச் சேர்க்கப் பிரியமில்லாதவர்கள் கடல்நீரை, அல்லது, அதிக உவர்ப்பான கிணற்றுநீரைச் சேர்த்துக்கொள்ளலாம்.

இன்னும் மேற்படி பாகத்துடன் ஒருபடி ஆற்றுத்தும்மட்டிக்காய்ச் சாற்றையும், இரண்டு பப்பாளிப்பழத்தையும் சேர்த்துச் சித்தப்படுத்திக் கொண்டால் மேற்கண்ட ரோகங்கள் எத்தனை நாட்பட்டதாயினும் தீர்ந்துவிடும்.

மேற்படி அவுடதத்தை கரிசலிற்சொல்லி யிருக்கிற பஞ்சகஷாயத்தி லநுபானித் துபயோகித்தால் மேற்படி ரோகங்கள், அசாத்தியரோகங்கள், கோவுதன்ரோகங்கள் முதலிய எல்லாரோகங்களும் தீரும்.

### 210. இலவணாதிக் குழம்பு.

கறியுப்பு பலம்-௨, அப்பளக்காரம், நவச்சாரம், சவுக்காரம், வெடியுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, வெண்காரம், கூடன் இவை வகை-க-க்குப் பலம்-௰, அமுரிபடி-௩, பனைவெல்லம் பலம்-௰.

செய்முறை:—மேற்படி அமுரியில் பனைவெல்லத்தைக்கரைத்துப் பாகுசெய்து பாகுபதத்தில் மேற்படி சரக்குகளையெல்லாம் நன்றாயப் பொடித்துத் தூவிச் செவ்வையாகக் கிண்டிக்கிளறிப் பதத்திலிறக்கிப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை-க-க்கு, காலை மாலை யிரண்டுவேளையும் பத்துநாள் உபயோகிக்கவும்.

உபயோகம்:—உதரவாயு, வயிற்றிலுண்டாம் கட்டிரோகங்கள், குன்மரோகங்கள், வயிற்றுவலி முதலிய ரோகங்கள் தீரும்.

பத்தியம்:—வியாதிக்குத் தகுந்தபடி பத்தியமேற்படுத்தவும்.

### 211. கறியுப்பு மெழுகு.

கறியுப்பு பலம்-௧௦, எருக்கம்பழுப்புச்சாறு படி-௫.

செய்முறை:—மேற்படி யுப்பை ஒரு சட்டியிற் போட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்து மேற்படி



சாற்றைச் சிறுகச்சிறுகக்கொடுத்துச் சுருக்குக்கொடுக்கவேண்டும். இவ்விதம் நான்குசாமம் கிரமமாகச் சுருக்குக்கொடுத்துக்கொண்டு வந்தால் மேற்படி யுப்பானது மெழுகாகிவிடும். இதனைப் பீங்கான் பாத்திரத்தி லெடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

பிரமாணம்:—விராகனெடை-ஹ-க.

அநுபானம்:—சர்க்கரை, பனைவெல்லம், சுக்குக் கஷாயம், சோம்புக்கஷாயம், சோம்புத் திராவகம், ஓமத்திராவகம் முதலியவைகளாம்.

உபயோகம்:—வயிற்றுவலி, குதகவலி, அக்கிரமசூலை, குன்மரோகம், அஜீரணரோகம், சூலைரோகம் முதலியவைகள் தீரும்.

பத்தியம்:—வியாதிபலம், தேகபலம் முதலியவைகளுக்குத் தகுந்தவிதமாகவும், சமயோசிதமாகவும் பத்தியம் ஏற்படுத்த வேண்டியது சிகிச்சகர்களின் கடமையாம்.

### 212. கறியுப்புப் பற்பம்.

கறியுப்பு பலம்-க, முட்டைக்காளான் இலைச்சாறு செல்லத்தக்க அளவு, தண்ணீர் விட்டான் கிழங்குச்சாறு செல்லத்தக்க அளவு, அத்திப்பால் செல்லத்தக்க அளவு, கொட்டி யிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இலவணத்தைக் கல்வத்திலிட்டு முட்டைக்காளான் இலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமரைத்து வில்லைசெய்து வெயிலிலுலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஐந்துசீலைமண்

செய்துலர்த்தி -சுஅ- பலவிராட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின் னெடுத்துக் கொள்ளவும்.

பிறகு அதனைக் கல்வத்திலிட்டு தண்ணீர் விட்டான் கிழங்குச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோட்டுமூடி ஐந்து சீலைமண் செய்து கூ - பலம் விராட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின் னெடுத்துக் கொள்ளவும்.

பின்பு இதனை யெடுத்துக் கல்வத்திலிட்டு அத்திப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோட்டுமூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்தி-சுசு-பலம் விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுத்துக் கொள்ளவும்.

பிறகு இதனை யெடுத்துக் கல்வத்திலிட்டுக் கொட்டியிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோட்டுமூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி - கூ - பலம் விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கக் கடவுளின்து கிருபையால் திவ்யமான பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க-கஉ.

அனுபானமும் உபயோகமும்:—இதனை வெந்நீரில் அனுபானித்துக் கொள்ள தலைபிடிப்பு, உன்மத்தம், பெரும்பாடு, மகோதரச்சூலை, மூர்ச்சை, முதலியவைகள் தீரும்.

மிளகுத்தூள், கடுகுத்தூள் இவை வகை-க-க்குச் சமவெடை. இவ்விரண்டையுங் கலந்து இக்கலவையி



ற் கால் விராகனெடை யெடுத்து மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி கலந்து வெந்நீரிற் குழைத்துக் கொள்ள, வல்லைக்கட்டி, சத்தி, சுழை, இருமல், பாண்டு, விக்கல் முதலியவைகள் தீரும்.

தேன் விராகனெடை-க. இதில் மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி அனுபானித்துக் கொள்ள பாரிசவாயு, இல்வாயு, உப்பிசம், இரைப்பு முதலியவைகள் தீரும்.

திப்பிலியை வறுத்திடித்த சூர்ணம் விராகனெடை-வ, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண நேத்திரவீரயு, மாலைக்கண், புழுவெட்டு, புளிச்சக்கண், சன்னி, பித்தகாசம், க்ஷயம், ஆகியவைகள் தீரும்.

புளித்த பசுவின்மோர் பலம்-க, இதில் மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண கால்கை எரிவு, தேக எரிவு, வாய்நீர்ப்பெருக்கு, பிரமேயம், கண்புகைச்சல், வறட்சொறி, சிரங்கு, செவ்வாப்பு, கரப்பான், வெறித்தேமல், தவளைச்சொறி, மருக்கட்டி, தினவு, பெருவாரிக் காய்ச்சல், சூலம், பீனசம், அஜீரணம் முதலியவைகள் தீரும்.

இஞ்சிரசம் விராகனெடை-அ, தேன் விராகனெடை-உ. இவ்விரண்டையும் ஒன்றாக மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துக் கொள்ள, திமிர்வாதம், மாரடைப்பு, பெருமூர்ச்சை, ருத்திரவாயு, பெருவியாதி, குட்டம் ஆகியவைகள் தீரும்.

குளிர்ந்தநீர் பலம்-உ, தம்பராஷ்டம் விராகனெடை-ஒ. தம்பராஷ்டத்தைப் பொடித்து நீரிற்கலந்து மிஸ்ரமித்துக்கொண்டு மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி யநுபானித்துட் கொள்ள. நீர்க்கட்டு, நீரருகல், நீர்ச்சுருக்கு, வயிற்றுவலி, குன்மம் ஆகியவைகள் தீரும்.

கடுக்காய்ப்பொடி விராகனெடை-ஒ, நல்ல தண்ணீர் பலம்-உ. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்படி பற்பத்தை யநுபானித்துட்கொள்ள தந்தப் பிளவை, தந்தவாயு, தந்தரோய், பல்லரைவு, பல்சறு கட்டல், நாக்கு ரணம், உதட்டு ரணம் முதலியவை தீரும்.

கொன்றைப் பிசின் தூள் விராகனெடை-ஒ, நல்ல தண்ணீர் பலம்-உ. இவ்விரண்டையுங் கலந்து மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி யநுபானித்தருந்த, மதுமேகம், நீர்க்கிரந்தி, நீரொழுக்கு, நீர்ப்பெருக்கு முதலியவை தீரும்.

எருக்கிலைச்சாறு விராகனெடை-க. இதில் மேற்படி பற்பத்தை யநுபானித்தருந்த,தேள், நண்டு, தெரிக்கை, செய்யான், பூரான், பாம்பு, பேய்நாய்க்கடி முதலியவை குணமாகும்.

இன்னும் இந்தப் பற்பத்தால் ஜீரணசக்தி விருத்தியாகி அக்கினிமந்த ரோகம் இன்னும் மற்றுமுள்ள ரோகங்களெல்லா நீங்கி தேகபலம், தேகதிடம் முதலியவை யுண்டாகி ஆயுள் விருத்தியு முண்டாகும்.

பத்தியம்:—வியாதிபலம், தேக சுபாவம் முதலியவைகளுக்குத் தகுந்தபடி சமயோசிதம்போல பத்தியம் ஏற்படுத்த வேண்டும்.



• பூநீறு

பூநீறென்பது அநேகருக்குத் தெரிந்தவிஷயம், இதன் சுத்திக்கிரம முதலியவைகளெல்லாம் நமது இரசவாத சிந்தாமணியில் வகை விபரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை சம்பந்த முறைகளும் அவ்விடம் அநேகஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆயினும் இக்கிரந்தத்தைப் பார்வையிடுபவர்களுக்கும் உபயோகமாகும்படி இங்கும் இலகுவான இரண்டொருமுறைகளை யெழுதுவாம்.

## 213. பூநீற்றுச் சுண்ணம்.

பாகப்படுத்தின பூநீறு ஒருபங்கு, பாகப்படுத்தின வெடியுப்பு ஒருபங்கு, பொன்னாங்காணிச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி யிரண்டு சரக்குகளையுங் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருமணிநேரமரைத்துப் பில்லைசெய்து உலரவைக்காமல் ஓட்டில்வைத்து மேலோடுமூடி இரண்டு சீலைமண்செய்து கீழேவைத்து மேலே மணலைக்கொட்டவேண்டும். மணலானது கவசத்தின்மீது நான்கங்குல மிருக்கவேண்டும். கவசத்தின் எழுபங்கெருட்டியைப் பொடித்து மணல்மீதடுக்கி நெருப்பிட்டுப் புடமிடவேண்டும். இதற்கு அவிபுடமென்று பெயர். குளிர ஆறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்சாற்றைவிட்டு முன்போல் ஒருமணி நேரமரைத்து முன்போற் பில்லைசெய்து முன்போல் மணல் மறைவில் அவிபுடமிடவும், மூன்றாந் தடவையும் இவ்விதமே புடம்போட்டுக் கொள்ளவும், பிற

கு கல்வத்திலிட்டுப் பொடித்து முன் சாற்றைவிட்டு இரண்டுசாம நேரமரைத்துப் பில்லைதட்டி உலர்த்தி அகலிலிட்டு மேல்கல்மூடி ஏழுசீலைமண்செய்து உலர்த்திக் கவசத்தின் இரண்டுபங்கெடை விராட்டியிற் புடமிடவேண்டும். இரண்டாந் தடவை முன்போலரைத்து முன்போல் பில்லைசெய்துலர்த்தி முன்போற் கவசஞ்செய்துலர்த்திக் கவசத்தின் மூன்றுபங்கெடை விராட்டியிற் புடமிடவேண்டும். கடவுளினது கிருபையாற் சுண்ணமாகியிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-௪-௮.

அனுபானம்,—சுக்குக்கஷாயம், சோம்புக்கஷாயம், சோம்புத் திராவகம், தேன், சர்க்கரை முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகைக் குன்மரோகங்கள், அஜீரணரோகங்கள், மந்தாக்கினி ரோகங்கள், சூலக்கட்டி முதலியவைகள் தீரும்.

குறிப்பு

இந்தப் பூநீற்றுச் சுண்ணத்தினால் எல்லாச்சரக்குகளையுங் கட்டலாம். அதன் விபரம்:—

புளியாரைச்சாறு பங்கு-க, மேற்படி பூநீற்றுச் சுண்ணம் பங்கு-௪, இவ்விரண்டையு மிசிரமித்துக் கட்டவேண்டிய சரக்கு-க-பங்கிற்கு பிரகாரப்படி சுருக்குக்கொடுக்க நெருப்பிற் கோடாமற் கட்டுப்பட்டுப்போகும். அதை நெருப்பிலிட்டுப் பரிட்சித்து நெருப்பிற் புகைந்தால் மறுபடியும் இரண்டொருதடவை முன்போற் செய்துகொள்ளக் கட்டுப்பட்டுப்போம். அல்லது கட்டுகிறவரையிற் சுருக்கிட்டுக் கொள்ளலாம்.



இவ்விதம் சுருக்கிட்டுக் கட்டினசரக்கை முன்போல் சுருக்கிட மெழுகாகும். வைத்தியம், வாதம் முதலியவைகளுக் குபயோகித்துக் கொள்ளலாம்.

## 214 பூநீற்றுச் சுண்ணம்.

பாகப்படுத்தின பூநீறு வேண்டியஅளவு. இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்து உத்தாமணியிலைச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி அகலில்வைத்து மேல்கல்மூடி ஐந்து சீலைமண்செய்து உலர்த்திக் கவசத்தின் ஆறுபங்கெடை விராட்டியிற் புடமிடவேண்டும். குளிர ஆறினபின்பு எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போல் முன் சாற்றையேவிட்டு முன்போலரைத்து முன்போற் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்றுபுடமிடவும். பிறகு வெண்ணிறமான பற்பமாகியிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-௪-௮.

அனுபானம்:—நெய், தேன், சுக்குக்கஷாயம், காசினிக்கீரைச் சாற்றை முறித்தெடுத்துக் கொண்டநீர், வெள்ளரிவிதையை யரைத்துப் பிழிந்தபால் முதலியவைகளாம்.

உபயோகம்:—குன்மரோகங்கள், அஜீரணரோகங்கள், குதவாயு, குதகல்வி ஆகியவைகள் தீரும்.

குறிப்பு.

மேற்படி பூநீற்றுப் பற்பத்தை லேகியம், சூரணம், தைலம் முதலிய வைத்திய பாகமுறைகளில் அந்தந்த அளவிற்குத் தகுந்தபடி ஒரு விராகனெடை மு

தல் பத்து விராகனெடை வரையிற் சேர்த்துக்கொள்வதினால் அதிக விசேஷகுணத்தினைத் தரும். இதனை ஒருவகை வைத்திய முப்பூவெனச் சொல்லப்படுகிறது.

## 215. சவுக்காரச் சுண்ணம்.

கடையிற் விற்கிற நாட்டுச் சவுக்காரக் கட்டிகளை வாங்கிச் சன்னமாகச் சீவி புதுமண் தாலத்திற்போட்டு உலர்த்தி ஈரப்பசை யில்லாமல் எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விதஞ் சித்தப்படுத்தினது பலம்-க, வெடியுப்பு பலம்-உ, பூநீலம் பலம்-க, இவ்விரண்டையும் பொடித்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை அடியிற் பரப்பி அதன்மேல் முன் சித்தப்படுத்தி யிருக்கிற சவுக்காரத்தை வைத்து அதன்மேல் மறுபாகத்தை வைத்துமூடி திரியாற் கொளுத்திவிடவும். அது எரிந்தடங்கின பின்பு அதன்மீது சிறு குச்சிகளை ஒடித்துப்போட்டு நெருப்பிட்டு எரியவிட வேண்டும். இவ்விதம் மூன்று நாழிகை யெரிய விட்டு ஜாக்கிரதையுடன் மேலிலுள்ள சாம்பல்களை நீக்கி யெடுக்கச் சவுக்காரமானது கடுங்காரச் சுண்ணமாகி யிருக்கும்.

### குறிப்பு.

மேற்படி சவுக்காரத்தை மேற்கண்டபடி உலர்த்தாமல் ஈரமாகவே மேற்கண்ட பாகப்படி செய்துகொள்ளலாம். ஆனால் இவ்விரண்டு முறைகளிலும் கைபாகத்தையும் செய்பாகத்தையும் கவனித்துச்செய்துகொள்ள வேண்டும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க. ச.

உபயோகம்:—குன்மரோகங்கள். அஜீரணரோகங்கள் முதலியவைகள் தீரும். இன்னும் இது வாத



முறைகளுக்கும் உபயோகமாகும். அனுபவசாலிகளிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளவும்.

## 216. பூநீற்று ஜெயநீர்.

பூநீறு படி-வ, தண்ணீர் படி-அ, இவ்விரண்டையுங் கரைத்து பனிரண்டு மணிநேரம் வைத்திருந்து தெளிவை யிறுத்துச் சீசாவிற் பத்திரப்படுத்தவும்.

அனுபானமும், உபயோகமும்—இருபலம் எலுமிச்சம்பழச் சாற்றில் இரண்டு விராகனெடை மேற்படி ஜெயநீரைவிட அது பொங்கும். அதை உடனே யெடுத்துப் பானஞ் செய்துவிட வேண்டும். இவ்விதம் செய்தால் வயிற்றுவலி உடனே நிற்கும், குன்ம ரோகம், மந்தாக்கினி ரோகம், குதக சம்பந்தமான வயிற்றுநோய் முதலியவைகளும் தீரும்.

## 217. பூநீற்று ஜெயநீர்.

பூநீறு படி-உஅ, வெடியுப்பு படி-உஅ, கறியுப்பு படி-உஅ, நவச்சாரம் படி-உரு, சீனக்காரம் படி-உஅ, சுண்ணாம்புத் தெளிநீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி சரக்குகளை ஒன்றாகச் சேர்த்திடித்து பெரிய மண் பாண்டத்திற் போட்டு கஉஹு படி சுண்ணாம்புத் தெளிநீரைச்சேர்த்துக் கரைத்து அடுப்பேற்றிக் காய்ச்சி நீர் சுண்டிக் குழம்புப்பதமாகி வருகையில்-உஅ, படி சுண்ணாம்புத் தெளிநீரை மறுபடியும் அதில் விட்டுக் காய்ச்சவேண்டும். விட்டநீர் சுண்டிக் குழம்புப் பதமாகி வரும்போது முன்போல்-உஅ-படி சுண்ணாம்புத் தெளிநீரை விட்டுக் காய்ச்ச வேண்டும். இதற்கு ஒரு நிலையெனப் பெயர்.

மேற்கண்டபடி விட்டஜலம் சுண்டிக் குழம்புப் பதமாகி வரும்போது முன்போல் உ-படி சுண்ணும்புத் தெளிநீரை விட்டுக் காய்ச்சவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பத்துத் தடவைகள் விட்டுப் பத்துத் தடவைகள் சுண்டவைத்துக் கொள்ளவேண்டும். இதனைத் தனியே நிறுத்துவைத்துக் கொள்க.

அவையம்வைத்த கோழிமுட்டையோடு சேர்-உ, இதனைச் சுண்ணும்புத் தெளிநீரிற் போட்டுக் காய்ச்சி உட் சவ்வுகளை நீக்கி வெயிலில் ஈரமில்லாமல் உலர்த்தி எருக்கம்பாலை விட்டு நான்கு சாமமரைத்துப் பில்லைதட்டியுலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடுமூடி ஐந்து சீலைமண் செய்து கவசத்தின் எட்டுப் பங்கெடை விராட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின் னெடுக்கச் சுண்ணமாகி யிருக்கும்.

இந்தச் சுண்ணத்தையும் முன் சித்தப்படுத்தி யிருக்கிற மூன்றுதிராவகங்களையும் ஒன்றாகச் சேர்த்து நிறுத்து கண்ட எடையில் நான்கிலொரு பங்கு சாரத்தையும், நான்கிலொரு பங்கு, ஐந்தாங் காய்ச்சல் வெடியுப்பையும், நான்கிலொரு பங்கு வீரத்தையும் சேர்த்து எல்லாவற்றையும் பொடித்துக் கற்காரக்குள்ள பெரிய சீசாவிலடைத்து வாய்க்குக் கற்காரக்கிட்டு உழுந்து மாவால் ஏழு சீலைமண்செய்து சுறுப்பான நிலத்தில் ஒரு மண்டலம் புதைத்தெடுக்க ஜெயநீராகி யிருக்கும்.

இந்த ஜெயநீர் மூலமாக எல்லாச் சரக்குகளையுங் கட்டிப் பற்பமாக்கிக் கொள்ளலாம்.



பற்பம் செய்யவேண்டிய சரக்கைப் பீங்கான் பாத்திரத்திற் பொடித்துப் போட்டு அது ஆழ்ந்திருக்கும் படியாக மேற்படி ஜெயநீரை விட்டு மணல்மீது வைத்தெரிக்கப் பற்பமாகி விடும். அந்தப் பற்பத்தை அந்தந்தச் சரக்குகளாற் போகும் வியாதிகளுக்கு உபயோகிக்கலாம்.

குறிப்பு.

இது குருமுறைகளில் ஒன்றானதாகையால் சாதாரணமாக எல்லோரும் செய்துகொள்ள இயலாது. இதன் மர்மங்கள் தெரிந்தவர்கள் அநேக ரிருப்பார்களாகையால் அவர்களுக்குபயோகமாகும்படி இங்கெழுதப்பட்டதே தவிர மற்றவர்களுக்காக எழுதப்பட்டதல்ல.

## 218. நவச்சாரக் கட்டு.

நவச்சாரக்கட்டி பலம்-க, இது ஒரே கட்டியாயிருக்க வேண்டும். கம்பி வெடியுப்பு பலம்-உ, கோழிமுட்டை மஞ்சட்கரு - உ, ஆமணக்கெண்ணெய் பலம்-அ.

செய்முறை:—வெடியுப்பைத் தூள்செய்து இரண்டு பாகமாகச் செய்து ஒரு பாகத்தை ஒரு கலயத்திற்போட்டு அதன்மேல் நவச்சாரக் கட்டியை வைத்து அதன்மேல் வெடியுப்பின் மறுபாகத்தைப் போட்டு மெதுவாய் விரலால் அழுத்தி மஞ்சட் கருக்களை விட்டு அதன்மேல் எண்ணெயை விட்டு கலயத்தின் வாய்க்கு சில்லிட்டு சீலைமண் செய்யாமல் கூ-பலம் விராட்டியைப் பொடித்து கலயத்தின் கழுத்துமட்டும் அடுக்கி நெருப்பிட்டு எரித்து சப்தமடங்கினவுடனே எ

டுத்தாறவைத்தெடுக்க நவச்சாரமானது வெண்மையாயும், கடுங்காரமாயு மிருக்கும். இதனைப் பொடித்து சீஷாவில் வைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—விராகனெடை-வ.

அனுபானமும் உபயோகமும்:—தென்னம் பூச்சாறு பலம்-உ, வெள்ளாட்டுப்பால் பலம்-உ. இரண்டையுங் கலந்து மேற்படி சாரத்தை பிரமாணப்படி அனுபானித்துப் பானஞ்செய்ய எட்டுவகைப் பாண்டுரோகங்களுந் தீரும்.

வெங்காயச்சாறு பலம்-உ, சீனி சருக்கரை பலம்-க, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்படி சாரத்தைப் பிரமாணப்படி அனுபானித்துக் கொடுக்க, குன்மம், மகோதரம், கட்டி, உதரவாயவு, வேறுவகைக் கட்டிகள் ஆகியவைகள் தீரும்.

முள்ளங்கிக் கிழங்குச்சாறு பலம்-உ, தேன் பலம்-க, இரண்டையுமிஸ்ரமித்து மேற்கண்ட சாரத்தைப் பிரமாணப்படி அனுபானித்து உட்கொள்ள, நீரடைப்பு நீருகல், கல்லடைப்பு, சதையடைப்பு ஆகியவைகள் தீரும்.

## 219. நவச்சாரக் கட்டு (வேறு)

துருசி-விராகனெடை-க. இது ஒரேகட்டியாயிருக்கவேண்டும். சித்திரமூலி இலையை அறைத்தவிழுது விராகனெடை-கரு, இதனை மேற்படி துருசுக்கட்டிக்குக் கவசித்து அதன்மேல் ஒரு சீலைமண்செய்து, கo-பலம் விராட்டியிற் புடமிட அது சுண்ணமாம்.

நவச்சாரம் பலம்-க. இது ஒரேகட்டியா யிருக்கவேண்டும். சித்திரமூலியிலை பலம்-வ, இதனை வெண்



ணைப்போலரைத்து மேற்படி துருசு சுண்ணத்தில் நான்கு குன்றிமணியெடைச் சேர்த்து நன்றாய் மத்தித்து மேற்படி சாரக்கட்டிக்குக் கவசித்துலர்த்தி அதன்மேல் ஒருபலம் சித்திரமூலி வேர்ப்பட்டையை யரைத்து அதில் நான்கு குன்றிமணியெடை துருசிச் சுண்ணத்தைச்சேர்த்து கவசித்துலர்த்த வேண்டும். பிறகு-க உ-பலம் வன்னியிலையை யரைத்து அதில் நான்கு குன்றிமணியெடை மேற்படி துருசுச் சுண்ணத்தையுஞ் சேர்த்துப்பிசைந்து முன்கட்டிக்கு கவசமேற்றி உலர்த்த வேண்டும். பிறகு இரண்டுபலம் வெதுப்படக்கி இலையையரைத்து நான்கு குன்றிமணியெடை மேற்படி துருசுச் சுண்ணத்தைச் சேர்த்து மத்தித்துக் கவசித்துலர்த்தி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி-சo-பலம் விராட்டியிற் புடமிட்டாறினபின் எடுக்க, சாரமானது கட்டுப்பட்டிருக்கும். இதனையெடுத்துப் பொடித்து சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௩-ரு.

அனுபானம்:—இளநீர், நீர்முள்ளிவேர்க் கஷாயம், சுரைக்கொடிக் கஷாயம், தென்னவேர்க் கஷாயம் முதலியவைகளாம்.

உபயோகம்:—குன்மரோகம், வாய்வு, நீர்க்கட்டு, மகோதரம் ஆகியவைகள் தீரும்.

பத்தியம்:—தேகபலம், வியாதிபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது.

## 220. நவச்சாரக்கட்டு (வேறு)

நாயுருவிச் சாம்பல் படி-ச, சிறுவர்களின் மூத்திரம் படி-கசு. இதில் மேற்படி சாம்பலைப்போட்டு

மூன்றுநாள் வைக்கவேண்டும். ஒவ்வொருநாளும் இரண்டு மூன்று தடவை நன்றாய்க் கலக்கியும் வரவேண்டும். நாலாம்நாள் தெளிவையிறுத்து இரும்புச்சட்டியில் சிறுகச் சிறுக விட்டுக் காய்ச்சிக் கொழும்பாய்வரும்போது எட்டுபலம் நவச்சாரத்தைப் பொடித்துப் போட்டுக் கெட்டிப்பதமாகிறவரையில் கைவிடாமற் கிண்டி பிறகு இறக்கி வெய்யிலிற் காயவைத்து எல்லாவற்றையுஞ் சுரண்டியெடுத்து சிறுவாயுள்ள கலசத்திற்போட்டு குச்சிபாற்றுத்தி நன்றாயழுத்தி கலசத்தின்வாய்க்குச் சில்லிட்டு ஏழு சீலைமண் செய்துலர்த்தி ஒருமுழமகலம் ஒன்றரைமுழ முயரமுள்ள ஒரு புடமிட்டு ஆறினபின்னெடுக்க சாரமானது உருகி தந்தம்போலக் கட்டிப்போம். இந்த சாரமானது ஜெயநீர்முதலிய பெரும்போக்குகளுக் குபயோகமாம். இதனைப் பொடித்துச் சீஷாவிற்பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ. ச.

அனுபானம்:—நெருஞ்சி சமூலக்கஷாயம். சோம்புதிராவகம், வெள்ளீறுகை அரைத்தவிழுது, தென்னம்பூச்சாறு, முள்ளங்கிக் கிழங்குச்சாறு முதலியவைகளாம்.

உபயோகம்:—மகோதரம், வல்லைக்கட்டி, கெண்டைக்கட்டி, குதசக்கட்டி, பிலீகக்கட்டி, ஜுரக்கட்டி, குதகக்கட்டி முதலியரோகங்கள் தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம். வியாதி கடினமாயிருந்தால் புளியையும் உப்பையும் நீக்கிவைப்பதால் அதிக குணமுண்டாகும்.



குறிப்பு.

மேற்கண்ட மூத்திரமகப்படாத காலங்களில் அதிக உவர்ப்பான கிணற்றுஜலத்தை, அல்லது, கடற்சலத்தைச் சேர்த்துஞ் செய்துகொள்ளலாம்.

### 221. நவச்சாரக்கட்டு (வேறு.)

உவர்மண் படி-உ, வெடியுப்பு பலம்-உ, நவச்சாரம் பலம்-க. இது ஒரேகட்டியா யிருக்கவேண்டும்.

செய்முறை:—ஒருபடி உவர்மண்ணை ஒருபானையிற்போட்டு சமமாயமுத்திவிட்டு அதன் நடுவில் ஓலைச்சுருளைவைத்து ஒருபலம் வெடியுப்பைப் பொடித்து ஓலைச்சுருளுக்குள்போட்டு அழுத்தி அதன்மீது சாரக்கட்டியைவைத்து அதன்மீது ஒருபலம் வெடியுப்பைத் தூள்செய்து போட்டமுத்தி அதன்மேல் ஒருபடி உவர்மண்ணைப்போட்டு பானையின்வாயை மண்பாண்டத்தால் மூடி சீலைமண் செய்து அடுப்பேற்றி ஒருஜாமம் தீபாக்கினியாகவும் இரண்டுஜாமம் கமலாக்கினியாகவும் ஒருஜாமம் காடாக்கினியாகவும் எரிக்கவும். ஆறினபின்னெடுக்கச் சாரமானது தந்தம்போல் கட்டியிருக்கும். இதனைக் கல்வத்திற் பொடித்துச் சீஷாவிற் பத்திரப் படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-ச.

அனுபானம்:—நெருஞ்சிவேர்க் கஷாயம், முள்ளங்கிச்சாறு, வெள்ளரிவிதையை யரைத்துப் பிழிந்தபால், சோம்பு திராவகம் முதலியவைகளாம்.

உபயோகம்:—பாண்டு, மகோதரம், வயிற்றுக்கட்டி, வயிற்றுநோய், நீர்க்கட்டு முதலியரோகங்கள் தீரும்.

பத்தியம்:—சமயோசிதம்போல் புளி, உப்பு ஆகியவைகளைச் சேர்த்தும் சேர்க்காமலும் பத்தியஞ்செய்து கொள்ளவும்.

## 222. நவச்சாரக்கட்டு (வேறு)

நவச்சாரக்கட்டி பலம் ௫. சுவற்றோரங்களில் உதிர்ந்துகிடக்கிற உப்புமண் படி-௧. வெடியுப்பு பலம்-௨௰, அப்ளாகாரம் பலம்-௧௰.

செய்முறை:—மேற்படி உப்புமண்ணை ஒரு பானையிற்போட்டமுத்தி அதன் மத்தியில் ஓலைச்சுருளை வைத்து அதில்-௧௰-பலம் வெடியுப்பைத்தூள் செய்துப்போட்டு அதன்மேல்-௫-பலம் அப்ளாகாரத்தைத் தூள்செய்துப்போட்டு நவச்சாரக்கட்டியை அதன்மீதுவைத்து அதன்மீதுபாக்கி அப்ளாகாரத்தைத் தூள்செய்துப்போட்டு அதன்மீது பாக்கி வெடியுப்பைத் தூள்செய்துபோட்டு அமுத்தி அதன்மீது பாக்கி உவர்மண்ணைப் போடவேண்டும். இந்த மண்ணானது அந்தப் பானைவாய்மட்டு மிருக்கவேண்டும். அப்படிக் கில்லாவிட்டால் வாய்மட்டம் கொள்ளுகிறவரையில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளலாம். பிறகு பானைவாயை மண்பாண்டத்தால் மூடி சீலைமண்செய்து அடுப்பேற்றி தீபாக்கினியாக இரண்டுசாமமெரித்து ஆறினபின்னெடுக்கச் சாரமானது கந்தம்போலிருக்கும். இதனைப் பொடித்துச் சீஷாவில் வைத்துக் கொண்டு உபயோகிக்கலாம்.

பிரமாணமும், அனுபானமும், உபயோகம் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.



### குறிப்பு.

இதனைப் புளியன் புறணிச் சாம்பலுக்குள் வைத்து நாலுஜாமமெரித்தெடுக்கக் கடுங்காரச் சுண்ணமாயிருக்கும். இச்சுண்ணத்தின் குணமானது முன் கட்டைப்பார்க்கிலும் அதிக விசேஷமாயிருக்குமென்பதை நாமிங்கு குறிப்பிட்டுச் சொல்லவேண்டியதில்லை.

## 223. நவச்சாரக்கட்டு (வேறு)

(a) கல்லுப்பு படி-௰, கறியுப்பு படி-௰, வெடியுப்பு படி-௰, சிறுநீர் படி-௨, முன் மூன்றையும்பொடித்து சிறுநீரிற்கரைத்துக் காய்ச்சி இறுகினபதத்தில் இறக்கித் தனியேவைத்துக் கொள்ளவும்.

நவச்சாரம் பலம் ௧. இது ஒரேகட்டியாயிருக்கவேண்டும். ௨-பலம் வெண்காரத்தைச் சிகப்பு நாயுருவிச்சாற்றைவிட்டு ஒரு ஜாமநேரமரைத்து மேற்படிச் சாரக்கட்டிக்குக் கவசஞ்செய்துலர்த்திக் கொள்ளவேண்டும்.

ஒருபானையில் கொஞ்சம் மணலைப்பரப்பி (a) யில் சொன்னபடி சித்தப்படுத்தி யிருக்கிற உப்பைத் தூள்செய்து இரண்டு பாகமாக்கி ஒருபாகத்தை அந்த மணலின்மீது பரப்பி, அதன் நடுவில் முன் சித்தப்படுத்தியிருக்கிற நவச்சாரக்கட்டியைவைத்து, அதன்மீது மறுபாதி உப்பைவைத்தமுத்தி அதன்மீது மணலைக்கொட்டி பானைவாயைமூடி-௫-சீலைமண் செய்துலர்த்தி இராப்பகல் மூன்றுநாள் எரிக்கவும். குளிர்ந்தாறினபின் எடுக்கச் சாரமானது கந்தம்போலக் கட்டுப்பட்டிருக்கும்.

பிரமாணம் அனுபானம் உபயோகம் மேற்கண்டவைகளேயாம்.

## 221. நவச்சாரக் கட்டு (வேறு)

சீனக்காரம் பலம்-க, வெண்காரம் பலம்-க, கம்பி வெடியுப்பு பலம்-க, இம்மூன்றையும் தனித்தனி வேலிப்பருத்திச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டிரண்டு சாமமரைத்து தனித்தனி வில்லை செய்துலர்த்தித் தனித்தனி ஓட்டில்வைத்து மேலோடுமூடிச் சீலைமண் செய்து தனித்தனி கவசத்தின் நான்குபங்கெடை விராட்டியில் தனித்தனி புடமிடவும். குளிர ஆறினபின் எடுக்க ஒவ்வொன்றும் சுண்ணமாகியிருக்கும்.

நவச்சாரக்கட்டி பலம்-க. இதன்மீது முதலில் சீனச் சுண்ணத்தை வேலிப்பருத்திச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருமணி நேரமரைத்துக் கவசித்துலர்த்திக் கொள்ளவேண்டும். நன்றாயுலர்ந்த பின்பு வெண்காரச் சுண்ணத்தை மேற்படி வேலிப்பருத்திச் சாற்றைவிட்டு ஒருமணி நேரமரைத்துக் கவசித்துலர்த்திக் கொள்ளவேண்டும். மூன்றாவது வெடியுப்புச் சுண்ணத்தையும் முன்போலரைத்துக் கட்டியின் மீது கவசஞ்செய்துலர்த்திக் கொள்ளவேண்டும்.

ஒரு சட்டியில் ஊமச்சியை யிடித்த மா படி-வ, இதனை அதிற் பரப்பி அதன்மீது நத்தாங்கூட்டை யிடித்ததூள் படி-வ, இதனைப் பரப்பி அதன்மீது நண்டோட்டுத்தூள் பலம் வ, இதனைப் பரப்பி முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற சாரக்கட்டியை வைத்து அதன்மேல் முன்போல் நண்டோட்டுமா, நத்தாங்கூட்டுமா, ஊமச்சிமா ஆகிய இவைகளை வசைக்கு நால்படியாக முறையே ஒன்றன்பின் ஒன்றாகப் பரப்பி நான்கு பக்கமும் செம்மையாக அழுத்தி மேற்சட்டிமூடிச் சீலைமண் செய்து அடுப்பேற்றி மூன்றுசாமம் தீபாக்கினியாகவும், மூன்றுசாமம் கமலாக்கினியாகவும் ஆகக்கூடிய ஆறுசாமமெரித்து ஆறினபின்னெடுக்க நவச்சாரமானது கட்டுப்பட்டுச் சங்குபோலிருக்கும். இதனை யெடுத்துப் பொடித்து வைத்துக்கொள்ளவும்,



பிரமாணம்:—குன்றிமணியெடை [illegible]

அனுபானம்:—கரிசலாங்கண்ணி விதைக் கஷாயம், தேயிலைக் கஷாயம், நன்னாரிவேர்க் கஷாயம், நெருஞ்சிவேர்க் கஷாயம், கரும்புரசம், முள்ளங்கிச்சாறு முதலியவைகளாம்,

உபயோகம்:—கல்லடைப்பு, சதையடைப்பு, மகோதரம், அம்பல்ரோகம், பொருமல்ரோகம், அஜீரணரோகம், நீர்க்கோர்வை, நீர்ப்பாண்டு, பித்தபாண்டு, நீர்க்கட்டு, நீரடைப்பு, சதையடைப்பு, முதலிய அநேக ரோகங்கள் தீரும்.

பத்தியம்:—தேகம், ரோகம் ஆகிய இரண்டிற்கும் ஏற்ற விதமாகவும், சமயோசிதமாகவும் ஏற்படுத்த வேண்டியது,

### குறிப்பு

மேற்படி கட்டானது நாக முதலியவைகளைக் கட்டவும், இரசவாதத் தொழிலுக்கும் உபயோகமாம்.

## 225. நவச்சாரக் கட்டு (வேறு)

வெடியுப்புச் சுண்ணம், சினக்காரச் சுண்ணம் இவை வகை-க-க்குப் பலம்-க, (இவ்விரண்டு சுண்ணங்களையும் மேற்படி பாகத்திற் சொல்லியிருக்கின்றபடி செய்துக்கொள்ளவும்.) வெள்ளைக்கற் சுண்ணம் பலம்-க, (இதனை முன் பாகங்களிற் சொல்லியிருக்கிறபடி செய்துக் கொள்ள வேண்டும்.) இம் மூன்று வகைச் சுண்ணங்களையும் ஒன்றாக மிஸ்ரமித்து முக்காற்பலம் நவச்சாரத்தைச் சேர்த்துப் பொடித்துப் பீங்கானிற்போட்டு பனியில்வைக்க ஜெயநீராகும். இந்த ஜெயநீரைச் சீசாவிற் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

நவச்சாரக்கட்டி பலம்-க, இதனை முறைப்படி வைத்து முன் சித்தப்படுத்தியிருக்கிற ஜெயநீரைச் சிறுகச் சிறுகத்தட்டி நான்குசாமம் சுருக்குக் கொடுக்கவும்.

ஒருசட்டியில் மூன்றங்குலம் சவுட்டுமண்ணைப் பரப்பி அதன்மீது ஒரு ஓலைச்சருகை வைக்கவும். நாலாங்காய்ச்சல் வெடியுப்பு; சினக்காரம், அப்பளாக்காரம், வெண்காரம் இவை வகை-க-க்குப் பலம்-க. இந்நான்கையுஞ் சேர்த்துப்பொடித்து இரண்டுபங்காக்கி ஒருபங்கை மேற்படி ஓலைச்சருகுக்குள் வைத்தழுத்தி அதன்மீது முன் சுருக்கிட்டு சித்தப்படுத்தின நவச்சாரக்கட்டியைவைத்து அதன்மீது மறுபங்குத்தூளையும்போட்டுக் கட்டி தெரியாமலழுத்தி அதன்மேல் சவுட்டுமண்ணைக் கொட்டி மூடி, சட்டிவாயை மூடாமல் அடுப்பேற்றி ஆறுசாமம் தீபாக்கினியாக எரித்துக் குளிர ஆறவிட்டெடுக்க, சாரமானது கட்டுப்பட்டிருக்கும். இதனையெடுத்துப் பொடித்துப் பத்திரப்படுத்தவும்.



பிரமாணம், அநுபானம், உபயோக முதலியவை தனியே மேற்கண்டவைகளேயாம்.

### குறிப்பு

இந்த நவச்சாரக்கட்டும் இரசவாத முறைகளுக்கும் உபயோகப்படும்.

## 226. நவச்சாரக்கட்டு (வேறு)

பூநீறு, சினக்காரம், வெண்காரம், நாலாங்காய்ச்சல் வெடியுப்பு இந்நான்கும் வகை-க-க்குப் பலம்-உ. இந்நான்கையுந் தூள்செய்து சமார் அரைப்பலம் தூளையெடுத்து வைத்துக்கொண்டு மற்றதை இரண்டு பாகமாக்கி ஒருபாகத்தை ஒருசட்டியில் வைத்து அதன்மீது இரண்டுபலம் சாரக்கட்டியைவைத்து அதன்மீது மறுபாகத்தூளையும் போட்டழுத்தி மண்ணென்னைத் தாலமூடி அடுப்பேற்றிச் சிறுதீயாயெரிக்கவேண்டும். ஒவ்வொருமணிக் கொருதட்டவை மண்ணென்னைத்தைத் திறந்து பார்த்துவரவும் வேண்டும். அப்படித் திறந்து பார்க்கையில் புகை யெழும்பினால் முன்னெடுத்து வைத்திருக்கிற தூளில் கொஞ்சமிட்டு அழுத்திப் புகையாமல் தடுக்கவேண்டும். இவ்விதம் நான்குசாமம் எரித்து ஆறவிட்டெடுக்க வைத்த சட்டியில் முக்காற் பாகந்தானிருக்கும். ஆனால், சாரம் கட்டுப்பட்டுப்போகும். இதனையெடுத்துப் பொடித்துச் சீசாவிற் பத்திரப்படுத்தவேண்டும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-அ-௰.

அநுபானம்:—சீருமுள்ளி வேர்க் கஷாயம், நெருஞ்சிக்கஷாயம். மணத்தக்காளியிலைச் சாற்றை முறித்த ஜலம், வெள்ளரிவிதையை யரைத்துப்பிழிந்த பால்,

வெள்ளரிக்காயை வெதுப்பிப் பிழிந்தெடுத்த சாறு முதலியவைகளாம்.

உபயோகம்:—நீர்க்கட்டு, மகோதரம், பாண்டு, வயிற்றுவலி, நீரருகல், நீர்ச்சுருக்கு முதலியவைகள் நீங்கும்.

## ௨௨௭. நவச்சார பற்பம்.

நவச்சாரக்கட்டி பலம்-௧. இதனை எருக்கம் பாலில் முழுவதும் நனையும்படியாகத் தோய்த்துலர்த்த வேண்டும். அது நன்றாயுலர்ந்தபின்பு இரண்டாந்தடவையும் முன்போற் றோய்த்துலர்த்தவேண்டும். இவ்விதம் உலர உலர ஏழுதடவைகள் மட்டுக்கு மடக்கிச் செய்யவேண்டும்.

கல்லுப்பு பலம்-௧, நாய்வேளைச் சமூலம் பலம்-௧ இவ்விரண்டையும் அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்து மேற்படி நவச்சாரக்கட்டிக்குக் கவசம் பண்ணிச் செய்து சட்டியை அடுப்பின்மேல் வைத்து சட்டி காய்ந்தபின்பு முன் கவசித்து வைத்திருக்கிற கட்டியைப்போட்டுப் புரட்டிக்கொடுக்க வேண்டும். கவசம் உலர்ந்துபோனபின்பு முன்போல் கல்லுப்பையும், நாய்வேளையையும் அரைத்துக் கவசஞ்செய்து முன்போல் வறுத்துக்கொள்ள வேண்டும். மூன்றுந் தடவையும் அவ்விதமே வறுத்துக்கொள்ள வேண்டும்.

வெடியுப்பு பலம்-௨, சிறுபிள்ளை மூத்திரம் படி-௨, இவ்விரண்டையுஞ் சேர்த்துக்கரைத்து அடுப்பேற்றிக் குழம்புப்பதமாகி வரும்போது முன் சித்தப்படுத்தியிருக்கிற கட்டியைப்போட்டு நீர்சுண்ட எரித்தெடுத்துக் கொள்ளவேண்டும்.



இந்தக் கட்டியை நிறுத்து, இதுகொண்ட எடையில் இரண்டுவிராகனெடைக்குஞ்சு விராகனெடை வீதம் வெடியுப்பைப்பொடித்து உமிநீரால் ரைத்து மேற்படி கட்டிக்குக் கவசித்து உலர்த்தி சிறுகலயத்திலிட்டுச் சில்லிட்டு ஐந்து சீலைமண்செய்துலர்த்தி கஜபுடத்தின் மூன்றுபங்கெடை விராட்டியிற் புடமிட்டு ஆறினபின்பெடுக்கச் சாரமான பற்பமாயிருக்கும். இதனைச் சீசாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்—குன்றிமணியெடை-௩-௪.

அநுபானம்:—வெள்ளரிக்காய்ச்சாறு, நீர்முள்ளிவேர்க் கஷாயம், தென்னைவேர், பனைவேர் முதலியவைகளின் கஷாயம், சுக்குக்கஷாயம், சோம்புக்கஷாயம், சோம்புத் திராவக முதலியவைகளாம்.

உபயோகம்:—பாண்டுவகைகள், பெருவயிறு, மகோதரம், நீர்க்கட்டு, குன்மம், அக்கினிமந்த முதலிய ரோகங்கள் தீரும்.

பத்தியம்:—தேகபலம், ரோகபலம் முதலியவைகளுக்குத் தகுந்தபடி ஏற்படுத்த வேண்டியது.

## ௨௨௮. நவச்சார பற்பம். (வேறு)

நவச்சாரக்கட்டி பலம் ௧, சீனக்காரம் பலம்-௧௦, எருக்கம்பால் பலம்-௧௦, உத்தாமணியிலை பலம்-௧௦.

செய்முறை:—படிகாரத்தை இரும்புச்சட்டியிற்போட்டு அடுப்பேற்றி உருகினவுடன் நவச்சாரக்கட்டியைப்போட்டுப் புரட்டிக்கொண்டு வரவேண்டும், தீயை மெதுவாக எரித்து வரவேண்டும். ஈரமில்லாமல் வரண்டுபோனபிறகு ஆறவிட்டு நவச்சாரக்கட்டி

யின்மீதுள்ள சீனக்காரத்தைக்கூத்தியாற் சுரண்டிமேற்படி பெருக்கம்பாலைக் கட்டியின்மீது பூசிப்பூசி உலரவைக்கவேண்டும். அந்தப் பாலெல்லாஞ் சென்றபின்பு மேற்படி வெளிப்பருத்தியிலையை யரைத்துக் கட்டிக்குக் கவசஞ்செய்து உலர்த்தி ஏழு சீலைமண்செய்து கவசத்தின் மூன்றுபங்கெரு விராட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுக்கப் பற்பமாகியிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௪-௮.

அநுபானம்:—நீர்முள்ளிவேர்க் கஷாயம், நெருஞ்சிசமூலக் கஷாயம், தென்னைவேர்க் கஷாயம், இவள்ளிக்காயை வெதுப்பிப்பிழிந்த சாறு, வெள்ளரிவிதையையரைத்துப் பிழிந்தபால், சோம்புக்கஷாயம், சோம்புத்திராவகம் முதலியவைகளாம்.

உபயோகம்:—கல்லுகை, நீராம்பல், மகோதரம், பாண்டு, நீரடைப்பு முதலியவை தீரும்.

பத்தியம்:—வியாதிபலம், தேகபலம் முதலியவைகளுக்குத் தக்கபடி ஏற்படுத்த வேண்டியது.

229. நவச்சாரச் சுண்ணம்.

நவச்சாரம் பலம்-௪, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு, உவர்மண் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—சாரத்தைக் கல்வத்திற் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஏழு சீலைமண்செய்துலர்த்தி இரண்டு சாண் அகலம், இரண்டுசாண் ஆழமுள்ள குழி ஒன்று தோண்டி அதில் அரைவாசி வரையில் உவர்மண்ணைக்



கொட்டிப்பரப்பி அதன்மீது கவசத்தைவைத்து அதன்மீது குழியின்வாய் மட்டம்வரையில் உவர்மண்ணைக்கொட்டிப் பரப்பி அதன்மீது முந்நூறுபெரு விராட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுக்கச் சுண்ணமாகியிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨-௪.

அநுபானம்:—முன் பாகத்திற் சொல்லப்பட்டவைகளேயாம்.

உபயோகம்:—கல்லைக்கட்டு, சதைக்கட்டு, செண்டைக்கட்டு, மகோதரம், நீராம்பல், பாண்டு, குதக்கட்டு, குகைக்கட்டு முதலியவைகள் தீரும்.

பத்தியம்:—வியாதியின் பலத்திற்குத் தக்கபடி ஏற்படுத்தவும்.

230. நவச்சாரச் சுண்ணம் (வேறு.)

நவச்சாரக்கட்டி பலம்-௧, ஊமத்தையிலைச்சாறு படி-௧, (இது கறு ஊமத்தையாயிருந்தால் வெகு சிரேஷ்டம்) ஊமத்தந்தழை செல்லத்தக்க அளவு, சுக்கான்கல் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—சாரக்கட்டியை ஒரு ஓட்டிலவைத்து மேற்படி ஊமத்தைச்சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டுச் சுருக்கிடவேண்டும். சாறெல்லாஞ் சென்றபின்பு எடுத்து ஊமத்தைத் தழையையரைத்து அரையங்குலகனம் எங்கும் சமமாகக் கவசஞ்செய்துலர்த்தி சுக்கான்கல்லை ஊமத்தைச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து அரைத்து ஓலையும் மூடியுஞ் செய்துலர்த்தி அதற்குள்வைத்து ஏழு சீலைமண்செய் துலர்த்திக் கவசத்

தின் ஆறுபங்கெடை விராட்டியிற் புடமிட்டாறின பின் னெடுக்கச் சுண்ணமாகியிருக்கும்.

பிரமாணம், அநுபானம், உபயோகம் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளே யாம்.

231. நவச்சாரச் சுண்ணம் (வேறு)

சாரக்கட்டி பலம்-௪, நாலாங்காய்ச்சல் வெடியுப்பு பலம்-௫, உலர்த்தின நாய் வெள்ளைமலம் பலம்-௨, ஊமச்சிக் கிளிஞ்சில் செல்லத்தக்க அளவு, கோழிமுட்டை வெள்ளைக்கரு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—நாய் மலத்தைத் தூள்செய்து இரண்டு பாகமாகச்செய்து ஒருபாகத்தை ஒருசட்டியிற் போட்டு அதன்மீது வெடியுப்புக் கட்டிகளைவைத்து அதன்மீது மேற்படி மறுபாகத்தைப்போட்டுச் சட்டியை மேற்சட்டியால்மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்திக் கமலாக்கினியாக நான்குசாமமெரித்து ஆறவிட்டெடுக்க வெடியுப்பானது சுண்ணமாகியிருக்கும்.

௫ பலம் பூநீற்றை ஒருபடி ஜலத்திற் கரைத்துப் பத்துப்பலம் கிளிஞ்சிலை அதில் ஊறவைத்துப் பின் புறத்திலுள்ள கறுப்பு நீங்கத்தேய்த்து அலம்பிவெயிலி லுலர்த்தித் தூள்செய்து வைத்துக்கொள்ளவும்.

மேற்படி வெடியுப்புச் சுண்ணத்திற்குச் சமவெடை மேற்படி கிளிஞ்சில் தூளைச்சேர்த்து வெள்ளைக் கருவைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமமரைத்து மேற்படி நவச்சாரக்கட்டிக்கு எங்கும் சமமாகக் கவசித்துலர்த்தி ஏழு சீலைமண்செய்துலர்த்திக் கவசத்தின் மூன்றுபங்கெடை விராட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுக்கச் சுண்ணமாகியிருக்கும்.



பிரமாணம், அநுபானம் முதலியனவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

232. சாரசெயநீர்.

இந்துப்புக்காய்ச்சல் வெடியுப்பு பலம்-௧௦, பாகப்படுத்தின பூநீறு பலம்-௧௦, இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நன்குசாமமரைத்து இரும்புக் கரண்டியிற்போட்டு எரித்து குழம்புபடியாகக் கொதிக்கவைத்தால் சுண்ணமாகும்.

(௧) இந்தச் சுண்ணத்தில் நாலிலொருபங்கு சாரத்தைச்சேர்த்துப் பொடித்துப் பீங்கானிலிட்டுப் பனியில்வைக்க எட்டுநாளைக்குள் ஜெயநீராகிவிடும்.

இந்த ஜெயநீரைவார்த்து சாரத்தை இரண்டுசாமமரைத்துப் பில்லைதட்டியுலர்த்தி அகலில்வைத்து மேலகலாலூடி மூன்று சீலைமண்செய்துலர்த்திக் கவசத்தின் இரண்டுபங்கெடை விராட்டியிற் புடமிடச் சுண்ணமாம். இந்தச் சுண்ணத்துடன் சரிபங்கெடை நவச்சாரத்தைச்சேர்த்துப் பனியில்வைக்க ஜெயநீராகும். ஆறு சாக்குகளெல்லாம் இந்த ஜெயநீரில் தோய்த்து வாட்டக் கட்டுப்படும். இந்த ஜெயநீரைவிட்டு அரைத்துப் புடம்போடச் சுண்ணமாம்.

(௨) மேற்கூறியிருக்கிற ஜெயநீரில் சீனத்தைப் போட்டு வெயிலில்வைக்கச் சுண்ணமாகிவிடும். இந்தச் சுண்ணம் பலம்-௨. இதை இரண்டுபாகமாக்கி ஒருபாகத்தை அண்டவோட்டிற்குள்போட்டு அதன்மேல் ஒரு விராகனெடை இரசகர்ப்பூரத்தை வைத்து அதன்மீது மறுபாகச் சீனச்சுண்ணத்தைப்போட்டு அதை

மறு அண்டவோட்டால்மூடி, இந்த சுண்ணாம்புச்சீலை செய்துலர்த்தி ஒருபடி சுண்ணாம்பு நீரின் மத்தியில்; அல்லது, ஒருபடி பூநீற்றின் மத்தியில்வைத்து பானையை மண்தாலத்தால்மூடிச் சீலைமண்செய்து நான்கு சாமம் கமலாக்கினியாக எரித்தெடுக்க, இரசகர்ப்பூரமானதுகட்டி மணியாகி உருகியிருக்கும். இதனை அநுபான விசேஷங்களி லுபயோகிக்க எல்லாவித வாத ரோகங்கள், வாயுரோகங்கள், சன்னிரோகங்கள், மேகங்கள், புண்புரைகள் முதலிய அநேகரோகங்கள் தீரும். வாய்வேகாது; எவ்வித துர்க்குணமு முண்டாகாது.

குறிப்பு

மேற்கண்ட இரச கர்ப்பூரத்தைப்போலவே வீரம், பாஷாணம், கெந்தகம், தாளகம் முதலிய சரக்குகளைக்கட்டி அததற்கான வியாதிகளுக்கு உபயோகித்து வெற்றியடையலாம்.

233. நவச்சார செந்தூரம்.

226-ல் சொல்லியிருக்கிறபடி நவச்சாரத்தைச் சினத்தில் பாகப்படுத்திச் சிவிக் கல்வத்திலிட்டுப்பொடித்து கோங்கிலவுப்பட்டைச் சாற்றை; அல்லது, கோங்கிலவுப்பூச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாமமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டிலவைத்து மேலோடுமூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்திக் கவசத்தின் மூன்றுபக்கமும் விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கச் செந்தூரமாகியிருக்கும்.

பிரமாணம்;—குன்றிமணி யெடை-உ-௩.



அநுபானம்:—நீர்முள்ளிவேர்க் கஷாயம், பனைவேர்க்கஷாயம், சுக்குக்கஷாயம், சோம்புக்கஷாயம், சோம்புத் திராவகம் முதலியவைகளாம்.

உபயோகம்:—குன்மரோகம், கட்டிகள், அஜீரணரோகம், குதகக்கட்டு, பாண்டுரோகம் முதலியவைகள் தீரும். இன்னும் இதனை வில்வாதி முதலிய லேகியங்களுடன் அநுபானித்துக் கொடுக்க அந்த சொல்லப்படும் வியாதிகளெல்லாம் அதிசீக்கிரமாகத் தீரும். வில்வாதிமுதலிய லேகிய வகைகளெல்லாம் பின்னுஞ் சொல்லப்படும்.

234. ஆக்கிராண திராவகம்.

சுண்ணாம்புக்கல் பலம்-ச, வெள்ளை நிறமான நவச்சாரம் பலம்-அ.

செய்முறை:—இவ்விரண்டையும் தனித் தனிப் பொடித்துப் பீங்கான் வாலையிற் போடும்போது இரண்டையுங் கலந்துபோட்டு மறுபீங்கான் வாலையைப் பொருத்தி மணலில்வைத்து நல்ல தீயாகயெரிக்கவும். மேற்சொல்லியிருக்கிற திராவகத்தையெடுத்துக் கற்காரக்குள்ள சீஷாவிலடைத்து வைத்துக்கொள்ளவும். காற்றுப்பட்டால் காரம்போய்விடும்.

உபயோகம்;—இந்த சீஷாவைத்திறந்து மூக்கில் முகரவைத்தால் சன்னி, ஈசத்தியும், தலைநோவு, ஜலதோஷம், ருக்கிரவாயு, மூர்ச்சை, பல்லு கிட்டிக்கொள்ளுதல் முதலியரோகங்கள் தீரும்.

குறிப்பு.

இந்தக் கஷ்டத்திற்குப் பால்மாறுகிறவர்கள் சீமையிலிருந்து வந்து விற்கும் ஆக்கிராண உப்பை

(Smelling salt) வாங்கி உபயோகித்துக் கொள்ளலாம்.

### 235. நவச்சாராதிக் குழம்பு.

நவச்சாரம், இந்துப்பு, வெடியுப்பு, அமச்சூரணம், சவுக்காரம், காந்தத்தூள், கடுகுத்தூள், சுத்திசெய்த கேர்வாளப்பருப்பு, மஞ்சட் கடுக்காய்த்தோற் சூரணம், இவை வகை-க-க்குப் பலம்-௩, ஐந்துபலம் மஞ்சட் கடுக்காய்த்தோலை ஒன்றரைப்படி ஜலத்திற் போட்டு அரைப்படியாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டின கஷாயம் செலுத்தத்தக்க அளவு.

செய்முறை:—ஆரம்பத்தில் வாளத்தைக் கல்வத்திலிட்டுத் தூள்செய்து மற்றவைகளையும் முறையே ஒவ்வொன்றாகச் சேர்த்தரைத்து முடிவாக எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து மேற்படி கஷாயத்தைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமமரைத்து மெழுகுபதத்தில் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨-௩.

அநுபானம்:—சிற்றாமணக்கெண்ணெய், இஞ்சிச்சாறு, சுக்குக் கஷாயம், சோம்புக்கஷாயம், சோம்புத்திராவகம் ஆகியவைகளாம்.

உபயோகம்:—சோகை, பெருவயிறு, [illegible] உதிரவாயு, உதரக்கட்டி, மகோதரம், வாயு, சோணிதவாயு, பித்தகாமாலை, எட்டுவகைப் பாண்டுரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

பத்தியம்:—வியாதிக்குத் தகுந்தபடி கட்டுப்புளி, வறுத்த உப்பு ஆகியவைகளைச் சேர்த்தும் அறவே நீக்கியும் வைக்கவேண்டியது.



இதில் கட்டுவந்த [illegible]த்தை, அல்லது [illegible]ரச் சுண்ணத்தைச் சேர்த்துச் செய்தால் அதிகவசிய[illegible] குணத்தைத் தருமென்பதற்கு ஐ[illegible]

வேறு

இதன் சுத்தி, இதன்பாகம் முதலியவைகளெல்லாம் நமது இரசவாத சிந்தாமணியில் வகை விபரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதனைப் பார்வையிடுபவர்களுக்கும் உபயோகப் படும்படியாக சில பாகங்களைச் சுருக்கமாக இங்கெழுதுவாம்.

### 236. வெடியுப்புக்கட்டு.

ஆட்டுவிரையின் நரம்பு, அதன் மண்டையெலும்பு ஆகியவைகளை [illegible] மாவாக்கிக் கொள்ளவேண்டும். இதில் அரைப்படி மாவை ஒருபாண்டயிற் போட்டு அதன்மீது இரண்டுபலம் வெடியுப்புக்கம்பியை வைத்து அதன்மீது மேற்படி அரைப்படி மாவைப் போட்டு சிறுசின்னியிலைச்சாற்றை ஒரு ஆழாக்கு தெளித்து [illegible] அடுப்பேற்றி நான்குசாமமெரித்துக் குளிர ஆறினபின்னெடுக்கக் கம்பியானது உருகிக் கட்டிப்பட்டிருக்கும். தீ அதிகமானால் சுண்ணமாகிவிடும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨-௩.

அநுபானம்—நெருஞ்சிவேர்க் கஷாயம், யானை நெருஞ்சிலை ஜலத்திற்கலக்கி வடித்த கொழை, பே[illegible]கொழை, திருநீற்றுவிதைக் கொழை, முள்ளங்கிச்சாறு, வெள்ளாட்டுப்பால் முதலியவைகளாம்.

உபயோகம்:—நீர்க்கட்டு, நீரடைப்பு, சதையடைப்பு, குன்மம், வயிற்றுவலி, வாயுவடைப்பு முதலியவைகள் தீரும்.

## 237. வெடியுப்புக்கட்டு (வேறு).

பழுத்தவன்னி வெள்வாவல்சதை பலம்-உ, வெடியுப்பு பலம்-உ, மூலப்புளி (அதாவது வெள்ளைநாமலம் உலர்ந்தது) பலம்-உ, இம்மூன்றையும் கல்வத்திலரைத்து இரும்புக்குகையில் வைத்துக் கொல்லுலையிலிட்டு வெண்காரங்கொடுக்க உப்பானது உருகிக் கண்விட்டாடும். அப்போது அதனையெடுத்துச் சாய்த்துக் கம்பியாகச்செய்து நன்றாய்க் குளிர்ந்தபின்பு எடுத்துப் பொடித்து வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம், அநுபானம் முதலியவைகளெல்லாம் மேற்சொன்னவைகளேயாம்.

## 238. வெடியுப்புக்கட்டு (வேறு).

பால்துத்தம், மயில்துத்தம், படிக்காரம், வெண்காரம், இந்துப்பு, வீரம், இரசகர்ப்பூரம் இவை வகை-க-க்குக் குன்றிமணி யெடை-சு. இவை யெல்லாவற்றையுங் கல்வத்திற்பொடித்துக் கோபுரந்தாங்கி யிலைச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருமணிநேரமரைத்து இரண்டு விராகனெடை வெடியுப்புக் கம்பியின்மேல் தடவித்தடவி வாட்டி அந்த மருந்தெல்லாஞ் சென்றபின்பு ஓட்டில்வைத்து மேலோடுமூடி ஐந்து சீலைமண்செய்து கவசத்தின் இரண்டுபங்கெடை விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கக் கம்பியானது கட்டுப்பட்டிருக்கும்.



### குறிப்பு.

மேற்கண்டபடி சித்தப்படுத்தின கம்பியை ஆட்டெலும்புமாவை அகலில்வைத்து அதற்கு மத்தியிலிட்டு மேலகல்மூடிச் சீலைமண்செய்து முன்போற் புடமிடுவது உத்தமம்.

பிரமாணம், அநுபானம் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

## 239. வெடியுப்புச் சுண்ணம்.

ஆதண்டை யிலையையரைத்து ஒவ்வொரு அங்குல கனமுள்ள இரண்டடைகளாகத்தட்டி அது கொள்கிறவரையில் வெடியுப்புக் கம்பிகளைப்பொடித்து அதன்மீது மற்றொரு அடையையும் வைத்து இரண்டடையும் பொருந்தும்படியாகச்செய்து ஓட்டில்வைத்து மேலோடுமூடி ஐந்து சீலைமண்செய்து கொல்லுலையில் வைத்து ஓடு சிவக்கிறவரையிலூதி எடுத்து ஆறவிட்டுக் கவசத்தைப் பிரித்தெடுக்க, வெடியுப்பானது சுண்ணமாகியிருக்கும்.

பிரமாணம்—குன்றிமணி யெடை-க-ரு.

அநுபானம்:—வெள்ளரிக்காயை வதக்கிப் பிழிந்தசாறு, முள்ளங்கிக் கிழங்குச்சாறு, கரும்புச்சாறு, சோம்புத்திராவகம், சோம்புக்கஷாயம், நெருஞ்சிற்கஷாயம், வெள்ளரிக்காய் விதையையரைத்துப் பிழிந்தபால், வெள்ளாட்டுப்பால் முதலியவைகளாம்.

உபயோகம்:—நீர்க்கட்டு, வயிற்றுவலி, பாண்டு, மூத்திரக்கட்டு, நீர்க்கோர்வை முதலியவைகள் தீரும்.

பத்தியம்:—தேகசுபாவம், தேகவித்தானம் ஆகியவைகளுக்குத் தக்கபடி யேற்படுத்தவும்.

240. வெடியுப்புச் சுண்ணம் (வேறு.)

நாய் மண்டையோடு, அதன் விலாவெலும்பு இவ்விரண்டையுஞ் சேர்த்திடித்து மாவாக்கி ஒரு அகலில் இரண்டங்குலகனம் பரப்பி அது கொள்ளுகிற வரையில் வெடியுப்புக் கம்பிகளைவைத்து அதன்மீது மேற்படி எலும்பின்மாவை இரண்டங்குலகனம்போட்டுச் செம்மையாக அமுக்கி மேலகல்மூடி ஏழுசீலை மண் செய்துலர்த்திக் கவசத்தின் நான்குபக்கெட்டை விராட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின்னெடுக்க அக்கட்டியானது உருகிச் சுண்ணமாகியிருக்கும்.

பிரமாணம், அனுபானம் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

குறிப்பு.

மேற்படி வெடியுப்புக் கம்பிகளில் கொஞ்சம் விரத்தை உமிநீரிலரைத்து மேற்கண்டபடி புடமிட்டால் கடுங்காரச் சுண்ணமாகும். இந்தக் கடுங்காரச் சுண்ணத்தை உமிநீரிற்குழைத்து அருசுக்கட்டிக்குக் கவசித்துலர்த்தி ஒட்டிவிட்டு மேலோடுமூடி இரண்டு சீலைமண்செய்து இலகுபுடமிட, அருசுச்சுண்ணமாம். இந்த அருசுச்சுண்ணமானது வாதம், வைத்தியம் என்னும் இருவகைகளுக்குமாம்.

241. வெடியுப்புச்சுண்ணம் (வேறு.)

கம்பி வெடியுப்பு பலம்-க, இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சிறுசின்னி யிலைச்சாற்றைச் சிறு



ச்சிறுகவார்த்து இரண்டுசாமமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி அகலிலிட்டு மேலகல்மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் நான்குபக்கெட்டை விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கச் சுண்ணமாகியிருக்கும்.

பிரமாணம், அனுபானம் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

242. வெடியுப்புச் சுண்ணம். (வேறு)

காற்படி கொள்ளும்படியான கலசத்தில் இரண்டரைப்பலம் கம்பி வெடியுப்பைப்போட்டு அந்தக் கலசம் நிறையக் காட்டுக் கோவையிலைச் சாற்றைவிட்டுக் கலசத்தின் வாய்க்குச் சில்லிட்டுச் சீலைசெய்து கவசத்தின் இரண்டு பக்கெட்டை விராட்டியிற் புடமிட்டாறினபின்னெடுக்கச் சுண்ணமாகி யிருக்கும். புடத்தைக் காற்றில்லாத விடத்திற் போடவேண்டும். நெருப்பு பதமாயிருந்தால்தான் செம்மையாய்ப் பதமாகும். நெருப்பானது மிகினும், குறையினும் பதமல்ல. ஆகையால் இதில் அக்கினி விஷயத்தைச் சற்று கவனத்துடன் நிதானித்துப் போடவேண்டும்.

பிரமாணம், அனுபானம் முதலியவைகளெல்லாம் மேற்சொன்னவைகளேயாம்.

243. வெடியுப்புச் சுண்ணம். (வேறு)

ஆட்டுத் தலையெலும்பு, ஆட்டலகின் எலும்பு ஆகியவைகளைச் சுட்டுச் சாம்பலாக்கி ஒரு அகலில் ஒரு அங்குலகனம் பரப்பி அதன்மீது அது கொள்ளுகிற வரையில் கம்பியுப்பைப் பரப்பி அதன்மீது மேற்படி

யெலும்புச் சாம்பலை ஒரு அங்குலகனம் பரப்பி அது த்திவிட்டு மேலகல்மூடிச் சீலைமண்செய்யாமல் கஜ த்தின் ஆறுபங்கெருவிராட்டியிற் புடமிட்டாறின் பின்னெடுக்கச் சுண்ணமாகியிருக்கும்.

பிரமாணம், அனுபான முதலியனவைக ளெல்லாம் மேற்கண்டவைகளேயாம். இன்னும் எல்லாவியாதிக ளிலும் இதனை ஆரம்பத்தில் உபயோகிக்கலாம்.

244. வெடியுப்புச் சுண்ணம். (வேறு.)

மாட்டு மண்டை நெற்றியோட்டிற்குக் காற்பங் கெடை வெடியுப்பை உத்தாமணிச் சாற்றாலரைத்து ப் பூசிக் கனத்த புடமிட அந்த அஸ்தியானது நன்றா ய் வெளுத்துப்போம். இதனையெடுத்துப் பொடித்துச் சுமார் ஒருபலம் இந்தத்தூளை ஒருகலயத்திலிட்டு அ தன்மீது ஒருபலம் வெடியுப்புக் கம்பியைவைத்து அ தன்மீதும் மேற்படி ஒருபலம் தூளைவைத்து தழுத்திச் சில்லிட்டு ஐந்து சீலைமண்செய்து சமையலடுப்பில் பு தைத்து ஆறுவேளை அதிற் சமைத்துப் பின்பு எடுத்து ப்பார்த்தால் உப்பானது விரிந்து மலர்ந்திருக்கும்.

பிரமாணம், அனுபானம் முதலியனவைக ளெல்லா மேற்கண்டவைகளேயாம்.

குறிப்பு.

மேற்படி சுண்ணத்திற் கொஞ்சமெடுத்து சதாபி லைச்சாற்றை விட்டரைத்து சில்லிக்குப்பூசி யுலர்த்திச் சிறு ஓட்டில்வைத்து மேலோடுமூடிச் சீலைமண்செய்து ஐந்துபலம் விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் சல் லியையெடுத்து முன்போல் வெடியுப்புச் சுண்ணத்தில்



சதாபிலைச்சாற்றை விட்டரைத்துப்பூசி உலர்த்தி ஓட் டிலிட்டு மேலோடுமூடி சீலைமண் செய்துலர்த்திப் பத் துவிராட்டியிற் புடமிடவேண்டும். மூன்றுத் துப்பலம் விராட்டியிற் புடமிடவேண்டும். பதினைந்துபலம் வி ட்டையும் முன்போலவெசெய்து பதினைந்துபலம் வி ராட்டியிலும், நான்காவது புடம் இருபதுபலம் விரா ட்டியிலும் புடமிட்டெடுக்கச் சல்லியானது பின்னூறல ற்றுப்போய்ச் சுத்தமாயிருக்கும். இஷ்டப்படி யுப யோகித்துக் கொள்ளலாம்.

245. வெடியுப்பாதிச் சுண்ணம்.

வெடியுப்பு, வெண்காரம், அவையம்வைத்த அ கர்ப்பூர சிலாசத்து, சீனக் கடத்தோல், பலகறை, சாரம் இவை வகைக்குப் பலம்-க. இவை யெல்லா வற்றையும் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து [illegible] சாம கோமரைத்துப் பில்லைசெய்துலர்த்திக் கற்சுண்ணாம்பு க் குகையில்வைத்து மேலும் கற்சுண்ணாம்புச் சில்லிட் டு ஒரு சீலைமண்செய்து கஜத்தின் நான்குபங்கெ ருவிராட்டியிற் புடமிட்டு ஆறினபின் [illegible] எ ல்லாம் சுண்ணமாகியிருக்கும்.

பிரமாணம்:—விராகனெடை-ந்தக.

அனுபானம்:—இளநீர், முள்ளங்கிச்சாறு, எலு மிச்சம் பழச்சாறு, தேன் முதலியவைகளாம்.

உபயோகம்;—கல்லடைப்பு, சதையடைப்பு, நீர ருகல், நீர்க்கட்டு ஆகியவைகள் தீரும்.

246. வெடியுப்புச் செந்தூரம்.

கம்பி வெடியுப்புக்கட்டி பலம்-க, வெங்காயத் தாளின்சாறு படி-அ, கட்டியை ஒருகலயத்திற்போட்

டு மேற்படி சாற்றைக் கலயத்தின் வாய்மட்டமிருக்கும்படியாக விட்டுக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டுச் சீலைசெய்து கலயத்திலிருக்கிற சாறு சுண்டும்படியாகப் புடமிடவேண்டும், ஆறினபின்பு மேற்படி சாரத்தையெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமநேர மரைத்துப் பில்லைதட்டி யுலர்த்தி அகலிலிட்டு மேலகல்மூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்திக் கவசத்தின் நான்குபக்கெடை விராட்டியிற் புடமிட்டு ஆறின்பின்னெடுத்து முன்போல் முன்சாற்றை விட்டரைத்து முன்போற் புடமிடவும். மூன்றுதடவையும் அவ்விதமே புடமிடவும். செந்தூரமாகியிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை [illegible].

அநுபானம்:—இளநீர், மு[illegible] [illegible]ள்ளங்கிக் கிழங்குச் சாறு, தென்னம்பாளைச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, நெருஞ்சிற்கஷாயம் முதலியவைகளாம்.

உபயோகம்.—நீர்க்கட்டு, நீரெரிச்சல், பிரமேகம், பாண்டு, குன்மரோகம், வயிற்றுவலி முதலியவைகள் தீரும். இன்னும் அநேக ரோகங்களுக்குமாகும்.

### 247. வெடியுப்புப்பாதி செந்தூரம்.

வெடியுப்பு பலம்-அ, கெந்தகம் பலம்-௩, சங்குத்தாள் பலம்-௩, இரசம் விராகனெடை-உ, லிங்கம் விராகனெடை-உ, இரசகர்ப்பூரம் விராகனெடை-உ, இரசசெந்தூரம் விராகனெடை-உ, எலுமிச்சம் பழச்சாறு படி-க.

செய்முறை:—மேற்படி சரக்குகளிற் சுத்திசெய்யவேண்டியவைகளைச் சுத்திசெய்து எல்லாவற்றையும் பொடித்து ஒன்றாகச்சேர்த்து, எலுமிச்சம்பழச்சாற்றை ஒருசட்டியில்விட்டு அதிற்போட்டுச் சிறுதீயாலெரித்துச் சாறெல்லாஞ் சுண்டினபிறகு கீழேயிறக்கித் தீண்டிவர எல்லாஞ்சிவந்து தூளாகிவிடும். இதனையெடுத்து சீஷாவிற் பத்திரப்படுத்த வேண்டும்.



பிரமாணம்:—விராகனெடை-௩-வ.

அநுபானம்:—இளநீர், முள்ளங்கிச்சாறு, நெருஞ்சிச்சாறு, வெள்ளரிவிதையை யரைத்துப் பிழிந்தபால், பன்னீர், வெண்ணெய், நெய் முதலியவைகளாம்.

உபயோகம்—நீர்க்கட்டு, நீரெரிச்சல், பிரமேகம், பாண்டு, குன்மரோகம், வயிற்றுவலி, பழையசுரம் மேகசுரம் முதலியவைகள் தீரும்.

### 248. வில்லையுப்பு

நாலைங்காய்ச்சல் வெடியுப்பு பலம்-கஅ, நெல்லிக்காய்க் கெந்தகம் பலம்-க.

செய்முறை:—இரும்புப்பாண்டத்தை வெள்ளை பாகத்திலிட்டு அதில் மேற்படி கம்பியுப்பைப் பொடித்துப்போட்டு அடுப்பின்மேலேற்றிச் சிறுதீயாயெரித்துவர, உப்பானது உருகி ஜலம்போலிருக்கும். அந்தச் சமயத்தில் கெந்தகத்தைத் தூள்செய்து ஒருசிட்டிகை அதிற் கிராசங்கொடுக்க வேண்டும். கிராசங்கொடுத்த கெந்தியானது பற்றி யெரிந்தடங்கினபின்பு மறுபடி கிராசங்கொடுக்கவேண்டியது, இவ்விதம் கிராசங்கொடுத்து கெந்தகமெல்லாஞ் சென்றபின்பு உப்பானது தண்ணீரைப்போல உருகியிருக்குஞ் சமயத்

தில் ஒரு இரும்புக் கரண்டியைச் சூடேற்றி அதினால் மொண்டு சூடேற்றின இரும்பு அச்சில்வார்த்துப் பில்லைகளாக எடுத்துவைத்துக் கொள்ளவேண்டும். உபயோகிக்கும்போது இதனைத் தூள்செய்துகொள்ளவும்.

பிரமாணம்:—விராகனெடை-கவ-உ.

அநுபானம்:—இளநீர், முள்ளங்கிச்சாறு, வெள்ளரிக்காயை வதக்கிப் பிழிந்தசாறு, நெருஞ்சிவேர்க் கஷாயம், யானை நெருஞ்சிக்கோழை, பேதாளுக்கோணமு முதலியவைகளாம்.

உபயோகம்:—நீர்க்கட்டு, நீரெரிச்சல், எரிச்சலான மேகங்கள், கால், குடல், ஆசனம், நீர்த்தாரை முதலிய ஸ்தானங்களிலுள்ள அழலைகள், எரிச்சல்கள் முதலிய உஷ்ணத்த ரோகங்களெல்லாம் தீரும். இதற்கு (சால்புராநீல்) என்று சொல்வதுமுண்டு.

## 249. வெடியுப்பு ஜெயநீர்.

வெடியுப்பு விராகனெடை-கசு, புழம்புளி விராகனெடை-௩0, வெண்காரம் விராகனெடை-உ, நவச்சாரம் விராகனெடை-உ, கர்ப்பூரம் விராகனெடை-உ, அருக விராகனெடை-உ, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இவை யெல்லாவற்றையுங் கல்வத்திலிட்டுப் பொடித்து பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு ஜாமமரைத்துப் பில்லைதட்டி வெயிலில்வைத்துலர்த்திப் புது ஓட்டில்வைத்து அடுப்பேற்றி எரிக்க பில்லை பற்றியெரிந்து சுண்ணமாகும். இந்தச் சுண்ணத்துடன் ஒருபங்கு பச்சை கற்பூரத்தைச் சேர்த்துப்பொடித்து பனியில்வைக்க ஜெயநீராகும்.



இந்த ஜெயநீரில் சரக்குகளைத்தோய்த்து நெருப்பனலில்வாட்ட அவை கட்டுப்படும். அவைகளை மேற்படி ஜெயநீரைவிட்டரைத்துப் புடமிட சுண்ணமாகும்.

பிரமாணம்:—மேற்படி ஜெயநீர் துளிகள்-க-௩0.

அநுபானம்:—எலுமிச்சம் பழச்சாறு, எலுமிச்சம்பழ சர்பத்து, வெள்ளரிக்காயை அனலில்வாட்டிப் பிழிந்த சாறு, வெள்ளரிவிதையை அரைத்தெடுத்தபால், நெருஞ்சிவேர்க்கஷாயம், இளநீர் முதலியவைகளாம்.

உபயோகம்:—நீர்குத்தல், நீரெரிச்சல், நீர்க்கட்டு, சதையடைப்பு, கல்லடைப்பு, பிரமேகம், நீர்த்தாரை அழலை, நீர்த்தாரைப்புண் முதலியவைகள் தீரும்.

## 250. வெடியுப்புஜெயநீர் (வேறு)

வெடியுப்பு பலம்-க, புளிப்புளி பலம்-க, கர்ப்பூரம் பலம்-க, வெண்காரம் பலம்-க, சீனக்காரம் பலம்-க, அப்பளக்காரம் பலம்-க, சாயுருவியுப்பு பலம்-க, அன்னபேதி பலம்-க, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—சரக்குகளையெல்லாம் தனித்தனி பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த்து புளியையுஞ் சேர்த்து கல்வத்தில் மருவக்கையாலிடித்துப் பிறகு கல்வத்திலிட்டு மேற்படி எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுஜாமமரைத்துப் பில்லைதட்டியுலர்த்தி சட்டியில் வைத்தெரிக்க எல்லாஞ் சுண்ணமாய்விடும்.

இந்தச் சுண்ணத்துடன் நாலிலொருபங்கு பச்சைக் கற்பூரத்தைச்சேர்த்து பொடித்துப் பனியில்வைக்க, ஜெயநீராகும். இதனை சீஷாவிற்படுத்திரப்படுத்தவும்.

இந்த ஜெயநீரில் சரக்குகளைத் தோய்த்து நெருப்பில்வாட்டக் கட்டுப்படும். அவற்றை மேற்படி ஜெயநீரை விட்டரைத்துப் புடமிடச் சுண்ணமாகும்.

பிரமாணம், அநுபானம், உபயோகம் ஆகியவைகள் மேற்கண்டவைகளே யாம்.

## 251. வெடியுப்புத் திராவகம்.

(a) வெடியுப்பு பலம் - ௩0, சீனக்காரம் பலம் உ௩, துருசு, சவுக்காரம், வீரம், பூநீறு, கல்லுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, மேகங்கள், சீனி உப்பு, வளையசாரம், அன்னபேதி, கறியுப்பு, உவர்மண்ணுப்பு, கொடிவேலியுப்பு, இவை வகை-க-க்குப் பலம்-உ வெண்காரம், நவச்சாரம் இவை வகை-க-க்குப் பலம்-௩. இந்துப்பு பலம்-அ.

(b) பூநீறு, வீரம், சங்குசுண்ணம், வெள்ளைப் பாஷாணம் இவை வகை-க-க்கு கிராம்பெடை-க.

செய்முறை:—(a) யிலுள்ள சரக்குகளை யெல்லாம் தனித்தனிபொடித்து ஒன்றாகச் சேர்த்தரைத்து மூன்று பாகமாகச்செய்து ஒருபாகத்தை வாலையிலிட்டுப் பாகப்படி திராவகமிறக்கி அதில் மறுபாகத்தைச்சேர்த்துத் திராவகத்தையிறக்கி அதில் மற்றொருபாகத்தையுஞ் சேர்த்துத் திராவகமிறக்கிக்கொள்ள வேண்டும்.

இந்தத் திராவகத்தில் (b) யிலுள்ள சரக்குகளைப் பொடித்துப்போட்டு தலையிலுள்ள எண்ணெய்க்கு



வு முதலியவைகளைச் சிலைக்காய் சௌக்காரம் ஆகியவைகளாற் கழுவிச் சுத்திசெய்து மேற்படி திராவகத்தில் நனைத்து வெயிலிற் காயவைக்க வேண்டும். இவ்விதம் மடக்கி மறுபடியும் முன் திராவகத்தில் தோய்க் காய்ந்தபின்பு மறுபடியும் முன் திராவகத்தில் நனைத்துக் காயவைக்கவேண்டும். இவ்விதம் மடக்கி மனைத்துக் காயவைக்க மசிக்கிப் பத்துத்தடவைகள் நனைத்துக்காயவைக்க நொறுக்கிப்போகும்.

இந்த நொறுக்கின ரோமத்திற்கு சமனெடை மேற்படி திராவகத்தைச் சேர்த்துச் சீலைவிட்டு இரு மூன்றுநாள் குழுக்கிவர எல்லாம் திராவகமாய் விடும்.

இந்த திராவகத்தில் எந்தச் சரக்கையும் கரைத்து அவரட்ட அந்தச் சரக்குக் கட்டுப்படும். பிறகு இதனை மேற்படி திராவகத்தை விட்டரைத்துப் புடமிடச் சுண்ணமாகும்.

இந்தச் சுண்ணங்கள் வாதம், வைத்தியம் என்னு மிருமுறைக்குமுபயோகம்.

மேற்படி பாகப்படிசெய்த ரோமமிராண்டு அநேக முறைகளுக் குபயோகமாகும். அம்முறைகளை இனி உடனே எழுதப்படும். இரசவாத சிந்தாமணியில் எழுதவாம். மயிரை நொறுக்கச்செய்கிறது சாத்தியமானகாரியமல்ல. இது பெரும்பான்மையும் இரசவாத முறைகளுக்கும் வைத்திய முறைகளுக்கும் உதவுமென்றபடியாலும் இங்கெழுதப்பட்டிருக்கின்றது. இதன் மர்மம் தெரிந்தவர்களனேக ரிருப்பார்கள். ஆனபடியால், அவசியமானவர்கள் அவர்களிடம் தெரிந்துகேட்டுக் கொள்ளலாம்.

## 252. வெடியுப்புப்பாதிக் கிருதம்.

வெடியுப்பு, கல்லுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, சவுட்டுப்பு இவ்வைந்தும் வகை-க-க்குப் பலம்-க, சுத்திசெய்த கோவாளப்பருப்பு பலம்-க, காட்டு நவச்சாரம் பலம்-உ, சிற்றாமணக் கெண்ணெய்படி-அ, முற்றினவைகளும் பருமனானவைகளுமான தேங்காய்-அ.

செய்முறை:—தேங்காய்களைப் பால்பிழிந்து மற்ற சரக்குகளையும் பொடித்துப்போட்டு எண்ணெயையுஞ் சேர்த்துவைத் தடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்துக் கடுகுதிரள்பதத்தில் நெய்யை வடித்துத் தனியே ஓஜாவில்வைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—ச-ரு-துளிகள்.

அநுபானம்:—வெந்நீர், இளநீர், தேப்பானம், காப்பிபானம், காய்ச்சின பசுவின்பால், சுக்குக்கஷாயம், சோம்புத்திராவகம், சோம்புக்கஷாயம், சீனிசருக்கரை, வெல்லம் முதலியவைகளாம்.

உபயோகம்:—வெட்டைரோகங்கள், குன்மரோகங்கள், வாயுரோகங்கள், அஜீரணரோகங்கள், சூலைரோகங்கள், கைகால்பிடிப்பு, ஒடுவாய்வு, சுரங்கள், சன்னிகள், கிருமிரோகங்கள், சோகைகள் முதலிய அநேகரோகங்கள் தீரும். சுருக்கிச்சொல்லின் எல்லாவகை ரோகங்களுக்கும் இதனை உபயோகிக்கலாம். வைத்திய இரகசிய முறைகளில் இது வொன்று. எந்தச்சமயத்திலும் இது உதவுகிற மருந்தாகையால் அநுபவசாலியான வைத்தியர்கள் இதனை எப்போதுஞ் சர்வசித்தமாய் வைத்திருக்க வேண்டியது அவசியகம்.



## 253. செந்தூரத் திராவகம்.

வெடியுப்பு பதினைந்துபலந், சீனக்காரம் பத்துப்பலந், நவச்சாரம் ஒருபலந், பூநீறு ஒருபலந், அன்னபேதி ஒருபலந், துருசு அரைப்பலந், இந்துப்பு அரைப்பலந், கறியுப்பு அரைப்பலந்.

செய்முறை:—இவைகளையெல்லாந் தனித்தனி பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்தரைத்து இரண்டுபாகமாக்கி ஒரு பாகத்தை வாலையிலிட்டுத் திராவகமிறக்கி அதில் மறுபாகத்தைச் சேர்த்துத் திராவகமிறக்கிக் கொள்ளவும்.

உபயோகம்:—குப்பியில் வைத்தெரித்துச் செந்தூரிக்கவேண்டிய முறைகளுக்கெல்லாம் இந்தத் திராவகத்தைவிட்டு அரைத்தெரிக்க வேண்டும். சாதாரணமாய் அகஸ்தியர் ஆயிரத்தைந்நூற்றில் சொல்லியிருக்கிற சிந்தாமணிமுதலியச் செந்தூரங்களுக்கெல்லாம் இதுவே குருத்திராவகமாம். அந்நூலில் சொல்லியிருக்கிற திராவகங்கள் அவ்வளவாக உபயோகப்படாது. சிலசமயங்களிற் செந்தூரமாகிறதே யில்லை. கைபாகமாக இந்தத் திராவகத்தையே குப்பியிலிடப்புச் செந்தூரங்கட்குபயோகித்துவருகிற அநுபவப்படி எல்லோருக்கு முபயோகமாகும்படி இங்கெழுதியிருக்கின்றோம். சந்தேகமுள்ளவர்கள் பரீட்சித்துப் பார்க்கவும்.

## 254. அஷ்டகுன்மத் திராவகம்.

வெடியுப்பு பலம்-அ, சீனக்காரம் பலம்-ரு, வெண்காரம் விராகனெடை-கு, பூநீறு விராகனெடை-உ௦, நவச்சாரம் விராகனெடை-உ௦, சவுக்காரம் விராகனெடை-உ.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் தனித் தனி தான் செய்து ஒன்றாக மிஸ்ரமித்து வாலையிலிட்டுப் பாகப்படி திராவகமிறக்கிக் கொள்ளவும்.

பிரமாணம்:—௪-முதல்-௧௦-துளிகள்.

அனுபானம்:—சுக்குக்கஷாயம், வெள்ளரிவிதையை அரைத்துப் பிழிந்தபால், நெருஞ்சிவேர்க் கஷாயம், தென்னைவேர்க்கஷாயம், பனைவேர்க்கஷாயம் முதலியவைகளாம்.

உபயோகம்:—குன்மம், நீரடைப்பு, சதையடைப்பு, பாண்டு, மகோதரம், பெருவயிறு, சுக்கிலவாயு, மதுமேகம், நீரிழிவு ஆகியவைகள் தீரும்.

குறிப்பு.

இந்தத் திராவகத்தை மூன்றுதடவை மடக்கிச் செய்தால் இரசங் கட்டிப்படும்.

255. நவலோகச் செந்தூர ஜெயநீர்.

ஐங்காரக்காய்ச்சல் வெடியுப்பு பலம்-௧௦, அட்டுப்பு பலம்-௫, சீனக்காரம் பலம்-௫, நவச்சாரம் பலம்-௫, துருசு பலம்-௫, கெந்தகம் பலம்-௩, எவச்சாரம் பலம்-௨½, அன்னபேதி பலம்-௨, பழம்புளி பலம்-௫.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் தனித் தனி தான் செய்து கெந்தகத்தைத் தனியே யெடுத்துக் கொண்டு மற்ற சரக்குகளையும் புளியையும் சேர்த்து மாவாரலில் மாவுலக்கையாலிடித்து எடுத்துக்கொண்டு கெந்தகத்தைச்சேர்த்து மிஸ்ரமித்துக் கலவத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாமம் அரைத்துச் சிறுவில்லைகளாகச் செய்துலர்த்திச் சட்டி



யிலிட்டு எரித்துச் சுண்ணமாக்கிப் பீங்கானில் வைத்து ஜெயநீராக்கிக் கொள்ளவும், அல்லது பூமியில் புதைத்து ஜெயநீராக்கிக் கொள்ளவும்.

உபயோகம்:—நவலோகத்தையும் இந்த ஜெயநீரால் செந்தூரமாக்கிக் கொள்ளலாம். தேவையான லோகங்களை யெடுத்துக்கொண்டு அல்லது காரகத்தைக் கிராசங்கொடுத்து வெட்டையாக்கி இந்தத் திராவகத் தைவிட்டரைத்துப் புடமிடச் செந்தூரமாகும். அந்தந்தச் சரக்குகளுக்குத் தக்கபடி அந்தந்த வியாதிகளுக்குப் பிரயோகிக்கலாம்.

வெடியுப்பு சுத்தி.

வெடியுப்பு பெரும்பகுதி கட்டித்தண்ணீர் அல்லது சின்னத்துருவம் இரண்டுவகையுண்டு.

வெடியுப்பைக் கலவத்திலிட்டு நன்றாகப் பொடித்து மேற்படி ஜலத்திலே கரைத்துக் கொஞ்சநேரம் வைத்தால் மேலே தெளிந்திருக்கும், அந்தத் தெளிவை யிறுத்து இரும்புச் சட்டியில் விட்டுக் காய்ச்ச உப்பாகும். அந்த உப்பை முன்போல் பொடித்து முன்போல் இரண்டுபங்கு ஜலத்திற் கரைத்துத் தெளிவிறுத்துத் தெளிவை முன்போல் காய்ச்சி உப்பாக்கி முன்போல் இரண்டுபங்கு ஜலத்திற் கரைத்துக் காய்ச்சியெடுத்துக் கொள்ளவும், வெடியுப்பானது சுத்தியாயிருக்கும். இவ்விதம் சுத்திசெய்த உப்பை மேற்கண்ட பாகங்களில் உபயோகித்துக் கொண்டால் விசேஷ குணத்தைத் தரும்.

வெடியுப்பு சுத்தி (வேறு.)

மேற்கண்ட பாகப்படியே வாழைக் கிழங்குச்சாற்றில் மூன்று தடவை செய்தால் நிறமான சுத்தியா

கும். ஏழுதடவை செய்தநல்திறமான சுத்தியாவதுடன் வெடியுப்புக் கட்டாகும். வைத்திய வாதமுறைகளில் உபயோகித்துக் கொள்ளலாம்.

## 256. வெடியுப்புக் கட்டு (வேறு)

தேவையான அளவு வெடியுப்பை இரும்புச் சட்டியிற்போட்டு அடுப்பேற்றிச் சிறுதீயா யெரித்து வெடியுப்பு உருகினவுடன் அதனைத் தீயால் கொளுத்திவிட வேண்டும். அது எரிந்தடங்கின பின்பு அதை யெடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவும். இவ்விதம் செய்யப்பட்டதை ஒருவகை வெடியுப்புக் கட்டென்பார்கள்.

பிரமாணம், அநுபானம், உபயோகம் முதலியவைகளெல்லாம் ௨௩௯-ல் சொல்லி யிருக்கிறபடியேயாம்.

## 257. வெடியுப்புக்கட்டு (வேறு)

வெடியுப்பு ஒருபங்கு, உலர்ந்த கஞ்சா மூன்று பங்கு.

செய்முறை:—கஞ்சாவைத் தூள்செய்து இரண்டு பாகமாகச் செய்து ஒரு பாகத்தை இரும்புச் சட்டியில்வைத்து அதன் மீது வெடியுப்பை வைத்து அதன்மீது மறுபாகத்தை வைத்துமூடி அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்து அதைக் கொளுத்திவிட வேண்டும். கஞ்சாவானது எரிந்தடங்கினபின் ஆறவிட்டெடுக்க வெடியுப்பானது கட்டுப்பட்டிருக்கும்.

பிரமாணம், அநுபானம், உபயோக முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.



## 258. வெடியுப்புக்கட்டு (வேறு.)

வெடியுப்பு ஒருபங்கு, உலர்ந்த இலந்தையிலை ஆறுபங்கு.

செய்முறை:—இலந்தையிலையை ஆறுபாகமாகச் செய்து ஒரு பாகத்தை இரும்புச் சட்டியிற் பரப்பி அதன்மீது வெடியுப்பை ஐந்து பாகமாகச்செய்து ஒருபாகத்தைப் பரப்பி அதன்மீது இலந்தை யிலையின் ஒருபாகத்தைப் பரப்பி அதன்மீது வெடியுப்பின் ஒரு பாகத்தைப்பரப்பி அதன்மீது இலந்தை யிலையின் ஒரு பாகத்தைப்பரப்பி அதன்மீது வெடியுப்பின் இன்னொருபாகத்தைப் பரப்பவேண்டும். இவ்விதம் ஒரடுக்கு இலந்தையிலையும் ஒரடுக்கு வெடியுப்பையுமாக அடுக்கடுக்காய்ப் பரப்பி எல்லாவற்றிற்கு மேலே இலந்தை யிலையைப் பரப்பி அடுப்பேற்றிச் சிறுதீயா யெரித்து நெருப்பினுல் கொளுத்திவிடவும். எரிந்தடங்கினபின்பு ஆறவிட்டெடுக்க வெடியுப்பானது கட்டுப்பட்டிருக்கும்.

பிரமாணம், அநுபானம், உபயோக முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

## 259. வெடியுப்புக்கட்டு (வேறு).

வெடியுப்பு பலம்-௧, எருக்கம்பால் பலம்-௬.

செய்முறை:—வெடியுப்பை இரும்புச் சட்டியிற் போட்டு மேற்படி எருக்கம்பாலைச் சிறுகச் சிறுக வார்த்துக் கட்டியைப் புரட்டிக் கொடுத்துக்கொண்டுவர வேண்டும். பாலெல்லாம் சுண்டினபிறகு குளிர ஆறவைத்தெடுக்க வெடியுப்பானது கட்டுப்பட்டிருக்கும்.

பிரமாணம், அநுபானம், உபயோக முதலிய வைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

குறிப்பு.

மேற்கண்ட பாகப்படியே புகாம்பட்டைப் பாலில் வெடியுப்பைக் கட்டி உபயோகிக்கலாம்.

### 260. வெடியுப்புக்கட்டு (வேறு.)

வெடியுப்பு பலம்-௪௰, கஞ்சா விராகனெடை-௩, ஓமம் விராகனெடை-௩. பின்னுள்ள இரண்டு சரக்கையும் தூள்செய்து வைத்துக் கொள்ளவும்.

செய்முறை:—மேற்படி வெடியுப்புபை இரும்புச் சட்டியில்வைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்து வெடியுப்பானது உருகினவுடன் முன் சூரணத்தில் ஒரு சிட்டிகையெடுத்து வெடியுப்பில் கிராசங்கொடுக்கவேண்டும். அது எரிந்தடங்கினபின்பு மறுசிட்டிகை போடவேண்டும். சிட்டிகைக்குப்பின் சிட்டிகையாகக் கிராசங்கொடுத்து தூளெல்லாஞ் சென்றபின்பு இறக்கி ஆறவிட் டெடுத்துக் கொள்ளவும்.

பிரமாணம், அநுபான முதலியவைகள் மேற்கண்டவைகளே.

குறிப்பு.

வெடியுப்பை நெருப்பிற் போட்டால் பற்றியெரியாது. ஒருவேளை அப்படிப் பற்றியெரிந்தால் முன் கொடுத்ததில் அரைப்பங்கு கிராசங்கொடுத்தால் சுத்தக் கட்டாகிவிடும். வாதம், வைத்தியமாகிய இருமுறைகளுக்கு முபயோகமாகும்.



### 261. மனோசிலைச் செந்தூரம்.

மனோசிலை சுத்தி:—தேவையான அளவு மனோசிலையைச் சிறுநீரிற் போடவேண்டும், சிறுநீரானது மனோசிலைக்குமேல் நாலங்குலமிருக்கவேண்டும். அதாவது மனோசிலையானது சிறுநீருக்குள் நாலங்குலம் மூழ்கி இருக்க வேண்டும். இவ்விதம் எட்டுநாள் ஊறப்போட்டு ஒன்பதாம்நாள் கழுவி எடுத்து வெயிலிலுலர்த்திக் கொள்ளவே மனோசிலைச் சுத்தியாம்.

மேற்கண்டபடி சுத்திசெய்த மனோசிலை பலம்-௧, கீழ்ச்சொல்லுகிறபடி சித்தப்படுத்தின கிளிஞ்சிற் சுண்ணம் பலம்-௪, ஆவாரை யிலையை யரைத்த விழுது பலம்-௨.

செய்முறை:—மனோசிலைக் கட்டிக்கு ஆவாரந்தழை விழுதைக் கவசஞ்செய்து ஒரு அகலில் இரண்டுபலம் கிளிஞ்சிற் சுண்ணத்தைப் போட்டு அதன் நடுவில் முன் கவசத்தை வைத்து அதன்மேல் ௨-பலம் கிளிஞ்சிற் சுண்ணத்தை வைத்து மேலகல்மூடி, ஏழு சீலைமண்செய்து சரத்தையுலர்த்திக் கஜபுடத்தில் இருபது பங்கு விராட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின் னெடுக்கச் செந்தூரமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨.

அநுபானம்:—கருஞ்சீரகசூரணம், அதாவது கருஞ்சீரகத்தை வறுத்திடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் விராகனெடை-௩, நெய் விராகனெடை-௩, இரண்டையுஞ் சேர்த்து மேற்படி செந்தூரத்தைப் பிரமாணப்படி அநுபானித்தால் கருமகுஷ்டம், தனிர் சுரம், சுவாசம் ஆகியவைகள் தீரும்.

கார்போகரிசி பலம்-க, இதனைச் சூரணஞ்செய்து கல்வத்திலிட்டுத் தேனைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு ஜாம மரைத்து லேகிய பதமாயெடுத்துக் கொள்ளவும். இந்த லேகியம் விராகனெடை - க. இதில் மேற்படி செந்தூரத்தைப் பிரமாணப்படி அநுபானித்து நாற்பதுநாள் உட்கொண்டுவர வெண்குஷ்டம், கிலந்திவிஷம், அதிகள்ளிகா ரோகம் ஆகியவை தீரும்.

பத்தியம்:—புளி, புகை, பெண், உப்பு முதலியவைகளை நீக்கி வைப்பது உத்தமம். அப்படிக் கூடாத பக்ஷத்தில் உப்பை வறுத்தும், புளியைச் சுட்டுஞ் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

கிளிஞ்சிற் சுண்ணம்:—உழமண் தேவையான அளவு. இதை இரண்டு பங்கு சிறுநீரிற் கரைத்து அதில் மூன்றங்குல மாழ்ந்திருக்கும்படியாகக் கிளிஞ்சில்களைப் போட்டு மூடிநாளூறவைத்து ஒன்பதாநாள் கொல்லுலையில் வைத்தூதினால் எல்லாஞ் சுண்ணமாய் விடும். இந்தச் சுண்ணத்தை மேற்சொல்லியிருக்கிற மனோசிலைச் செந்தூர முறையிற் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

### 262. மனோசிலைப் புகை.

மேற்கண்டபடி சுத்திசெய்த மனோசிலை தேவையான அளவு. இதனை ஒட்டில்வைத்து எருக்கம்பாலைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டுஜாமம் அருக்குக் கொடுத்து எடுத்து கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி எருக்கம்பாலைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்துச் சிறுபில்லைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.



உபயோகம்:—ஒரு இரும்புக் கரண்டியில் கரிநெருப்பைப் போட்டு அதன்மீது மேற்படி பில்லையிற் கொஞ்சமெடுத்துத் தூள்செய்து போட்டுப் புகையும். அந்தப் புகையை வெண்குஷ்டத்தால் வெளுத்திருக்கிற பாகத்தில் புகை படும்படி செய்யவேண்டும். இவ்விதம் தொடர்ச்சியாகச் சிலநாள் செய்ய வெள்ளை மறைந்து தேக வர்ணமுண்டாகிவிடும்.

பத்தியம்:—மேற்கண்டபடி புகை பிடிக்கும்போதும் முன் சொன்னபடியே பத்தியமாயிருக்கவேண்டும்.

### மிருதார்சிங்கி சுத்தி.

இச்சுத்தி முறைகளெல்லாம் அமுத ரசவாத சிந்தாமணி முதற்பாகத்தில் பலவாகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால், அவசியமானவர்கள் அதைப்பார்த்துக் கொள்ளவும். இதை வாசிப்பவர்களுக்கு உபயோகப்படும்படியாக இங்கு மிரண்டொரு பாகத்தைக் கூறுவாம்.

மிருதார்சிங்கியைக் கல்வத்திலிட்டுப் பொடித்து ஜலத்தைவிட்டு ஒரு சாமநேரம் மரைத்து ஒரு பாத்திரத்திற்போட்டு இன்னங்கொஞ்சம் ஜலத்தையும்விட்டு நன்றாய்க் கலக்கி மறு பாத்திரத்தில் வடிக்கவேண்டும். பிறகு இதைப்போல் இரண்டு மூன்றுதடவை நன்றாய்க் கலக்கிக்கொண்டு வரவேண்டும். நான்காநாளெடுத்து தெளிவையிறுத்து நீக்கிவிட்டு அடியிலிருக்கும் வண்டலை வெயிலிலுலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும். இது ஒருவகை சுத்தியாம்.

## மிருதார்சிங்கி சுத்தி (வேறு)

மிருதார் சிங்கியைப் பொடித்து ஊமத்தையிலைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசாமமரைக்கவேண்டும். பிறகு வெயிலிலுலர்த்தி யெடுத்துக்கொள்ளவும். மிருதார்சிங்கி யானது சுத்தியாயிருக்கும்.

## 263. மிருதார்சிங்கி பற்பம்.

சுத்திசெய்த மிருதார்சிங்கி விராகனெடை - ௧ கஞ்சாவிலை பலம்-௧.

செய்முறை:—கஞ்சாவிலையை வெண்ணெய்போலரைத்து மிருதார்சிங்கிக்குக் கவசித்து அதன்மீது இரண்டு சீலைமண்செய்து-௫௦-பலம் விராட்டியிற்புடமிட்டாறினபின்னெடுக்கப் பற்பமாயிருக்கும். அப்படிப் பற்பமாகாதிருந்தால் முன்போல் இன்னமொருதடவையும் புடமிட்டெடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-௧-௨.

அநுபானம்:—வெண்ணெய், பாலேடு, நெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—பாம்புவிஷம், விரியன்விஷம், தேள்விஷம், எலிகடிவிஷம் ஆகியவைகள் தீரும். வாயு சம்பந்தமான வியாதிகள், கபசம்பந்தமான வியாதிகள் ஆகியவைகள் தீரும்.

## 264. மிருதார்சிங்கி பற்பம் (வேறு)

சுத்திசெய்த மிருதார்சிங்கி விராகனெடை-௧, தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ் பலம்-௩௰, எருக்கம்பால் செல்லத்தக்க அளவு.



செய்முறை:—வெள்ளைப்பூண்டை எருக்கம்பால் விட்டரைத்து மேற்படி சிங்கிக்குக் கவசஞ்செய்து அதன்மீது இரண்டு மண்சீலைசெய்து-௨௫-பலம் விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுத்துக்கொள்ளவும்.

இரண்டாந்தடவையும் முன்போல் வெள்ளைப்பூண்டை எருக்கம்பால் விட்டரைத்துக் கவசஞ்செய்து அதன்மீது இரண்டு மண்சீலைசெய்து-௨௨-பலம் விராட்டியிற் புடமிடவும். இவ்விதம் மடங்கி மடங்கி வெள்ளைப்பூண்டை எருக்கம்பாலாலரைத்து எழுபுடமிடவேண்டும். ஆனால், ஒவ்வொரு புடத்திற்கும் மும்மூன்று பலம் விராட்டியைக் குறைத்துக்கொண்டே வரவேண்டும். எழுபுடமிட்டானால் திவ்யமான பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧.

அநுபானம்:—வெண்ணெய், பாலேடு, நெய், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:—வாயு சம்பந்தமான வியாதிகள், கபசம்பந்தமான வியாதிகள், மூலரோகங்கள், வயிற்றுப்பூச்சிகள், நாட்பட்ட பிரமேகம், தொந்தப்பிரமேகம் ஆகியவைகள் நீர்த்தாதுவிருத்தி முதலியவைகளுண்டாகும்.

## 265. மிருதார்சிங்கி பற்பம் (வேறு)

மிருதார்சிங்கி பலம் - ௧, சதுரக் கள்ளிப்பால் செல்லத்தக்க அளவு;

செய்முறை:—மிருதார் சிங்கியைக் கல்வத்திலிட்டு மேற்படி பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்

டு சாமமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி அகலில்வைத்து மேலகல்மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்திக்கவசத்தின் ஆறுபங்கு விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டு முன் பாலைவிட்டு முன்போல் இரண்டு ஜாமமரைத்து முன்போல் புடமிட்டு எடுத்து மூன்றாந் தடவையும் முன்போலவே புடமிட்டெடுக்கப் பற்பமா யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-க௩த்.

அனுபானம்:—தேன், நெய், வெண்ணெய், கருஞ்சீரகச் சூரணம், சீரகச் சூரணம் முதலியவைகளாம்.

உபயோகம்:—மேகவூரல், கிரந்திகள், புண்கள், கண்டமாலை, சர்வாங்கச் சொறி, பேய்ச்சொறி, முதலிய ரோகங்கள் தீரும்.

பத்தியம்:—வியாதிபலம், தேகபலம் முதலியவைகளுக்குத் தகுந்தபடி இச்சாபத்திய மாகவும் இலகு பத்தியமாகவும், கடும்பத்தியமாகவும் ஏற்படுத்தவேண்டியது.

### 266. சுராங்குச பற்பம்.

சுத்தியான மனோசிலை விராகனெடை-௪, சங்கு விராகனெடை-௪, மிளகு விராகனெடை-௪. இவையெல்லாவற்றையும் ஒரு பாத்திரத்திற் போட்டு இரண்டரைப்பலம் வெள்ளாட்டுநீரை விட்டு மூன்றுநாள் ஊறவைத்து நாலாநாள் அந்தநீரையே விட்டு மூன்று நாளரைத்துப் பில்லைசெய்துலர்த்திச் சில்லிட்டுச் சீலைசெய்துலர்த்திக் கவசத்தின் இருபதுபங்கு விராட்டியிற் புடமிட்டு எடுத்துக் கல்வத்திலிட்டு வெள்ளாட்



டுச் சிறுநீரை விட்டு மூன்றுநாளரைத்து முன்போல் பில்லைசெய்துலர்த்தி முன்போற் புடம்போடவும். குளிர ஆறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க-உ.

அனுபானம்:—தேன், அரிசித்திப்பிலிச் சூரணம்.

உபயோகம்:—சுரங்கள், சளி, இருமல், உளமாந்தை முதலியவைகள் தீரும்.

### 267. சிங்கி வெண்ணெய்.

நான்கு விராகனெடையுள்ள கட்டிகளாக நான்குபலம் மிருதார் சிங்கியைவாங்கி எருமைச் சாணியிற் பொதித்து ஒரு சட்டியில்வைத்து ஐந்து நாட்சென்று ஆறும் நாளெடுத்துச் சாணியைநீக்கி வேறு புதிய சாணியிற் பொதித்து முன்போல் சட்டியில் நாந்நாள் வைத்து ஆறுநாள் எடுத்துச் சாணியை நீக்கிவிடவும். இவ்விதம் மட்டுக்கிட்டுக்கி ஆறுதடவைகள் சாணியில் வைத்தெடுத்து ஒரு பிங்கானிற் போட்டு அவை அழுந்தி இடக்கும்படியாக பனியின் சோயத்தை விட்டு வெயிலில் வைத்துச் சுண்டின பிறகு கட்டிகளையெடுத்துப் பொடித்து வைத்துக்கொள்ளவும். இந்தத் தூள் விராகனெடை-௧, சிற்றாமணக் கெண்ணெய் பலம்-அ, இரண்டையுங் கலந்து வைத்துக்கொள்வதே சிங்கி வெண்ணெயாம்.

பிரமாணம்:—விராகனெடை-க௦-உ.

உபயோகம்:—ஊரல், கிரந்தி, புண், கண்டமாலை, சொறி, பேய்ச்சொறி முதலியவைகள் தீரும்.

### துருசுச் சுத்தி.

தேவையான அளவு ஈயத்தகை உருக்கி தே
வையான துருசுக் கட்டிகளை கட்டிகளாய்ந்து போ
ம்படியாகத் தோய்த்து எடுக்கவேண்டும். கொஞ்ச
ஆறவிட்டு மறுபடியும் முன்போல் தோய்த்தெடுக்க
வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பதினொரு
டவைகள் செய்யத் துருசானது சுத்தியாகி விடும்.

இவ்விதம் சுத்திசெய்யப்பட்ட துருசை, பற்பம்,
சுண்ணம், செந்தூரம் முதலிய முறைகளில் சேர்த்து
க்கொள்வதினால், எவ்வித தோஷமுமின்றி சிறந்த கு
ணத்தையும், விசேஷகுணத்தையும் கொடுக்குமென்ப
து நிச்சயம். ஆகையால் இதனை மருந்தாக உபயோ
கப்படுத்த விருப்பமுள்ளவர்கள் மேற்கண்டபடி சுத்
திசெய்துகொள்ள வேண்டியது அவசியகம்.

### துருசு சுத்தி (வேறு)

தேவையான அளவு துருசைக் கல்வத்திற்பொ
டித்து ஜலத்திற் கரைத்துவிட வேண்டும். கொஞ்சம்
தாமதித்து ஜலத்தையிறுத்து ஒருபாத்திரத்தில் தனி
யே வைக்கவேண்டும், பின் அடியிற் படிந்திருப்பதை
முன்போலரைத்து முன்போல் ஜலத்திற்கலக்கி அந்த
ஜலத்தையிறுத்து முன்னிறுத்து வைத்திருக்கின்ற ஜ
லத்திற்கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். இரண்
டாந்தடவை அடியிற் படிந்திருப்பதை முன்போல
ரைத்து முன்போற் சலத்திற்கலக்கி ஜலத்தையிறுத்து
முன்ஜலத்திற் சேர்த்துக்கொள்ளவும். இவ்விதமரைத்
தரைத்துக் கலக்கிக் கலக்கி வடித்தஜலத்தை ஒன்றாகச்
சேர்த்துவைக்க எல்லா மடியிற படிந்து ஜலம் தெளி
ந்துபோகும். இந்த தெளிந்த ஜலத்தைச் சிறுகச்சிறு



றுத்து அடியிற் படிந்திருக்கும் வண்டலை வெயிலி
லுலர்த்தி யெடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விதம்
செய்த துருசியானது சுத்தமாயிருக்கும்.

### 268. துருசுக்கட்டு.

துருசைப்பொடித்து எருக்கம்பாலைச் சிறுகச் சி
றுகவிட்டு இரண்டுசாம நேரமரைத்து உருண்டையா
க்கிரட்டி-க-பங்கெடை சுண்ணாம்பை அல்லதுநீற்
றத்தாளை இரண்டுபாகமாக்கி ஒருபாகத்தை ஓர் ஓட்டி
ல்வைத்து அதன்மீது இந்த உண்டையைவைத்து ம
றுபாகத்தை அதன்மீதுபோட்டு மேலோடுமூடி இர
ண்டு சீலைமண்செய்து கரிநெருப்பில் ஒருமணிநேரம்
வைத்தெடுத்தாறவைத்தெடுக்கத் துருசு கட்டாயிரு
க்கும். இது பெரும்பாண்மையும் வாதத்திற் குபயோ
கமாம்.

### ஐங்கால் பச்சை

மேற்கண்ட பாகப்படியே ஐங்கால் பச்சையைச்
சுத்தியுஞ்செய்துகொள்ளலாம். மேற்கண்ட பாகப்
படியே கட்டியுங்கொள்ளலாம்.

### 269. துருசுப் பற்பம்.

சுத்திசெய்த துருசு பலம்-க, இது ஒரே கட்டி
யாயிருக்கவேண்டும். கோபுரந் தாங்கி யிலைச்சாற்றி
ல் மேற்படி கட்டியானது முற்றும் நனையும்படியாகத்
தோய்த்து வெயிலில் வைத்து உலர உலர நனைத்து
நனைத்து ஒரு சாமநேரம் வெயிலில் வைத்து நன்றாயு
லர்த்தபின்பு மேற்படி இலையையரைத்து ஒரு வில்லை
ணம் மேற்படி கட்டிக்குக் கவசஞ் செய்துலர்த்தி கரி
நெருப்பில் வைத்து மேற்கவசம் கருப்பில்லாமல் வெ

தவாறே வெடித்து ஆறவைத்து எடுக்கத் துருசானது அலர்ந்து வெண்ணீறு யிருக்கும். இதனைச் சீசாவிற் பத்திரப் படுத்தவும்.

பிரமாணம்:— குன்றியளவெடை—௧.

அநுபானம்:— தக்குக் கஷாயம், ஆடாதோடை யிலைக்கஷாயம், ஆடாதோடை வேர்க்கஷாயம், கண்டங்கத்திரிக் கஷாயம், கடுக்காய்த்தோல் கஷாயம், அதிமதுரக் கஷாயம், அதிமதுரப்பால் பாலனம், (அதாவது) கொஞ்சம் அதிமதுரப்பாலை முலைப்பாலில் அல்லது பசுவின்பாலில் ஊறவைத்து அதைக் கன்றுப் [illegible] பின்பு அதிற் கரைத்துக் கொள்வதேயாம்.) முலைப்பால், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:— தொண்டைக்கட்டு, நெஞ்சிற் கம்மல், சுவாசகாசம், சுழிமாந்தம், கணமாந்தம், குத்திரிகைகயம் ஆகியவைகள் தீரும். கபக்கட்டானது நீராயுடைந்து வாயினால் வெளிப்பட்டுப் போகும்.

பத்தியம்:— இந்த மருந்தை ஆறுவேளை அல்லது ஒன்பது வேளைக்கு அதிகம் உபயோகிக்கலாகாது. இது ருக்கிரமாய் வாந்தி காண்பதுண்டு. ஆகையால் பித்தத்தைச் சாந்திப்படுத்தும் பதார்த்தங்களை உபயோகிக்க வேண்டியது. இதற்குக் கற்கண்டு, பாற்கஞ்சி முதலியவைகள் சிரேஷ்டமானவைகள். இன்னும் சமயோசிதம்போல அவரவர்கள் தேக சுபாவத்திற்குத் தகுந்தபோல பத்தியம் ஏற்படுத்திக் கொள்வது சிகிச்சகர்களின் கடமையாம்.



## 270. துருசு பற்பம் வேறு.

சுத்திசெய்த துருசு பலம்-௧, இது ஒரே கட்டியாயிருக்கவேண்டும். காட்டாமணக்குப்பால் செல்லத்தக்க அளவு, கொட்டை முதலியவைகளை நீக்கின பழம்புளி பலம்-௧, எலிச்செவியிலை பலம்-௧.

செய்முறை:— துருசை மண்தோண்டியில் வைத்து காட்டாமணக்குப் பாலைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் சுருக்குக்கொடுத்து எடுத்து பழம் புளியையும், எலிச்செவியிலையையும், கலந்தரைத்து வெண்ணெய் போலான பின்பு மேற்படி துருசுக் கட்டிக்குக் கவசஞ் செய்துலர்த்தி ஐந்து சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் நாற்பதுபங்கு விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுக்க பற்பமா யிருக்கும்.

### குறிப்பு.

இந்தப் புடத்தைப் பள்ளந்தோண்டி அதிற்போடவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் இக்குறைந்து முறைப்படி பற்பமாகாது.

பிரமாணம், அநுபானம், உபயோக முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

## 271. துருசு பற்பம் (வேறு)

சுத்திசெய்த துருசுக் கட்டிகள் தேவையான அளவு. இவற்றை ஒரு பீங்கானிற் போட்டுக் கொஞ்சம் தேனை அதில் வார்த்துக் கட்டிகளின் மீது முழுவதும் நனையும்படியாகப் பூசி வெயிலில் வைக்கவேண்டும். அந்தக் கட்டிகளை மறுநாளும் முன்போல்

ஒரு பீங்கானிலிட்டு முன்போல் தேனைவிட்டு முன்போல் புரட்டி முன்போலவே வெயிலில் வைக்கவேண்டும். இவ்விதம் நாற்பதுநாள் வைத்தால்; துருசுக்கட்டியானது சுத்த வெண்மையாக வெளுத்துப்போம். இதனையெடுத்து உப்பையும் புளியையுஞ் சமனாக இடித்து ஒரு விராகனம் கவசஞ் செய்து அதன்மேல் சீலைமண் செய்துலர்த்தி கவசத்தின் நாற்பதுபங்கு விராட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம், அனுபானம், உபயோக முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளே யாம்.

## 272. துருசு பற்பம் (வேறு.)

சுத்திசெய்த துருசு விராகனெடை-௧, வெடியுப்பு விராகனெடை-௨, குப்பமேனி யிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி இரண்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருசாம நேரமரைத்துப் பில்லைதட்டி யுலர்த்தி ஓட்டில்வைத்து மேலோடுமூடி ஐந்து சீலைமண் வலுவாகச் செய்துலர்த்திக் கவசத்தின் நான்குபங்கு விராட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின்பு எடுக்கப் பற்பமாகி யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧-௨.

அனுபானம்:—தேன், இஞ்சிச்சாறு, கண்டங்கத்திரிச்சாறு, சோம்புக் கஷாயம், சோம்புத் திராவகம், ஓமத் திராவகம் முதலியவைகளாம்.



உபயோகம்:—வயிற்றுவலி, மேகரோகங்கள், சுரரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

பத்தியம்:—புளிப்பு, காரப்பு ஆகியவைகளை நீக்கவேண்டியது.

## 273. துருசு பற்பம் (வேறு.)

சுத்திசெய்த துருசுக் கட்டியை கொடிதும்பை யிலைச்சாற்றில் ஊறஊற நனைத்து ஒரு சாமநேரஞ்சென்றபின்பு அதைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி கொடிதும்பை யிலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமநேர மரைத்துப் பில்லை செய்துலர்த்தி மேற்படி இலையை யரைத்து அந்தப் பில்லைக்கு ஒரு விராகனம் கவசஞ்செய்து ஒன்பது சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் மூன்று பங்கெரு விராட்டியிற் புடமிட்டு குளிர ஆறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துக் கருவூமத்தை யிலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமநேர மரைத்துப் பில்லைசெய்துலர்த்தி மேற்படி கருவூமத்தை யிலையையரைத்து ஒரு விராகனம் மேற்படி பில்லைக்குக் கவசஞ் செய்து முன்போல் அதன்மீது ஒன்பது சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் மூன்று பங்கெரு விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாகி யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧-௨.

அனுபானம்:—முன் பாகங்களிற் சொல்லப்பட்டிருப்பவைகளேயாம்.

உபயோகம்:—௧௩-வகை சன்னிகள், ௧௯-வகை ஜலதோஷங்கள், ௮-வகை குன்மரோகங்கள், ௧௮-வ

கை சோகைகள், பக்கவாய்வு, 8-வகை பாண்டுரோகங்கள், 8-வகை சுழை, காசங்கள் இரைப்பு, காமாலை, பெருவயிறு முதலியவை தீரும்.

பத்தியம்:—புளி, கரப்பான் பதார்த்தங்கள், வாய்வு பதார்த்தங்கள், ஆகியவைகள் ஆகா.

## 274. துருசுச் சுண்ணம்.

சுத்திசெய்த துருசு பலம்-க, இது ஒரே கட்டியாயிருக்க வேண்டும். ஆடாதொடை தாமரையிலைச்சாறு படி-க.

செய்முறை:—மேற்படி துருசை ஒரு சட்டியில் வைத்து மேற்படிச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டுச் சுருக்கிடவேண்டும். அந்தச் சாறெல்லாஞ் சென்றபின்பு; மேற்படி ஆடாதொடைத் தாமரையிலையை அரைத்து மேற்படி கட்டிக்கு ஒரு விராகனிடை கவசஞ் செய்து உலர்த்தி சுக்கான்கல்லைத் தூளாக்கி சட்டியிலிட்டு இரண்டு சாமமோ அரைத்து முன் கவசஞ் செய்து அம்படியாகக் குகையும் மூடியுஞ்செய்து அதற்குள் வைத்து ஐந்து சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஆறு பங்கெடை விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுக்கச் சுண்ணமாகியிருக்கும்.

பிரமாணம், அனுபானம், உபயோக முதலியவைகளெல்லாம் மேற்கண்ட பாகங்களிற் சொல்லப்பட்டிருப்பவைகளே யாம்.

### குறிப்பு:

இந்தச் சுண்ணத்தில் பசுமை தோன்றலாகாது. ஆனதால் இது வாதமுறைகளுக்கும் உபயோகமாம். அதன்



தந்திரங்களைத் தெரிந்தவர்கள் மூலமாய் அறிந்துகொள்ளவேண்டும்.

## 375. துருசுச்சுண்ணம் (வேறு.)

மூடு கிளிஞ்சிலின் சதையையெடுத்துக் கொஞ்சம் உலர்த்தி அரைவாசிஈர மிருக்கையில் அதற்குச் சரி வெடியுப்பைச் சேர்த்திடிக்க மெழுகுபோலாகும். அதனைச் சட்டியிலப்பி அப்பி மேற்றி வெரித்து புகைப்பட்டபின் எடுத்துத் தூள்செய்து பலம் வைத்து ஜெயநீர் இறுத்திக்கொள்க.

துருசு பலம்-க. இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன் ஜெயநீர்விட்டு இரண்டுசாமமோ அரைத்து வில்லைசெய்துலர்த்தி சட்டியிலிட்டு மேலே மூடி ஐந்து சீலைமண் செய்து இருபதுபலம் விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுக்கச் சாம்பல் நிற அல்லது வெண்மை நிறமாயிருக்கும். பின்பு இதனை முன்போலவே முன் ஜெயநீர்விட்டு முன்போலவே யரைத்து முன்போலவே சுருக்கிட்டுலர்த்தி முன்போலவே புடமிட்டாறினபின் எடுக்க வைத்த எடை குறையாமலிருக்கும். மூன்றாந்தடவையும் முன்போலவே யரைத்து முன்போலவே வில்லைசெய்துலர்த்தி முன்போலவே புடமிடவும். இரண்டாந்தடவை வைத்த எடை குறையாமல் பற்பமாயிருக்கும்.

இதைப்பற்பத்துக்குச் சமவெடை வீரத்தைச் சேர்த்துப் பொடித்து முன் ஜெயநீரைவிட்டு இரண்டுசாமமரைத்துப் பில்லைசெய்துலர்த்திச் சட்டியிலிட்டு மேலே மூடி ஐந்து சீலைமண்செய்து மணல் பூமியிற் சேர்ட்டி அதில் நாலங்குலத்திற்கு கீழ்ப்புற

மணல்மேல் கவசத்தின் ஆறுவங்கு விராட்டியைபடுத்திப் புடமிடவேண்டும். புடமெரிந்து ஆறினபின்பு கவசத்தைப் பிரித்தெடுத்துக் கல்வத்திலிட்டு முன் ஜெயநீரைவார்த்து முன்போல் இரண்டுசாமமரைத்து முன்போல் வில்லைசெய்துலர்த்தி முன்போல் மணல்மறைவிற் புடமிட வேண்டும். இவ்விதமே மூன்றுதடவையும் மணல்மறைவிற் புடமிட்டு எடுத்துக்கொள்ள வேண்டும்.

உபயோகம்:—சுத்திசெய்த தாம்பிரம்-௬-பங்கு இதனையுருக்கி உருக்குமுகத்தில் மேற்படி பற்பம் ஒருபங்கைக்கொடுத்து ஒன்றுபடுத்தி யெடுத்துக்கொள்ளவும். இந்தச் செம்பு-௪-பங்கு, வெள்ளி-௩-அல்லது-௪-பங்கு, தங்கம்-௧- பங்கு இவை யெல்லாவற்றையுஞ் சேர்த்துருக்க உள்ளதுபோலிருக்கும். அவரவர்களிஷ்டத்தைப் பரீட்சித்துக் கொள்ளலாம்.

376. துருசுச் செந்தூரம்.

சுத்திசெய்த துருசு பலம்-௧, அன்னபேதி பலம்-௧, வெடியுப்பு பலம்-௨, எலுமிச்சம்பழச்சாறு செலுத்தக்க அளவு.

செய்முறை:—இம்மூன்றையும் கல்வத்திலிட்டுப் பொடித்து பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாமமரைத்து வில்லைசெய்துலர்த்தி அகலில் வைத்து மேலகல்மூடி சீலைமண் செய்துலர்த்தி ௧௦-பலம் விராட்டியிற் புடமிடவேண்டும். ஆறினபின் மருந்தையெடுத்துக் கல்வத்திலிட்டு முன்போல் பழச்சாற்றைவிட்டு இரண்டுசாம நேரமரைத்து முன்போல் வில்லைசெய்துலர்த்தி முன்போல்கவசஞ்செய்



து முன்போற் புடமிடவும். இவ்விதமடக்கி யடக்கி இன்னும் மூன்றுபுடமிடவும். ஆகக்கூடிய ஐந்துபுடமும் தீர்ந்தால் திவ்வியமான செந்தூரமாயிருக்கும்.

பிரமாணம்—குன்றிமணியெடை-௧-௩.

அனுபானம்:—தயிர்ச்சக்கரை, தேன், அதிவிடயக்கஷாயம், லவங்கக்கஷாயம், மிளகுக்கஷாயம், தாளிசபத்திரிச் சூரணம், நெய், வெண்ணெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—மூலவாயு, அதிசாரம், பாண்டு, கிராணி, சுரம், க்ஷயம், இருமல், சுவாசகாசம் ஆகியவை தீரும்.

பத்தியம்:—வியாதிபலம், தேகபலம் முதலியவைகளுக்குத் தக்கபடி பத்தியமேற்படுத்தவும்.

377. துருசுச்செந்தூரம் (வேறு.)

சுத்தியான துருசுக்கட்டி தேவையான அளவு, இதனை ஒரு பீங்கான்பாத்திரத்திற்போட்டு அதில் பிரமத்தண்டிப்பாலை யிதக்கவிட்டு மூன்றுநாள் நிழலில்வைத்து [illegible] நாள் வெயிலில் வைத்துலர்த்தி மேற்படி இலையையரைத்து மேற்படி கட்டிக்கு ஒரு விரற்கனம் கவசஞ்செய்து பருமனான முற்றல் தேங்காயைத் தருவி இரண்டு பாகமாகச் செய்து ஒருபாகத்தை வட்டோட்டில்வைத்து சமமாய்ப் பரப்பி அதன்மீது முன் கவசக்கட்டியை வைத்து அதன்மீது மறுபாகத்தேங்காயைத் தருவலையும் போட்டுச் சமப்படுத்தி மேலோடு மூடி மூன்று சீலைமண்செய்து-௧௦-பலம் விராட்டியிற் புடமிடவேண்டும். மூன்றுநாளாறவிட்டு நாலாநாள் மருந்தையெடுத்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-௩.

அநுபானமும், உபயோகமும்:—பாவிலிங்கைத்தி லை பலம்-க, மேற்றோல் சீனாக்கு பலம்-உ, இரண்டையுங் கரைத்துப் பிழிந்த சாற்றில் ஒரு விராகனெடைத் தேனைச்சேர்த்து மேற்படி செந்தூரத்தைப் பிரமாணப்படி அநுபானித்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் மூன்றுநாள் உபயோகித்தால், கழிச்சல், மாந்தரோகங்கள் ஆகியவைகள் தீரும். கபக்கட்டு, கோழைக்கட்டு ஆகியவைகள் வாந்தியால் வெளிப்படும்.

ஆடாதோடைச்சாறு விராகனெடை-க, தேன் விராகனெடை-க, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட செந்தூரத்தைப் பிரமாணப்படி அநுபானித்து உபயோகித்துவரின், இருமல் ரோகம், சுவாசகாசம், க்ஷயம், மந்தாரகாசம் ஆகியவைகள் தீரும்.

தும்பைச்சாறு விராகனெடை-க, தேன் விராகனெடை-க, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட செந்தூரத்தைப் பிரமாணப்படி அநுபானித்துக் கொள்ள, சுரம், தோஷம், சுவாசகாசம், கபரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

இன்னும் தகுந்த அநுபானங்களில் அநேகவியாதிகட்கு உபயோகிக்கலாம். அநுபவசாலிகளுக்குத் தெரியுமாகையால், அவற்றை இங்கெழுதாது விட்டனம்.

### 378. துருசுச்செந்தூரம் (வேறு)

சுத்திசெய்த துருசுக்கட்டி பலம்-க. இது ஒரே கட்டியா யிருக்கவேண்டும். பேராமுட்டிவேர்ப் பட்டை பலம்-உ, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.



செய்முறை:—பேராமுட்டிவேரைக் கல்வத்திலிட்டு சம்மையாகத் தூள்செய்து எலுமிச்சம் பழச்சாறு சிறுகச்சிறுகவார்த்து இரண்டுசாம மரைத்து அடிகட்டிக்குக் கவசஞ்செய்து அதன்மீது ஏழ் சீலைமண்செய்து கவசத்தின் பத்துப்பங்கெடை வரட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்க மஞ்சள் மான செந்தூரமா யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க-உ.

அநுபானம்:—தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—இருமல்ரோகம், கபக்கட்டு, கோழைக்கட்டு, சுரம் முதலியவைகள் தீரும்.

### 379. துருசுச் செந்தூரம் (வேறு.)

சுத்திசெய்த துருசு தேவையான அளவு, காட்டாமணக்குப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி துருசைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி பாலைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டுசாம நேரமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டில்வைத்து மேலோடு மூடி மூன்று சீலைமண்செய்துலர்த்திக் கவசத்தின்-ரு0-பங்கெடை வரட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுக்கச் செந்தூரமா யிருக்கும்.

இதனை இந்தப் பிரகாரமே இன்னும் இரண்டொரு தடவை புடமிட்டுக் கொண்டால், விசேஷ குணத்தைத் தரும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க-உ.

அநுபானம், உபயோகமுதலியவைகளெ ம்முன் பாகத்திற் சொல்லப்பட்டிருப்பவைகளாம்,

### 380. துருசுச் செந்தூரம் (வேறு).

தேவையான அளவு பலகறையைக் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரமரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கஜபுடத்தின் ௧௨-பங்கெடை வராட்டியிற் புடமிட்டெடுத்தபின் வெளுக்கச் சுண்ணமாயிருக்கும். இதற்குப் பலகறைச் சுண்ணமென்று பெயர்.

இந்தப் பலகறைச் சுண்ணம் வராகனெடை-௨-க்கு சுத்திசெய்த துருசு வராகனெடை-௨. விதஞ் சேர்த்துப் பொடித்துக் கஞ்சாங்கோரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரமரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கஜபுடத்தின் பத்துப் பங்கெடை வராட்டியிற் புடமிட்டெடுத்தபின் வெளுக்கச் செந்தூரமாகியிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨, ௩.

அநுபானம்:—வெள்ளரிக்காயை வெதுப்பிப் பிழிந்தசாறு, நெருஞ்சி சமூலக் கஷாயம், நீர்முள்ளிக் கஷாயம், அதிமதுரச் சூரணம், திரிசப்பத்திரிச் சூரணம், மிளகுச் சூரண முதலியவைகளாம்.

உபயோகம்:—பாண்டு, நீர்க்கோவை, சுவாசகாசம், க்ஷயரோகம், இருமல்ரோகம், கபரோகங்கள் முதலிய அநேக ரோகங்கள் தீரும்,



பத்தியம்:—தேகம், ரோகம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி ஏற்படுத்த வேண்டியதுதான்.

### 381. துருசு மெழுகு.

சுத்திசெய்த துருசு வராகனெடை-௮, இதில்-௪ வராகனெடையைப் பொடித்து வெண்ணிறமாகிற வரையில் வறுத்து அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும். ஜாதிக்காய்த்தூள், சாதிபத்திரித்தூள், லவங்கத்தூள், ஏலரிசித்தூள், கடுக்காய்ப் பிஞ்சுத்தூள், கொட்டைப்பாக்குத்தூள், சுக்கட்டித்தூள், இவை வகை-௧-க்கு வராகனெடை-௮, எலுமிச்சம்பழம்-௧௨௫, இவற்றைத் தனிச்சாறாகப் பிழிந்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும்,

செய்முறை:—எல்லாவற்றையு மொன்றாய்ச் சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்தரைக்க வேண்டும். எல்லாச்சாறும் சென்றபின்பு மெழுகுபதத்தில் வழித்துப் பீங்கான் சிமிழில் வைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧௦-௧௨.

அநுபானம்:—இதனை ஒரு மாத்திரையாக உருட்டித் தயிர்ச் சக்கைக்குள் வைத்துப் புதைத்து வாயிற் போட்டு விழுங்கி விடவும்.

உபயோகம்:—மேகக்கிரந்தி, மேகச்சூட்டை, சூட்டைக்கிரந்தி, சொறிசிரங்கு, குஷ்டம், ஆனைக்கால் வீக்கம், ஆனைக்கால் வீக்கச்சுரம் முதலியவை தீரும்.

பத்தியம்:—கல்லெண்ணெய், வெல்லம், பால் இம்மூன்றும் அறவே யாகா; இச்சாபத்தியம்.

### 382. துருசு மெழுகு (வேறு)

சுத்திசெய்த துருசு பலம் - க, வேப்பிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து, நான்கு சாமம் கைவிடாமல் அரைக்கவும். மெழுகு பதத்தில் பீங்கான் பாத்திரத்தில் வழித்து வைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை, உ-ங.

அனுபானம்:—மாத்திரையை நெய்யில் தோய்த்து விழுங்கவேண்டும். இந்த மருந்தால் வாந்தி அதிகமானால், நெய்யைக் குடிப்பாட்டினால் வாந்தி நின்று போகும். வியாதி பலத்திற்குத் தகுந்தபடி க-கக நாட்கள் கொடுக்கவும்.

உபயோகம்:—எண்பதுவகை வாதரோகங்களும் தீரும். மற்றும் அநேக ரோகங்களுக்கும் உபயோகிக்கலாம்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

### 383. துருசு மாத்திரை.

துருசுக்கட்டி பலம்-க, முள்ளித்தண்டு சமூலத்தை அரைத்து விழுதை மேற்படி கட்டியின்மீது இரண்டங்குல கனம் கவசஞ்செய்து அதன்மீது மூன்று சீலைமண் செய்து கவசத்தின் இருபதுபங்கெடை விராட்டியிற் புடமிட்டாறினபின் எடுக்க வெளுத்திருக்கும். இதற்குத் துருசுச்சுண்ணமெனப்பெயர்.



பலகறையைக் கல்வத்திற்பொடித்துக் கற்சுண்ணாம்புத் தெளிநீரைவிட்டு ஒரு சாமநேரம் அரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடுமூடி உலர்த்திக் கவசத்தின் எட்டுப்பங்கெடை விராட்டியிற் புடமிட சுண்ணமாகும். இதற்குப் பலகறைச் சுண்ணமெனப் பெயர்.

மேற்படி துருசுச் சுண்ணம், மேற்படி பலகறைச் சுண்ணம், இரண்டையும் சமபாகமாகச் சேர்த்து நல்ல தண்ணீரைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமநேரம் அரைத்து ஒரு குன்றிமணியெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-உ-க.

அனுபானம்:—வெண்ணெய், நெய்.

உபயோகம்:—எல்லாவகைக் குஷ்டரோகங்கள், எண்வகை மேகரோகங்கள் முதலியன தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம். வியாதி கடினமாயிருந்தால் வியாதிக்குத் தகுந்தபடி புளி, புகை, உப்பு முதலியவைகளை நீக்கிப் பத்தியம் ஏற்படுத்தவும்.

### 384. அன்னபேதி செந்தூரம்.

அன்னபேதி தேவையான அளவு. சிறுநீர் இதற்காறு பங்கு.

செய்முறை:—சிறுநீரை கலயத்திலிட்டு அதில் அன்னபேதியைப்போட்டு கலயத்தின் வாய்க்கு சில்லிட்டுச் சீலைசெய்து கவசத்தின் நான்கு பங்கெடை விராட்டியிற் புடமிட்டாறினபின் எடுக்கச் செந்தூரமாயிருக்கும்.

நன்றாய்ச் சிவந்திராவிட்டால் எலுமிச்சம் பழச் சாற்றில் ஒரு சாமநேரம் அரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஒட்டிலிட்டு மேலோடுமூடி மூன்று சீலைமண்செய்துலர்த்திக் கவசத்தின் ஆறுபங்கெடை விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கச் செந்தூரமா யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨-௪.

அனுபானம்:—தேன், நெய், வெண்ணெய், வில்வாதி லேகியம், ஞ்ச தீபாக்கினி லேகியம், அஷ்ட தீபாக்கினிச் சூரணம் முதலியவைகளாம்.

உபயோகம்:—அக்கினிமாந்தம், உஷ்ணவாயு, மூலவாயு, கிராணி, வயிற்றுநோவு, வயிற்றிரைச்சல், வயிற்றுப் பொருமல், மாந்தரோகம் ஆகியவைகள் தீரும்.

385. அன்னபேதிச் செந்தூரம் (வேறு)

அன்னபேதி தேவையான அளவு, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—அன்னபேதியைக் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேர மரைத்துப் பில்லை செய்துலர்த்தி அகலிலிட்டு மேலகல்மூடி மூன்றுசீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் எழுபங்கெடை விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றை விட்டரைத்து முன்போற் புடமிடவும். இவ்விதமே மூன்று தடவையும் புடமிட்டெடுக்க மாதளம்பூ வர்ணமான செந்தூரமா யிருக்கும்.



பிரமாணம், அனுபானம் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

386. அன்னபேதிச் செந்தூரம் (வேறு.)

அன்னபேதி பலம்-௮. இதனை கால்படி கொள்ளும்படியான ஒருகலயத்திற்போட்டு அந்தக்கலயம் நிறைய எலுமிச்சம்பழச்சாற்றைவிட்டுக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு மூன்று சீலைமண்செய்து கவசத்தின் ஆறுபங்கெடை விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஒட்டிலிட்டு மேலோடுமூடி மூன்று சீலைமண்செய்து, கவசத்தின் எழுபங்கெடை விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கச் செந்தூரமாயிருக்கும்.

பிரமாணம், அனுபானம், உபயோக முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

387. பேதிசத்து செந்தூரம்.

அன்னபேதி பலம்-௫, சிலாசத்து பலம்-௩, இரண்டையுங் கல்வத்திற்பொடித்து எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி மேற்சொல்லி யிருக்கிறபடி புடம்போடவும். இவ்விதம் இன்னும் இரண்டுபுடம் போட்டெடுக்கத் திவ்வியமான செந்தூரமாயிருக்கும்.

பிரமாணம், அனுபானம், உபயோகம் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம். இன்னும்

உஷ்ணசம்பந்தமான ரோகங்கள், நீரெரிச்சல், நீர்க்கடுப்பு ஆகியவைகளுக்கும் உபயோகிக்கலாம்.

### 388 பேதிவீர செந்தூரம்.

அன்னபேதி பலம்-ரு; வீரம் பலம்-க, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட இரண்டு சரக்கையுங் கல்வத்திற்பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டிலேயிட்டு மேலோடுமூடி ஏழுசீலைமண்செய்துலர்த்திக் கவசத்தின் ஆறுபங்கெருவிராட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுத்துக் கல்வத்திற்பொடித்து முன்போலவே எலுமிச்சம் பழச்சாற்றை வார்த்து அரைத்துப் பில்லைசெய்து முன்போற் புடமிடவும். மூன்றுதடவையும் இவ்விதமே புடமிட்டெடுக்க திவ்வியமான செந்தூரமாயிருக்கும். வீரமானது தன் சத்தைக்கொடுத்துவிட்டு ஓடிப்போகும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க, உ.

அனுபானம்:—376 ல் சொல்லப்பட்டவையாம்.

உபயோகம்:—376 ல் சொல்லியிருக்கிற ரோகங்களும், வாயு சம்பந்தமான ரோகங்களும், சுரம், ஜன்னி ஆகியவைகளுந் தீரும்.

### 389 அன்னபவள செந்தூரம்.

அன்னபேதி பலம்-ரு, நற்பவளம் அல்லது பவளக்கொடி பலம்-ரு, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரண்டையும் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக



வார்த்து இரண்டுசாமநேரமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஏழு சீலைமண்செய்து கவசத்தின் ஆறுபங்கெருவிராட்டியிற் புடமிட்டாறினபின்னெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போலவே எலுமிச்சம் பழச்சாற்றைவார்த்து முன்போலரைத்து முன்போற் புடமிடவும். இவ்விதமே மூன்றுதடவையும் புடமிட்டெடுத்துக் கொள்ளத் திவ்வியமான செந்தூரமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க, உ.

அனுபானம்:—தேன், வெண்ணெய், நெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—க்ஷயம், சுவாசகாசம், இருமல், இரத்தகாசம், இரத்தச்சூடு, பித்தச்சூடு, மேகச்சூடு, அஸ்திச்சூடு முதலிய அனேக ரோகங்கள் தீரும்.

சுருக்கிச்சொல்லில் இது எல்லாவியாதிகளுக்கும் உபயோகப்படும். அந்தந்த வியாதிகளுக்குத் தகுந்த அனுபானங்களில் அந்தந்த வியாதிகள் தீரும். இது வைத்திய இரகசிய முறைகளில் ஒன்று.

### அண்டசுத்தி.

குஞ்சுபொரித்த கோழி முட்டையின் ஓடுகளை அப்பளக்காரத்தைக் கரைத்தஜலத்திலிட்டு ஊறவைத்து ஓடுகளில் ஒட்டிக்கொண்டிருக்குஞ்சவ்வுகளைப் போக்கி வேறு ஜலம்விட்டு நன்றாய்க்கழுவி அலம்பிச்சுத்தி செய்து வெய்யிலுலர்த்தி எடுத்துத் தூள்செய்து வஸ்திரகாயஞ்செய்து சீசாவில்பத்திரப்படுத்திக்கொள்ள வேண்டும். இதுவே அண்டசுத்தியாம். இவ்விதம்

சுத்திசெய்த அண்டத்தைப் பற்பமாக அல்லது சுண்ணமாகச் செய்துபயோகிப்பதனால் அதிக விசேஷ குணத்தைத் தரும்.

### 390. அண்டச்சுண்ணம்.

மேற்சொல்லியிருக்கிறபடி சுத்திசெய்யப்பட்ட அண்டத்தூள் தேவையான அளவு, நஞ்சறுப்பான் அல்லது விஷப்பாலையென்னும் பூண்டின் சமூலச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி அண்டத்தூளைக் கல்வத்திலிட்டு மேற்படி மூலிகைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டுச் சாமமரைக்க வேண்டும்.

இதனை அரைப்பதற்கு முன்பு மேற்படி சாற்றில் காலைத்தூளை ஊறவைத்து எடுத்துக் கொள்வது உத்தமம். இதனை எத்தனைசாமம் அதிகமாக அரைக்கின்றோமோ அத்தனையும் விசேஷமே. பின்பு பில்லைகட்டிக் காயவைத்து ஓட்டிலடைத்து மேலேமூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி ஐந்நூறு பெருவிராட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுக்கச் சுண்ணமாகியிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧-௨-௩.

அநுபானம்:—நெய், தேன், பஞ்சதீபாக்கினி லேகியம், சுக்குச் சூரணம், சோம்புச் சூரணம் முதலியவைகளாம்.

உபயோகம்:—வாய்வுரோகங்கள், அண்டவாயு, அண்டவீக்கம், அண்டவேதனை முதலியவைகள் தீரும்.



இதனைக் கொஞ்சமெடுத்து ஜலம்விட்டுக் குழைத்து மெல்லிய துணியில் தடவி இரவில் வியாதியால் பெருத்திருக்கும் அண்டத்தின் மீது வைத்துக்கட்டி வரவேண்டும். இவ்விதம் சில தடவைகள் செய்யின், எவ்வித அண்ட ரோகமும் காணாமையிற் கரைந்து சுபாவஸ்திதியில் ஆகிவிடும். மேலும் இறந்துபோன ஆண்தன்மை முன்போல உண்டாகிவிடும்.

### விண்ணப்பம்.

அண்டசுண்ண முறைகள் நமது இரசவாத சிந்தாமணி முதற்பாகத்திற் பல சொல்லப்பட்டிருக்கின்றன. அவசியமானவர்கள் அதனைப் பார்த்து அங்கு சொல்லியிருக்கிறபடி செய்து உபயோகித்துக் கொள்ளவும்.

### 391. அண்டபற்பம்.

மேற்கண்டபடி சுத்திசெய்த அண்டத்தோடு பலம்-௨, இதனை அகலிலடைத்து மேலகலாமூடிச் சீலைமண் செய்துலர்த்தி ௧௦௦-பலம் விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுக்கப் பற்பமாயிருக்கும். அல்லது மூசையில் இதனைப்போட்டு மூசைவாய்க்குச் சில்லிட்டு சீலைமண் செய்துலர்த்திக் கொல்லுலையில் வைத்து மூசை பழுக்க ஊதி யெடுத்து ஆறவிட்டெடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—இரண்டரிசியெடை முதல் நாலரிசியெடை வரையில்.

அநுபானம்:—வெண்ணெய், பாலாடை, தேன், வெற்றிலை முதலியவைகளாம்.

உபயோகம்—இந்திரிய சிராவகம், துரிதஸ்கலிதம், அண்டவாய்வு முதலியவைகள் தீரும்.

392. அண்டப்பற்பம் (வேறு)

மேற்கண்டபடி சுத்திசெய்த அண்டவோட்டுத்தூள் தேவையான அளவு. இதனை ஒருபீங்கான் கிண்ணத்திற்போட்டு அதில் எலுமிச்சம் பழச்சாற்றை விட வேண்டும். தூளானது நாலங்குல மாழ்ந்திருக்கவேண்டும். அந்தக்கிண்ணத்தை வெயிலில் வைத்து,விட்ட சாறானதுலர்ந்தபின்பு மறுபடியும் முன்போல் அந்தச் சாற்றைவிட்டு முன்போலுலர்த்த வேண்டும். இவ்விதம்-எ-தடவைகள் சாற்றை விட்டுவிட்டு உலர்த்தியுலர்த்தி யெடுத்து ஒரு அகலில்வைத்து மேலகல் மூடி பத்துச் சீலைமண்செய்துலர்த்தி-கஉ0-பலம் விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கப் பற்பமாயிருக்கும். அப்படி வெண்மையான பற்பமாகாவிட்டால் மறுபடியும் புடமிட்டெடுக்கச் சுத்தமானபற்பமாகிவிடும்.

பிரமாணம்:—அரிசியெடை-உ-முதல்-ச.

அநுபானம்:—வெண்ணெய், பாலேடு, நெய், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:—இந்திரிய சிராவகம், துரிதஸ்கலிதம் ஆகியவைகள் தீர்ந்து தாதுவிருத்தி யுண்டாகும். ஒழுக்கு மேகம், ஸ்திரீ யொழுக்குமேகம் ஆகியவைகளுந்தீரும். ஸ்திரீக்கு எப்போதும் மூடிக்கொண்டிருக்கிற மேகநீர்ச்சிராவகம், வெள்ளைநீர்ச் சிராவகம் முதலிய கருப்பமேக ரோகங்களைந் தீரும். மர்மஸ்தானம் கெட்டிப்படும்.



393. அண்டப்பற்பம் (வேறு)

மேற்கண்டபடி சுத்திசெய்த அண்ட வோட்டுத்தூள் பலம்-உ0. இதனைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றைக் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாம நேரமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஐந்து சீலைமண்செய்து-அ0-பலம் விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுத்துக் கல்வத்திலிட்டுப்பொடித்து முன்போல் எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு முன்போலரைத்து முன்போற் புடமிடவும். இவ்விதமடக்கி மடக்கி ஏழுதடவைகள் புடமிட்டால், திவ்வியமான பற்பமாகும்.

பிரமாணம், அநுபானம், உபயோகம் முதலியவைகளெல்லாம். மேற்கண்டவைகளேயாம்.

394. அண்டப்பற்பம் (வேறு)

மேற்கண்ட பாகப்படியே சோற்றுக் கற்றாழைச் சாற்றில் மடக்கி மடக்கி யரைத்து மடக்கி மடக்கி எழுபுடமிடப் பற்பமாகிவிடும்.

பிரமாணம், அநுபானம், உபயோக முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளே யாம்.

395. அண்டப்பற்பம் (வேறு)

393-ல் சொல்லியிருக்கிறபடி செய்த அண்டபற்பம் பலம்-க0, வீரம் வராகனெடை-கூ. இவ்விரண்டையுஞ்சேர்த்துக் கல்வத்திலிட்டரைத்துக் கற்றாழைச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாம நேரமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஐந்து சீலைமண்செய்து-உ00-பலம் விரா

ட்டியிற் புடமிட்டாறினபின் வெண்மைப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—இரண்டு அரிசியெடை முதல் நான்கரிசியெடைவரையில்.

அனுபானம்:—வெண்ணெய், நெய், பாலேடு, தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:—தாதுவிருத்தி, ஸ்தம்பனசக்தி ஆகியவைகளுண்டாகும். இந்திரிய ஸ்ராவகம், தரிதல்கலிதம், சொற்பனஸ்கலிதம் ஆகியவைகள் நீங்கும், குளிர்ச்சி சம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் சஞ்சீவிக்கொப்பானது.

## குறிப்பு

மேற்படி முறையில் மேற்கண்ட வகைகளில் எத்தவிதமாகவேனும் சித்தப்படுத்தின பற்பத்தைச்சேர்த்து மேற்கண்டபாகப்படி சித்தப்படுத்திக் கொள்ளலாம்.

## 396. அண்டப்பற்பம் (வேறு)

மேற்கண்டபடி சுத்திசெய்த அண்டவோட்டுத்தூள் பலம்-௧, நீர்முள்ளிச்சாறு செல்லத்தக்களவு.

செய்முறை:—மேற்படி தூளைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசாமமரைத்துப் பில்லைசெய் துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்தி-௬0-பலம் விராட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போல் முன் சாற்றையேவிட்டு நான்குசாமமரைத்து முன்போல் பில்லைசெய்



லர்த்தி ஓட்டில்வைத்து மேலோடுமூடி-௫0-பலம் விராட்டியிற் புடமிடவேண்டும். மூன்றுதடவையும் மேற்கண்டபடியே யரைத்துலர்த்திக் கவசித்து-௬0-பலம் விராட்டியிற் புடமிட வேண்டும். நான்காந்தடவையும் மேற்கண்டபடியே யரைத்துலர்த்திக் கவசித்து-௯0-பலம் விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கத் திவ்வியமான பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨-,௩.

அனுபானம்:—வெண்ணெய், பாலேடு, வெற்றிலை முதலியவைகளாம்.

உபயோகம்:—சுவாசகாசம், காஸ்பட்ட இருமல், இரத்தங்கக்கல், க்ஷயரோகம், இந்திரியஸ்ராவகம், அரிதல்கலிதம், சூதகக்கட்டு, பிள்ளைப்பேற்றுக்குக்கட்டு, ஸ்திரிகளுக்குண்டாகும் மேகநீர் ஒழுக்கு, வெண்மேக வொழுக்கு முதலியவைகள் நீங்கும். ஸ்திரீகளின் கருப்பையின் தளர்ச்சி, மாமஸ்தானத்தளர்ச்சி ஆகியவைகள் நீங்கி அவை கெட்டிப்படும். தாதுவிருத்தி, ஸ்தம்பனசக்தி ஆகியவைகளுமுண்டாகும்.

மேற்கண்ட ரோகங்களில் அந்தந்த வியாதிக்குத் தகுந்தபடி லேகியம், சூரணம், கஷாயம் முதலியவைகளோடுசெய்து மேற்படி பற்பத்தை அனுபானித்துபயோகிக்குமளவில், அதி சீக்கிரமாகவும் நிச்சயமாகவும் மேற்கண்ட ரோகங்களைக் கண்டித்து விசேஷகுணத்தைத்தரும். இதன் சிறந்த குணத்தை அநுபவசாலிகள் அதிசீக்கிரம் நிச்சயித்துக் கொள்ளுவார்கள்.

397. அண்டப்பற்பம் (வேறு.)

கோழிமுட்டை ஓட்டைக்காடியில் ஓரிராத்திரி முழுவதும் ஊறவைத்துக் காலையிலெடுத்துச் சவ்வுகளை நீக்கி ஒரு புதுக்கலயத்திற்போட்டு, கலயம் நிறையச் சோற்றுக்கற்றாழைச் சாற்றைவிட வேண்டும் (இந்தச் சாறானது அண்ட வோட்டிற்கு எட்டுப்பங்கிருக்கவேண்டியது.)

கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு ஐந்து சீலைமண்செய்து கவசத்தின் இருபது பங்கெருவிராட்டியிற் புடமிட்டாறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும். வெண்ணிறமாகாமல் கருநிறமாயிருந்தால் மறுபடியும் முன்போல் ஒருபுடமிட்டெடுக்க வெண்மையாய்விடும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-௮, ௧.

அனுபானம்:—ஆடாதோடை சர்பத்து, ஆடாதோடையிலைக்கஷாயம், வெண்ணெய், பாலேடு, தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:—க்ஷயரோகம், சுவாசரோகம், இருமல்ரோகம் முதலிய கபசம்பந்தமான ரோகங்களெல்லாந் தீரும்.

398. அண்டப்பற்பம் (வேறு.)

சுத்திசெய்த அண்ட ஓட்டுத்தூள், வெடியுப்பு, படிக்காரம், அன்னபேதி; இவை வகை-௧-க்குப் பலம்-௧, கையாந்தகரைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட நான்கு சரக்குகளையுங் கல்வத்திலிட்டுப்பொடித்துக் கையாந்தகரைச் சாற்



றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஐந்து சீலைமண் செய்து கவசத்தின் பத்துப் பங்கெருவிராட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாம நேரமரைத்து முன்போற் பில்லை செய்துலர்த்தி முன்போற் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று தடவை புடமிட்டால் செஞ்சாயலான பற்பமாய்விடும். அப்படி ஆகாவிட்டால் இன்னும் இரண்டொரு புடம் முன்போல் போட்டெடுத்துக் கொள்ள திவ்வியமான பற்பமாய்விடும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧-௨.

அனுபானம்:—தேன், வெண்ணெய், பாலாடை, ஆடாதோடைக் கஷாயம், ஆடாதோடை சர்பத்து, பிரண்டைச் சூரணம் முதலியவைகளாம்.

உபயோகம்:—எண்வகைக் காசங்கள், அறுவகைச் சூலைகள் முதலியவைகள் தீரும்.

399. அண்டமெழுக்கு.

கோழிமுட்டை-௧. இதனைக் கொஞ்சம் உடைத்து வெண்கருவை நீக்கிவிட்டு மஞ்சட்கருவில் சுட்டின நவச்சாரம் வராகனெடை-௧, சுட்டின வெண்காரம் வராகனெடை-௧. (இச்சுட்டுகளெல்லாம் முன்னே சொல்லப்பட்டிருக்கின்றன.)

இரண்டையும் பொடித்து மூன்றுநாள் கட்டுவெயிலில் வைக்க மெழுகாய் விடும். இதனை யெடுத்து

நன்றாய் விஸ்தரித்துப் பீங்கான்பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧-க்கு.

அநுபானம்:—சீனிசருக்கரை, நாட்டுச் சருக்கரை, பனைவெல்லம், சுக்கை யரைத்த விழுது, சோம்பை யரைத்த விழுது, பஞ்ச தீபாக்கினி லேகியம் முதலியவைகளாம்.

உபயோகம்:—அண்டவாயு, அந்திர வாயு, வீரைவாதம், குன்மரோகம் ஆகியவைகள் தீரும்.

இன்னும் இந்த மெழுக்கினால் நெருப்பிற்கோடும் சரக்குகளை நெருப்பிற் கோடாமற் கட்டிக் கொள்ளலாம். அதற்குதாரணமாக இங்கொரு முறையை யெழுதுவாம். அது இது

லிங்கக்கட்டுப் பற்பம்.

லிங்கம் விராகனெடை-௪, இது ஒரே கட்டியாயிருக்க வேண்டும்.

இதனை அப்பிரகத் தகட்டின்மீது வைத்து இரண்டு பலம் முலைப்பாலைச் சிறுகச் சிறுக விட்டுச் சுருக்கிட வேண்டும். இந்தப் பாலெல்லாஞ் சென்றபின்பு இரண்டு பலந் தேனைச் சிறுகச் சிறுக முன்போற் சுருக்கிட வேண்டும். இந்தத் தேனெல்லாஞ் சென்றபின்பு ௪-குன்றிமணியெடை மேற்படி மெழுக்கை யெடுத்து மேற்படி லிங்கத்திற்குக் கவசஞ் செய்து வில்வவேர்ப் பட்டையை யரைத்த விழுது பலம்-௧, இதனை முன் லிங்கத்திற்குக் கவசஞ்செய்து அதன்மேல் மூன்று சீலைமண் செய்து ஒரு குழிவெட்டி-௧-படி உமி



யை யதிற்போட்டு அதன்மீது முன் கவசத்தை வைத்து அதன்மீது ௩-மரக்கால் உமியைக்கொட்டி நெருப்பிட்டெரித்தாறினபின் எடுக்க லிங்கமானது வெளுத்த பற்பமா யிருக்கும். இது வாதம், வைத்தியமென்னுமிரு வகைக்குமாகும்.

இவ்விதமாகவே எல்லாச் சரக்குகளையும் கட்டிப் பற்பஞ் செய்துகொள்ளலாம். ஆனாலந்தந்தச் சரக்கிற்கு இன்னின்ன மூலிகைகளிற் புடமிடவேண்டும். இதன் விபரம் முன் சொல்லப்பட்டிருக்கின்றது.

400. அண்ட மெழுகு (வேறு)

ஒரு கோழிமுட்டைக்கு ௫-பலம் கண்டங்கத்திரி வேர்ப்பட்டையை யரைத்து முழுதுங் கவசஞ்செய்து காயவைத்து ஈரமில்லாமல் நன்கு புலர்ந்தபின்பு மேற்கவசத்தை யுரித்து முட்டையை மாத்திரம் எடுத்துக் கொள்ளவும். கொட்டைப் பாக்குத்தூள் பலம்-௧, வெற்றிலை பலம்-௧, புகையிலை விதைபலம்-௧, புகையிலை பலம்-௧, இவைகளெல்லாவற்றையும் அம்மியில் வைத்து உடனே [illegible] தெளிநீரை விட்டு அரைத்து வெண்ணெய்போலானபின்பு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற முட்டைக்குக் கவசஞ் செய்து அதன்மேல் ஏழு சீலைமண் செய்துலர்த்தி ஒரு சட்டியில் இரண்டுபிடி மணலைக் கொட்டி அதன்மீது கவசத்தை வைத்து அதன் மீதிரண்டுபிடி மணலைக்கொட்டி மேற்சட்டிமூடி ஏழு சீலைமண்செய்துலரவைத்து ௫00-பலம் விராட்டியிற் புடமிட்டாறினபின் எடுத்துப்பார்க்க பொன்னிறமான பற்பமாயிருக்கும்.

இந்தப் பற்பம் விராகனெடை-௧, சுத்திசெய்த இரசம் விராகனெடை-௫ இரண்டையும் இரும்புக்கரண்டியிற்போட்டுக் கரிநெருப்பில் வைத்து மெதுவாயூத இரண்டுஞ் சேர்ந்து விடும், மறுபடியுங் கரண்டியில் வைத்து முன் பற்பத்தைச் சேர்த்து ஊதியெடுக்கவும் மூன்றுந் தட்டையு மப்படியே ஊதியெடுக்கமெழுகாகி விடும்.

இந்த மெழுகானது வாதம், வைத்தியம், என்னும் இருமுறைகளுக்குமாம்.

மேற்கண்ட விதமாகவே ஜாதிலிங்கம், அரிதாரம், மனோசிலை, கெந்தகம், சீனக்காரம், வெடியுப்பு, வெள்ளைப் பாஷாணம், நவச்சாரம் ஆகிய ஒன்பது சரக்குகளையு மெழுகாகச் செய்து கொள்ளலாம். அந்தந்த மெழுக்குகளினால் அந்தந்தச் சரக்குகளுக்கு நீங்கு வியாதிகளுக்கு உபயோகிக்கலாம்.

முத்துச் சிப்பிச்சுத்தி.

முத்துச்சிப்பியைச் சிறுதுண்டுகளாகப் பொடித்து ஒரு பீங்கான் பாத்திரத்திற்போட்டு அது ஒரு அங்குலம் அமிழ்ந்திருக்கும்படி புளித்த பசுவின் தயிரைவிட்டு வெயிலில் வைக்கவேண்டும். அந்தத் தயிரெல்லாஞ் சுண்டின பின்பு மறுபடியும் முன்போல் மேற்படி தயிரையெல்லாம் விட்டு முன்போ லுலர்த்த வேண்டும். மூன்றுந் தட்டையும் முன்போல் தயிரைவிட்டு முன்போல் உலர்த்திக் கொள்ளவும். ஈரமில்லாமல் நன்று யுலர்ந்தபின்பு ஜலத்தைவிட்டுக் கழுவிச் செம்மையாக பலமுறை வெயிலிலுலர்த்தி யெடுத்துச் சீசாவிற் பத்திரப்படுத்திக் கொள்ளவும். இதுவே முத்துச்சிப்பியின் சுத்தியாம்.



## 401, முத்துச்சிப்பிப் பற்பம்.

மேற்கண்ட பாகப்படி செய்த முத்துச்சிப்பி பலம்-௧, வெள்ளைச்சாறு வேளைச் சமூலச்சாறு, வெள்ளெருக்குச் சமூலச்சாறு, அத்தி யிலைச்சாறு, மாதுளையிலைச்சாறு இவை வகை-௧-க்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி முத்துச் சிப்பியைக் கல்வத்திலிட்டுப் பொடித்து வெள்ளைச்சாறு வேளைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரம் மரைத்துப் வில்லை செய்துலர்த்தி ஓட்டில்வைத்து மேலோடுமூடி ஐந்து சீலைமண் செய்து ௨௧-பலம் விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து வெள்ளெருக்குச் சமூலச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமரைத்து முன்போல் வில்லை செய்துலர்த்திப் பிறகு கவசஞ் செய்து ௨௧-பலம் விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுத்து அத்தியிலைச் சாற்றினால் முன்போல் நான்கு சாமமரைத்து முன்போலுலர்த்தி முன்போற் கவசஞ் செய்து ௨௨-பலம் விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுத்து மாதுளையிலைச் சாற்றில் முன்போலரைத்து முன்போற் கவசஞ் செய்துலர்த்தி ௨௦-பலம் விராட்டியிற் புடமிட்டாறினபின் எடுக்கத் திவ்வியமான பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧-௨.

அனுபானம்:—பசுவின் தயிர், பசுவின்நெய், தேன், இரசதாளிப்பழம், கைம்மாறு வெற்றிலைச்சாறு, வெண்ணெய், பன்னீர், முதலியனவைகளாம்.

உபயோகம்:—க்ஷயம், இருமல், நீரிழிவு, மேகச்சுர பாண்டு, பிரமியம், நீரெரிவு, நீர்ப்பீனசம், காசரோகம், சொறிசிரங்கு, பித்த குன்மம் முதலிய அநேக ரோகங்கள் தீரும்.

## 402, முத்துச்சிப்பிப் பற்பம் (வேறு).

முத்துச் சிப்பிகளைத் தூள்செய்து ஒருமண் பாத்திரத்திற் போட்டு ஒரு அங்குலம் மூழ்கியிருக்கும்படி துருஞ்சி நாரத்தம்பழச்சாற்றை, அல்லது, எலுமிச்சம்பழச்சாற்றை அதில்விட்டு அப்பேற்றிச் சிறுதீயா லெரித்துச் சாறெல்லாஞ் சுண்டின பின்பு எடுத்தாறவைத்து ஜலத்தைவிட்டுச் சுத்தமாகக் கழுவி வெயிலில் வைத்துப் பிசுபிசுப்பில்லாமல் உலர்த்திக் கொள்ளவேண்டும். இதுவே ஒருவகை முத்துச்சிப்பிச் சுத்தியாம்.

மேற்கண்ட பாகப்படி சுத்திசெய்த முத்துச்சிப்பி பலம்-க, துருஞ்சி நாரத்தம்பழச்சாறு, அல்லது, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை.—மேற்படி சிப்பியைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரம் அரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடுமூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி கஜ-பலம் விராட்டியிற் புடமிட்டாறினபின் எடுக்கப் பற்பமா யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-க முதல்-ரு.

அநுபானமும் உபயோகமும்:—இஞ்சிச்சாறு விராகனெடை-கஉ, தேன் விராகனெடை-கஉ. இ



ரண்டையுமிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி அநுபானித்துண்ண, சுவாசகாச ரோகம் இருமல்ரோகம் ஆகியவைகள் தீரும்.

முருங்கைப் பட்டைச்சாறு விராகனெடை-ஐ, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி அநுபானித்துண்ண, வயிற்றுப்பிசு ரோகம், கட்டிரோகம், மூத்திரக் குண்டிக்காயின் வியாதி ஆகியவைகள் தீரும்.

துளசிச்சாறு, விராகனெடை-கஉ, தேன் விராகனெடை-கஉ, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பிரமாணப்படி அநுபானித்துண்ண முறைசுரம், காட்பட்டசுர முதலியவைகள் தீரும்.

சிறுநெருஞ்சிச்சாறு, வெள்ளரிக்காய்ச்சாறு, சுரும்புச்சாறு, தேன் இவை வகைக்கு விராகனெடை-உ இவை யெல்லாவற்றையு மிஸ்ரமித்து மேற்கண்டபிரமாணப்படி அநுபானித்துண்ணக் கல்லடைப்பு, கண்டமாலை ரோகம் ஆகியவைகள் தீரும்.

சுத்திசெய்த மாசிக்காய்த் தூள் குன்றிமணியெடை-அ, மாமஞ்சட் சூரணம் குன்றிமணியெடை-அ, தேன் விராகனெடை-உ. இவையெல்லாவற்றையுமிஸ்ரமித்து மேற்கண்ட பிரமாணப்படி அநுபானித்துண்ண, பிரமேக ரோகங்கள், வாயு சம்பந்தமான ரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

நெல்லிவற்றல் சூரணம் குன்றிமணி யெடை-ச, தேன் விராகனெடை-கஉ. இவ்விரண்டையு மிஸ்ரமி

த்து மேற்படி பிரமாணப்படி அனுபானித்தன்னை வன்னியாதிகட்குபயோகமாகும்.

சிறுதேக்குச் சூரணம் குன்றிமணி யெடை-உ, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையுங் கலந்து மேற்கண்ட பிரமாணப்படி அனுபானித்தன்னச் சுவாசகாச ரோகம், பெருமூச்சு ரோகம் ஆகியவைகள் தீரும்.

## 403. முத்துச்சிப்பிச் சுண்ணம்.

மேற்கண்ட இருவகைகளில் ஒருவகையாகச் சுத்திசெய்த முத்துச்சிப்பி பலம்-க, இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சதுரக்கள்ளிப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேர மரைத்துப் பில்லை செய்துலர்த்தி மேற்படி சதுரக்கள்ளித் தண்டை ஒரு முழமெடுத்து அதில் அந்தப் பில்லை கொள்ளும் படியாகத் துவாரமிட்டு அந்தக் கள்ளிச் சக்கையினாலேயே மூடி மடித்து எழு சீலமண் செய்துலர்த்திக் கெசத்தில் இருபது பங்கெடை விராட்டியிற் புடமிட் டாறியபின் னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க.

அனுபானம்:—தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—சுவாசகாசம், இருமல், இளைப்பு, க்ஷயம், குடல் சம்பந்தமான ரோகங்கள், நீர் சம்பந்தமான ரோகங்கள் ஆகியவைகள் தீரும்.



### ஆமையோட்டுச் சுத்தி.

சாம்பலையும் உப்பையுஞ் சமமாகச் சேர்த்து ஜலத்திற் கரைத்து அதில் ஆமையோட்டைப் போட்டு இரண்டு மூன்று கொதிவருகிற வரையில் நன்றாகக் காய்ச்சி இறக்கி நன்றாகத் தேய்த்து வெந்நீரில் அலம்பி யெடுத்து சூரிய வெயிலில் உலர்த்திக் கொள்ளவும். இதனால் ஆமையோடானது சுத்தியாகி விடும்.

### ஆமையோட்டுச் சுத்தி (வேறு)

முள்ளிலையெரித்த சாம்பல் ஒருபங்கு, உப்பு ஒருபங்கு. இவ்விரண்டையும் வெந்நீர் வார்த்துக் கரைத்து ஆமையோட்டின்மீது பூசி வெயிலில் வைத்து உலர்ந்த பின்பு வெந்நீரில் கழுவி யெடுத்துக்கொள்ளவும். மறுபடியு முன்போல் இரண்டு சரக்குகளையு மரைத்துப் பூசி யுலர்த்தி முன்போற் கழுவி யெடுத்துக் கொள்ளவும். இவ்விதமாக இரண்டு மூன்று தடவைகள் செய்து கொண்டால் ஆமையோடானது சுத்தமாகி விடும்.

## 404. ஆமையோட்டுப் பற்பம்.

மேற்கண்டபடி சுத்திசெய்த ஆமையோடு பலம்-உ, ஆடாதோடை இலையரைத்த விழுது பலம்-உ0.

செய்முறை:—மேற்கண்ட விழுதில் மேற்கண்ட ஓட்டை நடுவில் வைத்து அதன்மீது இரண்டுமங்கி லை செய்து எட்டெருவை விராட்டியிற் புடமிட்டு ஆறின பின்னெடுக்கப் பற்பமாகி யிருக்கும். இதனை யெடுத்துப் பொடித்துச் சீசாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-ச.

அனுபானம்:—தேன், நெய், வெண்ணெய், சுக்குச் சூரணம், சோம்புக் கஷாயம், ஆலம்விழுதை அரைத்த விழுது, தயிர்ச் சக்கை, இலவங்கத்தை வறுத்திடித்த சூரணம் முதலியவைகளாம்.

உபயோகம்:—வாயு சம்பந்தமான வியாதிகள், இரத்தபித்தரோகங்கள், இரத்த க்ஷயம், காசரோகம், இரத்தமூலம், இரத்தபேதி, அதிசாரம் ஆகியவைகள் தீரும்.

பத்தியம்:—வியாதிபலம், தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி பத்திய மேற்படுத்தவும்.

### 405, ஆமையோட்டுப் பற்பம் (வேறு)

மேற்கண்டபடி சுத்திசெய்த ஆமையோடு பலம்-உ, வயிற்றிலுள்ள மண் முதலியவைகளைச் சுத்தி செய்த பூநாகம் என்னும் நாக்குப்பூச்சி பலம்-உ.

செய்முறை:—நாக்குப்பூச்சியை அம்மியில் வைத்து மைபோலரைத்து இரண்டடையாகச் செய்து ஒரு அடையை ஒரு ஓட்டில் வைத்து அதன்மீது ஆமையோடுகளை வைத்து அதன்மீது மறு அடையை வைத்து நன்றாக அழுத்தி மேலோர் மூடி மூடி சீலைமண் செய்து எட்டுவீசை விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுத்துப் பொடித்துச் சீசாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-ச.

அனுபானம்:—பெரியவர்களுக்கு முன் சொல்லியிருக்கின்றவைகளேயாம். சிறுவர்களுக்கு முலைப்பால், தேன், பொடுதலை யிலையைப் பிட்டவித்துப்



பிழிந்த ரசம், ஓமத் திராவகம், சன்னராஷ்டத்திலுமிலைப்பாலை விட்டரைத்துப் பிழிந்தபால் முதலியவைகளாம்.

உபயோகம்:—பெரியவர்களுக்கு மேற்கண்ட ரோகங்களிலெல்லா முபயோகிக்கலாம். சிறுவர்களுக்கு மாந்தரோகம், அஜீரணரோகம், பால் செரிக்காமல் அடிக்கடி யுண்டாகும் வாந்தி, மாந்தக்கா[illegible]னுஞ்சுரம் முதலிய அநேக ரோகங்கள் தீரும்.

### பூநாக சுத்தி.

செம்மண் பூநாகமானால் உத்தமம். அது அகப்படாத விடங்களில் அங்கங்கு கிடைப்பவைகளை உபயோகித்துக் கொள்ளவும். பூநாகம் தேவையான அளவு. இதனைப் பசுவின்மோரில் போடவேண்டும். அந்த மோரானது பூச்சிகளின் மீது நான்கங்குல அளவு இருக்கவேண்டியது. இவ்விதம் ஆறுமணிநேரம் ஊறவைக்க பூச்சிகளின் வயிற்றிலுள்ள மண்ணெல்லாம் வெளிப்பட்டுவிடும். பிறகு ஜலத்தை விட்டுச் செம்மையாகக் கழுவி வெயிலிலுலர்த்திக் கொள்ள வேண்டும். வெயிலி லுலர்த்தும்போது காக்கை, கோழி முதலியவைகள் தின்றுவிடாமல் அதிக ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். இவ்விதம் செய்தெடுத்தால் பூநாகமென்னும் நாக்குப்பூச்சி சுத்தியாகிவிடும்.

மேற்கண்ட விதமாகவே பசுவின் பாலிலும் சுத்திசெய்து கொள்ளலாம்.

### குறிப்பு.

இதனைச் சுத்திசெய்வதும், இதனை யுலர்த்தியெடுப்பதும் சற்று கடினமான வேலையாயினும் இதின்

தாம்பிர சத்திருப்பதால் தாம்பிரத்திற் குண்டான குணங்களை இது கொடுக்கும். மேலும் தாம்பிரத்திற்குண்டான துர்க்குணங்கள் இதிலில்லை. எவ்விதமான குமார தேகிகளுக்கும் இதனை யுபயோகிக்கலாம். தாம்பிரமானது சரியான முறைப்படி பற்பஞ் செய்யப்படா திருந்தால் அதனால் வாந்தி, அன்னத்துவேசம், புண்கள் முதலியன வுண்டாகும். இந்தப்பற்பத்தினாலோ அவ்வித துர்க்குணங்களுண்டாகாமல் தேகத்திற்கு அனுகூலத்தையே செய்யும். அனேகர் தாம்பிர பற்பத்தைப் பற்றி அதிக அபேக்ஷையா யிருப்பார்கள். அவ்வித பற்பங்களைத் தக்கவிதமாகப் பரிக்ஷித்தறியாமல் ஒரு சிறிதளவு முபயோகிக்கலாகாது. இந்தப் பற்பத்திற்கோ அவ்வித பரிக்ஷைகள் அவசியமேயில்லை. தாம்பிர பற்பத்தையுபயோகிக்கும்போது பத்தியத்தைக் கண்டிப்பாகக் கவனித்துவர வேண்டும். இந்தப் பற்பத்தை யுபயோகிக்கும்போதோ எவ்வித கண்டிப்பான பத்தியமுமில்லை. ஆனால் சிலர் அவரவர்கள் யதேச்சைப்படி இதனை உபயோகப்படுத்தப்படா தாகையால் அவ்வகையார்கள் முறைப்படி செய்யப்பட்ட தாம்பிர பற்பத்தை அதிக ஜாக்கிரதையுடன் உபயோகிக்க வேண்டும். அவ்வித ஆக்ஷேபனை யில்லாதவர்கள் இதனை யுபயோகித்தால் அதிகப் பிரயோஜன முண்டு.

## 406. பூநாக பற்பம்.

மேற்கண்டபடி சுத்திசெய்த பூநாகம் பலம்-உ, இதனைத் தூள்செய்து புளிப்புள்ள மாதுளம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரம் அரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோ



டு மூடி மூன்று சீலமண் செய்துலர்த்திக் கவசத்தின் இருபது பங்கெட்டை விராட்டியிற் புடமிட்டு ஆறின பின் எடுக்கச் செஞ்சாயலான பற்பமாகி யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-௪.

அனுபானம்:—வெண்ணெய், நெய், தேன், வாதுமை ஹல்வா, கோதுமைப்பால் ஹல்வா, பாலேடு, பால் கவ்வா முதலியவைகளாம்.

உபயோகம்:—இந்திரிய ஸ்ராவகம், ஸரிதஸ்கலிதம் ஆகியவைகள் நீங்கும், தாதுபுஷ்டி, வீரிய விருத்தி, தேகபலம், தேகதிடம் முதலியவைக ளுண்டாகும். இன்னும் தேகத்திலுள்ள வியாதிகளை நீக்கி தேக ஆரோக்கியத்தை யுண்டாக்கும். இது நாளடைவிற் குணத்தைத் தருவதால் இதனைத் தொடர்ந்தேற்றியாக இடைவிடாது உபயோகித்து வரவேண்டும். அவசரப்படுகிறவர்களுக்கு இது அவ்வளவு ஏற்றதல்ல. நிதானமாகவும், பொறுமையாகவும் இதனை யுபயோகித்து வந்தால் காளாவர்த்தியில் இதனாலுண்டாகும் அரிய குணங்களை அனுபவத்தில் தெரிந்து கொள்வார்கள்.

## 407. பூநாகப் பிரயோகம்.

மேற்கண்டபடி சுத்திசெய்துலர்த்தி இடித்துச் சுத்திசெய்த பூநாகச் சூரணம் ஜீரண சக்திக்குத் தகுந்தபடி விராகனெடை-க, முதல்-க0, கோதுமைமா, அல்லது கருங்குறுவையரிசிமா, அல்லது அரிசிமா, அல்லது அல்லிவிதைமா ஆகியவைகளுள் ஒன்று ஜீரண சக்திக்குத் தகுந்தபடி ஆழாக்கு-வ-முதல்-க, ஆ

மூக்கு வரையில், பசுவின்நெய் செல்லத்தக்க அளவு, சீனிசர்க்கரை செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி பூநாகச் சூரணத்தையும், மாவையும் ஒன்றாகச் சேர்த்துக் கொஞ்சம் ஜலம் தெளித்துப் பிசைந்து அடைபோல் தட்டி நெய்யைக் காய்ச்சி அதில்விட்டுப் பொரித் தெடுத்துத் தனக்கிஷ்டமான வரையிற் சர்க்கரையைச் சேர்த்துச் சாப்பிடவேண்டும். இவ்விதம் காலைமாலை யிரண்டு வேளையும் உபயோகித்து வந்தால் இந்திரிய கிராவகம், துரிதஸ்கலிதம் ஆகியவைகள் நீங்கி தாதுபுஷ்டி, அட்டாங்கவீரியம் முதலியவைகளுண்டாகும்.

பத்தியம்:——தாதுநஷ்டப் பட்டவர்கள் அதற்காக இதனை யுபயோகித்து வரும்போது ஸ்திரீ சங்கமத்தை நீக்கிவைக்க வேண்டியது.

408. பூநாக மேற்பூச்சுத் தைலம்.

மேற்கண்ட பாகப்படி சுத்திசெய்த பூநாகம் பலம்-௪, சதாபிலைச்சாறு பலம்-௨௰, கோஷ்டச் சூரணம் பலம்-௩, நல்லெண்ணெய் பலம்-௧௰.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து அடுப்பேற்றிச் சிறுதீயா யெரித்து நீ ரெல்லாஞ் சுண்டிப் பூச்சிகள் மொறுமொறென்ற பதத்தில் எடுத்து வடிகட்டிச் சீசாவில் வைத்துக் கொள்ளவும்.

உபயோகம்:——இதில் நான்கு குன்றிமணியெடை யெண்ணெயை யெடுத்து அவசியமான இடத்தில் மேற்பூசி அதன்மீது வெற்றிலையை அல்லது எருக்கி



லையை வைத்துக் கட்டிக் காலையில் வெந்நீரால் கழுவிச் சுத்திசெய்ய வேண்டும். இவ்விதம் பிரதி யிராவிலும் வியாதிக்குத் தகுந்தபடி ஏழுநாள், பதினொருநாள், பதினைந்துநாள் செய்தால், நரம்புகளின் தளர்ச்சி, நரம்புகளின் சோர்வு ஆகியவைகள் நீங்கி, தேகசக்தி, போகசக்தி ஆகியவைகளுண்டாகும்.

குறிப்பு.

இதனையும், இதைப்போன்ற மேற்பூச்சு ஔஷதங்களையும் உபயோகிக்கும்போது தலைமூளை, இரைப்பை, ஈரல், இருதயம் முதலிய இராஜ கருவிகளைப் பலப்படுத்தும் ஹல்வாக்கள், திராவகங்கள் ஆகியவைகளை உபயோகித்தும் வரவேண்டும். இம்முறைகளெல்லாம் நமது பூர்வ வைத்திய தாதுவிர்த்தியோதினி முதல், இரண்டாம் பாகங்களில் அநேகம் சொல்லப்பட்டிருக்கின்றன. அவசியமானவர்கள் அக்கிரந்தங்களைப் பார்வையிட்டுத் தமக்கிஷ்டமானவைகளைச் செய்து உபயோகித்துச் சுகம்பெறலாம்.

409. பூநாகத் தைலம்.

மேற்கண்டபடி சுத்திசெய்த பூநாகம் பலம்-௧, பூண்டுத்தைலம் பலம்-௧, சதாபிலைச்சாறுபலம்-௨, பசுவின் வெண்ணெய் பலம்-௫, இலவங்கச் சூரணம் பலம்-௨.

செய்முறை:—இவை யெல்லாவற்றையுஞ் சேர்த்து ஒரு பாத்திரத்திற்போட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாயெரித்து நெய்யானபதத்தில் இறக்கி வடிகட்டிச் சீசாவில் வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—குன்றி-டு-கூ. இதனை ஒரு வெற்றிலையில்விட்டு ஒரு லவங்கத்தை வைத்துச் சேர்த்து மென்று தின்றுவிட வேண்டும். இவ்விதம் காலைமாலை யிரண்டுவேளையும் சாப்பிட்டுவர, நரம்பு தளர்ச்சிகள் நீங்கித் தேகபலம், தேகபுஷ்டி ஆகியவைகளுண்டாகும், இதை யுபயோகிக்கும்போது ஜீரணசக்திக்குத் தகுந்தபடி நல்ல ஆகாரங்களை உபயோகித்து வரவும் வேண்டும். மாமிச பக்ஷணிகள் ஆட்டிறைச்சி, பட்சிகளின் இறைச்சி முதலியவைகளை உபயோகித்து வரவும், மாமிச பட்சணிகளில்லாதவர்கள் பால், மிட்டாய்த்தினுசுகள் ஆகியவைகளை ஜீரணசக்திக்குத் தகுந்தபடி உபயோகித்து வரவும்.

## 410. பூநாகத் திலா.

மேற்கண்ட பாகப்படி சுத்திசெய்த பூநாகம் பலம்-க, இலவங்கம் பலம்-வ, சம்பங்கி யெண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி யிரண்டு சரக்குகளையும் மேற்படி எண்ணெயிற் பொன் வறுப்பாக வறுத்துக் கல்வத்திலிட்டிடித்து மேற்படி யெண்ணெயை விட்டரைத்து மெழுகுபதமாகப் பிங்கான் டப்பியில் வைத்துக்கொள்ளவும்.

உபயோகம்:—இதில் நான்கு குன்றிமணி யெடை யெடுத்து ஆவசியமானவிடத்திற்பூசி அதன்மீது வெற்றிலையை அனலில் வாட்டி வைத்துக் கட்டிக் காலையிலவிழ்த்து வெந்நீர்விட்டுக் கழுவிவிட வேண்டும். இவ்விதம் செய்துவந்தால், தளர்ந்த நரம்புகள் பலப்பட்டு சக்தியுண்டாகும். நரம்புகளிலுள்ள விஷநீர்கள் வெளிப்பட்டு அவை பலப்படும்.



## 411. பூநாகத்திலா (வேறு).

மேற்கண்டபடி சுத்திசெய்த பூநாகம் பலம்-க, உலர்த்தின அட்டை பலம்-க. இவ்விரண்டையும் சம்பங்கியெண்ணெயை விட்டு பொன் வர்ணமாக வறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும். குங்குமப்பூ பலம்-வ, இலவங்கப்பட்டைச் சூரணம் பலம்-வ, சம்பங்கியெண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட எல்லாவற்றையுங் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி யெண்ணெயைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாம நேரமரைத்து மெழுகுபதத்தில் பிங்கான் சிமிழில்வைத்துக் கொள்ளவேண்டும்.

உபயோகம்:—இதில் நான்கு குன்றிமணியெடையையெடுத்து அவசியமான பாகத்திற்பூசி அதன்மீது வெற்றிலையை வதக்கிக்கட்ட வேண்டும். காலையில் கட்டவிழ்த்து வெந்நீரைவார்த்துக் கழுவவேண்டும். இவ்விதம் ஒருவாரம் பத்துநாள் செய்யவேண்டும். தளர்ந்து சுருங்கிச்சோர்ந்த நரம்புகள் பலப்பட்டு நீண்டு பருமனாகும், புருஷசக்தி யுண்டாகும்.

## 412. பூநாகத்திலா (வேறு)

மேற்கண்டபடி சுத்திசெய்த பூநாகம் பலம்-க, உலர்த்தின அட்டை பலம்-க. இவ்விரண்டையும் ஜெய்த்தூன் எண்ணெயில் (Olive oil) பொன்னிறமாக வறுத்துக்கொள்ளவும். அக்கிரகாரம், இலவங்கம், ஜாதிக்காய் இவற்றின் சூரணம் வகை-க-க்குப் பலம்-வ, ஜெய்த்தூன் எண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட எல்லாவற்றையும் கல்வத்திலிட்டு ஜெய்த்தூன் எண்ணெயைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்து மெழுகுபதத்தில் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும்.

உபயோகம் முதலியவைகள் மேற்கண்டவைகளேயாம்.

### 413. பூராகத்திலா (வேறு)

மேற்கண்டபடி சுத்திசெய்த பூராகம் பலம்-அ, உலர்த்தின தம்பலப்பூச்சி பலம்-க, இவ்விரண்டையும் சம்பங்கியெண்ணெயில் பொன்னிறமாக வறுத்தெடுத்துக்கொள்ள வேண்டும். குங்குமப்பூ, அக்ராகாரம், இலவங்கம், ஜாதிக்காய், இலவங்கப் பட்டை இவற்றின் சூரணம் வகை-க-க்குப் பலம்-வ, சம்பங்கியெண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—எல்லாவற்றையுங் கல்வத்திலிட்டு மேற்படி யெண்ணெயைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாமநேரமரைத்து மெழுகுபதத்தில் பீங்கான் சிமிழில் வைத்துக்கொள்ளவும்.

உபயோகம்:—இதில் நான்கு குன்றிமணி யெடை யெடுத்து அவசியமான விடத்திற்பூசி வெற்றிலையை வதக்கி மேலேவைத்துக் கட்டவேண்டும். இவ்விதம் ஒருவாரம் அல்லது, இரண்டுவாரம் செய்துவந்தால் நரம்புகளிலுள்ள விஷநீர், கபநீர் ஆகியவைகள் வெளிப்பட்டு, நரம்புகள் பலமாகி, நரம்புகளின் சுருக்கம், சோர்வு, இறந்திருத்தல் முதலிய இழிகுணங்கள் நீங்கி அவைகள் பெருத்து வலுத்து புருஷசக்தியுண்டாகும்.



### 414. பூராக மகாவீரிய திலா.

மேற்கண்டபடி சுத்திசெய்த பூராகம், உலர்த்தின தம்பலப்பூச்சி, உலர்த்தின அட்டை, இவை வகை-க-க்குப் பலம்-க, அக்ராகாரம், வெள்ளலரிவேர்ப்பட்டை, குங்குமப்பூ, இலவங்கப்பட்டை, ஜாதிக்காய், இலவங்கம் இவற்றின் சூரணம் வகை-க-க்குப் பலம்-வ, சதாபிலைச்சாறு பலம்-ரு.

செய்முறை:—முன்னுள்ள மூன்று வஸ்துக்களையும் ஜெய்த்தூன் எண்ணெயில் அல்லது சம்பங்கியெண்ணெயில் பொன்வறுவலாக வறுத்துக்கொள்ளவும். பின்பு கல்வத்திலிட்டு மற்ற சரக்குகளையுஞ் சேர்த்து மேற்படி சதாபிலைச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்துச் சாறெல்லாஞ் சுண்டியபிறகு ஜெய்த்தூன் எண்ணெயை அல்லது சம்பங்கியெண்ணெயைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாமநேர மரைத்து மெழுகுபதத்தில் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

உபயோகம்:—இதில் இரண்டு குன்றிமணியெடையெடுத்து இரண்டு குன்றிமணியெடை வெண்ணெயும், ஒரு குன்றிமணியெடை புநுகுஞ்சேர்த்து மர்த்தித்து அவசியமான பாகத்திற்பூசி வெற்றிலையைவாட்டி அதன்மீதுவைத்துக் கட்டவேண்டும். காலையில் வெந்நீர்விட்டுக் கழுவிக் கம்பிளியால் ஈரத்தைத் துடைத்து விடவேண்டும். இவ்விதம் ஒருவாரஞ்செய்துவந்தால், முஷ்டிப்பிரயோக முதலிய துஷ்டக்கிரியைகளினால் நேரிட்ட நரம்புத்தளர்ச்சி, சோர்வு, சுருக்கம், அடிசிறுத்து நுனிபெருத்தல், வளைந்திருத்தல் முதலிய துர்க்குணங்கள் யாவும் நீங்கி அவை பல

ப்பட்டு புருஷசக்தியும், யௌவன சக்தியுமுண்டாகும். பிறவியிலிருந்தே இத்தீர்க்குணங்களுண்டாகி யிருந்தால் அவை நீங்குவது துர்லபம். இடையில் இக்குணங்களுண்டாகி யிருந்தால் இந்தத்திலாவினால் அவசியம் தீர்ந்துபோகும். அப்படித் தீராவிட்டால் மற்ற மருந்துகளினால் தீருமெனச்சொல்வது சாத்தியமன்று. ஆனால், அவ்வகை வியாதிகளுக்கு வேறுவகை மருந்துகளை யுபயோகிப்பதைப் பார்க்கிலும் அர்க்க க்ஷீரப் பிரயோகங்களை யுபயோகிக்கவேண்டும். அம்முறைகளெல்லாம் நமது தாதுவிருத்திபோதினி இரண்டாம்பாகத்தில் வகைவிபரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவசியமானவர்கள் அதனைப் பார்த்து அங்குள்ள படிசெய்து தம் கோரிக்கையை யடையலாம்.

## 415. பூநாக ஹல்வா.

மேற்கண்ட பாகப்படி சுத்திசெய்துலர்த்தி யிடித்த பூநாகச்சூரணம் பலம்-௨௦, நீர்முள்ளிவிதை, பஹமூனே சபேத், தூதரி சபேத், இலவங்கம், இலவங்கப்பட்டை, மேற்றோல்சீவின சுக்கு, மேற்றோல் சீவின சன்னராஷ்டம் இவற்றின் சூரணம் வகை-௧-க்குப் பலம்-௨, மேற்றோலபோக்கின வாதுமைப்பருப்பு பலம்-௨௦, சாரப்பருப்பு பலம்-௰, அக்ரோட்பருப்பு பலம்-௨௦, சீனிச்சர்க்கரை பலம்-௨௦௦, நெய் பலம்-௬௦, தேன் பலம்-௫.

செய்முறை:—பருப்பினங்களை யெல்லாம் நெய்யில்வறுத்து அம்மியிலவைத்து மைபோலரைத்துக் கொள்ளவேண்டும். இதனுடன் எல்லாச்சூரணங்களை



யும் ஒன்றாகமிஸ்ரமித்து வைத்துக்கொள்ளவும். சர்க்கரையைப் பாகுசெய்து பாகுபதத்தில், முன் சித்தப்படுத்திவைத்திருக்கும் கலவையை சிறுகச் சிறுகப்போட்டு சுத்தமத்தாற் கடைந்துவரவேண்டும். எல்லாம் சென்றபின்பு கீழிறக்கி யிருதியாயிருக்கிற நெய்யையும்விட்டு நன்றாகக்கடைந்து கலந்து ஆறினபின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவேண்டும்.

### குறிப்பு.

சக்தியுள்ளவர்கள் ஐம்பது தங்கரேக்கையும், நூறு வெள்ளிரேக்கையும், ஒரு விராகனெடை கஸ்தூரியையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். மேற்படி ரேக்குகளை மேற்படி லேகியத்தைக் கீழிறக்கினவுடன் அதிக சூடா யில்லாமல் இளஞ்சூடா யிருக்கும்போது ஒவ்வொரு ரேக்காகப் போட்டுக் கடையவேண்டும். கஸ்தூரியுடன் ஒருபலம் கற்கண்டைச் சேர்த்துப் பொடித்து மேற்படி லேகியத்தில் தூவிக்கடைந்து கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—விராகனெடை-௧-௨, கஸ்தூரி சேர்ந்திருந்தால் விராகனெடை-௧-௧.

உபயோகம்:—தலைமூளை, இரைப்பை, இருதயம் ஈரல் முதலிய இராஜ கருவிகள் பலப்பட்டு நரம்புகள் முறுக்கேறிப் பலத்து உரத்து, தேகதிடம், தேகபலம், புருஷத்தன்மை முதலியவைகளுண்டாகும். இரத்தவிருத்தி, இந்திரிய விருத்தி முதலியவைகளுண்டாகித் தாதுபுஷ்டியுண்டாகும். இந்திரியத்திலுள்ள தோஷங்கள் நீங்கிப் புத்திர சந்தானத்திற் கேது

லாகும். இதனைத் தொடர்ந்தேற்றியாக உபயோகித்து வந்தால் இது ஒரு கற்பத்திற் கொப்பாகி தேகத்தில் வியாதியை அண்டவிடாது அதைக் காப்பாற்றிவரும்.

### தம்பலப் பூச்சிச் சுத்தி.

தம்பலப் பூச்சி தேவையான அளவு. இதை வெந்நீரிற் போட்டு இரண்டு நாழிகைநேரம் மூடி வைத்திருந்து பிறகு மேலுக்கு மேலாக அதை அரித்தெடுத்து, அதிலுள்ள மண், தூசி முதலியவைகளை நீக்கிச் சுத்தி செய்து வெயிலிலுலர்த்தி யெடுத்துக் கொள்வதே அதன் சுத்தியாம்.

### 416, தம்பலப்பூச்சிப் பற்பம்.

சுத்தித்த தம்பலப் பூச்சி பலம்-உ, தண்ணீர் விட்டான் கிழங்குச்சாறு செல்லத்தக்க அளவு, (தண்ணீர் விட்டான் கிழங்கை இரண்டொருநாள் ஜலத்தில் ஊறவைத்து அதன் மேலுள்ள தோலையும், நடுவிலுள்ள நரம்பையும் நீக்கிவிட்டு மரவுரலில் மரவுலக்கையா லிடித்துச் சாறுபிழிந்து வடிகட்டிக் கொள்ளவேண்டியது.)

செய்முறை:—மேற்படி பூச்சியைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேர மரைத்துப் பில்லை செய்துலர்த்தி அகலில் வைத்து மேலகல்மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் பத்துப் பங்கெட்டி விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கப் பற்பமா யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை உ-௩.



அநுபானம்:—வெண்ணெய், நெய், பாலேடு, தேன், வாதுமை ஹல்வா, கோதுமைப்பால் ஹல்வா முதலியவைகளாம்.

உபயோகம்:—மூளை பலப்பட்டு நரம்புகள் பலத்துப் புருஷ சக்தி யுண்டாகும். இருமல், சுவாசகாசம் முதலிய நுரையீரல் ரோகங்களும் தீரும்.

### 417. இந்திரகோபப் பூநாகப் பற்பம்.

சுத்திசெய்த இந்திரகோபம் பலம்-க, சுத்திசெய்த பூநாகம் பலம்-க, ஆடாதோடைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி யிரண்டு வஸ்துக்களையுங் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேர மரைத்துப் பில்லை செய்துலர்த்தி அகலில் வைத்து மேலகல்மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் பத்துப் பங்கெட்டி விராட்டியில் புடமிட்டாறினபின் னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை உ-௩.

அநுபானம்:—மிளகுச் சூர்ணம், தாளீசபத்திரி சூர்ணம், வாதுமையையும், கற்கண்டையும் சமனாய்ச் சேர்த்தரைத்த ஹல்வா, தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:—க்ஷயம், காசம், இருமல் முதலிய ரோகங்கள் தீர்ந்து, தேகபலம், தேகதிட முண்டாகித் தாதுபுஷ்டி யுண்டாகும். இழந்துபோன புருஷ சக்தி முன்போ லுண்டாகி விடும்.

குறிப்பு.

இதனை யுபயோகிக்கும்போது சிலருக்கு பசிதீபனம் அதிகப்படுவதுண்டு. அந்தச் சமயங்களில் பாலன்னம், பாற்பாயசம் முதலியவைகளை ஜீரண சக்திக்குத் தகுந்தபடி உபயோகித்துவர வேண்டும்.

### 418. இந்திரகோப ஹல்வா.

(a) சுத்திசெய்த இந்திர கோபப்பூச்சி பலம்-௰, நிலப்பனைக்கிழங்குச்சாறு செல்லத்தக்க அளவு.

(b) ஆலம் விதை, அரசம்விதை, கஞ்சா விதை, அத்திவிதை, அலிவிதை, பூனைக்காலி விதை, நீர்முள்ளி விதை, இவைகளின் சூரணம் வகைக்குப் பலம்-க, சீனிசர்க்கரை பலம்-௱, நெய் பலம்-௰, தேன் பலம்-௰, மேற்றோலெடுக்கின் வாதுமைப்பருப்பு, சாரப்பருப்பு, இவை வகைக்குப் பலம்-உ, கற்கண்டு பலம்-௰, பசுவின்பால் படி-௩, தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு படி-௩.

செய்முறை:—இந்திரகோபப் பூச்சியைக் கல்வத்திலிட்டு மேற்படி நிலப்பனைக் கிழங்குச்சாற்றை சிறுகச்சிறுகவிட்டு நான்கு சாமநேர மரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேல்மூடி மூன்று சீலை செய்துலர்த்திக் கவசத்தின் பத்துப்பங்கெருவில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும். இந்தப் பற்பத்தையும் (b) யிலுள்ள சூரணங்களையும் ஒன்றாகக் கலந்து வைத்துக்கொள்க. வாதுமைப் பருப்பையும் சாரப் பருப்பையும் கொஞ்சம் நெய்யில் வறுத்து அம்மியில் வைத்துவெண்ணெய்போலரைத்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற சூரணத்து



டன் கலந்துகொள்ளவும். பால் தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு ஆகிய இரண்டையுங் கலந்து சர்க்கரையைக் கரைத்துப் பாகுசெய்து பாகுபதத்தில் முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் சூரணத்தைச் சிறுகச் சிறுகப் போட்டுச் சட்டுவத்தாற் கடைந்து கிளறி இறக்கித் தேனையும் நெய்யையும் விட்டு நன்றாக மிச்ரமித்துக் கற்கண்டை யிடித்துத் தூளாய்ச்செய்து தூவி ஆறின பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம்:—விராகனெடை-உ-கஉ.

உபயோகம்:—இருமல், க்ஷயம், ஆகியவைகள் தீரும். இரத்தவிருத்தி, இந்திரிய விருத்தி முதலியவையுண்டாகி தாதுபுஷ்டியுண்டாகும். நரம்புகள் பலப்பட்டு புருஷ சக்தி யுண்டாகும். இதனைத் தொடர்ந்தேற்றியா யுபயோகித்து வந்தால், வேறு வியாதிகள் வாராமல் தடுத்து தேகத்தைக் காப்பாற்றி வரும்.

குறிப்பு.

சக்தியுள்ளவர்கள் மேற்கண்ட ஹல்வாவில் தம் தம் சக்தியானுசாரம் தங்கரேக்கு, வெள்ளிரேக்கு, கஸ்தூரி, அம்பர் முதலியவைகளைச் சேர்த்துக் கொண்டால், விசேஷ குணத்தைத் தருமென்பதற்கு ஆக்ஷேபணையே யில்லை.

பவளச் சுத்தி.

நற்பவளம் பலம்-௰, பேரிச்சங்காய் பலம்-கடு. இதிலுள்ள விதைகளை நீக்கிக் காயைச் சிதைத்து நான்கு படி ஜலத்திற்போட்டு புதுப்பானையில் விட்டு வெயிலில் வைக்கவேண்டும். நாள் ஒன்றிற்கு இரண்டு மு

ன்று தடவை செம்மையாகக் கலக்கியும் வரவேண்டும். மறுநாள் மறு புதுப்பாண்டத்தில் அதை விட்டு வெயிலில் வைத்து முன்போற் கலக்கிவரவேண்டும். முன் பானையை வெயிலில் வைத்துலர்த்த வேண்டும். மூன்றுநாள் முன் உலர்த்தின பானையில் விட்டு வெயிலில் வைத்து முன்போற் கலக்கிவரவேண்டும். மறு பானையை வெயிலில் வைத்து உலர்த்திக்கொள்ளவேண்டும். இவ்விதம் பிரதிதினமும் பானையை மாற்றி மாற்றி விட்டு வெயிலில் வைத்துவரவேண்டும். இவ்விதம் ஒருவாரம் அல்லது, பத்து நாள்சென்றால் ஜலத்திற் புளிப்பேறிக் காடி வாசனையுண்டாகி விடும். அந்தச் சமயத்தில் அடுப்பேற்றி நான்கிலொரு பாகமாகச் சுண்டவைத்து வடிகட்டித் திப்பிநீக்கின கஷாயத்தை மூன்று பாகமாக செய்து ஒரு பாகத்தில் மேற்படி நற்பவளத்தை ஒன்றிரண்டாக வுடைத்து அதிற்போட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக வெரித்து அந்தக் கஷாயமெல்லாஞ் சென்ற பின்பு கஷாயத்தின் மறுபாகத்தை விட்டு முன்போற் சுண்டவைத்து அதுவுஞ் சுண்டின பின்பு மற்றொரு பாகத்தையும் விட்டு அதையுஞ் சுண்டவைத்து, இறக்கிக் குளிர ஆறினபின்பு ஜலத்தைவிட்டுக் கழுவி வெயிலில் வைத்து ஈரமில்லாமல் உலர்த்தி யெடுத்துக்கொள்ளவேண்டும். இந்தச் சுத்தியானது முதல் தரமானது பவளத்தின் சுத்தி வேறு அநேக மிருப்பினும் இந்தச் சுத்திக்கு ஒப்பாகாது. பாட்டிற்குத் தகுந்த பலன் உண்டென்பது உலகப் பிரசித்தியான வாக்கியம்.

## 419. பவள பற்பம்.

மேற்கண்டபடி சுத்திசெய்த பவளம் பலம் - க, ஆத்தி யிலைச்சாறு, சரக்கொன்றை யிலைச்சாறு, வே



ங்கைப் பட்டைச்சாறு, எருக்கின் இலை, பூ ஆகிய இரண்டையும் சமமாகச் சேர்த்திடித்த சாறு (இது வெள்ளெருக்கானால் அதிக விசேஷம்) இந்நான்கும் வகை-க-க்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட பவளத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து ஆத்தி யிலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேர மரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடுமூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி-௩0-பலம் விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுத்துக் கொள்ளவும்.

இதனைக் கல்வத்திலிட்டுச் சரக்கொன்றைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து முன்போல் நான்கு சாமநேர மரைத்து முன்போல் பில்லை செய்துலர்த்தி முன்போற் கவசஞ் செய்துலர்த்தி ஐம்பதுபலம் விராட்டியிற் புடமிடவேண்டும்.

ஆறினபின் னெடுத்துக் கல்வத்திலிட்டு வேங்கைப் பட்டைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து முன்போல நான்கு சாமமரைத்து முன்போற் பில்லை செய்துலர்த்தி முன்போற் கவசஞ் செய்துலர்த்தி ௩0-பலம் விராட்டியிற் புடமிடவேண்டும்.

ஆறினபின் னெடுத்துக் கல்வத்திலிட்டு முன் சொல்லி யிருக்கிறபடி சித்தப்படுத்தின எருக்கிலை பூச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து முன்போல் நான்கு சாமமரைத்து முன்போற் பில்லை செய்துலர்த்தி முன்போற் கவசித்துலர்த்தி - ௫0 - பலம் விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுக்கக் கடவுளினது கிருபையால் திவ்யமான பற்பமா யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-க-௨ு.

அனுபானமும், உபயோகமும்:—பசுவின்நெய் விராகனெடை-க, தேன் விராகனெடை-க, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி அனுபானித்துண்ண, கபரோக உப்பிச வாந்தி, உழமாந்தை, பீஜவாயு, கோரவாயு ஆகியவைகள் தீரும்.

பனங்கள் விராகனெடை-உ, தேன் விராகனெடை-க, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, மேகச்சீழ், மேகச் சொறி, மேகச்சிரங்கு, பெருங்குஷ்டம், விடாத்தேமல், வெட்டை சோகம், சிலந்தி விஷம், செவ்வாப்புக் கட்டி, தட்டம்மை, பூயற்றம்மை, ஊழிக்காய்ச்சல் ஆகியவைகள் தீரும்.

பசுவின் வெண்ணெய் விராகனெடை-உ, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, சுரம், உப்பிச ஜன்னி, பெரும்பாடு, பித்தசுரம், பித்த உஷ்ணம், பெருவயிறு, பித்த உதிரவாயு, சுவாசகாசம், பித்தபாண்டு, பித்தமூலம், பித்த சேத்தும பிரமை, பித்தஜன்னி ஆகியவை தீரும்.

பசுவின்பால் விராகனெடை-உ, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, சேத்துமசுரம், விஷசுரம், நீரிழிவு, மலஜல பந்தம், ஜலதோஷம், விக்கல், மாரக ஜன்னி, மூர்ச்சை, வாத ஜன்னி, விப்புருதி, பாரிச ஜன்னி, இருமல் ஆகியவைகள் தீரும்.



பசுவின் தயிர் விராகனெடை-ங, தேன் விராகனெடை-உ. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, கடுப்புவாதம், பெருவிக்கல், மேற்சுவாசம், ஜன்னிவாயு, பொருமல், பைசாச ஜன்னி, மோகஜன்னி ஆகியவைகள் தீரும்.

பசுவின்மோர் பலம்-௧, தேன் விராகனெடை-உ. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, மடக்குவாதம், உதறுவாதம், பக்கவாயு, வாதகுன்மம், புகைச்சல், கண்படலகாசம் ஆகியவை தீரும்.

குளிர்ந்த ஜலம் பலம்-௧, தேன் விராகனெடை-உ, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, நரம்புப்பிடிப்பு, நீர்க்கட்டு ஆகியவை தீரும்.

துளசிச்சாறு விராகனெடை-உ, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, பாரிசவாதம், வாதாதி முத்தோஷ சுரம் ஆகியவைகள் தீரும்.

இளநீர் பலம்-௧, தேன் விராகனெடை-உ. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி செய்ய, பித்தகாசம், பெருவாரிப் பிணி ஆகியவை தீரும்.

பனங்காய் நொங்கின் ஜலம் பலம்-௧, தேன் விராகனெடை-உ. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யுண்ண, க்ஷயகாசம், மகாநீர்ப்பிணி ஆகியவைகள் தீரும்.

நெல்லிக்கனிச்சாறு விராகனெடை-உ, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையுங் கலந்து மேற்கண்டபடி யுண்ண, பித்த மேகத்தினவு, மேகவெட்டை, மேகவூறல் ஆகியவை தீரும்.

கொத்துமல்லிக் கீரைச்சாறு விராகனெடை-க. தேன் விராகனெடை-க. இவ்விரண்டையுங் கலந்து மேற்கண்டபடி செய்ய, கபமேகம், பருக்கட்டி, இரசஜலந்தி ஆகியவைகள் தீரும்.

சந்தனக்குழம்பு விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யுண்ண, பித்தவாதம், வல்லைக்கட்டி, பெருவயிறு ஆகியவைகள் தீரும்.

பனைவெல்லம் விராகனெடை-க. இதில் மேற்கண்ட பற்பத்தை மேற்கண்டபடியுண்ண, கபவாதம், பல்வாதம் ஆகியவைகள் தீரும்.

தேன் விராகனெடை-க. இதில் மேற்படி பற்பத்தை மேற்கண்டபடியுண்ண, பித்தவாதநடுக்கல், யோனிப்புற்று ஆகியவைகள் தீரும்.

வில்வஇலைச்சாறு விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடிசெய்ய, சேத்துமவாதநடுக்கல், சுவேதஜன்னி ஆகியவைகள் தீரும்.

மகிழம்பூச்சாறு விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடிசெய்ய, பித்தவாதபந்தம், மாரடைப்பு ஆகியவைகள் தீரும்.



மூங்கிற்கிழங்குச்சாறு விராகனெடை-க, தேன் விராகனெடை-க, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடியுண்ண, சேத்துமபந்தம், சிரோபாரம் ஆகியவை தீரும்.

கருங்குறுவையரிசியை வறுத்திடித்தமா விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையுமிஸ்ரமித்து மேற்கண்டபடியுண்ண, வாதானலரோகம், பித்தவல்லைக்கட்டி ஆகியவைகள் தீரும்.

புன்னைப்பூச்சாறு விராகனெடை-க, தேன்விராகனெடை-க. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடியுண்ண, சேத்துமவயிற்றுவலி, நீரேற்றம், பல்லடிப்பிணி ஆகியவைகள் தீரும்.

சுரபுன்னையிலைச்சாறு விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடியுண்ண, மேகானலப்பிணி, பித்தானலப்பிணி ஆகியவைகள் தீரும்.

வெந்நீர் விராகனெடை-ரு, தேன் விராகனெடை-க, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடியுண்ண, மாரகஜன்னி, பக்ஷவர்தபிரமை ஆகியவைகள் தீரும்.

காற்பலம் மாதுளைவிதையை மூன்றுபலம் குளிர்ந்தநீரில் மூன்றுமணிநேரம் ஊறவைத்து ஒன்றேகாற்பலம் பழையவெல்லம் சேர்த்தரைத்து மூன்றுபலம் பசுவின்பாலிற் கரைத்து அதில் மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி யனுப்பானித்துண்ண வேண்டும். இங்விதம் காலை மாலை யிரண்டுவேளையும் புசித்து, நல்லெ

ண்ணெய், கடுகு, புளி, புகை, பெண் ஆகியவைகளை அறவேநீக்கி, அவ்வியமானபோதுபசுவின்பாலையே குடித்து, அத்திப்பழம், தித்திப்பான மாம்பழம் என்னும் இவற்றையே பலகாரமாகக்கொண்டு இவ்விதம் ஒருமண்டலம் உட்கொண்டால் வாதப்பிரமேகத்தாலுண்டான தாதுநஷ்டம், ஆண்குறித்தளர்ச்சி, விந்துநீர்த்திருத்தல் ஆகியவைதீர்ந்து, தாதுவிருத்தியுண்டாகி நரம்புகளின் தளர்ச்சி, நரம்புகளின் சோர்வு ஆகியவைகள் தீரும்.

முருங்கைவிதைப்பருப்பு பலம் - உ௦. இதனைக் குளிர்ந்த ஜலத்தில் மூன்றுமணிநேரம் ஊறவைத்து, ஒன்றேகால் விராகனெடை சர்க்கரையைச் சேர்த்தரைத்து, ஜீரணசக்திக்குத் தகுந்தபடி பசுவின்நெய்விட்டுக் கலந்து; அதில் மேற்படிபற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண வேண்டும். இவ்விதம் காலை மாலை யிரண்டுவேளையுமாகப்புசித்து, மேற்கண்ட பத்தியத்தையே அனுசரித்து, வேண்டும்போதுவெந்நீர்ப் பானஞ்செய்து; பலாப்பழம், பனம்பழம் என்னுமிவற்றைப் பலகாரமாகப்புசித்துவந்தால், பித்தசம்பந்தத்தினாலுண்டான பிரமேகம், அதனாலுண்டான தாதுநஷ்டம், நரம்புத்தளர்ச்சி, நரம்புச்சோர்வு ஆகியவைகள் தீர்ந்து, தாதுபுஷ்டியுண்டாகி, நரம்புகள்பலப்பட்டுத் தேகதிடமுமுண்டாகும்.

புல்லாஞ்சிவிதை விராகனெடை-ரு, இதனைமூன்றுபலம் குளிர்ந்த ஜலத்தில் மூன்றுமணிநேரம் ஊறவைத்து-க௦-விராகனெடை கற்கண்டைச் சேர்த்தரைத்து, ஒருபலம் பசுவெண்ணெயிற் குழைத்து, இதில்



மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண வேண்டும். இவ்விதம் காலை மாலை யிரண்டுவேளையுமுண்டு, முன்பத்தியமுங் காத்துவந்து, அவசியமானபோது கிச்சிலிப்பழம், வாழைப்பழம், என்னும் இவற்றைப் பலகாரமாகச் சாப்பிட்டுவந்தால், சேத்துமசம்பந்தமான பிரமேகம், அதனாலுண்டான தாதுநஷ்டம், நரம்புகளின் தளர்ச்சி, சோர்வு ஆகியவைகளுந்தீர்ந்து, தாதுபுஷ்டியுண்டாகி, நரம்புகள் பலப்பட்டு, தேகபலம், தேகதிடம் முதலியவைகளுண்டாகும்.

பத்தியம்:—இதற்குப் பிரதான பத்தியம் பெண்ணை அறவே நீக்கவேண்டியதுதான். இதைச் சாப்பிடும்போது பெண்ணிச்சையுண்டாகுமாகையால் மனதை நழுவ விடாமல் அதிக ஜாக்கிரதையுடன் மேற்கண்ட பத்தியத்தைப் பாதுகாத்துவந்தால், சபல பலத்தைப் பார்க்கிலும் பதினைந்து பங்கு அதிகமான பலமுண்டாகும். அப்படிப் பத்தியங்காக்காவிட்டால், தாங்கவெடுத்துக்கொண்ட பிரயாசை அவமாகவே நீடும்.

## 420. பவளபற்பம் (வேறு)

மேற்கண்டபடி சுத்திசெய்த பவளம் பலம்-௩; எருக்கம்பால் செல்லத்தக்க அளவு, (வெள்ளெருக்கின் பாலாயின் அதிக விசேஷம்)

செய்முறை:—மேற்படி பவளத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி பாலைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஓட்டில்வைத்து மேலோடுமூடி ஐந்து சீலைமண்

செய்துலர்த்தி எட்டுவீசை விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுக்கப் பற்பமாகி யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க-உ.

அநுபானமும், உபயோகமும்:— வெண்டாமரைப் பூச்சாறு விராகனெடை-ங, தேன் விராகனெடை-ங, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யநுபானித்துண்ண, கபச சம்பந்தமான இரத்தபித்த ரோகம் தீரும்.

பசுவின் வெண்ணெய் விராகனெடை-க, கற்கண்டுத்தூள் விராகனெடை-ங. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யநுபானித்துண்ண, நாட்பட்ட சுரம், க்ஷயகாசம், இரத்தபித்தரோகம் ஆகியவைகள் தீரும்.

விதைநீக்கின திராக்ஷப்பழம் விராகனெடை-உ, ஆடாதோடை யிலைச்சாறு விராகனெடை-ங, தேன் விராகனெடை-ங. திராக்ஷப்பழத்தை வெண்ணெய் போலரைத்துமற்றிரண்டையும் சேர்த்துமிஸ்ரமித்து, மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படியநுபானித்துண்ண, சுவாசகாசம், எல்லாவகைக்கிருமிகள் ஆகியவைகள் தீரும். பசிதீபனம் அதிகப்படும். தேகபலம், தேகதிடம் ஆகியவைகள் விருத்தியாகும். தேக வஜீரம், முகவசீகரம் ஆகியவைகளுண்டாகும்.

வில்வ இலைச்சாறு விராகனெடை-ங, மேற்சருகை நீக்கின சிந்திற் கொடிச்சாறு விராகனெடை-ங, தேன் விராகனெடை-ங. இவையெல்லாவற்றையு மிஸ்ரமித்து, மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி ய-



நுபானித்துண்ண, பித்த சம்பந்தமான ரோகம் முதலியவை தீரும்.

கொடிவேலி வேர்ப்பட்டைச் சூரணம் குன்றிமணியெடை-அ, தேன் விராகனெடை-ங. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தை பிரமாணப்படி யநுபானித்துண்ண ஆகாரம் ஜீரணமாகும்போதுண்டாகும் பித்த குன்மம், வாயு குன்மம் ஆகியவைகள் தீரும்.

கொத்துமல்லிக் கீரைச்சாறு விராகனெடை-ச, தேன் விராகனெடை-ச. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யநுபானித்துண்ண, இரத்தபேதி, பித்த சம்பந்தமான வியாதிகள் ஆகியவைகள் தீரும். பசிதீபனம் அதிகப்படும்.

தண்ணீர்விட்டான் கிழங்குச் சூரணம் குன்றிமணியெடை-அ, பூனைக்காலி விதைச் சூரணம் குன்றிமணியெடை-அ, தேன் விராகனெடை-ங. இவையெல்லாவற்றையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யநுபானித்துண்ண, தாதுபுஷ்டியுண்டாகும்.

பத்தியம்:—பெண்ணை அவசியம் நீக்கவேண்டியது. பிறகு சமயோசிதம்போற் பத்தியத்தை யேற்படுத்தவும்.

### 421. பவள பற்பம் (வேறு.)

மேற்கண்டபடி சுத்திசெய்த நற்பவளம் பலம்-க, கற்கண்டு பலம்-ங.

செய்முறை:—கற்கண்டை யிடித்துத் தூள்செய்து இரண்டு பாகமாக்கி, ஒரு பாகத்தை ஒரு சிறு கலயத்திற்பரப்பி, அதன்மீது பவளத்தைச் சிறு துண்டுகளாகச்செய்து வைத்து, அதன்மீது கற்கண்டின் மறு பாகத்தைப் போட்டுச் சமமாக அழுத்திக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு ஐந்து சீலைமண்செய்து உலர்த்தி ஐந்துவிசை விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுக்கப் பற்பமாகி யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க-க௨.

அனுபானம்:—பசுவின் வெண்ணெய், பசுவின் நெய், பசுவின் பாலேடு, பசுவின் பாற்கல்வா ஆகியவைகளாம்.

உபயோகம்:—மூத்திரத்தில் இரத்தம் விழுதல், மூக்கிலிருந்து இரத்தம்விழுதல், இரத்தபேதி, இரத்தக் கடுப்பு ஆகியவைகள் தீரும். உள் அவயவங்களில் எந்த அவயவத்திலிருந்து இரத்தம் வெளிப்பட்டாலும் அதனை நிறுத்துவதில் இது சஞ்சீவிக் கொப்பானது.

பத்தியம்:—உஷ்ணமான வஸ்துக்கள், புளிப்பு வஸ்துக்கள் ஆகியவைகளை நீக்கவேண்டியது.

### 422. பவளபற்பம் (வேறு.)

பத்துப்பலம் கொள்ளும்படியான பீங்கான் கிண்ணத்தில் அதின் வாய்மட்டம் எலுமிச்சம் பழச்சாற்றைவிட்டு அதில் அரைப்பலம் கற்கண்டைப் பொடித்துப்போட்டு ஒருபலம் நற்பவளத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து அதிற்போட்டுக் கிண்ணத்தின் வா



யை மெல்லிய வஸ்திரத்தாற் கட்டி வெயிலில் வைத்து வரவேண்டும். சாறெல்லாஞ் சுண்டின பின்பும் வெயிலில் வைத்துப் பவளம் நன்றாய் வெண்மையாகிற வரையில் வெயிலில் வைத்து வரவேண்டும். நன்றாய் வெளுத்தபின்பு எடுத்துப் பொடித்துச் சீஷாவிற்பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-௨.

அனுபானம்:—பசுவின் வெண்ணெய், பசுவின் நெய், வாதுமை ஹல்வா, கோதுமைப்பால் ஹல்வா, நன்னாரிவேர்ச் சூரணம் முதலியவைகளாம்.

உபயோகம்:—இரத்தக் கெடுதியினா லுண்டான சொறி, சிரங்குகள், புண்கள், கட்டிகள், ஆறாத இரணங்கள் ஆகியவைகள் தீரும். இரத்தத்திலுள்ள தோஷத்தைப் போக்குவதற்கு இது சஞ்சீவிக் கொப்பானது. இன்னும் தேகபலத்தை விருத்தி செய்வதில் இது ஒப்பற்றதென அனுபவத்தால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பு.

இந்தப் பற்பமானது வெகு நாளனுபவத்தாற் கண்டு பிடிக்கப்பட்டது. மற்றவைகளைப் பார்க்கிலும் இதில் ஏதோ விசேஷ குணமிருக்கிறதென்பது இதனைச்செய்து அனுபவ சித்தமாக உபயோகித்து வருபவர்களுக்கே தெரியும். இதனைக் கடுங்கோடைக்காலங்களிற் செய்யவேண்டும். இதனைச் செய்து முடிக்கச் சுமார் இரண்டு வாரஞ்செல்லும். ஆனால் வேறெவ்வித கஷ்டமுமில்லை. அவசரமாகச் செய்து கொள்ளவேண்டுமானால் மேற்கண்டபடி சித்தப்படுத்திக்கலயத்திற்

போட்டு வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்யாமல் ஐந்துவிசை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் னெடுக்கப் பற்பமாயிருக்கும். ஆனால் சூரியபுடத்திற் செய்த பற்பத்திற்கும் அக்கினி புடத்திற்செய்த பற்பத்திற்கும் பெருத்த வித்தியாச மிருக்கின்றது. சாவகாசமான காலங்களில் மேற்கண்டபடி சூரியபுடத்திற்செய்து சித்தமாக வைத்திருந்தால் உற்ற சமயங்களில் உதவியாகும். பெரிய வைத்தியர்கள் மேற்கண்ட பிரகப்படி செய்து சித்தமாக வைத்திருந்து தக்க சமயங்களில் உபயோகித்து மிக்க கீர்த்தியையும், புண்ணியத்தையும் அடைவார்களென நம்பப்படுகிறது.

## 423. பவளபற்பம் (வேறு.)

மேற்கண்டபடி சுத்திசெய்த பவளம் பலம்-க, அன்றலர்ந்த ரோஜாப்பூ விதழ் பலம்-ரு, தாமரைக்கிழங்கு பலம்-ரு.

செய்முறை:—பின்கண்ட இரண்டையும் வெண்ணெய்போலரைத்து இரண்டடையாகச் செய்து மேற்படி பவளத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து ஒரு அடையின்மீது வைத்துப் பரப்பி மறு அடையால் மூடி வாய் பொருந்தும்படியாகச் செய்து மூன்று சீலைமண்செய்து மூன்று விசை வறட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ.

அனுபானம்:—வெள்ளறுகிலையை யரைத்த விழுது, பசுவின் வெண்ணெய், வால்மிளகுச்சூரணம் சந்தனச் சூரணம் ஆகியவைகளாம்.



உபயோகம்:—பிரமேகம், இந்திரிய திராவகம், ஆகியவைகள் தீரும்.

## 424. பவளபற்பம் (வேறு)

மேற்கண்டபடி சுத்திசெய்த நற்பவளம் பலம்-க, சோற்றுக் கற்றாழைச்சாறு பலம்-உ௰.

செய்முறை:—இவ்விரண்டையும் ஒரு கலயத்திற்போட்டுக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு இரண்டு சீலைமண் செய்து கவசத்தின் இருபது பங்கெடை வறட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கப் பவளமானது பற்பமாகி யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க-முதல்-உ.

அனுபானம்:—சோம்புத் திராவகம், காசினிவிதைத் திராவகம், வெண்ணெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—மண்ணீரல் வீக்கம், பேதி, இரத்தகாசம் ஆகியவைகள் தீரும். இரத்த க்ஷயமுள்ளவர்களுக்கு ஆடாதோடை யிலை-க, வெண்மிளகு-உ. இவ்விரண்டையு மரைத்து அதில் அனுபானித்துக் கொடுக்க, மேற்கண்ட ரோகம், இரத்தங் கக்கல் ஆகியவை தீரும். இரத்த காசம், இரத்த க்ஷயமுள்ளவர்களுக்குக் கழுதைப் பாலி லனுபானித் துபயோகிக்க, அந்த ரோகங்கள் தீரும்.

## 425. பவளபற்பம் (வேறு)

சுத்திசெய்த நற்பவளம் விராகனெடை-ரு, சோற்றுக் கற்றாழைச்சாறு பலம்-க௰, மாதுளை யிலைச்சாறு பலம்-க௰, வேப்பிலைச்சாறு பலம்-உ, மருதோன்றி யிலைச்சாறு பலம்-க௰.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் ஒரு புதுக் கலயத்திறபோட்டுக் கரிநெருப்பின்மீது வைத்து ஒரு குச்சியாற் கிண்டிக் கொண்டிருக்கவேண்டும். அது குழம்புப் பதமானவுடன் எடுத்துக் கலயத்தின் வாயக்குச் சில்லிட்டு மூன்று சீலைமண்செய்து இரண்டரைவிசை வறட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கத் திவ்யமான பற்பமா யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-ச.

அநுபானம்:—பசுவின் வெண்ணெய், பசுவினெய், ஆலம்விழுதை யரைத்த விழுது, வெள்ளறுகை யரைத்த விழுது முதலியவைகளாம்.

உபயோகம்:—இரத்த க்ஷயம், இரத்த காசம், இரத்தக் கக்கல், மூக்கிலிருந்து இரத்தம் வருதல், மலத்திலிரத்தம் விழுதல், மூலத்தில்-இரத்தம் விழுதல் முதலியன தீரும்.

பத்தியம்:—உஷ்ணமான வஸ்துக்கள், புளிப்பு வஸ்துக்கள் ஆகியவைகளை நீக்கவேண்டியது.

### 426. பவளபற்பம் (வேறு)

சுத்திசெய்த நற்பவளம் பலம்-க, வாழைக்கிழங்குச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—பவளத்தைக்கரிநெருப்பிற்காய்ச்சி மேற்படி கிழங்குச்சாற்றில் தோய்க்கவேண்டும். அது ஆறினபின்பு மறுபடியும் கரிநெருப்பிற் காய்ச்சித் தோய்க்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி இருபத்தொரு தடவைகள் காய்ச்சித்தோய்க்கவேண்டும். பவளமானது நொறுங்க ஆரம்பித்தால் புதுசட்டியில்



வைத்து ஒடு சிவக்கக் காய்ச்சி மேற்படி ஜலத்திற்போடவேண்டும். பிறகு அந்த ஜலத்தை மெதுவாயிறுத்துவிட்டுப் பவளத்துண்டுகளை ஒரு மண் கலயத்திற்போட்டு அது நிறைய வாழைக் கிழங்குச்சாற்றை விடவேண்டும். இந்தச் சாறானது பத்துப் பலத்திற்குக் குறையாம லிருக்கவேண்டும். பிறகு கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டு மூன்று சீலைமண் செய்து ஐந்து வீசை வறட்டியிற் புடமிட் டாறினபின் னெடுக்கப் பற்பமாகி யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-ரு.

அநுபானம், உபயோக முதலியவைகளெல்லா மேற்கண்டவைகளேயாம்.

### 427. பவளபற்பம் (வேறு)

சுத்திசெய்த நற்பவளம் பலம்-க, தண்ணீரில் ஊறவைத்து மேற்றோல், உள்நரம்பு ஆகியவைகளை நீக்கின தண்ணீர்விட்டான் கிழங்கு பலம்-கO.

செய்முறை:—மேற்படி தண்ணீர் விட்டான் கிழங்கை மைபோலரைத்து இரண்டடையாகச் செய்து ஒன்றில் மேற்படி பவளத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து வைத்துப் பாப்பி மறுஅடையால் மூடி இரண்டோரங்களையும் பொருந்தும்படியாகச் செய்து அதன்மீது மூன்று சீலைமண்செய்து கவசத்தின் இருபது பங்கெடை விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுக்கப் பற்பமாகி யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-ரு.

அநுபானம், உபயோகம் முதலியவைகளெல்லா மேற்கண்டவைகளேயாம்.

## 428. பவளபற்பம் (வேறு)

சுத்தித்த நற்பவளம் பலம்-௧௰. இதனை ஐந்துபலம் எலுமிச்சம் பழச்சாற்றிற் போட்டுச் சூரியபுடம் வைக்கவேண்டும். சாறெல்லாஞ் சுண்டினபின்பு அதில் ஐந்துபலம் எருக்கம்பாலை விட்டு மூன்றுநாள் சூரியபுடம் வைத்து நான்காநாள் அதை வச்சிர மூசையில்விட்டு மேல்மூடி யெழுசீலைமண் செய்துலர்த்தி ஒரு மணங்கு வரட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கப் பற்பமாகி யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨-௩.

அநுபானம்:—பசுவின் வெண்ணெய், பாலேடு, பசுவின்நெய், ஆடாதோடைப் பாளிதம், முசல்நெய் முதலியவைகளாம். இம்முறைகளெல்லாம் பின்னெழுதப்படும்.

உபயோகம்:—இருமல், க்ஷயம், உஷ்ண சம்பந்த ரோகம், வெட்டை முதலியவைகள் தீரும்.

## 429. பவளபற்பம் (வேறு.)

சுத்தித்த நற்பவளம் பலம்-௧௰. இதனை ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு அதில் ஐந்துபலம் எலுமிச்சம்பழச் சாற்றைவிட்டு வெயிலில் வைத்துச் சாறெல்லாஞ் சுண்டின பின்பு பவளத்தைச் சோற்றுக்கற்றாழை மட்டைக்குள் செலுத்தி அதன்மீது மூன்று சீலைமண்செய்து-௨௱-பலம் வரட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுக்கப் பற்பமா யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨-௩.



அநுபானம்:—பசுவின் வெண்ணெய், பசுவின்நெய், தேன், ஆலம்விழுதை யரைத்த விழுது, வெள்ளறுகை யரைத்த விழுது முதலியவைகளாம்.

உபயோகம்:—எலும்புருக்கி ரோகம், இருமல் ரோகம், மேக நீரெரிச்சல், க்ஷயம், அஸ்திச்சூடு, மேகச்சூடு, இருமல், புகைச்சல் ஆகியவைகள் தீரும்.

## 430. பவளபற்பம் (வேறு.)

சுத்திசெய்த பவளம் பலம்-௧, கீழ்க்காய்நெல்லி இலை பலம்-௨௰.

செய்முறை:—கீழ்க்காய் நெல்லியை வெண்ணெய்போலரைத்துப் பவளத்தைச் சிறு துண்டுகளாகச் செய்து அதற்குள் வைத்து மூன்று சீலைமண்செய்து எட்டுவீசை வரட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கப் பற்பமா யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨-௩.

அநுபானம்:—முலைப்பால், கழுதைப்பால், வெண்ணெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—காசம், ஈளை, இருமல், அஸ்திசுரம், அஸ்திச்சூடு முதலியவைகள் தீரும்.

## 431. பவளபற்பம் (வேறு)

சுத்திசெய்த பவளம் பலம்-௧௰, இதனை ஒருபீங்கான் பாத்திரத்திற்போட்டுப் பருமனான மூன்று எலுமிச்சம்பழங்களைப் பிழிந்து அதில்விட்டு ஒரு இராத்திரி ஊறவிட்டுக் காலையிலெடுத்துப் பத்துப்பலம் தேள்கொடுக்கி யிலையையரைத்து இரண்டடையாகச்

செய்து ஒரு ஆடையிற் பரப்பி மேலடைவைத்து மூடி செவ்வையாகக் கெட்டிப்படுத்தி மூன்று சீலைமண்செய்து ஐந்துவிசை வறட்டியிற் புடமிட்டாறினபின்னெடுக்கப் பற்பமாம்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-ங.

அனுபானம்:—வெண்ணெய், பசுவினெய், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:—க்ஷயரோகம், இரைப்பு, சுவாசகாசம், கணச்சூடு, அஸ்திச்சூடு முதலியவைகள் தீரும்.

## 432. பவளபற்பம் (வேறு.)

சுத்தித்த நற்பவளம் பலம்-க, பருமனான எலுமிச்சம்பழம் மூன்று, இலந்தையிலை பலம் ரு.

செய்முறை:—பவளத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் ஓரிரவு ஊறவைத்துக் காலையிலெடுத்து மேற்படி யிலந்தையிலையை அம்மியில்வைத்துமைப்போலரைத்துக் குகையும் மூடியுஞ்செய்து அதற்குள் முன்பவளத்தைவைத்து மூடியால்மூடி மூன்று சீலைமண்செய்து ௩௦௦ பலம் விறட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ, ங.

அனுபானம்:—வெண்ணெய், நெய்.

உபயோகம்:—மேகவெட்டை, பிரமேகம், நீரெரிச்சல், இந்திரிய இழிவு, இந்திரிய சிராவகம் ஆகியவைகள் தீரும்.



### பவளப்புற்று பவளக்கோடி.

இவற்றின் சுத்திகள் பவளத்தைப்போலவே செய்துகொள்ளலாம்.

### மேற்படி சுத்தி (வேறு.)

இவைகளை ஒரு சிறு பொட்டணமாகக் கட்டிச் சிறுதோண்டிக்குள் முக்கால்வாசி சோற்றுக்கற்றாழைச் சாற்றைவிட்டு அதில் மேற்படி பொட்டணத்தைக் கிழிக்கட்டித் தொங்கவிடவேண்டும். பொட்டணமானது பாத்திரத்தின் அடியிற் படாமல் சற்று உயரமாகவே தொங்கவிடவேண்டும். விட்டசாறானது சுண்டினபின்பெடுத்து ஜலம்விட்டுக்கழுவி ஈரம்போகவுலர்த்தியெடுத்துக்கொள்ளவும். இவ்விதம் பவளம், பவளப்புற்று, பவளக்கொடி ஆகியவைகளைச் சுத்திசெய்துகொள்ளலாம்.

## 433. கோடிப்பவளச் சுண்ணம்.

சுத்தித்த கொடிப்பவளம் தேவையான அளவை ஒரு சட்டியிற்போட்டு எலுமிச்சம் பழச்சாற்றையும், புளித்தமோரையும் சமமாகக்கலந்து அதில்விடவேண்டும். கொடிபவளமானது நாலங்குலம் ஆழ்ந்திருக்கவேண்டியது. இதனை அடுப்பேற்றிச்சிறுதீயாயெரித்துநீர் சுண்டினபின்பு ஒருநாள் வெயிலில்வைத்து முசல் இரத்தத்தைவிட்டுப் பிசறி ஒருநாள் வெயிலில் வைத்து மறுநாளும் மேற்படி இரத்தத்தைவிட்டுப் பிசறி வெயிலில்வைத்து மறுநாள் ஓட்டிலிட்டுமேலோடுமூடிச் சீலைமண்செய்யாமல் ௩௦௦-பலம் விறட்டியிற் புடமிட்டு ஆறின்பின்னெடுக்கக் கடுங்காரச்சுண்ணமாகி யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨-௩.

அநுபானம்:—வெண்ணெய், பசுவினெய், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:—க்ஷயம், இருமல், சுவாசகாசம் ஆகியவைகள் தீரும்.

### 434. பவளப்புற்றுப் பற்பம்.

சுத்தித்த பவளப்புற்று பலம்-௨, மிளகாய்விதை செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மிளகாய் விதையை அம்மியில்வைத்து ஜலம்வார்த்து வெண்ணெய்போலரைத்துப்பவளப்புற்றிற்கு ஒருவிரற்கனம்கவசஞ்செய்துலர்த்திமூன்று சீலைமண்செய்துலர்த்தி மூந்நூறு பலம் வறட்டியிற்புடமிட்டாறினபின் னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨,௩.

அநுபானம்:—நெய், தேன், வெண்ணெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—இரத்தகாசம், இரத்தவாந்தி, இருமல் முதலியவைகள் தீரும்.

### 435. பவளக்கோடிப்பற்பம் (வேறு.)

சுத்திசெய்த பவளக்கொடி பலம் ௨, சோற்றுக்கற்றாழைச்சாறு பலம் ௧0.

செய்முறை:—மேற்படி சாற்றை ஒருகலயத்தில் நிறையவிட்டுப் பவளக் கொடியைப் போட்டுச் சில்விட்டுச் சீலைமண்செய்து-௨௫0-பலம் வறட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கப் பற்பமாயிருக்கும்.



பிரமாணம்:—அரிசியெடை-௨-முதல்-௪.

அநுபானம்:—தேன், பாலேடு முதலியவைகளாம்.

உபயோகம்:—சுவாசகாசம், நாட்பட்ட இருமல், இந்திரிய சிராவகம் ஆகியவைகள் தீரும். தாதுவிருத்தி யுண்டாகும்.

### 436. பவளக்கோடிப் பற்பம் (வேறு)

சுத்திசெய்த பவளக்கொடி பலம்-௧, காவிமண், அல்லது, பூங்காவி செல்லத்தக்கஅளவு, முட்டை வெள்ளையம்புலி செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி காவியை, அல்லது, பூங்காவியைக் கல்வத்திலிட்டு வெள்ளைக்கருவைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டுமணிநேரமரைத்து ஒருவிரற்கனமுள்ள இரண்டடையாகச்செய்து ஒரு அடையில் மேற்கண்ட பவளக்கொடியைப்பரப்பி மறு அடையால்மூடி ஓரங்களைக் கெட்டிப்படுத்தி அதன்மீது இரண்டு சீலைமண்செய்து-௨௫0-பலம் வறட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கவும். இ சரியாகவிருந்தால் ஒரே புடத்தில் வெண்மையான பற்பமாகிவிடும். அப்படியாகாவிட்டால் மறுபடியும் வெண்மையாகிறவரையிற் புடம்போட்டெடுத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—அரிசியெடை-௨-முதல்-௪.

அநுபானம்:—தேன், பாலேடு முதலியவைகளாம்.

உபயோகம்:—நாட்பட்ட இருமல்ரோகம், இரத்தக்ஷயம், இரத்தகாசம், இரத்தவாந்தி, நுரையீரற்புண் ஆகியவைகள் தீரும்.

### 437, பவளக்கோடிப்பற்பம் (வேறு)

சுத்தித்த பவளக்கொடி பலம்-க, அன்றலர்ந்த ரோஜாப்புஷ்பம் பலம்-ரு.

செய்முறை:—மேற்படி புஷ்பத்தை வெண்ணெய்போலரைத்து அதற்குள் பவளக்கொடியைப் பொதிந்து மூன்று சீலைமண்செய்து நூறுபலம் வறட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுத்து முன்போல் ரோஜாப்பூவையரைத்துக் கவசஞ்செய்து முன்போற் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று, அல்லது நான்குபுடமிட்டால் வெண்மையான பற்பமாகிவிடும்.

பிரமாணம்:—அரிசியெடை-உ, ங.

அனுபானம், உபயோக முதலியவைகள் மேற்கண்டவைகளேயாம்.

### 438. பவளக்கோடிப் பற்பம் (வேறு.)

சுத்திசெய்த பவளக்கொடி பலம்-க, ஆடாதோடையிலை பலம்-ரு.

செய்முறை:—ஆடாதோடை யிலையையரைத்துப் பவளக்கொடிக்குக் கவசஞ்செய்து மேலும் இரண்டு சீலைமண்செய்து நூறுபலம் வறட்டியிற் புடமிட வேண்டும். பிறகெடுத்து முன்போல் மேற்படி யிலையையரைத்துக் கவசித்து முன்போற் புடமிடவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று நான்கு தடவை புடமிடப் பற்பமாகிவிடும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-முதல்-க.

அனுபானம்:—வெண்ணெய், முலைப்பால், பசுவின்னெய், தேன் ஆகியவைகளாம்.



உபயோகம்:—இரத்தங் கக்கல்ரோகம், க்ஷயரோகம், காசரோகம் ஆகியவைகள் தீரும்.

### 439, பவளக்கோடிப் பற்பம் (வேறு.)

சுத்திசெய்த பவளக்கொடி பலம்-க, இதனைச் சிறு துண்டுகளாகத் துண்டித்துச் சிறு கல்பத்திற்போட்டு வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண்செய்துலர்த்திச் சமையலடுப்பின்கீழ்ப் புதைத்துவிட வேண்டும். ஒருநாள் பூராவாகச் சமையல்செய்த பின்பு மறுநாளெடுத்துப் பார்க்க, சுத்த வெண்மையாயிருந்தால் உத்தமம். அப்படிக்கில்லாவிட்டால் மறுபடியு முன்போல் செய்து முன்போற் புதைத்தெடுக்க வெண்மையான பற்பமாகிவிடும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-உ.

அனுபானம்:—பாலேடு, வெண்ணெய், பசுவின்னெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—இரத்தத்தைச் சுத்திசெய்து தேகபலத்தை விருத்திசெய்யும், இரத்தக் கெடுதியினாலுண்டான சிரங்கு, சொறி, கட்டிகள், இரணங்கள் ஆகியவைகள் தீரும்.

### 440, நற்பவள வைப்பு.

சங்குத்தூள் பலம்-ச, ஜாதிலிங்கம் பலம்-எ. இவ்விரண்டையுங் கல்வத்திற்போட்டுப் பொடித்துச் செம்மறியாட்டுச் சிம்பாலைச் சிறுகச் சிறுக விட்டு நாளொன்றிற்கு நான்கு சாமமாக மூன்றுநாள் பன்னிரண்டு சாமமரைத்துப் பவளம்போலுருட்டிச் சமயிட்டுலர்த்தி ஊறவைத்த நெல்லை ஒரு பானையில் முக்கால்வா

சி போட்டு அதன்மேல் இதை வைத்து அதன்மேலும் நெல்லைப் பானைநிறையப் போட்டுப் பானைவாயைமூடி நெல்லை யவித்து நெல்வெந்த பதத்திலெடுக்கப் பவளவர்ணஞ் சரியாயிருக்கும். சற்றேறக்குறையப் பவளத்தின் குணமும் இதற்குண்டு.

முத்துச் சுத்தி.

(a) தேவையான துளையிடாத நன்முத்தை ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு அது நான்கு அங்குலம் ஆழ்ந்திருக்கும்படியாகப் புளித்த பசுவின் தயிரைவிட்டு வெயிலில் வைக்கவேண்டும். தயிரானது சுண்டி யுலர்ந்து விட்டால் முன்போல் தயிர்விட்டு வெயிலில் வைத்துலர்த்த வேண்டும். இவ்விதம் மூன்று தடவைவிட்டு மூன்று தடவை யுலர்த்தி யெடுத்து ஜலத்தைவிட்டுக் கழுவியெடுத்து ஈரம்வற்ற வெயிலில் வைத்துலர்த்தி யெடுத்துக் கொண்டால் முத்தானது சுத்தியாகி விடும்.

மேற்படி சுத்தி (வேறு)

(b) தாழம்பூத் திராவகம், காடி, இவ்விரண்டையும் சமபாகமாகச் சேர்த்து ஒரு சிறு கலயத்தில் முக்கால்வாசி யிருக்கும்படியாக விட்டு அதில் தேவையான அளவு துளையிடாத நன்முத்தை மெல்லிய வஸ்திரத்தில் முடிந்து அந்தப் பாத்திரத்தின் வாயிற் கிழிக்கட்டித் தொங்கவிட வேண்டும். அந்த முடிப்பானது பாத்திரத்தி னடியிற் படாத விதமாகவு மிருக்கவேண்டும். அடுப்பேற்றிச் சிறுதீயா யெரித்துத் திராவகமெல்லாஞ் சுண்டினபின்பு ஆறவிட்டு எடுத்து ஜலத்தைவிட்டுக் கழுவி அலம்பியெடுக்க முத்திலுள்ள தோஷங்களெல்லாம் நீங்கிச் சுத்தமாகிவிடும். இவ்விதம் சுத்திசெய்யப்பட்ட முத்தைப் பற்பமாகப் பற்பித் துபயோகித்தாலும், அல்லது, பாகப்படுத்தி உபயோகித்தாலும் விசேஷகுண முண்டாகும்.



முத்துச்சுத்தி (வேறு.)

(c) பசுவின்பாலை ஒரு பாத்திரத்தில் அரைவாசியிருக்கும்படியாக விட்டுத் தேவையான அளவு, தொளையிடாத நன்முத்தை மெல்லிய வஸ்திரத்தில் முடிந்து அந்தப் பாத்திரத்தில் கிழிக்கட்டிப் பாத்திரத்தின் அடிப்பாகத்திற் படாமல் இரண்டங்குலம் உயரமாயிருக்கும்படியாகத் தொங்கவிட்டு அடுப்பேற்றிச் சிறுதீயா யெரித்துப் பாலெல்லாஞ் சுண்டினபின்பு இறக்கி ஆறவைத்து ஜலத்தை விட்டுச் சுத்தமாகக் கழுவி ஈரமில்லாம லுலர்த்தி எடுத்துக்கொள்ள அதிலுள்ள தோஷங்களெல்லா நீங்கி முத்தானது சுத்தமாகிவிடும்.

441, முத்துப் பற்பம.

(a) மேற் சொல்லி யிருக்கிறபடி சுத்திசெய்த தொளையிடாத நன்முத்து பலம்-க, வெள்ளைச்சாறு வேளைச் சமூலச்சாறு, வெள்ளெருக்கின் பூ, வெள்ளெருக்கின் இலை இவ்விரண்டையுஞ் சமபாகமாகச் சேர்த்திடித்துப் பிழிந்தசாறு, அத்தியிலைச்சாறு, மருதம் இலைச்சாறு இந்நான்கும் வகை-க-க்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி முத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து வெள்ளைச்சாறு வேளைச்சாற்றைச் சி

றுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேர மரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஒட்டிலிட்டு மேலோடுமூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி இருபதுபலம் வருட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுத்துக் கொள்ளவும்.

மேற்படி மருந்தைக் கல்வத்திலிட்டு வெள்ளெருக்கின் பூ, இலை ஆகியவைகளின் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமமரைத்து முன்போல் பில்லை செய்துலர்த்தி முன்போற் கவசஞ் செய்துலர்த்திப் பதினறுபலம் வருட்டியிற் புடமிடவேண்டும்.

புடம் ஆறினபின் னெடுத்து அதைக் கல்வத்திலிட்டு அத்தியிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேர மரைத்து முன்போல் பில்லை செய்துலர்த்தி முன்போற் கவசஞ் செய்துலர்த்திப் பதினன்குபலம் வருட்டியிற் புடமிடவேண்டும்.

பிறகுகுளிர ஆறினபின் னெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து மருதம் இலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாமநேர மரைத்து முன்போல் பில்லைசெய்துலர்த்தி முன்போற் கவசஞ் செய்துலர்த்திப் பன்னிரண்டு புலம் வருட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுக்கக் கடவுளினது கிருபையால் திவ்யமான பற்பமாகி யிருக்கும்.

பிரமாணம்.—குன்றிமணியெடை-வ-௨.

அனுபானமும், உபயோகமும்:—கள்ளிக் கொழுந்துச்சாறு விராகனெடை-௧, தேன் விராகனெடை-௨. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, வாதக்



கைப்பற்றி வரப்பட்ட பிடிப்பு, கைகால்குத்து, உளைப்பு, நீர்க்கோவைபோல் வயிற்றிற் கட்டிக்கொண்டு மிகவும் வலித்தல் ஆகியவைகள் தீரும்.

குளிர்ந்தஜலம் பலம்-௨, தேன் விராகனெடை-௨. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, சத்தி, விக்கல், பெரும்பாடு, வல்லைக்கட்டி, மகோதரம், பாரிசவாதத் தொடர்ச்சி, வெப்பவாயு, மேகக்குஷ்டம் ஆகியவைகள் தீரும்.

பசுவின்தயிர் பலம்-௨, தேன் விராகனெடை-௨, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, நீர்க்கோவை, பாரிசசன்னி, பெருவயிறு, இராஜப்பரு ஆகியவைகள் தீரும்.

பசுவின்நெய் விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டிருக்கின்றபடி யுண்ண, உன்மத்த சோகை, பெரும்பாடு, பைத்தியவாதம், பெருவயிறு, பித்தசூலம், மைக்கப்பாண்டு, நீரிழிவு, சேத்துமசுரம், பிரமியம் ஆகியவைகள் தீரும்.

பசுவின்பால் பலம்-௩, தேன் விராகனெடை-௨. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யனுபானித்துண்ண, இரத்தநீரிழிவு, உற்பாத அதிசாரம், உற்பாதசத்தி, வெப்பானிலம் ஆகியவை தீரும்.

பனங்கள் பலம்-௨, தேன் விராகனெடை-௨, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யனுபா

னித்துண்ண, சொறிசிரங்கு, தேமல், விஷபாண்டு ஆகியவை தீரும்.

வெந்நீர் பலம்-௫, தேன் விராகனெடை-௩. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யுண்ண, அத்திப் பயோதரச் சிலந்தி எலும்புக்கிப்பரு, பாரிச வெப்பப் பெரும்பாடு, முகப்பரு, வாய்ப்பூட்டுச் சன்னிப்பரு, மேகவெட்டை, அதிசாரம் ஆகியவை தீரும்.

தேன் விராகனெடை-௧. இதில் மேற்கண்டபடி யனுபானித்துண்ண, மூத்திரக் கிரிச்சரம், நீரறுகல், ஊர்த்த சுவாசபந்தம், விக்கல், நீர்க்கட்டு, நீரொழுக்கு, நீரெரிவு, நீர்ப்பீனசம், மதுமேகம், யோனிப் [illegible] வ, லிங்கப்புற்று, உடிரோமக் கிரந்திப்புண், விரத்மூலம் ஆகியவைகள் தீரும்.

கிராக்ஷப்பழரசம் பலம்-௫, தேன் விராகனெடை-௨. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யனுபானித்துண்ண, வலியுடன் கூடின அண்டவாதம், வலியில்லாத அண்டவாதம் என்னும் இருவகை அண்ட வாதங்களும், கால்வீக்கம், காலிசிவு, பாரிசவாதம் ஆகியவை தீரும்.

கைம்மாறு வெற்றிலைச்சாறு விராகனெடை-க௦, தேன் விராகனெடை-க௦ ஆகிய இரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யனுபானித்துண்ண, இருமல், தாகம் ஆகியவை தீரும்.

பன்னீர் பலம்-௫, தேன் விராகனெடை-௨, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யனுபானித்துண்ண, பித்த சன்னிபாதம், நேத்திரப் படலி



கை. நேத்திரவாயு, பாரிசாந்தகாரம், மாலைக்கண், பித்தகுன்மம் ஆகியவைகள் தீரும்.

பசுவின் வெண்ணெய் பலம்-௫, தேன் விராகனெடை-௨. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யனுபானித்துண்ண, மாரி காலத்தில் கால்களெல்லாம் மரத்தைப்போல் திமிரடைந்து அசைக்கவொட்டாம லிருப்பதும் எப்போதும் வலித்துக்கொண்டு உப்பிசமும், பெருவயிறும், உடம்பெங்குந் தேள்கொட்டினதுபோன்ற கடுகடுப்பும், எரிச்சலும், விக்கலும், பிரமையு முண்டாக்கத் தக்கதுமான இருவகை ரோகங்களுந் தீரும்.

சீனிசர்க்கரை விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யனுபானித்துண்ண, சொறிசிரங்கு, கரப்பான், சிலந்தி, செவ்வாப்பு, சரீரமெல்லாம் மொத்தையாகக் கட்டிக்கொண்டு அசைக்கவொட்டாத வேதனையையும், திமிரையுங்கொடுத்து அத்துடன் கோடைக்கொப்பளம், தேமல் ஆகிய இவைகளை யுண்டாக்கும்; வாதத்தைப் பற்றிய வியாதிகளும், முதலில் உற்பாதக் காய்ச்சலும், குளிருங்கண்டு அத்துடன் வாந்தி, விக்கல், இருமல் ஆகிய இவைகள் தோன்றித் தேகமெங்கும் சங்கம் பழத்தைப்போன்ற கொப்பளங்கள், பருக்கள், கட்டிகள் ஆகியவை புறப்பட்டு உபாதியைக் கொடுக்கும் பித்தத்தைப்பற்றிய வியாதிகளும், வயிற்றெரிவு, பாரிப்பு, வாதனை, வீக்கம் ஆகிய இவைகளை யுண்டாக்கி அவற்றுடன் ஓக்காளம், விக்கல் ஆகியவைகளை வரச்செய்து ஆசனத்தைச் சேர்ந்த இரண்டு

பக்கங்களிலும் புட்டங்களிலும் பருக்கள், கட்டிகள், ஆகியவைகளை வரப்பண்ணி அங்குள்ள சதைகளை வெடிக்கச் செய்கின்ற சேத்துமத்தைப் பற்றிய விபாதிரணும் தீரும்.

குளிர்ந்தநீர் பலம்-ஒ, தேன் பலம்-ஒ. இவ்விரண்டையுஞ் சேர்த்து மேற்கண்டபடி யநுபானித்துண்ணை, பாதத்தில் இரணங்கண்டு திமிருண்டாதல், அக்கினிமந்தப் படுதல் ஆகிய இக்குணங்களை யுடைய வாதக்களவுரணம் தீரும்.

களாச்சமூலச்சாறு விராகனெடை-உ, தேன் விராகனெடை-உ. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பிரமாணப்படி யநுபானித்துண்ணே, பல்லடியில் அதிக ரணங்கண்டு மிக வேதனை தோன்றுதல், வாந்தியும், அதிகப் பசியும், தாகமுமுண்டாதல் ஆகிய இக்குணங்களை யுடைய பித்தக்களவுரணம் தீரும்.

மூங்கிற் கிழங்குச்சாறு விராகனெடை-உ; தேன் விராகனெடை-ரு. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யநுபானித்துண்ண, மூக்குத்தண்டில் அதிக இரணங்கண்டு வெகு உபத்திரவத்தைக் கொடுத்தல், ஒருவேளை அதிகப் பசியையும், மறுவேளை அக்கினி மந்தத்தையு முண்டாக்குதல் என்னு மிக்குணங்களை யுடைய சேத்துமக் களவுரணம் என்னும்ரோகம் தீரும்.

விளாவிலைச்சாறு பலம்-ஒ. தேன் விராகனெடை-உ. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யுண்ண, கண்டத்தில் இரணங்காணல், வாயில் அரோச-



கமாக உமிழ்நீரை யுண்டாக்குதல் ஆகிய குணங்களை யுடைய வாதமோகை ரணம் தீரும்.

மூக்கிரிகைப் பழச்சாறு பலம்-ஒ, தேன் பலம்-ஒ, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யநுபானித்துண்ண, நெற்றியில் இரணங்கண்டு சதா எரிச்சலையும், பசிதாகத்தையும் உண்டாக்குதல் என்னும் குணத்தையுடைய பித்தமோகை ரணம் தீரும்.

நாணற்கறகண்டு விராகனெடை-உ, தேன் விராகனெடை-உ. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யநுபானித்துண்ண, முழங்காலில் இரணங்கண்டு வலியுடன் பசிதாக மில்லாதிருத்தல் என்னுங் குணத்தையுடைய சேத்துமமோகை ரணம் தீரும்.

வாழைச் சமூலச்சாறு பலம்-க, தேன் பலம்-ஒ, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யநுபானித்துண்ண, இடுப்பைச் சுற்றிலும் வட்டமான ரணங்கண்டு மரம்போல ஸ்மரணை யின்றிப் பசிதீபன மில்லாதிருத்தல் என்னுங் குணத்தையுடைய வாதநகை ரணம் தீரும்.

ஐம்பு நாவற்பழச்சாறு பலம்-ஒ, தேன் பலம்-ரு. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யநுபானித்துண்ண, கைவிரல்களின் அடியில் ரணங்கண்டு தோலுரித்து எரிச்சலும், நமைச்சலு முண்டாகி விசேஷ பசியு மப்சகமுங் காணுதல் என்னுங் குணத்தையுடைய பித்தநகை ரணந் தீரும்.

பசுவின்தயிர் பலம்-ஒ, தேன் பலம்-ஒ. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யநுபானித்து

ண்ணை, அடிவயிற்றில் ரணங்கண்டு அதிக நீரேற்றங் கொண்டு பசிதாகமின்றி வெள்ளைப்பூண்டின் வாசனையுடைய ஏப்பத்தை யுண்டாக்குதல் என்னுங் குணத்தையுடைய சேத்துமகனை ரணம் தீரும்.

புளித்தகாடி பலம்-௩, தேன் பலம்-௨. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யனுபானித்துண்ணை, முதுகில் ரணங்கண்டு அதிக நோயின்றி மார்பின் பள்ளத்தில் கெரிகட்டிப் பசிதாகமின்றி அக்குளில் நோவுண்டாதல் என்னுங் குணத்தையுடைய வாததானை ரணம் தீரும்.

தென்னங்கள், அல்லது, சாறுயம் பலம்-௩, தேன் பலம்-௨. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யனுபானித்துண்ணை, அரையில் ரணங்கண்டு அது வெடித்துச் சிலைநீரும், இரத்தமும் சதாவடிந்து அன்னாந்துவேதமா யிருத்தல் என்னுங் குணத்தையுடைய பித்ததானை ரணம் தீரும்.

வெந்நீர் பலம்-௨. தேன் பலம்-௩, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்டபடி யுண்ணை, பீஜத்தில் இரணங்கண்டு அதிற் சீழும், சிலைநீரும் வடிந்து பக்குக்கட்டிச் சதா வேதனையை யுண்டாக்கி வயிற்றை வீங்கச்செய்து பசிதாகம், நித்திரை யில்லாமை ஆகியவைகளை யுண்டாக்குதல் என்னும் சிலேத்தும தானை ரணம் தீரும்.

பத்தியம்:—ஸ்திரீ சங்கமத்தை அறவே நீக்கவேண்டும். புளி, புகை, உப்பு, ஆகியவைகளை தேகம், ரோகம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி அறவே நீக்கியும் சுட்டும் வறுத்தும் சேர்த்தும், அரைப்பாகமா



கச்சேர்த்தும் சமயோசிதம்போல கடும்பத்தியம், இலகுபத்தியம், இச்சாப்பத்தியம் ஆகியவைகளில் ஒன்றை யேற்படுத்த வேண்டும்.

## 442 முத்துப்பற்பம் (வேறு.)

மேற்கண்ட பாகங்களில் ஒரு வகையாகச் சுத்தி செய்யப்பட்ட தொளையிடாத நன்முத்து விராகனெடை-௫, எருக்கம்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—முத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி யெருக்கம்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரம் மரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஒட்டிலிட்டு மேலோடுமூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி ஒரு மணங்கு கருட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுக்கக் கடவுளினது கிருபையால் திவ்வியமான பற்பமா யிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧-௫.

அநுபானமும், உபயோகமும்:—ஏலரிச் சூரணம் குன்றிமணியெடை-௮, மூங்கிலுப்புச் சூரணம் குன்றிமணியெடை-௪, வெண்ணெய் விராகனெடை-௫, தேன் விராகனெடை-௯. இவை யெல்லாவற்றையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண மேற்சுவாசம், இருமல் முதலியநுரையீரல் சம்பந்தமான எல்லா வியாதிகளையு நீக்கி நுரையீரலைப் பலப்படுத்தும். இருதயம், தலைமூளை ஆகியவைகளைப் பலப்படுத்தி உற்சாகத்தை யுண்டாக்கும்.

மாதுளம் பழச்சாறு விராகனெடை-௫, தேன் விராகனெடை-௫. இவ்விரண்டையுமிஸ்ரமித்து மேற்

கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, இரத்தபித்த மேகம், பிரதரரோகம், ஆகியவைகள் தீரும்.

வெண் மருதம்பட்டைச் சாறு விராகனெடை ௫, சீந்திற்சர்க்கரை குன்றிமணியெடை ௮, தேன் விராகனெடை ௫. இவையெல்லாவற்றையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, இந்திரிய சம்பந்தமான வியாதிகள் தீரும். கண்பார்வை மந்தம் நீங்கிக் கண்ணொளி யதிகப்படும்.

வெள்ளரிவிதைப் பருப்பு விராகனெடை ௩, தேன் விராகனெடை ௫. இவ்விரண்டையுஞ் சேர்த்து வெண்ணெய்போலரைத்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, மூத்திரக் கிரிச்சரரோகம், பிரமியரோகம் ஆகியவைகள் தீரும்.

ஐந்தியாறு சூரணம் விராகனெடை ௧, தேன் விராகனெடை ௨. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, கல்லடைப்பு, சதையடைப்பு ஆகியவைகள் தீரும்.

அரிசித்திப்பிலிச் சூரணம் குன்றிமணியெடை ௪, ஏலரிசிச்சூரணம் குன்றிமணியெடை ௪, தேன் விராகனெடை ௨. இவையெல்லாவற்றையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தை யனுபானித்துண்ண, சுவாசரோகம், இருமல்ரோகம் ஆகியவைகள் தீரும். அஸ்திச்சூடு முதலிய உஷ்ணங்களினால் தேகம் இளைத்



துப்போதல் தீர்ந்து, தேகம் ஸ்தூலிக்கும். வாயு, சூலை ஆகியவைகள் தீரும்.

### 41. முத்துப்பற்பம் (வேறு,)

சுத்திசெய்த துளையிடாத நன்முத்து விராகனெடை ௫, வாழைக்கிழங்குச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி முத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்குசாமநேர மரைத்துப் வில்லைசெய்துலர்த்தி ஓட்டில்வைத்து மேலோடுமூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்தி ஒருவிசை வரட்டியிற் புடமிட்டாறின பின் னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை ௧-௧½.

அனுபானம்:—பசுவின் வெண்ணெய், பாலேடு, பசுவினெய் ஆகியவைகளாம்.

உபயோகம்:—இருதயத்தின் உஷ்ணம், உஷ்ணத்தினால் நேரிட்ட இருதயத்துடிப்பு, இருதய அதிர்ச்சி ஆகியவைகள் தீரும்.

### 41 முத்துப்பற்பம் (வேறு).

சுத்திசெய்த முத்து விராகனெடை ௧, தாழை விழுதுச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி முத்தை ஒரு சிறிய புது அகலில்வைத்துக் கரிநெருப்பில் அகல் சிவக்கும்படி ஊதவேண்டும். அது சிவந்தவுடன் அதையெடுத்து மேற்படி சாற்றில் விடவேண்டும். ஆறினபின்பு முன்போல் அகலில்வைத்து முன்போற்காய்ச்சி முன்போல் முன்சாற்றில் தோய்க்கவேண்டும். இவ்விதம் பட்டு

கி மடக்கிக் காய்ச்சிக் காய்ச்சித் தோய்த்து வெண்ணெய்போலிரைப்பதற்குத் தகுந்தபடியாய்ப் பக்குவமான சமயத்தில் எடுத்து ஈரமில்லாமலுலர்த்திக் கல்வத்திற் பொடித்து வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம், அனுபானம், உபயோகமுதலியவைகளெல்லா மேற்கண்டவைகளே யாம்.

## 445. முத்துப்பற்பம் (வேறு)

சுத்தித்த துளையிடாத கசகசா முத்து விராகனெடை-௧. இதனை ஒருசிறு பீங்கான் பாத்திரத்திற்போட்டு எலுமிச்சம் பழச்சாற்றை அதில்விட்டு வெயிலில் வைக்கவேண்டும். சாறானது சுமார் மூன்றுபலமிருந்தால் போதுமானது. பகலில் வெயிலில் வைத்து மறுநாட்காலையில் அந்தச்சாற்றை யிறுத்துவிட்டுப் புதியசாறு விடவேண்டும். இவ்விதம் இருபத்தொருநாள்செய்து இருபத்திரண்டாநாள் ஒரு சிறு கலயத்தில் அந்தச் சாற்றுடனேவிட்டு வாய்மூடிச் சீலைமண்செய்து ஒருமணங்கு விராட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-௧-௨.

அனுபானம்:—பசுவின் வெண்ணெய், தேன், பசுவினெய், *வாதுமைஹல்வா, கோதுமைப் பால்ஹல்வா முதலியவைகளாம்.

உபயோகம்:—தாதுநஷ்டம், வீரியநஷ்டம், தேகத்துர்ப்பலம், தலைமூளைத் துர்ப்பலம், இரைப்பை, ஈரல், இருதயம் ஆகியவைகளின் துர்ப்பலம் நீங்கி மேற்படி இராஜகருவிகள்பலப்பட்டு, தாதுபுஷ்டி, வீரியபுஷ்டி ஆகியவைகளுண்டாகும்; பிரமேகம், வெட்



டைரோகம், துரிதஸ்கலிதம், இந்திரியம் நீர்த்திருத்தல் முதலிய ரோகங்களுக்கு இது சஞ்சீவிக் கொப்பானது.

## 446 முத்துப்பற்பம் (வேறு)

சுத்திசெய்த துளையிடாத நன்முத்து விராகனெடை-௧, பருமனான எலுமிச்சம்பழம்-௫.

செய்முறை:—மேற்படி முத்துக்களை ஐந்துபாகமாகச்செய்து ஒவ்வொரு எலுமிச்சம்பழத்திலும் பலதுவாரங்களிட்டு ஒவ்வொருபாகத்தைத் துவாரத்திற் கொன்றாக ஒவ்வொரு எலுமிச்சம் பழத்திற்குள் செலுத்தி ஒவ்வொரு எலுமிச்சம்பழத்தையும் மும்மூன்று சீலைமண்செய்து ஒருமணங்கு விராட்டியிற் புடமிட்டு எடுத்து முன்போல் எலுமிச்சம் பழத்திற்குட் செலுத்தி முன்போற் புடமிடவேண்டும். இவ்விதம் மூன்று, அல்லது, நான்கு புடமிட்டால் முத்தானது பற்பமாகிவிடும். ஜாக்கிரதையாக எல்லாவற்றையுஞ் சேர்த்துப் பொடித்துச் சீஷாவில் வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧.

அனுபானம்:—பசுவின் வெண்ணெய், பசுவினெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—இருதயம், தலைமூளை, ஈரல் முதலிய இராஜகருவிகளின் துர்ப்பலத்தை நீக்கி அவற்றைப் பலப்படுத்தி அவற்றிற்குக் குதூகலிப்பையுண்டாக்குவதில் இது முதல்தரமானது. தேகபலம், தேகதிடம் ஆகியவைகளுண்டாகும். இன்னும் இந்திரியஸ்ராவகம், பிரமேகம், வெட்டைரோகம், துரிதஸ்கலி

தம், சாது பலஹீனம் ஆகியவைகளைப் போக்கும். தாதுபுஷ்டியையும், புருஷ சக்தியையு மதிகப்படுத்தும்.

## 447. முத்துப்பற்பம் (வேறு).

சுத்திசெய்த நன்முத்து விராகனெடை-௩. இதை ஒரு கலயத்திற்போட்டு அதில் ஐந்துபலம் பசுவின்பாலைப்விட்டு வாய்க்குச்சீலைவிட்டு மூன்று சீலைமண்செய்து ஒருவிசை வரூட்டியில் புடமிட்டாறினபின்னெடுக்கப் பற்பமாயிருக்கும். நெருப்புக்குறைவினால் ஒருபுடத்தில் பற்பமாகாவிட்டால் மறுபுடம் முன்போலிடப் பற்பமாகிவிடும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧-௨.

அநுபானம்:—பசுவின் வெண்ணெய், பசுவினெய், தேன், வாதுமை ஹல்வா முதலியன.

உபயோகம்:—தலைமூளை, இருதயம், ஈரல் முதலிய இராஜகருவிகளின் வியாதியில் இது அதிகம் உபயோகப்படுகிறது. அவற்றின் துர்ப்பலங்களை நீக்கி அவற்றைப் பலப்படுத்துவதில் இது மிகவுஞ் சிறந்தது. இதனைத் தகுந்த ஹல்வாக்கள், லேகியங்கள் ஆகியவைகளுடன் சேர்த்துபயோகிக்க நிச்சயமான குணத்தைத் தரும்.

## 448. முத்துப்பற்பம் (வேறு)

சுத்திசெய்த நன்முத்து விராகனெடை-௩, பசுவின்பால் செல்லத்தக்க அளவு, காவுஜபான் இலை பலம்-௫.

செய்முறை:—முத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்துப்பாலைச் சிறுகச் சிறுகவார்த்துநான்குசாம நேரமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி காவுஜபான் இலையையரைத்து அதற்குள் வைத்துக் கவசஞ்செய்து இரண்டு சீலைமண்செய்து ஒருவிசை வரூட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுக்கப் பற்பமாகிவிடும்.



பிரமாணம்:—அரிசியெடை-௧-௨.

அநுபானம்:—சீமை இலந்தைப்பழச்சாறு, கோப்முறப்பா, பசுவின்வெண்ணெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—இரத்தக்ஷயம், இரத்தகாசம், அஸ்திசுரம், அஸ்திச்சூடு, எலும்புருக்கிரோகம் முதலியவைகள் தீரும்.

## 449. முத்துப்பற்பம் (வேறு.)

முத்து விராகனெடை-௪, இதனை-௫-பலம் சங்கம்பழச்சாற்றிலாவது, பூவந்திப்பழச் சாற்றிலாவது புளியிலைச் சாற்றிலாவதுபோட்டு நான்குசாமநேரம் ஊறவைத்து எடுத்து முள்ளுக்கத்திரிச்சாற்றில் ஒருநாளூறவைத்து ஒரு சிறுகலயத்தில் மேற்படி சாற்றைவிட்டு மூன்று சீலைமண்செய்து-௫௦௦-பலம் வரூட்டியிற் புடமிட்டாறினபின்னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧.

அநுபானம்:—பசுவின் வெண்ணெய், பசுவினெய்; தேன், முதலியவைகளாம்.

உபயோகம்:—காசம், க்ஷயம், அஸ்திச்சூடு, அஸ்திவெட்டை, எலும்புருக்கி ரோகம் ஆகியவைகள் தீரும்.

## 450. முத்துச் சுண்ணம்.

சுத்திசெய்த முத்து விராகனெடை-ரு. இதனை ஒரு பீங்கானிற் போட்டு எருக்கம்பாலை மிதக்கவிட்டு வெயிலில் வைக்கவேண்டும். அது சுண்டிப்போனவுடன் முன்போல் எருக்கம்பாலைவிட்டு வெயிலில் வைக்கவேண்டும். இவ்விதம் பதின்மூன்று தடவைகள் விட்டுச் சுண்டவைத்து எல்லாவற்றையு மொத்தையாகத் திரட்டி ஒரு உருண்டையாகச்செய்து வெயிலில் வைத்து நன்று யுலர்த்தியின்பு ஐந்து சீலைமண் செய்து உலர்த்தி-சo-பலம் வறட்டியில் புடமிட்டாறினபின் னெடுக்கச் சுண்ணமாகி யிருக்கும்.

பிரமாணம்:—உ, அரிசியெடை முதல்-ச-அரிசியெடை வரையில்.

அநுபானம்:—வெண்ணெய், நெய், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:—மேகரோகங்கள், அஸ்திச்சூடு, மேகச்சூடு, எலும்புருக்கி ரோகம், இருமல்ரோகம்; காசரோகம், சுவாசரோகம், பிராணி, ஆகியவைகள் தீர்ந்து தாதுவிருத்தி யுண்டாகும்; இந்திரியங் கட்டுப்படும்.

### வயிரச் சுத்தி.

தேவையான வயிரத்தைப் பீங்கான் பாத்திரத்திற்போட்டு அதில் குதிரை மூத்திரத்தை விட்டு வெயிலில் வைக்கவேண்டும். அது சுண்டினவுடன் மறுபடியும் முன்போல் மூத்திரத்தை விட்டு வெயிலில் வைக்கவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழுதடவைகள் செய்தால் வைரமானது சுத்தியாகி விடும்.



## 451. வயிரப் பற்பம்.

சுத்திசெய்த வயிரம் குன்றிமணியெடை-க, மூட்டுப்பூச்சி குன்றிமணியெடை-அ, மூட்டுப்பூச்சியை வெண்ணெய்போ லரைத்து மேற்படி வயிரத்திற்குக் கவசஞ்செய்து கழுதையின் தாடை யெலும்பைத் தூள்செய்து அதில் அரைப்பலத்தை ஓட்டில்வைத்து அதன்மீது முன் கவசஞ் செய்ததை வைத்து அதன்மீது அரைப்பலம் முன் தூளைப்போட்டு மேலோடுமூடிச் சீலைமண்செய்து ஐந்துவிசை வறட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுக்க வயிரமானது பற்பமா யிருக்கும்.

மேற்கண்டபடி வயிரத்தைக் கவசஞ்செய்து கழுதையின் தாடை யெலும்பைத் தமரிட்டுத் துவாரஞ்செய்து அதனுள் இக்கவசத்தைச் செலுத்தி அதன்மீது மேற்படி தூளையே வைத்துச் செம்மையாக அமுக்கித் தாடை யெலும்பின்மீது ஐந்து சீலை மண்செய்துலர்த்தி முன்போற் புடமிடப் பற்பமாகி விடும்.

பிரமாணம்:—அரைக்கடுகு முதல் ஒருகடுகு வரையில்.

அநுபானமும், உபயோகமும்:—சாமந்திப்பூச்சாறு விராகனெடை-உ, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யநுபானித்துண்ண, எல்லாவகைச் சுரங்களும் தீரும். இருதய அதிர்ச்சி, இருதயத்துடிப்பு ஆகியவைகள் நீங்கும்.

வேப்பிலைச்சாறு, அரசங் கொழுந்துச்சாறு, தேன் இவை வகை-க-க்கு விராகனெடை-ரு. இவற்றைமிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி ய

னுபானித்துண்ண, அஸ்திசுரம், கபசம்பந்தமான இருமல் ஆகியவைகள் தீரும்.

அரிசித்திப்பிலிச் சூரணம், ஜாதிக்காய்ச் சூரணம், ஓமச் சூரணம் இவை வகை-௧-க்குக் குன்றிமணியெடை-௩. தேன் விராகனெடை-௩. இவை யெல்லாவற்றையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, சுவாசரோகம், விஷமசுரம், சுரக்கட்டி, கபசம்பந்தமான இருமல், வயிற்றுநோய் ஆகியவைகள் தீரும்.

துளசி யிலைச்சாறு விராகனெடை-௧௦, மிளகுச் சூரணம் குன்றிமணியெடை-௪. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, மூன்றுமுறைச் சுரம், நான்காமுறைச்சுரம் ஆகியவைகள் தீரும்.

பஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, இவற்றைத் தனித்தனி யிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வகை-௧-க்குக் குன்றிமணியெடை-௪; தாளிசப்பத்திரிச் சூரணம் குன்றிமணியெடை-௩, தேன் விராகனெடை-௨. இவை யெல்லாவற்றையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, தலைமூளையைப் பற்றின வியாதிகளெல்லாம் தீரும். தேகபலம் அதிகப்படும்.

## 452. வயிரப்பற்பம் (வேறு.)

சுத்திசெய்த வயிரம் குன்றிமணி யெடை-௪,
ச்சைச் சிற்றாத்தைப் பரைத்தவிழுது பலம்-௧௦.



செய்முறை:—மேற்கண்ட சிற்றாத்தை விழுதை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை அடையாகத்தட்டி அகலிலவைத்து அதன்மீது வயிரத்தைவைத்து அதன்மீது மறுஅடையைவைத்துச் செம்மையாக அழுத்தி மேலகல்மூடி ஏழு சீலைமண் செய்து-௱௦௦-பலம் வரட்டியில் புடமிட்டெடுக்கப் பற்பமாயிருக்கும். ஒருபுடத்தில் பற்பமாகா விட்டால் மறுபடியும் இரண்டொரு புடம்போட்டுக் கொள்ளப் பற்பமாகி விடும்.

பிரமாணம்:—அரைக்கடுகு முதல், ஒருகடுகு வரையில்.

அனுபானம்:—வெண்ணெய் பசுவின்நெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—தேகசுபாவச் சூட்டை விருத்தி செய்யும், தலைமூளை, இருதயம், ஈரல் முதலிய இராஜ கருவிகளைப் பலப்படுத்தும். வேறெந்த மருந்தினும் தீராதெனக் கைவிடப்பட்ட வியாதிகள், நாட்பட்ட வியாதிகள் ஆகியவைகளைத் தீர்ப்பதில் இது விசேஷகுணத்தை யுடையது.

## 453. வயிரபற்பம் (வேறு)

சுத்தித்த வயிரம் குன்றிமணி யெடை-௮, என்ணெய் வெண்காரம், சுத்திசெய்த வெள்ளைப் பாஷாணம், இவை வகை-௧-க்கு விராகனெடை-௯.

செய்முறை:—பின்கண்ட இரண்டையும் தூள் செய்து இரண்டு பாகமாக்கி ஒருபாகத்தை ஒரு பிங்கான் மைக்கூட்டில் ஒரு பாகத்தைப் போட்டு அதன்மீது வைரத்தைவைத்து அதன்மீது மறுபாதி மருந்

த்தைப்போட்டு வாயைப் பீங்கான் தாலத்தால் மூடி வஸ்திரசீலைமண் செய்துலர்த்தி ஐந்நூறுபலம் வறட்டியிற் புடமிட வேண்டும். கடவுளினது கிருபையால் ஒரே புடத்திற் பற்பமாகி விடும். ஒருவேளை அக்கினி விகற்பத்தால் அப்படி யாகாவிட்டால் இரண்டாந்தடவையு முன்போற் புடம்போட அவசியம் பற்பமாகி விடும்.

அநுபானம், உபயோகம், பிரமாணம் முதலியவைகளெல்லா மேற்கண்டவைகளேயாம்.

## 454. வயிரபற்பம் (வேறு)

வயிரம் குன்றிமணி யெடை-௮. கழுதையின் தாடை யெலும்பு-௧, வெள்ளெருக்கின் இலையும் பூவும் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—தாடை யெலும்பின் மத்தியில் தமரினால் துவாரமிட்டு அதற்குள் வைரத்தைச் செலுத்தி முன் துளையே அதிற்போட்டுச் செம்மையாக அழுத்தி வெள்ளெருக்கின் இலையையும் பூவையும் சமபாகமாகச் சேர்த்து வெண்ணெய்போ லரைத்து, அதன்மீது ஒரு அங்குலக்கனம் கவசஞ்செய்து அதன்மீது மூன்று மண்சீலைசெய்து ஐந்நூறு வறட்டியிற் புடமிடவேண்டும். கடவுளினது கிருபையால் ஒரே புடத்திற் பற்பமாகிவிடும். அப்படி யாகாவிட்டால் மறுபடியு முன்போற் புடமிட அவசியம் பற்பமாகி விடும்.

பிரமாணம்:—அரைக் கடுகளவு முதல், ஒரு கடுகளவு வரை.



அநுபானமும், உபயோகமும்:—ஒரு குன்றிமணியெடை கஸ்தூரியுடன் மேற்கண்ட பிரமாணப்படி கலந்து தேனில் அல்லது, முலைப்பாலில் மிஸ்ரமித்துக் கொடுக்க அரைப்பிணமாகிமரணாவஸ்தையி லிருப்பவர்கள் ஒருமணி நேரத்திற்குள் சுபாவ ஸ்திதியை யடைந்து சுபாவமாய்ப் பேசும்படியான சக்தியுண்டாகும்.

தங்கரேக்கு குன்றிமணி யெடை-௧, இதனைத் தேனில் அல்லது முலைப்பாலில் மிஸ்ரமித்து மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி கொடுக்க, இருதய நடை தடைப்பட்டு, அல்லது, இருதயத்திற் குளிர்ச்சியுண்டாகி ஜில்லிட்டுப் போனவர்களுக்கும் இருதய நடையைச் சரிப்படுத்தி அதிலுள்ள குளிர்ச்சி முதலியவைகளை நீக்கிச் சுபாவ ஸ்திதியிலாக்கி விடும்.

தேன், முலைப்பால் முதலியவைகளில் மேற்கண்ட பிரமாணப்படி யனுபானித்துண்ண, இருதய சம்பந்தமான எல்லாவியாதிகளையுங் கண்டிக்கும்.

இன்னும் அநுபான விசேஷங்களிற் பிரமாணப்படி யுபயோகிக்க நாட்பட்ட தொந்தரோகங்கள், கஷ்டசாத்தியரோகங்கள் முதலிய அநேக ரோகங்கள் தீரும்.

## 455. வயிரபற்பம் (வேறு)

வயிரம் குன்றிமணி யெடை-௮. இதனை ஒரு பீங்கான் பாத்திரத்திற்போட்டு அதிற் சுமார் ஐந்துபலம் குதிரை மூத்திரத்தைவிட்டு வெயிலில்வைக்க வேண்டும். அது உலர்ந்தபின்பு முன்போல் அந்த மூத்திரத்தைவிட்டு முன்போல் உலர்த்தவேண்டும். மூன்றாந்

தடவையும் முன்போல்விட்டு உலர்த்தி அதிலுள்ள எல்லாவற்றையும் ஒரு கலயத்திற் சுரண்டிப்போட்டு அதிற் பத்துப்பலம் பிரண்டைச் சாற்றைவிட்டு ஒரு நாள் வெயிலில்வைத்து வாய்க்குச்சில்லிட்டு ஏழுசீலை மண்செய்து ஐந்நூறுபலம் வறட்டியிற் புடமிட்டு ஆறினபின்னெடுக்க வயிரமானது பற்பமாகியிருக்கும்.

பிரமாணம், அனுபானம், உபயோக முதலிய வைகளெல்லா மேற்கண்டவைகளேயாம்.

## 456. வயிரபற்பம் (வேறு.]

சுத்திசெய்த வயிரம் குன்றிமணி யெடை-௮, பெருங்காயம், இந்துப்பு இவை வகை-௧-க்கு விராகனெடை-௫, கொள்ளை வேகவைத்த ஜலம் பலம்-௧௦.

செய்முறை:—பின்சொன்ன இரண்டு சரக்குகளையும் சேர்த்தரைத்து வெண்ணெய் போலான பின்பு மேற்படி கஷாயத்தில் கரைத்துவைத்துக் கொள்ளவும். இந்தக் கலவையிற் சுமார் மூன்று விராகனெடையை ஒரு சிறு பீங்கானில் விட்டுக்கொண்டு மேற்படி வயிரத்தைக் கரிநெருப்பிற் காய்ச்சித் தோய்க்கவேண்டும். குளிர ஆறினபின்பு அந்த ஜலத்தை யிறுத்தி விட்டு முன்போல் மறுபடியும் ஜலத்தைவிட்டு முன்போற் காய்ச்சி முன்போல் தோய்க்கவும் இவ்விதம டக்கி மடக்கி இருபத்தொரு தடவைகள் செய்ய வயிரமானது பற்பமாகி விடும். சில சமயங்களில் அப்படிப் பற்பமாகாவிட்டால் இன்னும் ஐந்தாறு தடவை முன்போற் காய்ச்சித் தோய்த்துக்கொள்ள வேண்டும். பற்பமாகிவிடும். இதனைக் கல்வத்திலிட்டுப் பன்னீரைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டுசாமநேரமரைத்



து வெயிலிலுலர்த்தி மறுபடியும் பொடித்துச் சீசாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—அரைக்கடுகு முதல், ஒருகடுகு வரையில்.

அனுபானமும், உபயோகமும்:—செம்பரத்தம்பூச்சாறு விராகனெடை-௬, கற்கண்டுத்தூள் விராகனெடை-௩. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, இருதயநடுக்கம், இருதய அதிர்ச்சி, தேகநடுக்கம் முதலியவைகள் தீரும். பசிதீபனம் அதிகப்படும், தாது புஷ்டியுண்டாகும். தலைமூளை, இருதயம் ஆகியவைகளைப் பலப்படுத்தும். முகம், தேகம் ஆகியவைகளிலுள்ள திரைகள்மாறி முகவசீகரம், தேக வசீகரம், தேஜஸ் ஆகியவைகளுண்டாகும்.

தேன் விராகனெடை-௩, பசுவின்னெய் விராகனெடை-௩, மூங்கிலுப்புச் சூரணம் குன்றிமணி யெடை-௪ இவை யெல்லாவற்றையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, க்ஷயரோகம், காசரோகம் ஆகியவைகள் தீரும்.

வில்வ இலைச்சாறு விராகனெடை-௩, மிளகுச்சூரணம் குன்றிமணி யெடை-௪. இவற்றை மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, எல்லாவகை ஜன்னிபாத சுரங்களும் தீரும்.

கையாந்தகரைச்சாறு விராகனெடை-௮, தேன் விராகனெடை-௩, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்

ளை இரத்தபித்த ரோகம், பிரதரரோகம், இரத்தமூல ரோகம் ஆகியவைகள் தீரும்.

ஆனை யிலைச்சாறு விராகனெடை-௩, மிளகுச் சூரணம் குன்றிமணி யெடை-௪. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, தருணசுரம் தீரும்.

மஞ்சட் கடுக்காய்த்தோற் சூரணம், தான்றிக் காய்த்தோற் சூரணம், நெல்லிவற்றற் சூரணம் இவை வகை-க-க்கு விராகனெடை-வ, சோம்புச் சூரணம் விராகனெடை-வ, தேன் விராகனெடை-௬. இவை யெல்லாவற்றையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, மூலசம்பந்தமான வியாதிகள், நீர்ப்பிளிச ரோகம், சீழ்ப்பிளிச ரோகம் முதலிய எல்லாவகைப் பிளிச ரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

## 457. வயிரபற்பம் (வேறு)

சுத்திசெய்த வயிரம் குன்றிமணி யெடை - ௧, வெண் செம்மறியாட்டுக் கொம்பு, கல்லபாம்பின் எலும்பு, உலர்த்தின பூநாகம், முயலின்பல், உலர்த்தின எலுமிச்சம்பழம் இவை வகை-க-க்கு விராகனெடை-௧, கள்ளிப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:——முன்சொன்ன சரக்குகளையெல்லாம் தனித்தனி பொடித்துப் பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து கள்ளிப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேர மரைத்து மூசையும் மூடியுஞ்செய்து உலர்த்தி அது நன்றாயுலர்ந்தபின்பு முன்



வயிரத்தை அந்த மூசைக்குள் வைத்து அந்த மூடியால் மூடிக் கொல்லுலையில் வைத்து ஆறுமணிநேரம் ஊதியெடுக்கப் பற்பமாகி யிருக்கும்.

### குறிப்பு.

மூசையின்மீது வழு சீலைமண் செய்துலர்த்தி உலையில் வைத்து ஆரம்பத்தில் மெதுவாயூதிக் கிரமேணு வாய்த் தீயை அதிகப்படுத்தி வரவேண்டும். இதனைச் செய்து முடிப்பதற்குக் கொஞ்சம் கைபாகமும், கொஞ்சம் புத்திநுட்பமும் வேண்டும்.

பிரமாணம்:——அரைக்கடுகு முதல் ஒருகடுகு வரையில்.

அனுபானமும், உபயோகமும்:——பசுவின் வெண்ணெய் விராகனெடை-௩, தேன் விராகனெடை-௩, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, க்ஷயரோகம், சுவாசரோகம், இருமல்ரோகம், இரத்தகாச ரோகம், இரத்தங்கக்கல் ஆகியவை தீரும். பசிதீபனம் அதிகப்படும், சோம்பல் நீங்கிச் சுறுசுறுப்புண்டாகும். தாதுவிருத்தி, தாதுபுஷ்டி ஆகியவைகளுண்டாகும்.

வெண்மருதம் பட்டைச் சூரணம் விராகனெடை-௩, தேன் விராகனெடை-௩, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, மந்தப்பார்வை தீர்ந்து பார்வைசக்தி யதிகப்படும். சக்கிலப்பிரமேக ரோகம் தீரும். தேகமானது ஊரத்துப் பெருத்து தேகபலம், தேகதிடம், வீரத்தன்மை ஆகியவைகளுண்டாகும்.

## குறிப்பு.

இதனைப் பாகப்படி செய்து கிரமப்படி யுபயோகித்தால் அநேக சுகுணங்க ளுண்டாகும். அப்படிச் செய்கிறவர்கள் மிகவும் அரிதென்றால் செய்துகொள்பவர்கள் மிகவும் அரிதினு மரிதென்றே சொல்லவேண்டும்.

## மாணிக்கச் சுத்தி.

பிராந்திசாராயம், காவுஜபான் றிநீர், பன்னீர், காடி ஆகிய இந்நான்கையும் சமபாகமாகச் சேர்த்து வைத்துக்கொண்டு மாணிக்கத்தை அப்ரேகத் தகட்டின்மீது வைத்து மேற்படி கலவைத்திராவகத்தைச் சிறுகச் சிறுகவிட்டு நான்குசாமநேரஞ் சுருக்கிட மாணிக்கமானது சுத்தியாகிவிடும்.

## 458, மாணிக்க பற்பம்.

சுத்திசெய்த செந்நிறப் பற்றுள்ள மாணிக்கம் விராகனெடை-௩, சோற்றுக் கற்றாழைச்சாறு பலம்-௧௦.

செய்முறை:—வச்சிர மூசையில் மேற்படி சாற்றைவிட்டு அதில் மேற்படி மாணிக்கத்தைப்போட்டு மேலும் வச்சிரச் சில்லால்மூடி ஏழு சீலமண்செய்து பத்துவிசை வறட்டியிற் புடமிடவும். ஒருபுடத்திற் பற்பமாகிவிடும். அப்படி யாகாவிட்டால் இரண்டாந் தடவை முன்போற் புடமிடப் பற்பமாகிவிடும்.

## குறிப்பு

இங்கு வச்சிரமூசை யென்பதின் கருத்தாவது:— பலமான மூசையா யிருக்கவேண்டு மென்பதே. வச்சிரமூசை; அல்லது, பலமானமூசை செய்யும் விபரங்கள் நமது இரசவாத சிந்தாமணியிற் சொல்லப்பட்டிருக்கின்றன. அவசியமானவர்கள் அவைகளைப் பார்த்துச் சித்தப்படுத்திக் கொள்ளவும்.



பிரமாணம்:—அரிசியெடை-௪.

அநுபானம்:—வெண்ணெய், தேன், நெய்; மாதுளம்பழ சர்பத்து, கோராப்பட்டு சர்பத்து, சீமை அத்திப்பழ சர்பத்து, சீமை அத்திப்பழமுறப்பா முதலியவைகளாம்.

உபயோகம்:—தலைமூளை, இருதயம், ஈரல், இரைப்பை முதலிய இராஜ கருவிகளின் துர்ப்பலத்தை நீக்கி அவைகளைப்பலப்படுத்தி, தேகபலம், மனோபலம், தைரியம், உற்சாகம் ஆகியவைகளை யுண்டாக்கும். இருதய அதிர்ச்சி, இருதயத் துடிப்பு, மனக்கலக்கம், மனத்திடுக்கம் முதலியவைகளை நீக்கி இருதயத்தைப் பலப்படுத்தும்.

இதனைப் பாகப்படி செய்து பாகப்படி யுபயோகித்துவரின், தேகத்திற்கு வச்சிராயுதம்போன்று தேகத்தைக் காப்பாற்றிவரும்.

## 459. மாணிக்கப்பற்பம் (வேறு.)

சுத்திசெய்ததாகிய செந்நிறப் பற்றுள்ள மாணிக்கம் விராகனெடை-௩, நற்பவளம் விராகனெடை-௩, வைப் என்னுங் கல் விராகனெடை-௧, அகிக் என்னு மாணிக்கம் குன்றிமணியெடை-௮, பிராந்தி சாராயம், பன்னீர், இவை வகை-௧-க்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்டவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்து பிராந்தி சாறுயத்தைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேர மரைத்துப் பிறகு பன்னீரைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேர மரைத்துப் பில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஏழுசீலைமண் செய்துலர்த்தி ஒன்றரை மணங்கு வறட்டியிற் புடமிட்டெடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧.

அநுபானம்:—காவ்ஜபான் நீர், பேதாணுப்பழமுறப்பா, சீமை யிலந்தைப்பழமுறப்பா, தித்திப்பு மாதுளம்பழ ஷர்பத்து முதலியவைகளாம்.

உபயோகம்:—மேற்கண்டவைகளேயாம்.

### 460. மாணிக்கப்பற்பம் [வேறு]

செந்நிறப் பற்றுள்ள சுத்தித்த மாணிக்கம் வராகனெடை-௫, பிராந்தி சாறுயம் செல்லத்தக்க அளவு, திராக்ஷாக்காடி செல்லத்தக்க அளவு, சோற்றுக் கற்றாழைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி மாணிக்கத்தைப் பத்துப்பலம் திராவகம் கொள்ளும்படியான மண்கலயத்திற் போட்டுக் கரிநெருப்பின்மீது வைத்து பிராந்தியைச் சிறுகச் சிறுகவிட்டு நான்கு சாமநேரஞ் சுருக்கிட வேண்டும். மறுநாள் முன்போலவே திராக்ஷாக்காடியைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரஞ் சுருக்கிட்டு அந்தக் கலயத்திலேயே பத்துப்பலம் சோற்றுக் கற்றாழைச்சாற்றை விட்டுக் கலயத்தின் வாய்க்



குச் சில்லிட்டு ஐந்து வீசை வறட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுத்துக் கல்வத்திலிட்டுப் பன்னீரைச் சிறுகச் சிறுக வார்த்துத் தினமொன்றிற்கு இரண்டு சாம வீதமாக ஒருவாரம் வரையிலரைத்து வெயிலில் வைத்து காமுலர்ந்தபின்பு பொடித்துச் சீஷாவில்வைத்துலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨ முதல்-௩.

அநுபானம்:—முதலியவைகள் மேற்கண்டவைகளேயாம்.

உபயோகம்:—மேற்கண்ட ரோகங்கள் நீருவதுடன் சர்வாங்க எரிச்சல், இரத்தங்கக்கல், இரத்தக்ஷயம், இரத்தகாசம், எந்த மருந்தினாலுந் தீராத வயிற்றுப்போக்கு, இந்திரிய வொழுக்கு, மேகநீரொழுக்கு, இரத்தப்போக்கு, இரத்தக்கசிவு முதலிய அநேக ரோகங்கள் நீரும்.

### 461. மாணிக்கப் பற்பம் (வேறு.)

செந்நிறப்பற்றுள்ள சுத்தித்த மாணிக்கம் வராகனெடை-௫, ஆடாதோடை யிலையை யரைத்த விழுது பலம்-௬, இன்னும் ஆடாதோடை யிலையை யரைத்தவிழுது பலம்-௧0.

செய்முறை:—முன்னுள்ள ஆறுபலம் விழுதில் மேற்படி மாணிக்கத்தை வைத்துக் கவசஞ்செய்து வெயிலில் வைத்து அரை உலர்த்தாக உலர்த்திக்கொள்ளவேண்டும். பின்பு பின்னுள்ள ஆடாதோடையிலை விழுதை யிரண்டு பாகமாக்கி ஒருபாகத்தை ஒருசிறு சட்டியில் அடைபோற் சமமாகப்பரப்பி அதன் நடு

வில் முன்கலசித்துலர்த்தின உருண்டையைவைத்து மற்றசட்டியில் மறுபாதி விழுதை முன்போற் சமமாகப் பரப்பி மூடி ஏழு சீலைமண் செய்து ஐந்துவீசை வறட்டியிற் புடமிட்டு ஆறினபின் னெடுக்கப் பற்பமாகி யிருக்கும்.

பிரமாணம், அநுபானம், உபயோக முதலியவைகளெல்லா மேற்கண்டவைகளேயாம்.

## 462. மாணிக்கப் பற்பம் (வேறு.)

செந்நிறப் பற்றுள்ள மாணிக்கம் குன்றிமணி யெடை-அ, இதனை 455-ல் சொல்லி யிருக்கிறபடி. மூன்றுநாள் குதிரை மூத்திரத்திற் சுத்தப்படுத்தி நாலாம்நாள் அதன்மீது மூன்று விராகனெடை எருக்கம்பாலை விட்டு வெயிலில் வைக்கவேண்டும். அது வுலர்ந்தபின்பு முன்போல் மூன்று விராகனெடை பாலை விட்டுலர்த்தவேண்டும். மூன்றுதடவையும் அப்படியே பாலைவிட்டுலர்த்தி வச்சிர மூசையில் வைத்து வச்சிரச்சில்லால் மூடி, எழுசீலைமண் செய்துலர்த்தி எட்டுவீசை வறட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம், அநுபானம், உபயோக முதலியவைகளெல்லாமேற்கண்டவைகளேயாம்.

## 463. மரகதப் பற்பம் (வேறு)

திறமான பச்சை விராகனெடை-ரு. இதனை இரண்டு பலம் எருக்கம்பாலிற் போட்டு அடுப்பிலேற்றிச் சுண்டவைக்க வேண்டும். அது சுண்டினபின்பு அ



தனையெடுத்து முன்போற் பாலைவிட்டு முன்போற் சுண்டவைக்கவேண்டும். இவ்விதம் மடக்கிமடக்கி மூன்றுதடவைகள் செய்து எடுத்து ஒரு கலயத்தில் நான்குபலம் எருக்கம்பாலையும், நான்குபலம் சோற்றுக்கற்றாழைச் சாற்றையும் விட்டுச் செம்மையாக மிஸ்ரமித்து முன் சுத்தப்படுத்தி யிருக்கிற மரகதத்தைப் போட்டு வாய்க்குச் சில்லிட்டு எழுசீலைமண்செய்து ஒன்றரைமணைக்கு வறட்டியிற்புடமிட்டாறினபின்னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:— குன்றிமணியெடை-க-உ.

அநுபானமும், உபயோகமும்— அரிசித்திப்பிலிச் சூரணம் குன்றிமணி யெடை-[illegible] மூங்கிலுப்புச் சூரணம் குன்றிமணி யெடை-ச, தேன் விராகனெடை-கஉ. இவையெல்லாவற்றையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யநுபானித்துண்ண, எல்லாவகை இருமல் ரோகங்கள், சுவாசகாசரோகம், காட்பட்ட சுரங்கள் முதலியவைகள் தீரும்.

பலங்கிக்காய் விதைப் பருப்பு (அதாவது தித்திப்புப் பூசுணிவிதைப் பருப்பு) விராகனெடை-ரு, அதிமதூரச் சூரணம் விராகனெடை-வ, தேன் விராகனெடை-ரு. இவையெல்லாவற்றையுஞ் சேர்த்தரைத்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யநுபானித்துண்ண, க்ஷயரோகம், க்ஷீணரோகம், விடாத் தலைநோய் முதலியவைகள் தீரும்.

தித்திப்பு மாதுளம்பழச்சாறு விராகனெடை-ரு, தேன் விராகனெடை-ரு. இவ்விரண்டையு மிஸ்ரமித்

து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, இரத்தமூல ரோகம் தீரும்.

கொடிவேலி வேர்ப்பட்டைச் சூரணம் குன்றிமணியெடை-உ, தேன் வராகனெடை-உ. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, சங்கிரஹணி ரோகம், அதிசாரரோகம், அரோசகரோகம் ஆகியவைகள் தீரும். பசிதீபனம் அதிகப்படும்.

சுத்திசெய்த மைசாட்சி குன்றிமணி யெடை-அ, பசுவின்நெய் வராகனெடை-க. இவ்விரண்டையுஞ் சேர்த்தரைத்து மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, கீல்வாயு, கைகாற்பிடிப்பு, மேகப்பிடிப்பு ஆகியவைகள் தீரும்.

சிறு நாகப்பூச்சூரணம் குன்றிமணி யெடை-ச, பசுவின் வெண்ணெய் வராகனெடை-க. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, இந்திரிய விருத்தி யதிகப்படும். இந்திரியத்திலுள்ள தோஷங்கள் நீங்கும். பசிதீபனம் அதிகப்படும்.

### 464. மரகதப் பற்பம் (வேறு)

மேற்கண்டபடி யெருக்கம்பாலிற் சுத்திசெய்த மரகதம் குன்றிமணி யெடை-அ, ஒரு அங்குல கனமுள்ளதும், ஒருசாண் நீளமுள்ளதுமான நிலக்குமிழ்வேர் ஒன்று.

செய்முறை:—இந்தவேரில் பல இடங்களிற் தமரினால் துவாரமிட்டு, அதில் மேற்படி ரத்தினச்



செலுத்தி அத்துவாரத்திலேயே அதில்வைத்தழுத்தி வேறு நிலக்குமிழ்வேர்ப் பட்டையையரைத்த விழுதை அதன்மீது ஒரு அங்குலம் கவசஞ்செய்து அதன்மீது ஏழு சீலைமண்செய்து ஈரமுலர்த்தி கவசத்தின் எட்டுப் பங்கெடை வரட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

ஒரேபுடத்திற் பற்பமாகாவிட்டால் மறுபுடமும் முன்போற்போடப் பற்பமாகிவிடும்.

பிரமாணம், அனுபானம் முதலியவைகளெல்லா மேற்கண்டவைகளேயாம்.

### நீலச் சுத்தி.

நீலத்தை நெருப்பிற் காய்ச்சி எருக்கம் பாலில் தோய்க்கவேண்டும். எருக்கம் பாலானது இந்த நீலக்கட்டி ஆழ்ந்து கிடக்கும்படியாகத் தாராளமா யிருக்கவேண்டியது. ஆறினபின்பு முன்போற்காய்ச்சி முன்போல் தோய்க்கவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஐந்தாறுதடவைகள் செய்ய நீலமானது சுத்தியாகிவிடும்.

### 465. நீலபற்பம்.

சுத்திசெய்த நீலம் வராகனெடை-க; எருக்கம் பால் பலம்-க, சோற்றுக்கற்றாழைச்சாறு பலம்-க.

செய்முறை:—மேற்கண்ட இரண்டு திராவகங்களையும் செம்மையாக மிஸ்ரமித்து ஒரு சிறு கல்வத்தில்விட்டு அதில் முன் நீலத்தைப்போட்டு வாய்க்குச் சில்லிட்டுச் சீலைசெய்து எட்டுவிசை வரட்டியில் புடமிட்டாறினபின் னெடுக்கப் பற்பமாகியிருக்கும். பெரும்

பான்மையும் ஓரே புடத்தில் பற்பமாகிவிடும். தீயின் விகற்பத்தால் பற்பமாகாவிட்டால் மறுபடியு முன் போற் புடமிட்டெடுக்கப் பற்பமாகி விடும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-வ-முதல்-க-வரையில்.

அனுபானமும், உபயோகமும்:-சுத்திசெய்த மைசாக்ஷிச்சூரணம் குன்றிமணியெடை-அ, தேன் விராகனெடை-ரு. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, கீல்வாயு, முடக்குவாயு, பக்ஷவாதம் முதலிய எல்லாவகை வாதரோகங்களும் தீரும்.

துளசிச்சாறு விராகனெடை-ரு, மிளகுச்சூரணம் குன்றிமணியெடை-ரு. இவ்விரண்டையு மிஸ்ரமித்துமேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, இரண்டாமுறை சுரம், மூன்றாமுறைச் சுரம், நான்காமுறைச்சுரம் ஆகிய முறை ரோகங்கள் தீரும்.

முணித்தக்காளியிலைச்சாறு விராகனெடை-சு, தேன் விராகனெடை-ரு. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி, யனுபானித்துண்ண, சுரக்கட்டி, ஈரல்வீக்கம், எல்லாவகை வீக்கங்கள் ஆகியவை தீரும்.

கையாந்தகரைச் சாறு விராகனெடை-ரு, தேன் விராகனெடை-ரு, இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, கண்ணொளி, கண்பார்வை முதலியவைகள் அதிகப்படும்.



இலவங்கப்பட்டைச் சூரணம் குன்றிமணியெடை-சு, ஏலக்காய்ச் சூரணம் குன்றிமணியெடை-அ, தேன் விராகனெடை-க. இவற்றை மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, சங்கிரஹணிரோகம், அதிசாரரோகம் ஆகியவைகள் தீரும்.

ஆடாதோடையிலைச்சாறு விராகனெடை-ரு. தேன் விராகனெடை-ரு. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, இரத்தபித்த ரோகம், பிரதரரோகம், பெரும்பாடு ஆகியவை தீரும்.

### 466. சீலபற்பம் (வேறு.)

சீலத்தை ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு ஐந்துபலம் குதிரை மூத்திரத்தை அதில்விட்டு வெயிலில்வைத்து மூத்திரமெல்லாஞ் சுண்டினபின்பு அதை ஒரு சிறு கலயத்திற் போட்டு அதில் ஐந்துபலம் ஓரிலைத் தாமரைச்சாற்றை விட்டு மூன்று சாமநேரம் ஊறவைத்துக் கொல்லுலையில் வைத்து ஒன்றரைமணி நேரம் ஊதியெடுக்கப் பற்பமாகி விடும்.

குறிப்பு.

இதனைக் கலயத்தில்வைத்து ஊதுவதைப் பார்க்கிலும் வச்சிர மூசையில் வைத்து ஊதியெடுத்துக் கொள்வது எல்லா வகையாலும் உத்தமம்.

பிரமாணம், அனுபானம், உபயோக முதலியவைகளெல்லா மேற்கண்டவைகளேயாம்.

### புஷ்பராகச் சுத்தி

(a) புஷ்பராகத்தைக் கரிநெருப்பிற் காய்ச்சி எருக்கம்பாலிற் றோய்க்கவேண்டும். ஆறினபின்பு மறுபடியு மெடுத்து முன்போற் காய்ச்சித் தோய்க்கவேண்டும். இவ்விதம் இரண்டு மூன்று தடவை மடக்கி மடக்கிச் செய்துகொள்ள புஷ்பராகமானது சுத்தியாயிருக்கும்.

### புஷ்பராகசுத்தி (வேறு)

(b) புஷ்பராகத்தைப் பீங்கானிற்போட்டு அது ஒரு அங்குல மமிழ்ந்தி யிருக்கும்படியாக வெள்ளாட்டுப் பாலைவிட வேண்டும். அதை வெயிலில்வைத்து அந்தப்பால் சுண்டினபின்பு முன்போற் பாலைவிட்டு முன்போற் சுண்டவைக்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று தடவைகள் செய்ய புஷ்பராகமானது சுத்தியாயிருக்கும்.

### 467, புஷ்பராகப் பற்பம்

மேற்கண்டபடி எருக்கம்பாலிற் சுத்திசெய்த புஷ்பராகம் குன்றிமணியெடை-௮, எருக்கம்பால் பலம் ௨, சோற்றுக் கற்றாழைச்சாறு பலம் ௨.

செய்முறை:—பின்னுள்ள இரண்டையுஞ் சேர்த்துக் குழைத்து அதனடியில், மேற்படி புஷ்பராகத்தை வைத்து அவசியமானாற் கொஞ்சம் வெயிலில்வைத்து உருண்டையாகச் செய்து அதன்மீது காவிமண்சீலை மூன்று செய்து வெயிலில் வைத்துலர்த்தி ஒருமணங்கு வறட்டியிற் புடமிட்டாறினபின் னெடுக்கப் பெரும்பான்மையும் ஓரே புடத்திற் பற்பமாகிவிடும்.



ஜீ விகற்பத்தால் ஒருவேளை பற்பமாகா விட்டால் முன்போல் ஒரு புடமிட்டெடுத்துக் கொள்ளப் பற்பமாகிவிடும்.

பிரமாணம்:—அரிசியெடை-௧-முதல்-௨-வரை.

அனுபானமும், உபயோகமும்:—காவுஜபான் கஷாயம் விராகனெடை-௯, (ஒரு விராகனெடை காவுஜபானை மூன்றுபலம் ஜலத்திற் போட்டு நான்கிலொரு பாகமாகக் காய்ச்சி வடிகட்டின கஷாயத்தில் மேற்கண்ட எடை எடுத்துக் கொள்ள வேண்டும்) தேன் விராகனெடை-௯. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, எல்லாவகை சுரரோகங்களும் தீரும், இருதயத்தைப் பலப்படுத்தும், பிரமிய ரோகங்கள் குணமாம். இருமல்ரோகம், இரணங்கள் ஆகியவைகளும் தீரும்.

முள்ளங்கிக் கிழங்குச்சாறு விராகனெடை-௯, தேன் விராகனெடை-௯. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, மூத்திரக் கிரிச்சரரோகம், எல்லாவகை ரணங்கள் ஆகியவைகள் தீரும்.

அரசங் கொழுந்துச்சாறு விராகனெடை-௯, தேன் விராகனெடை-௯. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, இருமல்ரோகம், நயனரோகங்கள் ஆகியவைகள் தீரும். சங்கிரஹணி, தேக எரிவந்தம், ஆகியவைகள் குணமாம். பசிதீபனம் விருத்தியாகி ஜீர

ணசக்தி யதிகப்படும். இந்திரிய விருத்தி, தாதுபுடி ஆகியவைகளுண்டாகும்.

துத்தியிலைச்சாறு விராகனெடை-௩, தேன் விராகனெடை-௩. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, கபசம்பந்தமான மூலரோகம், பாண்டுரோகம் ஆகியவைகள் தீரும்.

கருஞ்சீரகச் சூரணம் குன்றிமணி யெடை - ௨, தேன் விராகனெடை-௩. இவ்விரண்டையும்மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, பித்தவிகற்ப ரோகங்கள், கபவிகற்ப ரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

வெண்டாமரைப் பூச்சாறு விராகனெடை - ௩, தேன் விராகனெடை-௩. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண உதாரோகங்கள், மூலரோகங்கள், பவுத்திரரோகங்கள், வீக்கரோகங்கள், பலவித வாயுரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

### 468. புஷ்பராகப் பற்பம் (வேறு)

(b) யிற் சொல்லி யிருக்கிறபடி வெள்ளாட்டுப் பாலிற் சுத்திசெய்த புஷ்பராகம் குன்றிமணியெடை- ௮, இதனை ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு அதில்-௫-பலம் பெரும்பூளைவேர்ச் சாற்றைவிட்டு ஒரு நாள் வெயிலில் வைத்து மறுநாள் சாற்றுடனே வ சிர மூசையில் விட்டு வச்சிரச் சில்லால் மூடிச் செ லையில் வைத்து நான்கு நாழிகை நேரம் ஊதி ஆ



வைத்தெடுக்கப் பற்பமாகி யிருக்கும். அப்படி ஒரே தடவையிற் பற்பமாகா விட்டால் முன்போல் மறுதடவையும் செய்துகொள்ளப் பற்பமாகிவிடும்.

பிரமாணம், அனுபானம், உபயோக முதலியவைகளெல்லா மேற்சொன்ன வைகளேயாம்.

### கோமேதக சுத்தி.

மாணிக்கத்தைப்போல இதையுஞ் சுத்திசெய்து கொள்ளவும்.

### 469. கோமேதக பற்பம்.

சுத்திசெய்த கோமேதகம் குன்றிமணியெடை- ௮. இதனை ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு அதில் ஐந்துபலம் நிலக்குமிழ்வேர்ச் சாற்றைவிட்டுவெயிலில் வைத்து அது சுண்டினபின்பு ஐந்துபலம் கருஊமத்தைச் சாற்றைவிட்டு ஒருநாள் வெயிலில்வைத்து மறுநாள் வச்சிர மூசையில் வழித்துவிட்டு வச்சிர மூசைச் சில்லினால் மூடி ஐந்து சீலைமண்செய்து கொல்லுலையில் வைத்து நான்கு நாழிகைநேரம் ஊதியெடுக்கப் பற்பமாகி விடும்.

பிரமாணம்:— அரைக்கடுகுமுதல், ஒருகடுகுவரையில்.

அனுபானம்:—பசுவின் வெண்ணெய், பசுவினெய், தேன் ஆகியவைகளும் வயிரபற்பத்திற் சொல்லி யிருக்கின்ற அனுபானங்களுமாம்.

உபயோகம்:—வர்த்தித்த தொந்தங்களினாலுண்டான வியாதிகள், சுரத்தினாலுண்டான நீர்க்குறைவுகள், மலபந்த ரோகங்கள் ஆகியவைகள் தீரும். தேகமி

னுமினுப்பு, தேஜசு, முகவசீகரம் ஆகியவைகளுண்டாகும்.

### வைடூரிய சுத்தி.

வயிரத்தைப்போல இதையுஞ் சுத்திசெய்து கொள்ளவும்.

### 470. வைடூரிய பற்பம்.

குதிரை மூத்திரத்திற் சுத்திசெய்த வைடூரியம் குன்றிமணியெடை-அ. இதனை ஒரு பீங்கான் பாத்திரத்தில் வைத்து அதில் ஐந்துபலம்பெருங்குமிழம்பழச்சாற்றைவிட்டு வெய்யிலில் வைத்து அது சுண்டினபின்பு ஐந்துபலம் பெரும்பூளைவேர்ச் சாற்றைவிட்டு ஒருநாள் வெயிலில்வைத்து மறுநாள் வச்சிர மூசையில் வழித்துவிட்டு வச்சிர மூசைச் சிட்டினால்மூடி ஏழு சீலைமண்செய்துலர்த்தி ஐந்நூறு பலம் வறட்டியிற் புடமிட்டாறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—அரைக் கடுகுமுதல் ஒரு கடுகுவரையில்.

அநுபானம்:—பசுவின்நெய், பசு வெண்ணெய், தேன் முதலியவைகளும், வயிரபற்பத்திற்சொல்லியிருக்கிற அநுபானங்களுமாம்.

உபயோகம்:—வாதம், கபம் ஆகிய இரண்டுந் தொந்தித்துண்டான தோஷம், கபரோகங்கள், புளியேப்பம், இடைவிடாது வருத்திக்கொண்டிருக்கிற கில்வாதரோகம், வாதகுன்மரோகம், பைத்தியரோகம், அபத்திய முதலியவைகளினால் நேரிட்ட தோஷங்கள் ஆகியவைகள் தீரும்.



### 471. நவரத்தினபற்பப் போதுமுறை.

விருத்தம்.

மிக்கவொளி வீசுகின்ற மணியொன் பானில்
மேவுமொன்றைக் காசிடையொன் றாக்கி யேதா
தக்கவெருக் கமுதினிலிட் டாட்டி வில்லை [ன்
தட்டியரி முன்னூக்கித் தகவி னோடே
பொக்கெனவே புடமியற்ற நீற தாகும்
புத்திபுட னெய்த்துளிதேன் றனியிற் கொள்ள
விக்கல்மருட் பிரமையத்திச் சரங்கள் நோய்கள்
விடம்பொரும லகனுமணி விதித்தைக் காணே.

இதன்பொருள் வெள்ளிடையாக இருப்பதால் இதனருத்தத்தை யெழுதாது விடுத்தனம்.

### 472. நவநீத பற்பம்.

சுத்திசெய்த நற்பவளம், சுத்திசெய்த துளையிடாத நன்முத்து, சுத்திசெய்த பலகறை, சுத்திசெய்த சங்கு, சுத்திசெய்த கல்நார், சுத்திசெய்த கல்மதம், சுத்திசெய்த சிலாசத்து, சுத்திசெய்த கெந்தகம், சுத்திசெய்த லிங்கம், வெள்ளி அரப்பொடி இவை வகைக்கு வராகனெடை-க, எருக்கம்பால் செலவுக்குத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்டவைகளைத் தனித்தனி பொடித்து எல்லாவற்றையுஞ் சேர்த்துக் கல்வத்தில் மேற்படிபாலைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஐந்து சீலைமண்செய்து உலர்த்தி நூறுபலம் வறட்டியிற் புடமிட்டாறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧-௨.

அனுபானம்:—கல்யாண முருக்கங் கொட்டைப் பருப்பு, செங்கழுநீர்க் கொட்டை, முந்திரிப்பருப்பு, ஆலம்விதை, அரசம்விதை, அத்திவிதை, கஞ்சாவிதை, பூனைக்காலி விதை இவை வகை-௧-க்குப் பலம்-௧. இவற்றிற்குச் சமனெடை சர்க்கரையைச் சேர்த்துப் பாகப்படி லேகியஞ் செய்துகொள்ள வேண்டும். இந்தலேகியம் விராகனெடை-௨. இதில் மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, நீரிழிவு, மதமேகம், நீரடைப்பு, சதையடைப்பு, கல்லடைப்பு, பிரமேகரோகம் முதலிய அநேக ரோகங்கள் தீர்ந்து, தேகதிடம், தேகபலம்முதலியவைகளுண்டாகித் தேகாரோக்கியமுஞ் சுகமு முண்டாகும்.

அநுபோக வைத்திய நவநீதம்
மூன்றும் பாகம் முற்றுப் பெற்றது.

---

## விண்ணப்பம்.

கடவுளினது கிருபையினாலும் பெரியோர்களினது ஆசிர்வாதத்தினாலும் பல பண்டிதர்களின் அநுக்கிரகத்தாலும் இந்த அநுபோகவைத்தியநவநீதத்தின் அடுத்த பாகங்களில் இன்னும் அருமையானவும் நவம் நவமானவுமாகிய அநேக முறைகளும், பல தலைமுறைகளாய் அநுபவசித்திப்பெற்ற லேகியங்கள், சூரணங்கள், மாத்திரைகள், வடகங்கள், கிருதவகைகள், எண்ணெய்வகைகள் முதலிய அநேகவகைகளெழுதப்படும். கஷ்டசாத்தியமான அஷ்டமகா ரோகங்களின் நானாவித சிகிச்சைகள், பிரயோகங்கள் முத



லியவைகளும் எழுதப்படும். இவ்வருமையான கிரந்தம் இதுவரையில் இவ்விதம் வெளிப்படவில்லை யென்பது நிச்சயம். நாம் முன் வெளிப்படுத்தின இரண்டு பாகங்களையும் வைத்தியர்கள், வைத்தியரல்லாதவர்கள் ஆகிய இருதரத்தாரும் அதிக ஆவலுடன் கைக்கொண்டு அங்கு சொல்லியிருக்கும் பாகங்களைச் செய்து தாங்களநுபவித்தும், தங்கள் நண்பர் முதலியவர்களுக்கு உபயோகித்தும் அளவிறந்த பலன்களையடைந்து ஆனந்தித்துக் கடிதமுகத்தினாலும் பிறவாற்றாலும் எமக்கறிவித்து வருகின்றபடியால் நமக்கதிக உற்சாகமுண்டாகி அதிக அருமையானவைகளும், இரகசியமாய்வைக்கத் தகுந்தவைகளுமான அநேக அரியமுறைகளை லோகோபகாரமாகவும், ஜீவகாருண்யமாகவும் இங்கெழுத மனமுவந்தோம். ஆகையால், இக்கிரந்தம் நமது நண்பர்கள் முதலாயினோர் ஒவ்வொருவரிடத்தும் இருக்கவேண்டிய தென்பதும், இதனால் ஒவ்வொருவரையும் நற்பிரயோசனத்தையடையச்செய்யவேண்டுமென்பதுமே நமது முழுநம்பிக்கை. ஆகையால் இக்கிரந்தத்தை யொவ்வொருவரும்வாங்கும்படியாக மிகவுங் குறைந்த விலையாகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் அருமையும், பெருமையும் அநுபவசாலிகளான வைத்தியர்களுக்கு வெள்ளிடைமலைபோல தெள்ளிதாய் விளங்கும். கடவுளினது கிருபையால் இதனடுத்தபாகம் கூடியசீக்கிரம் வெளிவரும். சுபம்!

## இலக்க சௌமிய சாகரம்
## தெளிபொருள் விளக்க உரை.

மேற்படி நூலானது அச்சாகி விற்பனைக்குச் சித்தமாயிருக்கின்றது. இந்த இலக்க சௌமிய சாகரமென்னும் அரிய நூலானது அகஸ்திய மகா முனிவராற் செய்யப்பட்டதென்பதும், மகா சிறப்புற்றதென்பதும் உலகறிந்த விஷயம். இந்நூல் இதுவரையில் உரையுடன் வெளிப்படவில்லையென்பதும் நிச்சயம். இதில் வாதம், வைத்தியம், மாந்திரீகம், ஞானமுதலிய விஷயங்கள் மிகவுந் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன, இதிலுள்ள பாக்களெல்லாம் சித்திரகவிக்கிரமமாகவும் ஆழ்ந்த பொருட்களையகத்துள்ளடக்கினவைகளாகவும், பிரித்தாலோ உன்னத முறைப்பொருத்தமாகவும், பொருள்களை இலகுவிற்றெரிந்துகொள்ளும் விதமாயும் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இது பத்துக் காண்டங்களுள்ளது. இதிலுள்ள முறைகளெல்லாம் நிச்சயமாகக் கைகூடத் தக்கவைகளும், சந்தேகமற்றவைகளும் பல ஆச்சரியமான வேலைகளைச்செய்யத் தக்கவைகளுமாம். வாதம், வைத்தியம், மாந்திரீகம், ஞான முதலியவைகளை விரும்பும் ஒவ்வொருவருக்கும் இந்த நூல் ஒன்றே போதுமானது. இந்த நூலின் பெருமை இதனை வாங்கிப்பார்த்து இதிலுள்ள முறைகளைச்செய்து கையாண்டால்மட்டுந் தெரியுமேதவிர மற்றவர்களுக்குக் கிஞ்சித்தும் புலப்படாது. இதனைப் படிக்கப் படிக்க அளவற்ற ஆச்சரியத்தையும், ஊக்கத்தையும் அதிகரிக்கச் செய்து வருமேதவிர ஒரு சிறிதும் வெறுப்பிற் கிடந்தராது.



இது மற்றச் சித்தர் நூற்களைப்போலெடுத்ததெல்லாம் எண்ணிலாச் சந்தேகமாயும், பார்ப்பவையெல்லாம் பரம ரகசியமாயும், ஓரிடத்திலெடுத்த விஷயம் மற்றோரிடத்தில் முடிவுபெற்றதாயும், ஒரு நூலிற் சொல்லியமுறைக்கு வேறோர் நூலில் மர்மங்கண்டு பிடிக்கவேண்டியதாயுமுள்ள பலவித மயக்கங்களுக்கு ஏதுவானதல்ல. இதன் பாக்களின் அருத்தங்களை மட்டும் உணர்ந்துகொண்டால் மற்ற எவ்விஷயங்களிலும் எந்தவித சந்தேகங்களும் ஏற்படாது. இதிற் சொல்லப்பட்ட முறைகள் சம்பந்தமான ஒவ்வொரு சரக்குகளின் பிறப்பிடம், ரூபம், இலக்ஷணம், குணம் பெயர் முதலியனவைகள் அநேகவித ஹேதுக்களைக் கொண்டு தெளிவுபடுத்தப் பட்டிருக்கின்றன. இவ்விதமே ஒவ்வொரு விஷயமும் பலவிதத்தாலும் எவ்வித சந்தேகமும் வாராமற் செவ்வனே விளக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் இதிலுள்ள முறைகளை மட்டில் தெரிந்து செய்துகொண்டால் உலகத்தில் எவ்விஷயத்தையும் சாதிக்கலாமென்று நம்பிக்கையிருப்பதினாலேயே அநேக முறைகளைச்சொல்லி மனதை அலுப்பு மலைப்புச்செய்யாமல் இதனை பத்துக்காண்டங்களிலும் முக்கியமான சில முறைகளையே சொல்லியிருக்கின்றது. இன்னும் இதில் இரசவாத விஷயத்தை மற்ற நூற்களில் ஆகாதகாரியத்தை ஆவதுபோற்காட்டி அதிலும் சந்தேகத்தை மூட்டியிருப்பதுபோலல்லாது ஒவ்வொரு விஷயமும் மெய்யாகவுஞ் சந்தேகத்திற் கிடமின்றியும், அந்தந்த அளவின் கிரமப்படியும் வெகு நுட்பமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இதன் அருமை பெருமைகளெல்லாம் இந்நூலை ஒரு

தடவைப் பார்த்தவுடன் அநுபவசாலிகளுக்கு நன்கு விளங்கும்.

இன்னும் இது வைத்தியர்களைத் தவிர, மற்றைய தமிழ்க்கற்கு மாணாக்கர்களுக்கும் பாடங்கேட்க வேண்டிய இன்றியமையாத ஓர் சிறந்த நூலாகும்.

இரசவாதம், வைத்தியம் முதலியவைகளை விரும்புகின்றவர்களுக்கு இந்த முறைகளைமட்டும் முடித்துக்கொண்டாலேபோதுமானது. இக்காண்டங்களுக்கு அரிய பாக்களை யெடுத்துக்கொண்டு முறைபிசகா தெளிவான உரையெழுதி யிருப்பதோடு யாவருமெளிதிலுணர்ந்துகொள்ளும் விதமாக அந்தந்தக் காண்டங்களின் கடோசியில் அவைகளி லடங்கியுள்ள முறைகள் வசனரூபமாகவு மெழுதப்பட் டிருக்கின்றன. இவைகள் ஒவ்வொருவர் கையிலும் அவசியமிருக்கத் தக்கதே. தமிழ் விரும்புங் கனவான்களுக்கும் அவசியமானதே. லோகோபகாரத்தைக் கருதி இவைகளுக்கு மிகவுங் குறைந்தவிலை யேற்படுத்தப்பட் டிருக்கின்றது.

ஷை 1-ம் பாகம் (இதில் - 1 - ம் - 2 - ம் காண்டங்களடங்கியுள்ளன) கைவிலை ரூபா 1 - 0 - 0 - வி - பி - ரூபா 1 - 2 - 0.

ஷை 2-ம் பாகம் (3 - ம் - 4 - ம் காண்டங்கள்). கைவிலை ரூபா 0 - 14 - 0 - வி - பி - 1 - 0 - 0;

ஷை 3-ம் பாகம் (5 - ம் - 6 - ம் காண்டங்கள்) கைவிலை ரூபா 0 - 14 - 0 - வி - பி - 1 - 0 - 0.

ஷை 4-ம் பாகம் (7 - ம் - 8 - ம் காண்டங்கள்) கைவிலை ரூபா 0 - 14 - 0 - வி - பி - 1 - 0 - 0.



## அகத்திய மஹாமுனி
## வைத்தியப் பிள்ளைத் தமிழ்

இது பாலர்களும் விளங்கி வாய்ப்பாடஞ் செய்யத்தக்கவைகளும் வாசிப்போர்க்கும் கேட்போர்க்கும் இனிமை பயக்கத்தக்கவைகளுமான பாக்களால் நிறைந்தது. இது ஒரு சிறிய கிரந்தமாயினும் இதில் முன்னோர்களால் அநுபவசித்தி யடைந்ததும் ஒரு பெரிய வைத்தியருக்கு அவசியமானதுமான பற்பல பற்பங்கள், செந்தூரங்கள், மாத்திரைகள், சூரணங்கள், லேகியங்கள் முதலிய பல அவுடதங்களின் சிறந்த அநேக முறைகளடங்கி யிருக்கின்றன. இது பல விசித்திரப் பெயரிடப்பட்டுலாவும் புழுதிமாயப் புத்தகங்களைப் போன்றதல்ல. நமது முன்னோர்களால் பண்டைக்காலந்தொட்டுப் பத்திரப்படுத்திவைக்கப்பட்டுவந்த அருமையான ஏட்டுப் பிரதிகளி லிருந்தெடுத்து வெளியாக்கப்பட்டது. இது யாவருக்கும் எளிதிற் புலப்படுமாறு ஒவ்வொரு முறைகளையும் வசனரூபமாகவும் எழுதிச் சேர்க்கப்பட் டிருக்கிறது. இது நல்ல உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் சுமார் நானூறு பக்கங்களுள்ளதா யச்சிடப்பட் டிருக்கிறது.

இப்பிரதி ஒன்றுக் கைவிலை ரூபா 1 - 4 - 0
வி - பி. யுள்பட ரூபா 1 - 7 - 0

## வைத்தியத் திருப்புகழ்.

இச்சிறந்த கிரந்தம் இதுவரையி லச்சாகி வெளிவரவில்லையென்பது நிச்சயம். கற்றுணர்ந்த பண்டி

தோத்தமர்களுக்கு, அமுதமாரி பொழிவது போன்று சொன்னோக்கம், பொருணோக்கம், தொடைநோக்கம், நடைநோக்கம் முதலிய பல இலக்கண இலக்கிய அமைதிகள் அமையப்பெற்ற அருமையான நூல். மானிடர்களுக்குச் சுபாவமாகிய புருஷ ஸ்திரீ சம்பந்தங்களில் அதிக் கிரமத்தால் உண்டாகும் பலவகை கஷ்ட ரோகங்களான பிரமேகம், விரணமேக முதலிய மேகரோகங்கள், கிரந்தி ரோகங்கள், புண்கள், புரைநோய், குறைநோய், குன்மம், க்ஷயம், காசம், கண்டமாலை, குஷ்டம் முதலிய அநேக துஷ்ட ரோகங்களையும் அறத்தீர்க்கும் அநுபவ சித்திபெற்ற அருமையான முறைகளும், தாதுநஷ்டத்தை யடியோடே நீக்கி, தாதுவிர்த்தி, சந்தான விர்த்தி, தேகதிடம், தேகபலம், தேகவஜ்ஜிரம், முதலியவைகளையுண்டாக்கி எவ்வித வியாதியும் அண்டா மற்றடுத்து; தேக சுகத்தைக் காப்பாற்றி ஆயுள் விர்த்தியைக் கொடுக்கும் சஞ்சீவி கற்பங்களுக்கொப்பான அபூர்வ [illegible] மதன காமேசுவரம், மதன விந்தாரி, சுக்ஜீவனம், மதனகற்பம், மதனச் சிந்தாமணி, கூழ்ப்பாண்ட மதன சிந்தாமணி, மஹா மன்மதச் சிந்தாமணி, மனமோஹன சிந்தாமணி, முதலிய பலமுறைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன.

இம்முறைகளெல்லாம் மிகவும் அருமையானவைகளும் மிகவும் அநுபவப்பட்டவைகளு மாகையால், அவற்றைப் பரமரகசியமாவைத்து வழிவழியே பல தலைமுறைகளாகக் கர்ண பரம்பரையாக உபதேசிக்கப் பட்டுவந்த முறைகள். இன்னும் மாணிக்க முதலிய உயர்ந்தவஸ்துக்களை உறுதியானபெட்டி பேட்



ழைகளில் வைத்துப் பத்திரப் படுத்துவது போலவும்; மாணிக்க முதலிய உயர்ந்த இரத்தினங்களை உயர்ந்த மாற்றுள்ள தங்கத்திற் பதித்து வைப்பது போலவும், இவ்வுயர்ந்த பாகங்களாகிய மாணிக்கங்கள் முதலிய மணிகள் மேற்கண்டபடி பல இலக்கண இலக்கிய அமைதிகளுள்ள செய்யுட்களில் புதைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. இச் செய்யுட்களின் அருத்தத்தையும் கருத்தையும் அறிந்துகொள்வது எல்லோருக்கும் சாத்தியமல்ல. பண்டுபட்ட பண்டிதர்களும் ஆழ்ந்த கருத்துடன் பார்த்தும் கர்ண பரம்பரையாகக் கேட்டும் தெரிந்து கொள்ள வேண்டுமேயொழிய, மற்றப்படி தெரிந்துகொள்வது அசாத்தியம். ஆனால், அடியேன் கர்ண பரம்பரையாகப் பாடங் கேட்டிருப்பதாலும் இம்முறைகளுள் பல நமது பரம்பரையிற் பல தடவைகள் செய்யப்பட்டவைகளானபடியாலும், நமது சிற்றறிவிற் கெட்டின வரையில் மேற்படி செய்யுட்களுக்குக் கருத்துரையும் அம்முறைகளின் கைபாகம், செய்பாகம் முதலியவைகளை வகவிபரமாக விளக்கி, கற்றவர்களும்மற்றவர்களும் இலகுவாகத் தெரிந்து கொள்ளும்படியாய், தெளிவான எளிய வசன நடையில் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன. இவ்விதம் இந்த அபூர்வ கிரந்தத்தை உலகத்தார்க்குப் பிரயோசனப் [illegible] செய்வது இலேசான விஷயமன்று.

இவ்வரிய நூல் வைத்தியர்கள், விற்பனர்கள், மற்றவர்கள் முதலிய தம் தம் தேகத்தையும் தம் குடும்ப ஜன மித்திரர்களின் சுகத்தையும் விரும்பும் ஒவ்வொருவர் கையிலும் அவசியம் இருக்கத்தக்கது

இம்முறைகளைத் தமிழ்வாசிக்கத் தெரிந்த ஒவ்வொருவரும் வேறொருவர் சகாயமின்றி தாம் தாமே செய்து கொள்ளக்கூடும். வீண் டம்ப விளம்பரங்களை நம்பி வீண்செலவுக்குட்படாமல் மீந்துக்கொள்ளவும் ஒன்றைவிட்டொன்றும் அபாயத்திற்குள்ளாகாமல் தப்பித்துக் கொள்ளவும் ஏதுவாகும். தாதுவிர்த்திக்குரிய பல அவுடதங்களும், மகா ரோகங்களுக்கும் அநேகமுறைகளும் இதிலிருப்பதால், இதற்காக வேறு நூற்கள் அவசியமிரா. இது எவ்வளவு அருமையானதென்பது இதனைவாசித்த க்ஷணமே அனுபவசாலிகளுக்கு நன்கு புலப்படும். இது சுமார்-200-பக்கங்களுள்ளது. யாவருக்கும் எளிதிற் கிடைக்கும்படி மிகவும் சொற்பவிலையே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இதன் விலை பிரதி-க-க்கு கைவிலை-0-12-0-வி-பி 0-14-0.